வரு. 76 இல. 10 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-




தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI


2024 மார்ச் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
March 10 Sunday, 2024




/ Thinakaran.lk / ThinakaranLK



04
நவீன பொருளாதாரத்துக்கேற்ற புதிய சட்டங்கள் அறிமுகம்



05
பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம்; அரசு கடும் நடவடிக்கை!



12
போருக்கான அறைகூவலா சமாதானத்துக்கான சமிக்ஞையா?



24
உலகக் கிண்ணத்திற்கு தயாரா?

# நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக் கூடிய ஒரே தலைவர் ரணில் என்பதாலேயே ஜனாதிபதி பதவியை கொடுக்க எண்ணினேன்




**பிரதமர் பதவியை ஏற்குமாறு நான் விடுத்த கோரிக்கையை அச்சமின்றி ஏற்றுக்கொண்டவர் ரணில் மட்டுமே**

**பிரதமர் பதவியை ஏற்குமாறு நான் வேண்டுகோள் விடுத்த போது, சஜித் முடியாது என்றார்**

**பிரதமர் பதவி குறித்து பொன்சேகாவிடம் கூறியபோது பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென்றார்**

**கோட்டாபய தனது 'The Conspiracy' என்ற புத்தகத்தில் அனைத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்**

விரிவான செய்தி 6ஆம் பக்கம்

# இஸ்ரேலில் 40,000 வேலைவாய்ப்புகள்

## குறைந்தபட்ச சம்பளம் 07 இலட்சம் ரூபா

## நிர்மாணத்துறை, விவசாயத்துறையில் அதிக வாய்ப்பு

இஸ்ரேலில் இந்த ஆண்டு சுமார் 40,000 வேலைவாய்ப்புகளை இலங்கையருக்கு பெற்றுக்கொடுக்க தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மத்திய கிழக்கு அல்லாத ஒரு நாட்டிலிருந்து தொழில்சார் அங்கீகாரமாக இவ்வளவு பாரியளவிலான வேலைவாய்ப்புகள் நாட்டுக்கு கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். இந்த வேலைவாய்ப்புகளில் நிர்மாணத்துறையில் 20,000 வேலைவாய்ப்புகள் மற்றும் விவசாயத்துறையில் 10,000 வேலைவாய்ப்புகளும் அடங்குகின்றன.

இதற்கு மேலதிகமாக தற்போதுள்ள தாதியர் வேலைவாய்ப்புகளின்

06

## ரோயல்—புனித தோமஸ் கிரிக்கெட் சமரை பார்வையிட்ட ஜனாதிபதி ரணில்



கொழும்பு SSC மைதானத்தில் கொழும்பு ரோயல் மற்றும் கல்கிஸ்ஸை புனித தோமஸ் கல்லூரிகளுக்கு இடையிலான நீலச் சமர் கிரிக்கெட் போட்டியை பார்வையிட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (08) இணைந்துகொண்டார். அங்கு மாணவர்கள் சிலருடன் உரையாடிய போது...

IMF பிரதிநிதிகளுடனான பேச்சு நாளை

## எதிர்க்கட்சி தலைவர்களுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியின் கட்சித் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்க

06

மலையக சமூகத்தின்

## பாராளுமன்ற ஒன்றியத் தலைவராக வேலுகுமார் எம்.பி



மலையக பெருந்தோட்ட சமூகத்தின் பரிணாமத்துக்கான பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவராக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். தமிழ் முற்போக்கு

06

யாழ். வலிகாமம் வடக்கில்

## இராணுவ வசமிருந்த 67 ஏக்கர் காணி இன்று உரிமையாளரிடம் கையளிப்பு

யாழ். விசேட நிருபர்

யாழ். வலிகாமம் வடக்கில் 33 வருடகாலமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த சுமார் 67 ஏக்கர் காணி இன்று ஞாயிற்றுக்கிழமை காணி

06

ஆண், பெண் சமூக சமத்துவம் மற்றும்

## பெண்களை வலுவூட்டும் இரண்டு சட்டமூலங்கள் மே மாதம் சமர்ப்பிப்பு



ஆண், பெண் சமூக சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலங்கள் இரண்டும் எதிர்வரும் மே மாதம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பெண்களை வலுவூட்டுவதற்கான

06

வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

## கடன் சுமையில் வாழ்பவருக்கு தேவைப்படும் நிவாரணங்கள்

ஒரு சொத்தை அடமானமாகக் கொண்டு கடன் வழங்கப்படும் போது, அந்தக் கடனை செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்கள் பல உள்ளன. கடன் என்பது அவ்வாறான ஒன்றுதான். கடன் எடுக்கும் அனைவரும் இரண்டு கனவுகளைக் காண்பார்கள். அதில் ஒன்றுதான் உடனடி பணத்தேவையைக் கையாள்வது. தான் சிக்கியுள்ள நிலைக்கு மத்தியில் செய்வதற்கு வேறு ஒன்றுமில்லை என்ற காரணத்தினால் கைமாற்றாக வாங்கி பணத்தேவையைச் சமாளிக்க வேண்டிய தேவை உள்ளது. அடுத்த முறை கிடைப்பதைக் கொண்டு அந்த சிக்கலை முடித்துக் கொள்ள முடியும் என்பது கடன்படுவோரின் நம்பிக்கையாகும்.

பராடே அதிகாரத்தை இந்த சந்தர்ப்பத்தில் வழமை போன்று முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிப்பது என்பது பல வியாபார நிலையங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கான வாய்ப்பை உருவாக்குகின்றது என்பதாகும். வியாபாரம் ஒன்றை அவ்வாறு விலை மனுக் கோரி ஏலத்தில் விடுவது என்பது ஒரு மனிதரின் வருமான வழியை வீழ்த்துவது மாத்திரமல்ல, அந்த வியாபார நிலையத்தில் பணியாற்றும் பலபேரின் மாதாந்த வருமானத்தை இல்லாமல் செய்வதுமாகும். முகாமைத்துவத்தின் இயலாமை இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்புடையதாகாது.

அதற்காக கிராமங்களில் பெறப்பட்டுள்ள கடன் பிரச்சினைகளுக்காக பராடே செயற்படாது. கிராமிய மக்கள்

06



## 06 'யுக்திய' வுக்கு மேலும் வலுசேர்க்க பொலிஸ் உயர் அதிகாரிகள் CID தலைமையகத்துக்கு அழைப்பு

## மின்சார முச்சக்கரவண்டிகள் உற்பத்தி; முதலாவது தொழிற்சாலை ஆரம்பம்



கொழும்பு, மருதானை ரயில்வே களஞ்சியசாலை வளாகத்தில் 'வேகா' இன்ஜினியரிங் நிறுவனத்தினால் நிறுவப்பட்ட மின்சார முச்சக்கரவண்டிகள் உற்பத்தி மற்றும் முச்சக்கரவண்டிகளை மின்சாரத்துக்கு மாற்றும் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

06

குளியாப்பிட்டி மாநகர சபை மைதானத்தில்

## ஜனாதிபதி ரணிலின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்தின் முதலாவது பொதுக் கூட்டம் இன்று (10) பிற்பகல் 2.00 மணிக்கு குளியாப்பிட்டி மாநகர சபை மைதானத்தில் நடைபெறும்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர், அவர் பங்கேற்கும் முதலாவது பொதுக்கூட்டம்

06

## கொழும்பு பங்குச்சந்தை விலைகள் அதிகரிப்பு




கொழும்பு பங்குச் சந்தை விலைச் சுட்டெண் கடந்த வார இறுதியில் விசேட அதிகரிப்பை காட்டியிருந்தது.

இதன்படி கடந்த 07ஆம் திகதி கொழும்பு பங்குச் சந்தையின் முடிவில் அனைத்துப் பங்குகளின் விலைச் சுட்டெண்களும் 164.18 அலகுகளால் அதிகரித்து 11,045.90 அலகுகளாக பதிவாகியிருந்தன. மேலும் S&P SL 20 குறியீடு 47.15 புள்ளிகள் அதிகரித்து 3,147.45 புள்ளிகளாக இருந்ததாக குறிப்பிடப்பட்டது. இதனால், அனைத்து பங்கு

06

# போராட்டத்தின் சதி!!

# கோட்டாபய வெளிப்படுத்தும் இரகசியங்கள்

**சர்வதேச அனுசரணையுடன் கூடிய 'ஆட்சி மாற்ற' நடவடிக்கையால் இலங்கையின் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட முறை என்ற அறிமுகத்துடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதியுள்ள புத்தகத்தின் தலைப்பு, "ஜனாதிபதி பதவியிலிருந்து நான் வெளியேற்றப்பட்ட சதி" என்பதாகும். 2019ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி முதல் 2022 ஜூலை 14 வரை இரண்டு ஆண்டுகளும் ஒன்பது மாதமும் ஜனாதிபதி பதவியில் இருந்த அவர், அந்தக் காலத்தில் தனது அனுபவங்களை விபரித்துள்ளார். போராட்டத்தால் தான் ஜனாதிபதி பதவியை விட்டுச் செல்வதற்கு வழிவகுத்த காரணங்களையும் அதில் குறிப்பிட்டுள்ளார். அந்தப் புத்தகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளை இங்கு தருகிறோம்.**

**நான் கொவிட் 19 தொற்று நோய் நிலைமைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்ததோடு, அதற்காக மக்களிடமிருந்து கிடைத்த வரவேற்பின் காரணமாக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் எனக்குக் கிடைத்தது. அதன் பின்னர் 2021ஆம் ஆண்டில் நான் தடுப்பூசி போடும் வேலைத்திட்டத்தையும் வெற்றிகரமாக முடித்தேன். அதன் மூலம் 2021ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் இயல்பு வாழ்க்கையை மீள ஆரம்பிக்க முடிந்தது. 2022ஆம் ஆண்டு இரண்டாவது காலாண்டில் நாட்டை இயல்பு நிலைக்கு மாற்ற எனது எதிர்த்தரப்பினர் எனக்கு வழிவிட்டிருந்தால் அவர்களால் எனது அரசாங்கத்தை கவிழ்த்திருக்க முடியாது. யுத்த காலத்திலும் கூட இலங்கையில் நிலவிய பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையும் வளர்ச்சியும் சர்வதேச சக்திகளின் நிகழ்ச்சி நிரலை இலங்கையில் நடைமுறைப்படுத்த முடியாமல் போனதற்கு காரணமாகக் குறிப்பிட்டு முன்னைய அத்தியாயத்தில் நாம் மேற்கோள் காட்டிய 2021ஆம் ஆண்டில் நோர்வே அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட போன்ஸ் ஒஃப் பீஸ் என்ற அறிக்கையில் கூறப்பட்ட காரணத்தை மீண்டும் நாம் இங்கு நினைவு படுத்த வேண்டும். என்னை பதவியிலிருந்து வெளியேற்றும் ஒருங்கிணைந்த அரசியல் இயக்கம் 2022 மார்ச் 31ஆம் திகதி தொடங்கப்பட்டது இதனாலேயாகும்.**

சர்வகட்சி ஆட்சி அமைப்பதற்கான கோரிக்கை 2022 ஏப்ரலிலிருந்து தொடர்ந்து கொண்டிருந்தது. அந்தக் குரல் அதிகமாக எழுந்தது ஒரு காலத்தில் என்னை ஆதரித்த தரப்பினரிடமிருந்தேயாகும். அந்த நேரத்தில், புதிய அமைச்சரவை பதவியேற்று சில நாட்களே கடந்திருந்தன. முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, சர்வகட்சி ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என்றும், சர்வகட்சி அரசாங்கத்திற்கு வழிவிடும் வகையில் பிரதமரும் அமைச்சரவையும் பதவி விலக வேண்டும் என்றும் கூறி எனக்கு கடிதம் அனுப்பியிருந்தார். மகாசங்கத்தினரிடமிருந்தும் இதே கோரிக்கை கிடைத்ததன் பின்னர் நான் இடைக்கால அரசு ஒன்றை அமைக்கச் சம்மதிப்பதாக அறிவித்திருந்தேன்.

> **முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, சர்வகட்சி ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என்றும், சர்வகட்சி அரசாங்கத்திற்கு வழிவிடும் வகையில் பிரதமரும் அமைச்சரவையும் பதவி விலக வேண்டும் என்றும் கூறி எனக்கு கடிதம் அனுப்பியிருந்தார். மகாசங்கத்தினரிடமிருந்தும் இதே கோரிக்கை கிடைத்ததன் பின்னர் நான் இடைக்கால அரசு ஒன்றை அமைக்கச் சம்மதிப்பதாக அறிவித்திருந்தேன்**

வேறு தரப்பினரிடமிருந்தும் இடைக்கால அரசாங்கத்திற்கான கோரிக்கைகள் எமக்கு கிடைத்தன. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் இளம் பௌத்த சங்கம் என்பன இணைந்து நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது தொடர்பான கூட்டுப் பிரேரணைகளை மகாநாயக்க தேரர்களிடம் கையளித்தன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி, பிரதமர் தலைமையில் தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

2022 ஜூலை மாத ஆரம்பத்தில் எரிபொருள் தட்டுப்பாடு தீவிரமடைந்தது. பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் போக்குவரத்துக்கும் கடும் தாக்கங்கள் ஏற்பட்டன. அரச ஊழியர்கள் தமது பணியிடங்களுக்குச் செல்வது வரையறுக்கப்பட்டதோடு, தனியார் துறையினரும் அவ்வாறான மட்டுப்படுத்தல்களை மேற்கொண்டனர். வைத்தியசாலைகளில் வைத்திய சேவைகள் மற்றும் அம்பூலன்ஸ் வாகன சேவைகளுக்கும் தாக்கங்கள் ஏற்பட்டன. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சாதாரண தனியார் பயணிகள் பஸ் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்தது. 40 லீற்றர் டீசலைப் பெற்றுக் கொள்வதற்காக குறுகிய தூர பேருந்து உரிமையாளர்கள் நான்கு நாட்கள் எரிபொருள் வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்ததோடு, அவர்களால் அந்த டீசலைக் கொண்டு ஒரு நாள் மட்டுமே சேவையில் ஈடுபட முடியுமாக இருந்தது. நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் தாங்களாகவே ஊரடங்குச் சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு வீட்டில் இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவும் தெரிவித்திருந்தார்.

2022 ஜூலை 04ஆம் திகதி கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இந்த நிலையில் தான் 2022 ஜூலை 09ம் திகதி பாரிய அளவிலான போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஜூலை 8 மற்றும் 9ஆம் திகதிகளில் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு, பொலிஸார் விடுத்த கோரிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்தது.


ஜூலை 08ஆம் திகதி இரவு மேல் மாகாணத்தின் சில பிரதேசங்களில் அரசாங்கம் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்திருந்த போது, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மக்கள் ஆர்ப்பாட்டங்களை அடக்க பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுவதை கண்டித்தது. இந்தச் செயற்பாடானது தெளிவாகவே கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை அடக்கும் நோக்கைக் கொண்டது எனக் கூறியது. 2022 ஜூலை 8ஆம் திகதி, பாதுகாப்புப் படைத் தலைமையகத்திலிருந்து நடவடிக்கைப் பிரிவினை ஜனாதிபதி மாளிகைக்கு மாற்றுமாறு பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவுக்கு நான் அறிவுறுத்தினேன். 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி இரவு அலரி மாளிகையில், முன்னாள் பிரதமர் உள்ளிட்ட தரப்பினரை வெளியேற்றுவதற்காக இராணுவத்தினரை அழைத்து வந்த போது எமக்கு ஏற்பட்ட மோசமான அனுபவம் காரணமாக அனைத்து பாதுகாப்பு பிரதானிகளையும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைப்பதற்கு நான் இந்த நடவடிக்கை எடுத்தேன். 2022 ஜூலை 9 அன்று காலை 8:00 மணிக்கு மேல் மாகாணத்தின் சில பகுதிகளில் பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது.

2022 ஜூலை 9ஆம் திகதி அன்று காலை பாதுகாப்புச் செயலாளர், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டிருந்த செயற்பாட்டு அறைக்கு வந்திருந்தனர். அரசாங்கத்தின் திட்டமாக இருந்தது அனைத்து நுழைவாயில்களையும் மறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்புக்கு வருவதை தடுப்பதேயாகும். எனினும் அவ்வாறான வீதித் தடைகள் எங்கும் ஏற்படுத்தப்பட்டிருக்காததால், ஆர்ப்பாட்டக்காரர்கள் எந்தவித இடையூறும் இன்றி ஜனாதிபதி மாளிகையை அடைந்தனர்.

> **கடற்படையினர் துறைமுகத்தில் இரண்டு படகுகளை ஆயத்த நிலையில் வைத்திருந்ததோடு, அவற்றில் ஒன்றில் நாங்கள் ஏறினோம், மற்றைய படகு அதற்கு எதிர்த்திசையில் அனுப்பப்பட்டு நாம் எந்தப் படகில் இருக்கிறோம் என்பதை வெளியாட்கள் யாரும் அறியாதபடி திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டதையடுத்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு எனக்கு கடிதம் எழுதி, ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்யுமாறு கேட்டுக் கொண்டது.**

காலை 10.30 அளவில் நான் உடனடியாக ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேற வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இராணுவ பிரதானிகள் என்னிடம் கூறினர். அந்நேரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு ஒரு மணி நேரம் கூட ஆகியிருக்கவில்லை. அதற்கு முன்னைய நாள் எனது பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகளது ஆலோசனையின் பிரகாரம் நாம் அவசர நிலையில் பயன்படுத்துவதற்காக ஆடைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய இரண்டு பைகளை ஆயத்தப்படுத்தியிருந்தோம். நாம் அந்தப் பயணப் பொதிகளை எடுத்துக் கொண்டு கீழே வந்து எமது வாகனங்களில் ஏறும் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் முன் வாசல் கேட்டினை உடைத்துக் கொண்டு ஜனாதிபதி மாளிகை வளவினுள் பிரவேசித்தனர். இவை அனைத்தும் இடம்பெறும் சமயம் பெசிலும் ஜனாதிபதி மாளிகையில் இருந்ததோடு, அவரும் எமது வாகனங்களில் ஏறிக் கொண்டதன் பின்னர் நாம் ஜனாதிபதி மாளிகையின் பின்புற வாசலுக்கு அருகில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்குள் பிரவேசித்தோம். எம்மைப் பாதுகாப்பாக அவ்விடத்திலிருந்து வெளியே அழைத்துச் செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை கடற்படைத் தளபதி திட்டமிட்டிருந்தார். அந்நேரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையினுள் நுழைந்துள்ளதை கடற்படை முகாமில் தொலைக்காட்சித் திரையில் எம்மால் கண்டு கொள்ள முடிந்தது.

கடற்படையினர்துறைமுகத்தில் இரண்டு படகுகளை ஆயத்த நிலையில் வைத்திருந்ததோடு, அவற்றில் ஒன்றில் நாங்கள் ஏறினோம், மற்றைய படகு அதற்கு எதிர்த்திசையில் அனுப்பப்பட்டு நாம் எந்தப் படகில் இருக்கிறோம் என்பதை வெளியாட்கள் யாரும் அறியாதபடி திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டதையடுத்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு எனக்கு கடிதம் எழுதி, ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்யுமாறு கேட்டுக் கொண்டது. அந்தக் கடிதத்தில் டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் சன்ன ஜயசுமன, கலாநிதி நாலக கொடஹேவா, பேராசிரியர் சரித ஹேரத், வசந்த யாப்பா பண்டார, டிலான் பெரேரா உள்ளிட்ட பலர் கையொப்பமிட்டிருந்தனர். இதனிடையே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி தலைவர்களின் அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். கட்சித் தலைவர்கள் எடுக்கும் எந்த முடிவையும் நான் மதிப்பேன் என்று பிரதமரிடம் தெரிவித்தேன். நான் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறியவுடன் அமைச்சர்களான பந்துல குணவர்தன, மஹிந்த அமரவீர மற்றும் தம்மிக்க பெரேரா ஆகியோர் தமது அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்தனர்.




> **2022ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்களின் பின்னர், தமது பாதுகாப்பு எவ்வாறிருந்தாலும், தமது அயலவர்களின் பாதுகாப்பு தொடர்பில் சிந்தித்தாவது எந்த ஒரு தலைவரும் ஜனாதிபதி, பிரதமர் அல்லது அமைச்சர்கள் போன்ற பதவிகளுக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் தமது சொந்த வீடுகளில் தொடர்ந்தும் வாழ மாட்டார்கள். நான் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறியவுடன் அமைச்சர்களான பந்துல குணவர்தன, மஹிந்த அமரவீர மற்றும் தம்மிக்க பெரேரா ஆகியோர் தமது அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்தனர்.**

அதன் பின்னர் அன்றைய தினத்தினுள், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகை ஆகியவற்றை போராட்டக்காரர்கள் விரைவாகக் கைப்பற்றினர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீட்டிற்கும் போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். நான் இரண்டு வருடங்கள் ஒன்பது மாதங்கள் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தேன். இந்தக் காலத்தில் இரண்டு வருடங்களும் ஐந்து மாதங்களாகவும், நான் எனது சொந்த வீட்டிலேயே வாழ்ந்தேன். 2022 மார்ச் 31ஆம் திகதி இரவு, எனது சொந்த வீட்டைச் சுற்றி நடந்த போராட்டத்தின் காரணமாக, அதிக பாதுகாப்பு தேவைப்பட்டதால் நான் ஜனாதிபதி இல்லத்திற்குச் செல்ல நேர்ந்தது. தலைவர்கள் மாற்றத்தை உருவாக்க முற்படும்போது, பொதுமக்களும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். இல்லாவிட்டால் அனைத்தும் பின்னோக்கிச் சென்றுவிடும். 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்களின் பின்னர், தமது பாதுகாப்பு எவ்வாறிருந்தாலும், தமது அயலவர்களின் பாதுகாப்பு தொடர்பில் சிந்தித்தாவது எந்த ஒரு தலைவரும் ஜனாதிபதி, பிரதமர் அல்லது அமைச்சர்கள் போன்ற பதவிகளுக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் தமது சொந்த வீடுகளில் தொடர்ந்தும் வாழ மாட்டார்கள்.

அதன் பின்னர் அந்த நாளினுள் ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகை போன்றவற்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் மிக விரைவாகவே கைப்பற்றினர்.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெளியேறிய நாம் திருகோணமலைக்குச் சென்று அங்கு கடற்படை முகாமில் இரவு தங்கிவிட்டு மறுநாள் ஹெலியில் கட்டுநாயக்கா விமானப்படை முகாமுக்குச் சென்று இரண்டாவது இரவை விமானப் படை முகாமில் கழித்தேன். மறுநாள் இரவு நாம் விமானப்படை விமானத்தில் மாலைத்தீவுக்குப் புறப்பட்டு 2022ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி அதிகாலை 3.00 மணியளவில் மாலைதீவு தலைநகரைச் சென்றடைந்தோம். மாலேயிலிருந்து சுமார் 200 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள தீவின் ஹோட்டலில் நாம் தங்குவதற்கான ஏற்பாடுகளை மாலைதீவு அரசாங்கம் செய்திருந்ததோடு, நாம் படகின் மூலம் அந்த ஹோட்டலை சென்றடைந்த போது காலை நேரமாகியிருந்தது. அங்கிருந்து தனியார் விமானத்தில் சிங்கப்பூர் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இந்திய அதிகாரிகள் அந்த தனியார் விமானத்திற்கு மாலைதீவு செல்வதற்கான அனுமதியை வழங்கியிருக்கவில்லை. எனவே வர்த்தக விமானத்தில் சிங்கப்பூர் செல்வதற்கான விமான டிக்கட்டுக்களை ஏற்பாடு செய்யுமாறு நான் ஆலோசனை வழங்கினேன். அதனடிப்படையில் நாம் சிங்கப்பூர் சென்றடைந்தோம்.

நான் ஹோட்டலிலிருந்து விமான நிலையம் வரை சென்று அங்கிருந்து சிங்கப்பூர் செல்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மாலைதீவு அரசு செய்திருந்தது. என்னுடன் என் மனைவியும் இரண்டு பாதுகாப்புப் அதிகாரிகளும் வந்திருந்தனர். நான் மாலைதீவில் இருந்த சமயத்தில் நான் நாட்டிற்கு வெளியே இருந்ததால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக நியமித்திருந்தேன்.

> **நாட்டினுள் சட்டம் ஒழுங்கு மீள உருவாக்கப்பட்டிருந்தால், பொருளாதாரத்துக்குத் தேவையான அந்நியச் செலாவணி தானாகவே கிடைத்திருக்கும். எவ்வாறாயினும், 2022 ஜூலை 13ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைக் குழுவின் ஒருங்கிணைந்த கூட்டத்தில், ஆர்ப்பாட்டக்காரர்களை சமாதானப்படுத்துவதன் ஊடாக அப்போதைய நிலைமையினைக் கட்டுப்படுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது**

சிங்கப்பூரில், என்னையும் என் குழுவையும் விமான நிலையத்தில் வரவேற்று ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றதோடு, அங்கு நான் தங்கியிருக்கும் தளத்தின் பாதுகாப்புக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. சிங்கப்பூர் வந்ததன் பின்னர் அரசியல் கட்சித் தலைவர்கள் என்னிடம் விடுத்த கோரிக்கைக்கு மதிப்பளித்து அடுத்த சில நாட்களில் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு அறிவித்தேன்.

அப்போது, நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய ஒரே நபர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்ற முடிவுக்கு நான் வந்ததால், அவருக்கு ஜனாதிபதி பதவியை வழங்குவதற்கு நான் தீர்மானித்திருந்தேன்.

நாட்டினுள் சட்டம் ஒழுங்கு மீள உருவாக்கப்பட்டிருந்தால், பொருளாதாரத்துக்குத் தேவையான அந்நியச் செலாவணி தானாகவே கிடைத்திருக்கும்.

எவ்வாறாயினும், 2022 ஜூலை 13ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைக் குழுவின் ஒருங்கிணைந்த கூட்டத்தில், ஆர்ப்பாட்டக்காரர்களை சமாதானப்படுத்துவதன் ஊடாக அப்போதைய நிலைமையினைக் கட்டுப்படுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகவில்லை. புதிய அரசாங்கம் ஒன்று அமையும் வரை தான் பதவியில் நீடிப்பதாக அவர் ஏற்கனவே அறிவித்திருந்தார். ஜூலை 14ஆம் திகதி, நான் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை, பாராளுமன்ற சபாநாயகருக்கு அனுப்பினேன்.



தமிழில் – எம். எஸ். முஸப்பிர்



உலக சைவப் பேரவை அமைப்பின் குழு சார்பாக எஸ். தனபாலாவின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரி அன்று பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் கலந்துகொண்டு நந்திக் கொடி ஏற்றுவதையும் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மாவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கொடி அணிவிப்பதையும் அருகில் விக்ரமசிங்க வையும் மற்றும் கலந்து கொண்டோரையும் ஆலய அறங்காவலர்களையும் படத்தில் காணலாம்.

## சங்கீத நாடக அகாடமி விருது



சென்னை சங்கீத நாடக அகாடமி விருது பெற்ற ஜூடோ கலைஞர் பழனிவேல், வீணை கலைஞர் திருமதி ஜெயந்தி குமரேஷ், பரதநாட்டிய கலைஞர் திருமதி ஊர்மிளா சத்யநாராயணன், வாய்ப்பாட்டு கலைஞர் மஹாராஜபுரம் ராமச்சந்திரன், மிருதங்க கலைஞர் நெய்வேலி திரு நாராயணன் ஆகியோரை டில்லித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன், செயற்குழு உறுப்பினர்கள் உஷா வெங்கடேசன், ஜெ. சுந்தரேசன் முன்னாள் செயற்குழு உறுப்பினர் கே. முத்துசுவாமி ஆகியோர் கடந்த 06ஆம் திகதி புதன்கிழமை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

## மக்கள் நேசன் துரைராஜாவுக்கு இன்று யாழ்ப்பாணத்தில் பாராட்டுவிழா



சச்சி அண்ணை என அந்த நாட்களின் இளைஞர்களால் உரிமையுடன் அழைக்கப்பட்ட மறவன்புலவு சச்சிதானந்தத்தின் பெரு முயற்சியிலும், பெரும் சர்வதேச தொடர்பாடல் பங்களிப்பிலும், 1979ஆம் ஆண்டு தென்மராட்சியை தளமாக கொண்டு, சமூக சமத்துவத்தை நோக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட "அறவழி போராட்டக் குழு" (Non Violent Direct Action Group) அமைப்பின் தலைவராக, ஆரம்ப காலம் முதல், 1990ஆம் ஆண்டு வரை செயல்பட்டு, அந்த அமைப்பை சீராக வழி நடத்திய V.S.துரைராஜாவுக்கு விழா எடுத்து மதிப்பளிக்கிறார்கள், அவராலும் அறவழி போராட்டக் குழுவினாலும் பயன் பெற்ற மக்கள்.

சமூக சமத்துவம் இன்மையாலும், சாதிய பாகுபடுகளாலும் இடர்ப்பட்டு வாழும் மக்களுக்காக அந்த அமைப்பு, முன்னெடுத்த போராட்டங்கள், அந்த மக்களின் வாழ்வியல் எழுச்சிக்கான பங்களிப்புக்கள் அனைத்தையும் மறைந்த ஜீவகதாஸுடன் இணைந்து அவர் முன்னெடுத்த பாணி துரைராஜாவிற்கே உரிய தனித்துவமான பாணி.

நான் உட்பட தோழர் நாபா, நண்பர்கள் முத்துகுமாரசாமி, வண்ணை ஆனந்தன், மயிலிட்டி புஷ்பராஜா போன்றவர்கள் துரைராஜாவின் வழிகாட்டுதலில் செயற்பட்ட பெருமையைப் பெற்றவர்கள். புலம் பெயர்ந்து கனடா நாட்டில் வாழ்ந்தாலும் மக்கள் பணியே தன் வாழ்வின் இலட்சியம் என, தாயகத்து செயற்பாடுகளுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கும் V.S.துரைராஜாவுக்கு யாழ்ப்பாணத்திலேயே இன்றைய தினம் இடம்பெறுகின்ற விழா சிறக்க வாழ்த்துவோம், முடியுமானவர்கள் விழாவில் கலந்து சிறப்பிக்கவும். அதேபோன்று ஏப்ரல் மாத முதல் வாரத்தில் கொழும்பு தமிழ்ச் சங்கத்திலே இடம்பெறவுள்ள அவரது நூல் வெளியீடு மற்றும் பாராட்டு விழா நிகழ்வில் கலந்து சிறப்பித்து அவருக்கு கௌரவம் அளிப்போம்.

கோவை நந்தன்



மாத்தளை மாசிமக மகோற்சவத்தை முன்னிட்டு மாத்தளை வடிவேலன் எழுதிய "மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும் மலையகத் தமிழரும்" என்ற நூலின் பிரதிகளை அன்னை முத்துமாரியிடம் அர்ச்சித்து நூற்படையல் செய்து ஆலய தலைவர் விக்னேஷ்வரன் சர்வானந்தா வெளியிட்டு வைப்பதையும், ஆன்மிக சமூக செயற்பாட்டாளர், எச்.எச்.விக்கிரமசிங்க, தொழிலதிபர் தனுஷ்கோடி இராஜேந்திரனிடம் வழங்குவதையும் இந்த நிகழ்வில் கலந்துக் கொண்ட சைவப்பெரியார் சு.புண்ணியசீலன், சுப்பையா ஜெயகுமார் உட்பட அம்பிகை அடியார்களையும் படங்களில் காண்க.

## அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் அபிவிருத்தி கலந்துரையாடல்




பேருவளை சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழா பூர்த்தியடைந்துள்ள நிலையில், 1980 முதல் 2019 வரையான பழைய மாணவர்களுடனான விசேட கலந்துரையாடல் பாடசாலை அதிபர் எம். இப்ராஹீம் தலைமையில் (08) பாடசாலை எஸ்.எம் ஜாபிர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஒவ்வொரு வகுப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 05 பழைய மாணவர்கள் வீதம் சுமார் 300 பேர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பாடசாலையின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அதிபர் மற்றும் பிரதி அதிபர் மொஹமட் பர்ஸான், அஷ்ஷெய்க் அரபாத் கரீம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இதன் பின் ஏற்பாட்டாளர்கள் அதிபர், பிரதி அதிபருடன் கூட்டாக எடுத்துக்கொண்ட படம்.

## சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடிய இலங்கைப் பல்கலைக்கழக மகளிர் அமைப்பு



SLFUW ஆனது 'சர்வதேச மகளிர் தினத்திற்காக ஒரு இலட்சியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது, இந்த ஆண்டின் 'பெண்களில் முதலீடு செய்யுங்கள் ; முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துங்கள் ' என்ற ஐ.நா கருப்பொருளுக்கு இணங்க தனது வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

SLFUW, தலைவர் கேணல் டாக்டர் உதுலா கிருஷ்ணரத்ன, இதுபற்றி விளக்குகையில் நடைமுறையில் இதன் அர்த்தம், 'ஒவ்வொரு துறையிலும் பெண்களை உள்வாங்க ஊக்கமளிக்கப்படுகின்றது' ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கு இது உதவும். இது 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு தரமான கல்வி மற்றும் பயிற்சிக்கான அணுகலை வழங்க வேண்டும்' என்பதை உணர்த்துகிறது.

எனவே, SLFUW, பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான பின்தங்கிய பெண் இளங்கலைப் பட்டதாரிகளுக்கு 16 புலமைப்பரிசில்களை வழங்க திட்டமிட்டுள்ளது, குடும்பத்தில் உள்ள பிரச்சினைகளால் மோசமான நிலையில் உள்ள ஒரு மாணவருக்கு பெப்ரவரி 27 அன்று முன்கூட்டியே இந்த புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. ஏனைய 15 உதவித்தொகைகள் பெண்கள் தினக் கொண்டாட்டங்களுடன் இணைந்ததாக வழங்கப்படும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் பாடநெறி அவர்களின் ஆளுமை மற்றும் சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கும், அதன் மூலம் அவர்களின் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் வசதிகள் மேற்கொள்ளப்படும்.

வெவ்வேறு வயதுப் பிரிவுகளில் மற்றும் பாடசாலைகளில் பயிலும் பெண் பிள்ளைகளும் இதே போன்ற திட்டத்தின் பயனாளிகளாக இருப்பார்கள், இதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தை எதிர்கொள்ளும் அறிவையும் திறன்களையும் பல்கலைக்கழகத்திலோ அல்லது வெளியிலோ வளர்த்துக் கொள்வார்கள்.

மொனராகலை மாவட்டத்தில் குறைந்த வருமானம் கொண்ட பிரதேசமான சியம்பலாண்டுவவிலுள்ள கந்தவுடபங்குவ தேசியப் பாடசாலைக்குச் சென்று, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முப்பரிமாண திறந்தவெளி கணித ஆய்வகத்திற்கான தொழில்நுட்பப் பொருட்களைப் பெறுவதற்கு பணப் பங்களிப்பை SLFUW செய்தது. அதிபரின் பரிந்துரையின் பேரில் உதவி தேவைப்படும் நான்கு மாணவிகளுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.




## "வோக்கர்ஸ் யூனியனின்" நான்காவது ஆண்டுவிழா



(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று "வோக்கர்ஸ் யூனியன்" தனது நான்காவது ஆண்டுவிழாவை சென்ற வாரம் வித்தியாசமான முறையில் கொண்டாடியது.

நாட்டின் பொருளாதார தாக்கத்திலிருந்து சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் சிறுவர்களை பாதுகாக்கவும் தொற்றா நோயிலிருந்து விடுவிப்பதற்கும் "நடை உடற் பயிற்சி" பெரும் பங்களிப்பு வழங்கும் அதே வேளை சிறந்த சமூகத்தையும் உருவாக்கும் என்ற உயர்ந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பெருந்தொகையான சிறுவர்களும் சிரேஷ்ட பிரஜைகளும் மிக உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட பட்டைய கணக்காளர் ஏ.பீ. மொஹிடீன் பாவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளுக்கு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் பிரதம அதிதியாகவும் அக்கரைப்பற்று மாநகரசபை ஆணையாளர் எ.ரீ.எம் ராபி கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

## சர்வதேச ரொட்ரிக்கழக விருது பெற்ற மாத்தளை மலரன்பன்



இலங்கை மூத்த எழுத்தாளரான மாத்தளை மலரன்பனுக்கு ஒரு லட்சம் (ரூபா 100,000) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மாத்தளை மகாத்மா காந்தி மண்டபத்தில் நடைபெற்ற மலரன்பனின் "கொலுஷா" நூல் வெளியீட்டின் போது இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சர்வதேச ரொட்ரிக் கழக கொழும்பு, மாலைத்தீவுக்கான ஆளுநர் ஸ்ரீதரன், அறங்காவலர் எஸ். சந்திரசேகரன், முன்னாள் அதிபர் எஸ்.மரதன் கிருஷ்ணன், சிரேஷ்ட ஊடகவியலாளர் கே.வேலாயுதம் ஆகியோர் இந்த விருதை சென்னை ரொட்ரிக் கழக தலைவர் டொக்டர் குமார் ராஜேந்திரன் சார்பாக வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் நூல் வெளியீட்டாளர் எச்.எச்.விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார்.



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் "வட்ஸ் நியூ" இளம் சட்டத்தரணிகளுக்கும் இடையில் சட்ட மறுசீரமைப்பு தொடர்பிலான கலந்துரையாடலொன்று அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.**

**அதன்போது இளம் சட்டத்தரணிகள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அளித்த பதில்கள் வருமாறு,**



# நவீன பொருளாதாரத்துக்கேற்ற புதிய சட்டங்கள் அறிமுகம்

**கேள்வி: 2021/2022 ஆம் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார சரிவுகளுக்கான காரணம் என்னவென நினைக்கிறீர்கள்?**

பதில்: 2021/ 2022 பற்றிப் பெரிதளவில் விபரிக்க விரும்பவில்லை. நாம் தொடர்ச்சியாக கடன்பட்டு வந்தமையே அதற்கு காரணமாகும். கடனை முகாமைத்துவம் செய்ய முடியாமல் போன வேளையில் நாம் சரிவடைந்தோம். வருமானம் இல்லாமையே எம்மால் கடன் செலுத்த முடியாமைக்கு காரணமாகும்.

இறுதியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் இது நிகழ்ந்திருந்தாலும் அதற்கு முன்பிருந்தே கடன் வாங்கும் படலம் ஆரம்பித்திருந்தது. மற்றைய நாடுகளைப் போல் அல்லாமல் நம்மால் வர்த்தகம் செய்ய முடியாத துறைகளுக்கே கடன் பெற்றோம். குறிப்பாக வீதி அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்பட்டதாக நிர்மாணத்துறை செயற்பட்டது. ஆனால் மகாவலி போன்ற வேலைத் திட்டங்களினால் நாட்டுக்கு மின்சாரம் கிடைத்ததோடு விவசாயமும் வளர்ச்சியடைந்தது.

நாடு முகம்கொடுத்த நிலைமைக்கு அனைவரும் பொறுப்பு கூற வேண்டும். எவரும் தப்பிச் செல்ல முடியாது. நாம் இந்த நிலையிலிருந்து முன்னேறிச் செல்ல வேண்டும்.

**கேள்வி: படுகடனை திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கும் நாடு எவ்வாறு முன்னேறிச் செல்வது?**

பதில்: நாம் கடன் செலுத்த முடியாத நிலையில் இருப்பது உண்மை. அதனால் 2026/2027 வரையில் கடன் செலுத்துகைக்கான நிவாரண காலத்தையே நாம் கோருகிறோம். 2022ஆம் ஆண்டில் 8.3% ஆகக் காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியை நாம் 2023 ஆம் ஆண்டில் 10.9% ஆக மேம்படுத்தினோம். அதனால் மொத்த தேசிய உற்பத்தி உயர்வடையவில்லை. 2% ஆக அது குறைவடைந்தது. இவ்வருடத்தில் 13.1% ஆக மேம்படுத்திக்கொள்ள முடியுமென நம்புகிறோம். அதனால் மொத்த தேசிய உற்பத்தி வலுப்பெறும். 2028ஆம் ஆண்டளவில் 15.2% ஆக உயர்த்திகொள்ள முடியும். 8.3% இலிருந்து 15.2% ஆக வலுப்படுத்தப்படுவதை 175% அதிகரிப்பாக குறிப்பிட முடியும்.

முதல் தடவையாக 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் 6.7% உபரி ஏற்பட்டுள்ளது. அதனை நாம் 2.3% வரையில் கொண்டு செல்ல வேண்டும். அதேபோல் வரவு செலவு திட்டத்தில் துண்டுவிழும் தொகை 2022 ஆம் ஆண்டில் 10.2% ஆக காணப்பட்டது. அதனை நாம் 2028 ஆண்டளவில் 3.9% வரையில் கொண்டுச் செல்ல வேண்டும். இது இலகுவானதல்ல. அது எம் முன்பிருக்கும் சவாலாகும். அதேபோல் 2022ஆம் ஆண்டில் எமது கடன் மொத்த தேசிய உற்பத்தியில் 128 வீதமாகக் காணப்பட்டது. 2032 ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியை 95% ஆக அதிகரித்துக்கொள்ள வேண்டும். 2022 ஆம் ஆண்டில் நாம் மொத்த தேசிய உற்பத்தியில் 35% ஐ கடனாக பெற்றுக்கொண்டோம். அதனை 13% குறைக்க வேண்டியது அவசியமாகும்.

இதனை நாம் முன்னெடுத்துச் செல்ல நாட்டின் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதன்போது ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகர வேண்டும். தற்போது எமக்கு இறக்குமதி செய்யும் அளவுக்கு போதிய அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லை. நாம் போட்டித் தன்மை நிறைந்த டிஜிட்டல் பசுமை பொருளாதாரத்திற்கு நுழைய வேண்டும்.

**கேள்வி: புதிய பொருளாதாரத்தை நோக்கி நகரும் போது நாட்டின் நீதிக் கட்டமைப்பில் மாற்றம் செய்ய வேண்டுமல்லவா?**

பதில்: புதிய சட்டங்கள் தேவைப்படும். ஐரோப்பாவின் வர்த்த முறைமை ஒல்லாந்து காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ரோமன் ஒல்லாந்து முறைமைகள் இன்றும் எமது சட்டத்தின் ஒரு பகுதியாக காணப்படுகின்றன. 1835ஆம் ஆண்டில் வெள்ளையர்களால் புதிய பொருளாதாரம் திறக்கப்பட்டது. அதன் பின்னர் அவர்களின் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1970களில் தெரிவான அரசாங்கம் பொதுவுடமை பொருளாதார கொள்கையை ஏற்படுத்தியது. அதற்கான புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. 1977ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன திறந்த பொருளாதார கொள்கையை அமுல்படுத்தினார். அதற்காகவும் புதிய சட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. அதேபோன்று பசுமை பொருளாதாரத்திற்கும் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் கடந்த 14 மாதங்களில் 42 சட்டங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளது. அது ஒரு வெற்றியாகும். மேலும் 62 சட்டங்களை எவ்வாறு அறிமுகப்படுத்துவது என்பதே சட்ட மாஅதிபரின் கேள்வியாக உள்ளது. அதற்காக பாராளுமன்ற தேர்தல் ஒத்திவைக்கப்பட மாட்டாது. இம்முறை செய்ய முடியாததை அடுத்த பாராளுமன்றத்தில் செய்யலாம். இந்த முறைமையை தொடர்ச்சியாக பின்பற்றினால் எதிர்காலத்தில் புதிய சட்டங்களும் புதிய பொருளாதார முறைமையும் உருவாகும்.

கொழும்பு துறைமுக நகரத்திற்கும் நாம் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவோம். கரையோர பொருளாதாரத்தை உருவாக்குவதே அதன் நோக்கமாகும். தற்போதுள்ள இலங்கையின் சட்டங்களை கொண்டு அதனை நடைமுறைப்படுத்த முடியாது. கரையோர பொருளாதாரம் உள்ள பகுதிகளில் ஐக்கிய ராஜ்ஜியத்தின் வணிகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இவற்றை நடைமுறைப்படுத்த புதிய சட்டத்தரணிகளும் அவசியப்படுவர். அதற்காக உலகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். எமது சட்டங்கள் உலகிற்கு விளங்குவதில்லை. நாட்டை முன்னேற்ற நாம் அந்த வழியில் செல்ல வேண்டியது அவசியம்.

அதேபோல் நாம் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடும் அரச நிறுவனங்களின் கட்டமைப்பையும் மாற்றியமைக்க உள்ளோம். அரச கூட்டுத்தாபனங்கள் அனைத்தும் நிறுவனங்களாக மாற்றப்படும். அந்த நிறுவனங்களின் சொத்துக்கள் பிரதான நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்படும். அதற்காக வர்த்தக முறைமைகளுக்கமைய நாம் செயற்பட வேண்டும்.

நிறுவனச் சட்டத்தில் பொது நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கான பொறுப்பு அவர்களைச் சாரும். தவறு நேரும் போது தண்டிக்கலாம். அதேபோல் அரச, தனியார் வர்த்தகச் சட்டங்களை அறிமுகப்படுத்தவும் எதிர்பார்க்கிறோம். அரச நிதி முகாமைத்துவ சட்டம் புதிதாக கொண்டு வரப்படும். அதேபோல் அரச கடன் முகாமைத்துச் சட்டமும் கொண்டுவரப்படும்.




ஜனாதிபதிக்கும் "வட்ஸ் நியூ" இளம் சட்டத்தரணிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்

அதேபோல் விவசாய நவீனமயப்படுத்தலுக்கான சட்டம் புதிதாக கொண்டுவரப்படும். அதன்போது முதலீட்டுச் சபைக்கு மாறாக பொருளாதார ஆணைக்குழு ஒன்றினை நிறுவ எதிர்பார்க்கிறோம். முதலீட்டுச் சபையின் கீழ் இருந்த முதலீட்டு வலயங்களையும், புதிதாக நிறுவப்படவிருக்கும் முதலீட்டு வலயங்களையும் பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்க எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர் தேசிய உற்பத்திச் சபை உருவாக்கப்படும். உமது உற்பத்திறன் அதிகரிக்கப்படாவிட்டால் உலகத்தோடு போட்டியிட முடியாமல் போய்விடும். அதனையடுத்து தேசிய வர்த்தக நிறுவனம் உருவாக்கப்படும். இவற்றை தனித்தனி சட்டமூலங்களாக சமர்ப்பிப்போம். தற்போதைக்கு இவை அனைத்தும் ஒரேதடவையில் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**கொழும்பு துறைமுக நகருக்கு புதிய சட்டம்**

**கரையோர பொருளாதாரத்தை உருவாக்குவதே அதன் நோக்கம்**

மேலும் சுற்றுலா வர்த்தகத்துக்கான புதிய சட்டங்களும் கொண்டு வரப்படும். காலநிலை மாற்றம் குறித்த சட்டம், புதிய சுற்றாடல் சட்டம், சிங்கராஜ வனம், சிவனொளிபாத மலை, ஹோட்டன் சமவெளி, வஸ்கமுவ, வனப் பூங்கா பகுதிகளை பாதுகாக்க புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும். அதேபோல வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து சர்வதேச வர்த்தக மையத்தை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், கல்வித்துறையில் சில புதிய சட்டங்களைக் கொண்டு வர உள்ளோம். தொழிற்கல்வியை ஒரு அதிகார சபையின் கீழ் கொண்டு வரவும், புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுகாதாரத் துறையில் சீர்திருத்தங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எங்களிடம் 1944இல் கொண்டுவரப்பட்ட கல்விச் சட்டமே உள்ளது. அந்த நேரத்தில் நாங்கள் யாரும் பிறக்கவில்லை. எனவே, இந்த முறையை புதிய சட்டங்கள் மூலம் மாற்ற வேண்டும். நாம் ஒரு புதிய சமூகத்துக்கு, புதிய பொருளாதாரத்துக்குச் செல்ல வேண்டும். மீண்டும் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படாத, சிறந்த நாடாக இலங்கை மாற்றப்பட வேண்டும்.

எமது இந்தச் செயற்பாடுகளுக்கு ஏற்பதான் நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது. சரிந்த நாட்டை ஓரிரு ஆண்டுகள் என்ற குறுகிய காலத்திற்குள் உயர்த்த முடிந்தது. ஏப்ரல் மற்றும் மே மாதத்துக்குள், நம் நாட்டின் வங்குரோத்து நிலை சட்டபூர்வமாக முடிவுக்கு வரும். ஆனால் வாங்கிய கடனை மீளச் செலுத்த வேண்டும். அந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும்.

இதற்கான சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வருவோம். அந்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்ட பிறகு, உயர் நீதிமன்றத்துக்குச் சென்று, அவற்றை ஆராய்ந்த பின்னர் நிறைவேற்ற வேண்டும். இந்த சட்டத்தை சிலர் தடுத்து நிறுத்த முயற்சிக்கின்றனர். ஒரு சட்டம் இயற்றப்பட்ட பிறகு, அதை மீண்டும் ரத்துச் செய்ய முடியாது. அது தொடர்பில் செயற்படாமல் இருக்க முடியாது. சில சட்டத்தரணிகள் வியாக்கியானம் என்ற போர்வையில் நாட்டின் சட்டத்தை கட்டுப்படுத்தவும் பாராளுமன்றத்தின் அதிகாரங்களை மட்டுப்படுத்தவும் முயற்சிக்கின்றனர். அவ்வாறு செய்ய முடியாது.

இந்த நாட்டின் பாராளுமன்றத்தின் அதிகாரம் 1972 இல் நிறுவப்பட்ட அரசியலமைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதற்கு முன் பிரித்தானிய அரசியலமைப்பு இருந்தது. ரணசிங்கவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணையாளர் தொடுத்த, லியனகேவுக்கு எதிரான ராணி தொடுத்த வழக்குகள் போன்று அவற்றை மாற்ற முடியாது. அதன்படி, 1970இல், அரசியலமைப்புச் சபையொன்றை அறிமுகம் செய்து புதிய அரசியல் சாசனத்தைத் தயாரிப்பதற்கான ஆணையை அன்றைய அரசு பெற்றது. அந்தச் சட்டத்தின் ஊடாக மக்கள் இறைமையுள்ள தேசிய ராஜ்ய சபையினால் பாராளுமன்றத்தை நிர்வகிக்க கொல்வின் ஆர் டி சில்வா ஒப்புக்கொண்டார். அதன்படி, பாராளுமன்றத்திற்கு நிறைவேற்று அதிகாரம் இருந்தது. அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு பொறுப்பாக இருந்தது. சட்டமியற்றும் அதிகாரம் மற்றும் நீதித்துறை அதிகாரம் என்பன பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது. அதன் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனை 1977 இல் கொல்வின் ஆர். டி சில்வா அறிமுகப்படுத்தினார். ஆங்கிலேய சட்டத்தின் பிரகாரம் நாங்கள் செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

1977ஆம் ஆண்டு அரசியலமைப்பு நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தியபோது அது மாறியது. அதன்படி, மக்களின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. மற்ற விடயங்கள் மாற்றப்படவில்லை. மேலும், சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் பாராளுமன்றம் என்பன முன்னிலையில் இருந்தன. மேலும் அதில் அடிப்படை உரிமைகளும் இடம் பெற்றிருந்தன. இந்தப் பணியை பாராளுமன்றம் செய்ய வேண்டும்.

ஜனாதிபதி அமைச்சரவையை நியமிக்கும் போது, அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். அது மாறவில்லை.

அதன்படி, இப்போது அதிகாரம் பாராளுமன்றத்திடம் உள்ளது. அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் தான் பிரதான அதிகார மையம் என்பதோடு சர்வஜன வாக்குரிமையும் முதன்மையானது. மற்ற அனைத்தும் இரண்டாம் நிலையில் உள்ளன. ஜனாதிபதி என்ற வகையில் எனக்கு இன்று நிறைவேற்று அதிகாரங்கள் உள்ளன. பாராளுமன்றம் அதை ரத்துச் செய்யலாம். ஆனால் பாராளுமன்றத்தின் அதிகாரங்களைப் பாராளுமன்றத்தால் நீக்க முடியாது.

அன்று கொல்வின் ஆர். டி சில்வா பாராளுமன்றத்தில் சோசலிசத்தை கொண்டு வந்தார். ஜே.ஆர். ஜெயவர்தன திறந்த பொருளாதாரத்தை கொண்டு வந்தது போல் நாமும் இந்த பாதையில் முன்னேற முயற்சிக்கிறோம். கொல்வின் ஆர் டி சில்வா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்தனவும் ரோயல் கல்லூரியில் ஒரே வகுப்பில் கற்றவர்கள். அவர்கள் ஒரே மாதிரியாக சிந்தித்தார்கள். எனவே, பாராளுமன்றத்தின் இறையாண்மை எப்போதும் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப்போது நாம் இங்கிலாந்து நீதிமன்றத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். இவற்றை யாரேனும் கட்டுப்படுத்த முயன்றால், அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம் மற்றும் நீதித்துறை அதிகாரங்களின் முன் இது குறித்து விசாரணை செய்யலாம். இவற்றை நிறுத்த முடியாது. மக்கள் மேலும் துன்பப்பட இடமளிக்க முடியாது.

இவற்றை மனித உரிமைகள் என்று யாராவது கூறினால், மக்களின் வாழ்வுரிமை தான் முதலாவது மனித உரிமை என்பேன். இரண்டாவது மனித உரிமை, பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதாகும். ஏனைய விடயங்கள் அதன் பின்னரே வருகின்றன. நீங்கள் விரும்பும் அரசியலை செய்யுங்கள்.

ஆனால் இந்த மாற்றம் நிகழ வேண்டும். இல்லையெனில் இந்த நாட்டிற்கு எதிர்காலம் இல்லை. அதனால்தான் உங்கள் பங்களிப்பை நான் கேட்கிறேன்.

**கேள்வி: ஜனாதிபதியாக கடமையாற்றும் போது உங்களுடைய சட்டத்தரணி அனுபவம் எவ்வாறு தாக்கம் செலுத்தியது?**

பதில்: இங்குள்ள அனைவரும் சட்டத்தரணிகள். ஆனால் அனைத்துச் சட்டங்களையும் அறிந்த எவரும் இல்லை. தனது துறைசார்ந்த சட்டங்களை மாத்திரமே பலரும் அறிந்திருக்கிறோம். இறுதியில் சட்ட மாஅதிபரின் ஒத்துழைப்பு அவசியம். பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பட்டாலும் சட்ட மாஅதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளும் இயலுமை இருக்கிறது. பிரத்தியேக சட்டத்தரணிகளிடத்தில் ஆலோசனை பெறவும் முடியும். நான், ஐந்து வருடங்கள் மட்டுமே சட்டத்தரணியாக பணியாற்றினேன். அந்தக் காலம் இப்போது மாறிவிட்டது.

**கேள்வி: 2022ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட நிலைமை மீண்டும் ஏற்படாதிருக்க சர்வதேச வர்த்தகம் தொடர்ச்சியாக அவசியப்படும். அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கு அப்பாலான வேலைத்திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

பதில்: சர்வதேச வர்த்தகம் என்று பார்க்கும்போது, ஒவ்வொரு நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை கைசாத்திடுகிறோம். அதேபோல் RCEP உடனும் ஒப்பந்தம் செய்து கிழக்காசியா மற்றும் மேற்கு ஆசியா, அவுஸ்திரேலியாவுடன் ஒப்பந்தங்களை கைசாத்திட்டு வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அதனால் சட்டத் தொழிலுக்கும் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பிலான சட்ட விவாதங்கள் எழுகின்ற போது அது தொடர்பில் தர்க்கிக்கும் வாய்ப்பு சட்டத்தரணிகளுக்கு கிடைக்கும். வருகின்ற முதலீட்டாளர்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கும் வாய்ப்பும் கிடைக்கும். உலக வர்த்தக அமைப்புக்களுடனும் ஒப்பந்தம் செய்துகொள்ள எதிர்பார்க்கிறோம். சுற்றாடல் மற்றும் காலநிலை தொடர்பாகவும் எதிர்காலத்தில் ஒப்பந்தங்களை செய்துகொள்ள எதிர்பார்க்கிறோம். அதன்போதும் சட்டத்தரணிகளுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

**கேள்வி: இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும், எதிர்காலத்தில் அவ்வாறான நெருக்கடிக்கு முகம்கொடுக்காமல் இருப்பதற்கும், மத்திய வங்கியை சுயாதீனமாக செயற்பட அனுமதித்தமை நியாயமானதா?**

பதில்: உலகின் மத்திய வங்கிகள் பலவும் சுயாதீனமாகவே செயற்படுகின்றன. நாமும் எமக்கிருக்கும் அனுபவத்துடன் அந் நிலைக்குச் செல்ல எத்தனிக்கிறோம். பல பொறுப்புக்கள் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கிய இணக்கப்பாடுகளை நாம் நிறைவேற்றியுள்ளோம்.

**கேள்வி: பல்வேறு காரணங்களுக்காக, பெண்களை தொழிற் படையில் இணைந்துகொள்ளாமல் இருப்பது தொடர்பான உங்களது நிலைப்பாடு எவ்வாறானது ?**

பதில்: பெண்கள் தொழில் பங்களிப்பை 45% ஆக அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அது தொடர்பிலான பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. பெண்கள் தொழில் செய்யும் போது பிள்ளைகள் தொடர்பான நிலைப்பாட்டில் பிரச்சினைகள் எழும். அந்த பிரச்சினைகளுக்கு உரிய திணைக்களங்கள் தீர்வு காண வேண்டும். பெண்களின் சமூக பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுகிறது. பெண்கள் உரிமை தொடர்பிலான இரண்டு புதிய சட்டங்களையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற எதிர்பார்க்கிறோம். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பிலான சட்டமூலங்களை தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

**கேள்வி: தொழில் சட்ட மறுசீரமைப்பின் எதிர்பார்ப்பு என்ன?**

பதில்: புதிய தொழில் சட்டம் எமக்கு அவசியப்படுகிறது. தற்போதுள்ள தொழில் சட்டம் காலத்துக்கு பொருத்தமானதல்ல. தொழில் சட்டத்தை உருவாக்கும் போது தொழில் தரப்பினருடன் கலந்துரையாட வேண்டியது மிக அவசியமானது. இரு தரப்புடனும் கலந்துரையாடி சரியான தீர்மானத்தை மேற்கொள்ள முடியுமென நம்புகிறோம்.

**கேள்வி; நீங்கள் முன்னெடுக்கும் சட்டத் திருத்தங்கள் விசேட தேவை உடையோருக்கு எவ்வகையான பங்களிப்பைச் செய்யும்?**

பதில்: விசேட தேவையுடைய சமூகத்திற்கான பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இருப்பினும் அவை திருப்திகரமானதாக இல்லை. அதனால் சட்டத் திருத்தங்களின் போது அதற்குரிய சட்டங்களையும் தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமிக்கவும் எதிர்பார்கிறோம். விசேட தேவை உடையோரைப் போன்றே கவனம் செலுத்தப்படாத பல பிரிவினர் உள்ளனர். இந்நாட்டின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தொடர்பில் நாம் முதலில் கவனம் செலுத்தினோம். அதேபோல் ஏனைய சமூகங்கள் குறித்தும் கவனம் செலுத்தினோம். அனைத்து துறைகள் குறித்தும் அவதானம் செலுத்த ஐந்து வருடங்களாவது தேவைப்படும். அதற்காக வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுகொள்ளவும் எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி: பலவந்தமாக கடத்தப்பட்ட வடக்கின் பிள்ளைகளை தேடித்தருமாறுகோரும் தாய்மாரின் கோரிக்கைக்கு 07 வருடங்களாகின்றன. அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அல்லவா?**

பதில்: தற்போது நாம் காணாமல் போனோர் அலுவலகத்தை ஸ்தாபித்துள்ளோம். அது தொடர்பில் ஆராய்ந்தோம். தற்போதும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. கடந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட மற்றைய ஆணைக்குழுக்கள் தொடர்பில் கண்காணிப்பதற்காக நீதியரசர் நவாஸ் நியமிக்கப்பட்டார். தற்போது அவர் அதுகுறித்த ஆணைக்குழு அறிக்கைகளை பெற்றுக்கொடுத்துள்ளார். அதிலுள்ள பரிந்துரைகளை செயற்படுத்த எதிர்பார்க்கிறோம்.

அவற்றில் சில அறிக்கைகள் TRC இனால் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதோடு சில அறிக்கைகள் காணாமல் போனோர் அலுவலகத்தினால் விசாரிக்கப்பட வேண்டியவையாகும். அந்த பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி: நிறைவேற்று அதிகார முறைமையை நீக்கி வெஸ்ட் மினிஸ்டர் முறைமை போன்ற புதிய முறைமைகளை அறிமுகப் படுத்துவது தொடர்பில் உங்களது நிலைப்பாடு எவ்வாறானதாக உள்ளது?**

பதில்: புதிய அரசியலமைப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டும். அந்த பொறுப்பு புதிய பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். வெஸ்ட் மினிஸ்டர் முறைக்குச் செல்வதா அல்லது இதே முறையில் வேறு பரிணாமங்களுக்குச் செல்வதா என்பது குறித்து பொது மக்கள் மத்தியிலும் சென்று கலந்துரையாட வேண்டும். அதேநேரம் நாட்டுக்கு பொருத்தமான முறைமை எதுவென்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

அது தொடர்பிலான பல்வேறு நிலைப்பாடுகள் உள்ளன. அனைவரும் ஒன்றுபட்டு கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாட்டினை எட்டினால் இலங்கையின் தேவை என்னவென்று தீர்வு கிட்டும். நிறைவேற்று அதிகாரத்தை புறக்கணிப்பதாயின் அதற்கு நாம் முறைமை யாதெனவும் சிந்திக்க வேண்டும். கண்மூடித்தனமாக தீர்மானங்களை மேற்கொள்வது அர்த்தமற்றது.








# பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடும் நடவடிக்கை!

## மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கவுடன் சந்திப்பு



**பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார். அண்மையில் கொண்டாடப்பட்ட சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு எமக்கு அவர் கருத்துகளைத் தெரிவித்தார்.**

**கே: ஒவ்வொரு மகளிர் தினத்திலும் பெண்களின் உரிமைகள், பெண்களின் துன்பங்கள் பற்றிப் பேசப்பட்டாலும் அவை இன்னும் தீரவில்லை என்றே தோன்றுகிறது. இது ஒரு திகதியுடன் மட்டுப்படுத்தப்படும் விடயமா? இதனைத் தீர்ப்பதற்கு எதுவும் செய்ய முயாதா?**

பதில்: எங்களுக்கு இன்னும் நிறைய கடமைகள் இருக்கின்றன. எனவே, இதுவரை செய்துள்ள பணிகள் குறித்து மகிழ்ச்சியடைய முடியாது. மேலும், எல்லாவற்றையும் செய்து விட்டதாக நினைத்து திருப்தி அடையவும் முடியாது. இன்று பெண்கள் பலர் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். பெண்கள் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள், வெளிநாடுகளுக்குச் சென்று காணாமல் போய்விடுகின்றனர். சில பெண்கள் பரிதாபமாக இறக்கின்றனர். இதனால், எங்கோ ஒரு பெரிய குளறுபடி இருப்பதை நாம் அனைவரும் பார்க்கிறோம். இராஜாங்க அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள என்னால் தனியாக இதனை முடிவுக்குக் கொண்டுவர முடியாது.

எங்களிடம் பல ஏற்பாடுகள் உள்ளன. எனது அமைச்சுக்கு போதுமான ஏற்பாடுகள் இருப்பதாக சிலர் நினைக்கின்றனர். குழந்தைகளுக்கு காலை உணவு கொடுக்க நிறைய பணம் ஒதுக்கப்படுகிறது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 4500 ரூபா வழங்கப்படுகிறது. மாகாண சபைகளுக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. நமது குழந்தைகளைப் பாதுகாக்கும் வகையில், 5 வயது வரை குழந்தையை விட்டு பெண்கள் வெளிநாடு செல்லக்கூடாது என்ற சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்று பலர் தொழிலை விரும்புவதில்லை. பெண்கள் இன்று சுதந்திரமாக தெருக்களில் நடமாட முடியாது. பேருந்துகளில் வயது வித்தியாசமின்றி பெண்கள் பாலியல் தொல்லைக்கு ஆளாகின்றனர். எனவே பேருந்துகளில் கமராக்கள் பொருத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இல்லாவிட்டால் நீதிமன்றத்தில் குற்றவாளிகளை எப்படி நிரூபிப்பது? ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்குத் தேவையான பிஸ்கட்டுகளை வழங்க ஒரு பிஸ்கட் நிறுவனம் தயாராக இருந்தது, ஆனால் அது இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை.

இதுபோன்று தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன.

**கே: இலங்கையில் பணிபுரியும் பெண்கள் வெளிநாடுகளில் அவதிப்படுகின்றனர். அவர்களுக்கு நீதி கிடைக்காது என்ற குற்றச்சாட்டுப் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: வீட்டு வேலைக்காக வெளிநாடு செல்லும் பெண்களுக்கு இப்படி நடப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் பயிற்சி பெற்ற தொழிலாளர்களாக அந்தச் சேவைக்கு அனுப்பப்பட வேண்டும். 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் நல்லது. அத்தகைய வயது குழந்தைகள் இருக்கும்போது, பெற்றோர் நாட்டை விட்டு வெளியேறிய பிறகு சமாளிக்க முடியும். இன்று வெளிநாடு செல்லும் பல பெண்களுக்கு மின்சாதனங்களின் பயன்பாடு பற்றி எதுவும் தெரியாது. அதனால், வெளிநாட்டில் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகி நிராதரவாக உள்ளனர். சிலர் பெண்களை வெளிநாட்டுக்கு சுற்றுலாவுக்க அனுப்புவது போன்று வீட்டு வேலைக்கு அனுப்புகின்றனர்.

மேலும், வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்று ஆதரவற்ற நிலையில் உள்ள பெண்களை அரசு தலையிட்டு அழைத்து வர வேண்டும். ஆனால் இதனைச் செய்வதற்கு எமது அமைச்சுக்கு அதிகாரம் இல்லை. வெளிவிவகார அமைச்சின் ஊடாக இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

> 'பெண்கள் விடயத்தில் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன'

**கே: பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் பற்றிய செய்திகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?**

பதில்: திருமண வயது வரம்பை மாற்ற வேண்டும். இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இது தொடர்பாக கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சரவை அமைச்சரே தயாரிக்க வேண்டும். இதை அமைச்சரவை அமைச்சர் முன்வைக்க வேண்டும். இவ்வாறானதொரு கடிதத்தை இந்த அமைச்சின் செயலாளர்கள் அனுப்புவதில்லை. 18 வயதுக்குப் பிறகு ஒரு பெண் தான் விரும்பிய ஒருவரை மணந்து வாழ்நாள் முழுவதும் வாழத் தடை இல்லை. பிறகு குழந்தை பிறக்கும் வரை அழகாக இருப்பார்கள். இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பெற்ற பிறகு, இந்த குழந்தைகளுக்கு உணவளிக்கவும், பால்மாவை வாங்கிக் கொடுக்கவும் அவர்களுக்கு சிரமம் ஏற்படும். எமது நாட்டில் பெண்கள் சொந்தக்காலில் நிற்பவர்களாக மாற்றமடைய வேண்டும்.

> 'எமது நாட்டில் பெண்கள் சொந்தக்காலில் நிற்பவர்களாக மாற்றமடைய வேண்டும்'

**கே: தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இளம் பெண்களின் உழைப்பு மலிவு விலைக்கு சுரண்டப்படுகிறது. இளைய தலைமுறையினருக்கான உயர் வேலைவாய்ப்புகளுக்கான அணுகல் மரபுரிமையாக இருக்க வேண்டும், இல்லையா?**

பதில்: பொருளாதார நெருக்கடி ஏற்பட முன்னரும் இந்த நிலைமை காணப்பட்டது. நம் காலத்தில் இளம் வயதிலேயே திருமணம் பற்றிய முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. பின்னர் சமூக ஏற்றத் தாழ்வுகள் அவர்களுக்குப் பிரச்சினைகளாக வந்தன. பெண் ஒரு சமையலறை தாதியாகவும், ஒரு தாயாகவும் மாற்றப்பட்டாள். ஆனால் இந்த உலகத்தில் பெரிய வேலை வீட்டில் இல்லத்தரசி. அவள் எவ்வளவு முயற்சி எடுக்கிறாள் என்று பாருங்கள். வீட்டு வேலைக்காக இரவு வரை அதிக முயற்சி எடுக்கிறாள். அந்தப் பெண்ணின் மீது நாம் எவ்வளவு அக்கறை கொள்கிறோம்? உழைக்கும் பெண்ணுக்கும் ஓரளவு சுதந்திரம் உண்டு. ஆனால் வீட்டில் வேலை செய்யும் பெண்ணுக்கு என்ன கிடைக்கும்? இதுபோன்ற சமயங்களில் பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்று நிவாரணம் பெறுகின்றனர். அவள் பொருளாதார வளர்ச்சியை மட்டும் தேடாமல், இந்தக் குடும்ப வேதனையிலிருந்து தப்பிக்கவும் வேண்டும்.

**கே: பெண்கள் மற்றும் குழந்தைகள் குறித்த வழக்குகள் குவிந்து வருகின்றன. இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கங்களால் முடியவில்லையா?**

பதில்: இது தொடர்பாக நீதி அமைச்சருடன் கலந்துரையாடினோம். பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளின் விசாரணையை மிக விரைவில் துரிதப்படுத்துவதாக உறுதியளித்தார். இன்று 12 வயதில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவரின் வழக்கு 25 ஆண்டுகள் கடந்தும் முடிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரணம்?

# இந்தியாவுக்கு எதிராக மாலைதீவு ஜனாதிபதியின் பரபரப்பான கருத்துகள்!

## இரு நாடுகளுக்குமிடையில் மீண்டும் உருவெடுக்கும் முறுகல்!



சீனாவுடன் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்ட மறுகணமே மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸு இந்தியாவுக்கு எதிராக சில பரபரப்பான கருத்துகளைக் கூறியிருக்கிறார். இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாக நல்லுறவு இருந்தது. அப்போதைய ஜனாதிபதி இந்தியாவுடன் நெருக்கம் காட்டிய நிலையில், இந்தியா பல முதலீடுகளையும் உதவிகளையும் மாலைதீவுக்குச் செய்திருந்தது.

ஆனால் கடந்த ஆண்டு இறுதியில் மாலைதீவு ஜனாதிபதித் தேர்தலில் முகமது முய்ஸு வென்றார். சீன ஆதரவு நிலைப்பாடு கொண்ட அவர், தேர்தல் பிரசாரத்தின் போதே 'மாலைதீவில் இருக்கும் இந்தியப் படைகளை அகற்றுவோம்' எனக் கூறியிருந்தார்.

இது தொடர்பாக இரு தரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து சமரச நிலைமை வந்த போது, இப்போது திடீரென மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸு மீண்டும் இந்தியாவுக்கு எதிராகக் கடுமையான கருத்துகளைக் கூறியுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதிக்குப் பின்னர் இந்திய இராணுவ வீரர்கள், சிவில் உடையில் கூட தங்கள் நாட்டிற்குள் இருக்கமாட்டார்கள் என்று மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸு கூறியுள்ளார். அதாவது மாலைதீவில் உள்ள இந்திய இராணுவத்தினர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் வெளியேற வேண்டும் என மாலைதீவு தெரிவித்துள்ளது.

தீவுக்கூட்டங்கள் கொண்ட நாடான மாலைதீவில் மருத்துவக் காரணங்களுக்காக இந்தியா வழங்கிய ஹெலிகொப்டரை இயக்குவதற்கு இந்திய இராணுவம் அங்கே இருந்தது. அந்த இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்று முய்ஸு கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து இரு தரப்புக்கும் இடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் அங்குள்ள இராணுவத்தினரை வாபஸ் பெற்றுவிட்டு, அதற்குப் பதிலாகத் தொழில்நுட்ப வல்லுநர்களை அனுப்பி வைக்க இந்தியா முடிவு செய்து இருந்தது.

அதன்படி ஹெலிகொப்டர்களை இயக்குவதற்கு இந்தியத் தொழில்நுட்ப வல்லுநர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு மாலைதீவு சென்றிருந்தனர். இந்தச் சூழலில்தான் திடீரென முய்ஸு இந்த பரபரப்பான கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், "இந்திய இராணுவத்தை எனது அரசு வெற்றிகரமாக வெளியேற்றிவிட்டது. இதனால் எனது அரசுக்கு நல்ல பெயர் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காகச் சிலர் திட்டமிட்டு பொய்யான தகவல்களைப் பரப்பி வருகின்றனர்.

மேலும், இந்திய இராணுவம் இப்போது என்ன செய்ய முயல்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். அவர்கள் இப்போது சீருடைகளை சிவிலியன் உடையாக மாற்றிவிட்டுத் திரும்புகிறார்கள். இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. மே மாதம் 10 ஆம் திகதிக்குப் பிறகு நாட்டில் எந்தவொரு இந்தியப் படைகளும் இருக்காது. அவர்கள் இராணுவ சீருடை அணிந்திருந்தாலும் சரி, சிவில் உடையில் இருந்தாலும் சரி... அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்பதில் சந்தேகமே வேண்டாம்" என்று கூறியுள்ளார்.



மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸு சில தினங்களுக்கு முன்னர்தான் சீனாவுடன் பாதுகாப்பு சார்ந்த மிக முக்கிய ஒப்பந்தம் ஒன்றைக் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தம் சீன வீரர்கள் மாலைதீவுக்குள் வருவதை அனுமதிப்பதாக இருக்கிறது. இந்திய வீரர்களை வெளியேற்றிவிட்டு நிச்சயமாக சீனா உள்ளிட்ட எந்தவொரு வீரர்களையும் அனுமதிக்க மாட்டோம் என ஜனாதிபதி முய்ஸு கூறியிருந்த நிலையில், இப்போது அதற்கு நேர் எதிராக அவரே சீன இராணுவத்தை அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



மாலைதீவு மண்ணில் இந்திய - மாலைதீவு படையினர்

> மாலைதீவு–சீனா இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து; மே மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னர் மாலைதீவு மண்ணில் இந்திய இராணுவம் இருக்கப் போவதில்லை!

மாலைதீவுகளின் வரலாறு சுவாரஸ்யம் நிறைந்தது. ஒரு காலத்தில் மாலைதீவுகள் தமிழ்நாட்டின் சோழ மன்னர்கள் ஆட்சியின் கீழ் இருந்தன. இந்தத் தீவுகள் பின்னர் சிங்கள இன ஆட்சியாளர்களின் ஆட்சிக்கு மாறின. கடந்த 1153 இல் மாலைதீவில் இஸ்லாம் மதம் பரவியதாக வரலாற்று தகவல்கள் கூறுகின்றன. போர்த்துக்கேயரின் காலனி நாடாக இருந்த மாலைதீவு கடந்த 1887 இல் பிரிட்டனின் காலனி நாடாக மாறியது.

கடந்த 1965 ஆம் ஆண்டில் பிரிட்டனிடம் இருந்து அந்நாடு விடுதலை பெற்றது. கடந்த 1968 ஆம் ஆண்டில் சுல்தான் ஆட்சியில் இருந்து குடியரசு நாடாக மாறியது. அப்போது முதல் ஜனநாயக முறைப்படி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று வருகிறது. இந்த வரிசையில் கடந்த ஆண்டு செப்டெம்பரில் மாலைதீவு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதில் மக்கள் தேசிய காங்கிரஸ் தலைவர் முகமது முய்ஸு புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். அவர் சீனாவின் ஆதரவாளர் ஆவார். கடந்த நவம்பரில் அவர் ஆட்சிப் பொறுப்பேற்றார். அப்போதுமுதல் இந்தியாவுக்கு எதிராக அவர் செயல்பட்டு வருகிறார்.

மாலைதீவில் முகாமிட்டுள்ள இந்திய இராணுவம் வெளியேற வேண்டும். இந்தியாவுடன் ஏற்கெனவே செய்த 100 ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முகமது முய்சு வலியுறுத்தி வருகிறார்.

ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பிறகு அவர் தனது முதல் வெளிநாட்டு பயணமாக சீனாவுக்கு சென்றிருந்தார். சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தில் மாலைதீவு முழுமையாக இணைவது தொடர்பாக முக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. இது இந்தியாவின் நலனுக்கு எதிரானது என்பதால் மாலைதீவின் செயல்பாடுகளை இந்திய மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

மாலைதீவை சுதந்திர நாடாக அங்கீகரித்த முக்கிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். கடந்த 1988 ஆம் ஆண்டில் மாலைதீவில் ஆட்சிக்கவிழ்ப்புக்கான கலவரம் ஏற்பட்டது. அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி இராணுவத்தை அனுப்பி அன்றைய ஜனாதிபதி அப்துல் கயூமின் அரசை காப்பாற்றினார்.

கடந்த 2018 ஆம் ஆண்டில் மாலைதீவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது பிரதமர் நரேந்திர மோடி சரக்குக் கப்பல்களில் மாலைதீவுக்குத் தேவையான குடிநீரை அனுப்பி வைத்தார். மாலைதீவு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவும் மோடி அரசு தாராளமாக கடன் உதவிகளை வழங்கியிருந்தது.

மாலைதீவுக்கு 2 ஹெலிகொப்டர்கள், ஒரு விமானத்தையும் இந்தியா பரிசாக வழங்கியது. இந்நிலையில் மாலத்தீவு தற்போது சீனாவின் பக்கம் சாய்ந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா மீதும் மாலைதீவு வெறுப்புணர்வை உமிழ்கிறது என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் அரசுமுறைப் பயணமாக லட்சத்தீவு சென்றிருந்தார். அந்தப் பயணத்தின் புகைப்படங்கள், வீடியோவை அவர் சமூக வலைதளங்களில் பகிர்ந்தார். அதோடு அவர் வெளியிட்ட பதிவுகளில், “லட்சத்தீவுகளின் பிரமிக்க வைக்கும் அழகையும் அங்கு வாழும் மக்களின் அரவணைப்பையும் கண்டு பிரமிக்கிறேன். அகத்தி, பங்காராம், கரவெட்டி ஆகிய இடங்களில் மக்களோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களின் விருந்தோம்பலுக்கு நன்றி.

சாகச சுற்றுலா பயணத்தை விரும்புவோருக்கு லட்சத்தீவு மிகச் சிறந்த இடம். நான் ஸ்நோர்கெலிங் பொழுதுபோக்கில் ஈடுபட்டேன். கவச உடையில் நீருக்கடியில் மூழ்கியது புதிய அனுபவமாக இருந்தது" என்று தெரிவித்திருந்தார்.

பிரதமர் நரேந்திர மோடி சமூகவலைதளங்களில் வெளியிட்ட புகைப்படங்கள், வீடியோ பதிவுகள் வைரலாக பரவின. பிரதமரின் பயணம் காரணமாக 2 நாட்களாக கூகுளில் அதிகம் தேடப்பட்ட வார்த்தையாக லட்சத்தீவு தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வந்தது. இதன் காரணமாக சுற்றுலாத் துறையை நம்பி வாழும் இந்தியாவின் அண்டை நாடான மாலைதீவு அதிர்ச்சி அடைந்தது.

இதன் தொடர்ச்சியாக, பிரதமர் நரேந்திர மோடி குறித்து அவதூறாக கருத்துத் தெரிவித்த மாலைதீவின் 3 அமைச்சர்கள் தற்காலிகமாக பதவிநீக்கம் செய்யப்பட்டனர்.

எஸ்.சாரங்கன்...

# 'ரமழானை வரவேற்போம் ' சிறப்பு மாணவர் மன்றம்

பாணந்துறை, எழுவிலை அஹதிய்யாஹ் பாடசாலை நிர்வாகக் குழுவினரான என்.ஏ.எம்.ரிப்தி, எம்.பி.எஸ் வாரிஸ் (ஜே.பி), ஜீ.ஏ.எப்.சஹ்லினா ஆகியோரின் ஏற்பாட்டில் 'ரமழானை வரவேற்போம் ' சிறப்பு மாணவர் மன்றம் அலவியா முஸ்லிம் மகா வித்தியாலத்தில் இன்று நடைபெறும். இன்று ஞாயிற்றுக்கிழமை (10) காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக அகில இலங்கை அஹதிய்யா சம்மேளன உபதலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# ஐக்கிய காங்கிரஸிலிருந்து சப்வான் நீக்கம்

"எமது ஐக்கிய காங்கிரஸ் கட்சியிலிருந்து சப்வான் என்பவர் நீக்கப்பட்டுள்ளார். இதனால் இவர் ஐக்கிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் என்ற பெயரில் வெளியிடும் அறிக்கைகள் எமது கட்சிப் பெயரில் வெளியிடப்படும் அறிக்கைகள் அல்லவென்பதுடன், அவை போலி அறிக்கைகள்" என, ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார். அவர் இது பற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது, "எமது கட்சி தேர்தல் திணைக்களத்தில் ஐக்கிய காங்கிரஸ் கட்சி என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் திணைக்களத்தில் பதிவு பெற்றுள்ள எமது யாப்பில் எமது கட்சியை ஐக்கிய காங்கிரஸ் எனவும் அழைக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே ஐக்கிய காங்கிரஸ் என்ற பெயரில் எமது கட்சியில் இல்லாதோர் அறிக்கை விடுவது சட்டப்படி குற்றமாகும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்" என்றார்.

# தவக்கால சிந்தனை



## நம்புவோர் பெற்றுக்கொள்வர்

ஒளி, எமது வாழ்விற்கான அத்தியாவசியத் தேவையாகும். சூரிய ஒளியின்றி பூமியில் வாழ்வு இல்லை, கோள்கள் இல்லை, மரங்கள் இல்லை, விலங்குகள் இல்லை, எதுவும் இல்லை. கடவுள் படைத்தவற்றுள் முதலாவதாக ஒளி படைக்கப்பட்டது, அதனை அவர் நல்லதெனக் கண்டார்.

ஒளி அறிவின், புரிதலின் அடையாளமாகவும் உள்ளது. அப்படியாயின், ஏன் நமது இருளினை ஒளியாகிய கிறிஸ்துவிடம் கொண்டுவர கடினமாக உள்ளது?

இரவில் தூக்கத்திலிருந்து எழுந்து மின்குமிழை ஒளிரச்செய்யும் போது, தூக்க மயக்கத்தில் இருக்கும் நம் கண்கள் அதற்கு உடனடியாக ஈடுகொடுக்கத் தயங்குகிறது, ஏன் இருளே இருக்கட்டும் என்றுகூட நம் கண்கள் விரும்பும்.

நிக்கதேமு என்பவர் இயேசுவிடம் இரவில் வருகிறார். அவ்வாறு வருகிறவர் இயேசு 'கடவுளிமிருந்து வந்தவர்' என்பதை அடையாளம் கண்டு கொள்கிறார். ஆயினும் அவர் முழுமையாக யாரென்பதில் இன்னும் இருளிலேயே உள்ளார்,

அவ்வாறே இருளில் இருந்துகொண்டு இயேசுவின் இரகசிய சீடராகப் பின்தொடர்கிறார். ஆயினும் நிக்கதேமு ஒளியாக இயேவை நோக்கி வந்து கொண்டே இருந்தார். இறுதியில், அவரே அரிமத்தியா யோசேப் கூடவே இணைந்து கொண்டு, இயேசுவின் உடலைப் பெற்று, மரியாதைக்குரிய யூத அடக்கத்தை அவருக்குக் கொடுக்கின்றார்.

பாலைவனத்தில் மோசே கோலில் பாம்பை உயர்த்திய நிகழ்வுடன் இயேசு தம்மை அடையாளப்படுத்துகிறார். யாவே பாலைவனத்தில் இஸ்ரயேல் மக்கள் செய்த பாவத்திற்கு தண்டனையாக பாம்பினை அனுப்புகிறார். அப்படியாயின் எவ்வாறு மக்கள் குணமடைந்து மன்னிப்பு பெற்றார்கள்?

கோலில் உயர்த்தப்பட்ட பாம்பினை பார்த்தவர்கள் குணம் பெற்றனர். சிலுவையில் உயர்த்தப்பெற்ற கடவுளின் வெளிப்பாடாகிய இயேசுவை உற்றுநோக்குவதன் வாயிலாக, நமது பாவங்கள் கழுவப்பெறவும், கடவுளின் நன்மைத்தனத்தையும், குணமளித்தலையும் அவரை நம்புவோர் பெற்றுக்கொள்கின்றனர்.

இத்தவக்காலமதில் உங்களது பாவங்களை இயேசுவின் சிலுவையடிக்கு கொண்டு வாருங்கள். அன்பும், ஒளியுமாகிய இயேசு அவற்றை சுட்டெரித்து உங்களை தூய்மைப் படுத்துவராக.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

### கற்பிட்டியில்

# காணாமல் போன மூன்று மீனவர்கள் கரை திரும்பினர்

கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்

கற்பிட்டியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்று காணாமல் போன கடற்றொழிலாளர்கள் மூவர் நேற்று முன்தினம் (08) கரை திரும்பியுள்ளனர். ஈச்சங்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 21, 37, 38 வயதுடைய இம்மூவரும் கடந்த 6ஆம் திகதி இயந்திரப் படகொன்றில் கடற்றொழிக்குச் சென்றுள்ளனர். இந்நிலையில் படகில் திடீரென்று இயந்திரக் கோளாறு ஏற்பட்டமையால் படகு இயங்காது கடலில் மிதக்கத் தொடங்கி, இந்திய கடல் எல்லை வரை படகு சென்றதாக, அக்கடற்றொழிலாளர்கள்தெரிவித்துள்ளனர். இதன்போது உணவு, குடிநீரின்றி இரண்டு இரவுப்பொழுதை தாம் கடலில் கழித்ததுடன், இந்திய மீன்பிடிப் படகில் பயணித்த கடற்றொழிலாளர்கள் சிலர் தமக்கு உணவு, குடிநீரை வழங்கி உதவியதாகவும், அம்மூன்று கடற்றொழிலாளர்களும் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் மூவருடன் கடற்றொழிலுக்குச் சென்ற படகு காணாமல் போனமை தொடர்பாக கற்பிட்டி பொலிஸாரிடம் படகு உரிமையாளர் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, இவர்களை தேடும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

### கோட்டை வெள்ளவத்தைக்கிடையே

# தெற்கு கரையோர ரயில்பாதை பராமரிப்பு பணி முன்னெடுப்பு

ரயில் பாதைகளின் பராமரிப்புப் பணி காரணமாக கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் முதல் வெள்ளவத்தை ரயில் நிலையம் வரையான கரையோர ரயில் சேவை 03 தினங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கோட்டை முதல் வெள்ளவத்தை வரை நேற்று (09) முதல் ஒரு வழித் தடத்தில் மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவை நடத்தப்பட்டதாகவும், நாளை (11) வரை இந்த நிலை காணப்படுமெனவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது. கொம்பனித்தெருவுக்கும் கொள்ளுப்பிட்டி ரயில் நிலையத்துக்கும் இடையில் அமைந்துள்ள பாலமொன்றுக்கான பராமரிப்புப் பணி மற்றும் நீர்வழங்கல் சபையின் குழாய் பொருத்தும் பணி போன்ற காரணங்களுக்காகவே கரையோர ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே இன்றும் நாளையும் தெற்கு கரையோர ரயில் சேவையில் தாமதம் ஏற்படலாமெனவும், ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்தது.

## இஸ்ரேலில்...

எண்ணிக்கையை அதிகரிக்கவும், நிர்மாணத்துறையை பொறுத்தவரையில் இயந்திரங்கள் மற்றும் கனரக போக்குவரத்து போன்ற துறைகளில் அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை பெறவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அடுத்த வாரம் இஸ்ரேல் செல்லவுள்ளார். நிர்மாணத்துறை மற்றும் விவசாயத்துறைகளுக்கு துறைசார் அனுபவமும் நிபுணத்துவமும் மட்டுமே தேவை எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வேலைவாய்ப்பைப் பெற்றுச் செல்பவர்களுக்கு சகல வசதிகளுடனான இந்த வேலைவாய்ப்புகளுக்கான குறைந்தபட்ச சம்பளம் இலங்கை ரூபாவில் 07 இலட்சம் ரூபாவை விட அதிகமாகவே கிடைக்கும்

விவசாயத்துறையில் வேலை வாய்ப்புக்கு ஏற்கனவே குழுக்கள் புறப்பட்டு சென்றுள்ளன. நிர்மாணத் துறையில் வேலைவாய்ப்புகளுக்கு தேவையான பூர்வாங்க பணிகள் நிறைவடைந்துள்ளன.

இஸ்ரேலிலிருந்து அதிகாரிகள் இலங்கை வந்து வேலைவாய்ப்புக்காக செல்லவுள்ளவர்களின் தகுதிகளை பரீட்சித்தனர்.

நிர்மாணத்துறை மற்றும் விவசாயத்துறை வேலைவேய்ப்புக்காக செல்லும் 30,000 பேருடாக நாட்டுக்கு குறைந்தது 25,000 கோடி ரூபா (250 பில்லியன் டொலர்) அந்நியச் செலாவணியைப் பெற முடியுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## எதிர்க்கட்சி தலைவர்களுக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். அதற்கான கலந்துரையாடல் நாளை (11) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன் அவர்களுடன் கலந்துகொள்ள விரும்பும் பிரதிநிதிகளுக்கும் இக்கலந்துரையாடலில் பங்கேற்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

விசேடமாக இதில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தின் நிதிக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்ல வேண்டியுள்ளதோடு, அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் கூட்டுப் பொறுப்புக்கூறல் அவசியமானது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்க உள்ளனர்.

# மோட்டார் சைக்கிளுடன் லொறி மோதி விபத்து; தந்தை, மகன் பலி

கொழும்பு, ஹைலெவல் வீதியில் கொஸ்கம, மிரிஸ்வத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் (08) இரவு இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலியானதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 44 வயது தந்தை மற்றும் 08 வயது மகன் மரணமடைந்துள்ளதுடன், தாய் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தைத் தொடர்ந்து லொறியின் சாரதியை பொலிஸார் கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த லொறியின் டயர் திடீரென வெடித்ததில் லொறி வீதியை விட்டு விலகிச் சென்று, எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதாக, கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

### 'யுக்திய' வுக்கு மேலும் வலுசேர்க்க

# பொலிஸ் உயர் அதிகாரிகள் CID தலைமையகத்துக்கு அழைப்பு

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட 'யுக்திய' நடவடிக்கையை மேலும் வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக நாட்டின் அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் பொறுப்பான அதிகாரிகளை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அழைக்கவுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள 45 பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கிய பொலிஸ் உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான ஆலாசனைகள் வழங்கப்படுவதுடன் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள பாதாள உலக செயற்பாட்டாளர்கள் மற்றும் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் உட்பட சகல குற்றவாளிகளையும் விரைவாக கைது செய்வதற்கு தேவையான விசேட பணிப்புரைகள் வழங்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜனாதிபதி ரணிலின் முதலாவது...

இதுவென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

தற்போது கட்சி சார்பற்ற ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருவதாகத் தெரிவித்த அகிலவிராஜ் காரியவசம், ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பற்ற வேட்பாளராக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் எதிர்காலத்தில் பல்வேறு கட்சிகளிலிருந்து பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவித்த அகிலவிராஜ் காரியவசம், இறுதியில் அனைத்து சக்திகளும் ஒன்றுபட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்யும் என்றும் தெரிவித்தார்.

'உண்மை' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பொதுக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டார, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, கொழும்பு மாவட்டத் தலைவர் ரவி கருணாநாயக்க, அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

## பாராளுமன்ற ஒன்றியத் தலைவராக...

கூட்டணியின் முயற்சியால் ஒன்பதாவது பாராளுமன்றத்தில் இந்த ஒன்றியம் உருவாக்கப்பட்டதை தொடர்ந்தே அதன் தலைவர் பதவிக்கு வேலுகுமார் எம்.பி. தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் உப தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய பெரேரா, நயனா வாசலகே, உதயகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்ற போது அதில் பல கட்சிகளின் தலைவர்களும் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# எங்கள் கருத்து

## கடன் சுமையில் வாழ்பவருக்கு தேவைப்படும் நிவாரணங்கள்

கடன் பெறுவது வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கோ அல்லது வியாபாரம் ஒன்றை நடத்திச் செல்வதற்கேயாகும். எமது நாட்டின் கீழ் மத்திய தரத்திலிருந்து அதற்கும் மேலே ஒரு அடி செல்லும் வரைக்கும் மாதத்தின் பண ஓட்டம் செயற்படுவது "கடன்பட்டுத்தான்" . கட்டணப் பட்டியல்கள் தேங்கிக் கிடக்கின்றன. வீட்டுச் செலவுகளுக்காக மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து சுற்றித் திரிய வேண்டிய நிலை. அவ்வாறான நேரங்களில் நினைவுக்கு வருவது அடகுக் கடைகள்தான்.

இதற்காக வீட்டின் உறுதிப் பத்திரத்திலிருந்து வீட்டிலிருக்கும் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் வீட்டு உபகரணங்கள் போன்ற அனைத்தையும் அடமானம் வைக்கும் நிலை ஏற்படுகின்றது. அவ்வாறு சிக்கிக் கொண்ட கிராம மக்களுக்காக உறுதிகளோ அல்லது அவற்றை சான்றுபடுத்துவதற்கான எதுவும் இல்லை. நெருப்பு வட்டிக்கு பணத்தை வழங்குவது வங்கிகளல்ல. அருகில் இருப்பவர்களாகும். அவை நிதி நிறுவனங்கள் அன்றி, பண முதலைகளாகும். அவ்வாறு சிக்கிக் கொள்ளும் போது முதலாளியின் அடியாட்கள் வந்து வைக்கப்பட்ட அடமானத்தை உரிமையாக்கிக் கொள்கிறார்கள்.

இந்நாட்டில் 24 இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் நுண்கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்டிருப்பதாக அண்மைய தரவுகள் கூறுகின்றன. வெள்ளிக்கிழமை மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. அதனால் இந்தப் பெண்களுக்கு கிடைத்தது எதுவுமில்லை. கடன் மலைக்குள் சிக்கிக் கொண்டுள்ள அவர்களுக்காக நேற்று முன்தினம் ஒரு சிலர் ஒன்றுகூடி மாற்று வழி ஒன்றை முன்வைத்தனர்.

நுண்கடன் நிதி நிறுவனங்கள் மற்றும் முறையற்ற நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றுள்ள வறிக மக்களுக்கு சாதகமான தீர்வொன்றை வழங்குமாறு கோரி வீதியில் இறங்கி குரல் எழுப்பியது புதிய மக்கள் முன்னணியாகும். அதன் மத்திய குழு அங்கத்தவர்கள் இவ்விடயம் தொடர்பில் கவனத்தைச் செலுத்தி, பொலிஸ் மாஅதிபர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோரிடத்தில் கோரிக்கையினை முன்வைத்தனர்.

2016ம் ஆண்டின் 06ம் இலக்க நுண் நிதிச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் 1989ம் ஆண்டின் 30ம் இலக்க சேவை அமைப்புச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்த நிறுவனங்களை ஒழுங்குபடுத்துமாறு புதிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்திருப்பது சாதகமான சட்ட காரணங்கள் பலவற்றை முன்வைத்தேயாகும். அவற்றை நடைமுறைப்படுத்தும் வரைக்கும் அரசாங்கம் உடனடியாகத் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு கிராமிய மக்களுக்காக குறித்த கடனைச் செலுத்துவதை ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்துமாறும் அந்தக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதரவற்ற நிலைக்குள் தள்ளப்பட்டுள்ள இந்நாட்டின் கிராமப்புற மக்களுக்காக உடனடி நிவாரணமாக இத்தகைய ஒரு நடவடிக்கை இந்த தருணத்தில் இன்றியமையாததாகும். பிராந்திய மட்டத்தில் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் வரைக்கும், கிராமிய அப்பாவி மக்களின் காணி உறுதிகள் மற்றும் உடமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சட்டத்தினால் ஏதேனும் சலுகை வழங்கப் படவே வேண்டும்.

## நாட்டில் சட்டம், ஒழுங்கை...

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதை நன்கு உணர்ந்த பின்னரே அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை வழங்குவதற்கு தான் தீர்மானித்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதியுள்ள ' 'The Conspiracy' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் பதவியை ஏற்குமாறு தான் விடுத்த அழைப்பை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே அச்சமோ தயக்கமோ இன்றி ஏற்றுக்கொண்டதாக கோட்டாபய ராஜபக்ஷ தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசவிடம் பிரதமர் பதவியை ஏற்குமாறு விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக 'The Conspiracy' என்ற புத்தகத்தின் 163ஆவது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை பிரதமர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போது, அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்குமாறும் தனக்கு வழங்கப்பட்ட ப தவியை உடனடியாக தான ஏற்ப தில்லை எனவும் அவர் குறிப்பிட்டதாக கோட்டாபய ராஜபக்ஷ அவரது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் புத்தகத்தில் மேலும் குறிப்பிடுகையில், இந்த குழப்பங்களுக்கு மத்தியில் நாட்டில் ஆட்சி மாற்றமொன்று தேவை என்ற கோரிக்கை வலுவடைவதற்கு அமைய பிரதமர் பதவிக்கு எதிர்க்கட்சி எம்.பி ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

எனவே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை அழைத்து பிரதமர் பதவியை ஏற்குமாறு கேட்டுக்கொண்டேன். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் நாட்டை ஆட்சி செய்ய முடியாதெனக் கூறி அந்த கோரிக்கையை அவர் நிராகரித்தார்.

அதன் பின்னர் சரத் பொன்சேகாவுடன் பேசி பிரதமர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுத்தேன். தாம் பிரதமராக பதவியேற்பதை பகிரங்கமாக அறிவித்து விட்டு முன்னெடுப்புகளை அங்கிருந்து தொடரலாமென்றார்.

அவருக்கு வழங்கப்பட்ட பதவியை அவர் உடனடியாக ஏற்கவில்லை. (முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதியுள்ள ''The Conspiracy' புத்தகம் தொடர்பான சிறப்புக் கட்டுரை 02ஆம் பக்கதில் பிரசுரமாகியுள்ளது.)

## இராணுவ வசமிருந்த...

உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்படும்.

காங்கேசன்துறை தெற்கு , 235 கிராம சேவையாளர் பிரிவில் 20.3 ஏக்கர் காணியும், வறுத்தலைவிளான் 241 கிராம சேவையாளர் பிரிவில் 23 ஏக்கர் காணியும், மயிலிட்டி தெற்கு (தென்மயிலை) 240 கிராம சேவையாளர் பிரிவில் 24 ஏக்கர் காணியும் விடுவிக்கப்படவுள்ளது.

இவ்வாறு விடுவிக்கப்படவுள்ள காணி தொடர்பில் உரிமையாளர்களுக்கு, அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களால் இன்று யாழ். மாவட்ட செயலகத்துக்கு வருமாறு நேற்றே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

## கொழும்பு பங்குச்சந்தை...

விலைக் குறியீடு 05 மாதங்களுக்கு பின்னர் 11,000 யூனிட்களை தாண்டியது மற்றும் கடந்த ஆண்டு ஒக்டோபர் 05ஆம் திகதி அனைத்து பங்கு விலைக் குறியீடு 11,000 யூனிட்டுகளை தாண்டியது. அன்று இரண்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பங்குகள் ஒரு கோடிக்கு மேல் விற்கப்பட்டன. பல நிதி மற்றும் வங்கி நிறுவனங்களின் பங்குகள் 50 இலட்சத்துக்கும் அதிகமாக விற்கப்பட்டன.

## மின்சார முச்சக்கரவண்டிகள்...

அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க, 'வேகா' பொறியியல் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஹர்ஷ சுபசிங்க, ரயில்வே பொது முகாமையாளர் எச். எம். கே. டபிள்யூ. பண்டார, மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நிஷாந்த அனுருத்த வீரசிங்க மற்றும் அதிகாரிகள் குழுவினர் அமைச்சருடன் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பெண்களை வலுவூட்டும்...

சட்டத்தின் பிரகாரம் தனியான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாகவும், அரசியலமைப் பின்படி பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொறிமுறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் பெண்களின் முன்னேற்றத்துக்கும் வலுவூட்டலுக்குமான ஏற்பாடுகளை மேற்கொள்வதே இதன் நோக்கமாகுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் கடந்த 07ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டதாகவும் ஆண், பெண் சமூக சமத்துவ சட்டமூலம் எதிர்வரும் வாரத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆண், பெண் சமூக அடிப்படையைக் கொண்ட வரவு, செலவுத் திட்டத்தை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், இது ஆசியாவிலேயே முதன்முறையாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு ஸ்தாபிக்கப்படும் எனவும், அதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்படுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

பெண்களின் உரிமைகள் பேச்சளவில் மாத்திரம் இருக்கக் கூடாதென வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்காக அரசாங்கம் தற்போது தேவையான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் அனைத்தையும் தேசிய பொறுப்பாக கருதி நாடு முழுவதிலும் உள்ள பெண்களுக்கு தெளிவூட்டுமாறு வேண்டுகோள் விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு அல்லாமல் இந்தச் சட்டங்கள் விதிமுறைகளை கொண்டு வருவது மாத்திரம் போதுமானதாக இருக்காது என்றும் குறிப்பிட்டார். தற்காலிக பெண்கள் பராமரிப்பு நிலையங்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பெண்கள் பணி அமைப்புகள் மற்றும் பெண்கள் அதிகார சபைகளின் யாப்பு என்பன, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டன.



# நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கு கடந்து வந்த கடினம் நிறைந்த பாதை!

**எரிபொருள் விலைக் குறைப்பு, மின்சாரக் கட்டணத்தில் குறைப்பு உள்ளிட்ட மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்திகள் இந்த வாரம் ஊடகங்களில் அதிகம் இடம்பிடித்தவையாக இருக்கின்றன. 2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்கத் தொடங்கினர். அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான செலவினங்கள் கணிசமாக அதிகரித்தன.**






எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்குக் காணப்பட்ட நீண்ட வரிசைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும், வாழ்க்கைச் செலவு விடயத்தில் மக்கள் கணிசமான சவால்களை எதிர்கொண்டே வந்தனர். இவ்வாறான நிலையில் நாட்டை ஓரளவு ஸ்திரமான கட்டத்துக்குக் கொண்டுவந்துள்ள அரசாங்கம், மக்களுக்குத் தொடர்ந்தும் நிவாரணங்களை வழங்குவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

இதன் ஓர் அங்கமாகவே மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டிருப்பதுடன், எரிபொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இவற்றை அடிப்படையாகக் கொண்டு அதிகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் உள்ளிட்டவை எதிர்வரும் நாட்களில் குறைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதன் வெளிப்பாடே இவை எனப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எதிர்வரும் காலத்தில் மக்களுக்கு மேலும் பல நிவாரணங்களை வழங்கவிருப்பதாக இலங்கையின் நிதி அமைச்சரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை கூறியிருந்தார்.

பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றிய ஜனாதிபதி, இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். அது மாத்திரமன்றி பெறுமதி சேர்வரி அறவீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள அப்பியாசக் கொப்பிகள் மற்றும் காகிதாதிகள், மருந்துகள், மருந்துப் பொருட்கள் போன்றவற்றை விலக்குவதற்கான திட்டங்களும் இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த நாடு 2024 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சியை அடையும் நிலைக்கு வந்திருப்பது அரசாங்கத்தின் உறுதியான முன்னேற்றத்தைப் பறைசாற்றும் வகையில் அமைந்திருப்பதாகவும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவால் மிக்க நாட்டைப் பொறுப்பேற்றது முதல் நாட்டின் பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது பாராளுமன்றத்தையும் நாட்டையும் தெளிவுபடுத்தி வருகின்றார். முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படும்போது கூட்டுப் பொறுப்புடன் எடுக்கப்பட வேண்டியதன் அடையாளமாகப் பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்துவார்.

இந்த வகையில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளின் பலனாக நாடு அடைந்துள்ள நன்மைகளை சில குறிகாட்டிகளின் அடிப்படையில் ஜனாதிபதி விளக்கியிருந்தார். ஜனாதிபதியின் விளக்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

'2022 முதல் 2023 இரண்டாம் காலாண்டு வரை 6 காலாண்டுகளுக்கு தொடர்ந்து சுருங்கிய நமது பொருளாதாரம், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து புத்துணர்ச்சி பெற ஆரம்பித்தது. இந்த ஆண்டு 2 முதல் 3 சதவீத வளர்ச்சியை எட்ட முடியும் என்று சர்வதேச நிதி நிறுவனங்கள் கணித்துள்ளன.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் அரச வருமானத்தை 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரிக்க முடிந்தது. கடந்த ஆண்டு முதன்மைக் கணக்கில் உபரித் தொகையைப் பெற முடிந்தது. இதனால் மூன்று, நான்கு ஆண்டுகளாக அரசுக்கு சேவை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு அனைத்து நிலுவைத் தொகையையும் முடித்துள்ளோம்.

2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், அரசுக்குச் சொந்தமான 52 பெரிய நிறுவனங்கள் மொத்தமாக ரூ.720 பில்லியன் நட்டத்தை எதிர்கொண்டன. ஆனால் 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் இந்த நிறுவனங்களிடமிருந்து ரூ.313 பில்லியன் இலாபமாகப் பெற முடிந்தது.

பொருளாதார நெருக்கடியால் பல வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதை நாம் அறிவோம். ஆனால் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியுடன், பல வணிக நிறுவனங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டில், 17,819 நிறுவனங்கள், கம்பனிப் பதிவாளர் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2023 இல் 22,376 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2024 ஜனவரியில் 1,995 புதிய நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் ஒருங்கிணைந்து மேற்கொண்ட பொருளாதார முகாமைத்துவம் காரணமாக, 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம், 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5.9 சதவீதமாகக் குறைந்தது. பணவீக்கம் குறைந்ததால் 30 சதவீதமாக இருந்த வட்டி வீதத்தை 2023 ஆம் ஆண்டில் 10 சதவீதத்தையும் விடக் குறைத்து சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் நிவாரணம் வழங்க முடிந்தது.

2022 ஏப்ரல் நடுப்பகுதியில் வெறும் 20 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த அந்நியச் செலாவணி கையிருப்பை, தற்போது 3 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிக்க முடிந்தது. தனியார் மோட்டார் வாகனங்கள் தவிர, இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

1977 இற்குப் பிறகு முதன்முறையாக, 2023ஆம் ஆண்டில், கொடுப்பனவு கையிருப்பின் நடப்புக் கணக்கில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. இதன் காரணமாக கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியில் ரூ.363 ஆக இருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி நேற்றைய நிலைவரப்படி ரூ.308 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளது' என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நரகத்தில் மீண்டும் விழ வேண்டுமா? இல்லாவிட்டால் தற்போதை பாதையில் சுவர்க்கத்தை சென்றடைவதா? தற்போதைய பாதையைத் தவிர வேறு வழிமுறைகள் எவையும் இல்லை. நாம் இது வரையில் அடைந்திருக்கும் வெற்றிகள் அதனை உறுதி செய்துள்ளன. அதனால் இதே வழியில் முன்னேறிச் செல்வதற்கான சட்ட திட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

மக்கள் மத்தியில் பிரசித்தமாவதற்காக இவை செய்யப்படவில்லை. பல அரசியல் குழுக்கள் பிரசித்தமாவதற்காக கற்பனைக் கதைகளைச் சொல்கின்றன. கனவுக் கோட்டைகளையும் கட்டுகின்றனர். அவர்களுக்கு நாட்டின் யதார்த்தமான நிலைமை புரியவில்லை. அதிகாரத்திற்காக முட்டிமோதிக் கொள்கிறார்கள். அதிகாரத்திற்காகப் பொய் சொல்கிறார்கள். ஆனால் தான் ஒருபோதும் அதிகாரத்துக்காகப் பொய் சொல்லவில்லையென்றும், சொந்த எதிர்காலத்துக்கு அன்றி நாட்டின் முன்னேற்றத்துக்காகவே பணியாற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் நாட்டை சவாலான காலத்தில் பொறுப்பேற்று ஓரளவுக்கு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் வெற்றிகண்டுள்ளார் என்பதே நிதர்சனம்.

மக்கள் ஆதரவு தமக்கே இருப்பதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் எதிர்க்கட்சியின் தலைவர்கள் நாட்டை சவாலான சந்தர்ப்பத்தில் பொறுப்பேற்கத் தயங்கியபோது, தானாக முன்வந்து சவாலைப் பொறுப்பேற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தன்னைப் பிரபல்யமாக்கிக் கொள்வதற்கான தீர்மானங்களை எடுக்காமல், மக்களுக்கு சிரமமாக இருந்தாலும் காலத்துக்கு ஏற்ற வகையில் கடுமையான தீர்மானங்களை எடுத்திருந்தார். அது மாத்திரமன்றி சர்வதேச ரீதியில் அவர் கொண்டிருந்த தொடர்புகளை முழுமையாகப் பயன்படுத்தி பல்வேறு ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொண்டிருந்தார்.

இதற்கு சிறந்த உதாரணமாக கடந்த அரசாங்கத்தின் செயற்பாட்டின் காரணமாக முறிவடைந்திருந்த ஜப்பான்-இலங்கை உறவை மீண்டும் புதுப்பித்தது மாத்திரமன்றி, கடன் மறுசீரமைப்பில் ஜப்பான் மத்தியஸ்தம் வகிக்கும் நிலைக்குக் கொண்டுவந்தார். இது அவருடைய இராஜதந்திர உறவுகளுக்கும், நிர்வாகத் திறனுக்கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன.

தனியொரு நபராகப் பாராளுமன்றத்துக்குள் நுழைந்த ஜனாதிபதி, ஆட்சியில் இருந்த பொதுஜன பெரமுன தனக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட கட்சியாக இருந்தாலும் அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று அரசாங்கத்தைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதில் வெற்றி கண்டுள்ளார். நான்கு தசாப்தத்துக்கு மேலாக அவருக்கிருக்கும் அரசியல் ஞானம் மற்றும் நிர்வாகத் திறன் காரணமாக நாடு ஸ்திரமான நிலையை நோக்கி நகர்ந்து செல்வதுடன், இதன் வெளிப்பாடுகளை கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசியல் நோக்கத்தில், அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணத்தில் அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் விமர்சிக்காது, நாட்டை மீட்சிப் பாதைக்குக் கொண்டு வருவதற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு எதிர்க்கட்சிகள் முன்வர வேண்டும்.

அது மாத்திரமன்றி, அரசாங்கத்துக்குள் அங்கம் வகிக்கும் ஒரு சிலர் தமது எதிர்கால அரசியலை நோக்காகக் கொண்டு அரசின் செயற்பாடுகளைக் குழப்புவதற்கு முயற்சிப்பதாகத் தெரிகிறது. இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் உறுதுணையாக இருக்காது என்பதை நினைவில் கொண்ட அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்ற வேண்டும்.


## அரசாங்க சேவை ஆணைக்குழு

### மோட்டார் வாகனத்தை விற்பனை செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைத்தல்

**கீழே காட்டப்பட்டுள்ள அப்புறப்படுத்தப்பட வேண்டிய மோட்டார் வாகனத்தை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

**KI - XXXX**

01. மேற்கூறிய மோட்டார் வாகனத்தை விற்பனை செய்வதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 10,000.00 விலைக்கோரல் பிணை முறி மற்றும் வாகனத்தைப் பரீட்சித்தல், விலைமனுக்கள் மற்றும் விலைமனு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 1,500.00 ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.
02. விலைக்கோரல் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் இயைபுடைய ஆவணங்களை 2024-03-11ஆம் திகதி முதல் 2024-03-28ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 1200/9ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. விலைகளைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப் படிவங்களை கடித உறையினுள் இட்டு 2024-04-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''அரசாங்க சேவை ஆணைக்குழு, இல. 1200/9, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறிய முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மோட்டார் வாகனத்தை விற்பனை செய்வதற்காக விலைமனு கோரல்'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.
04. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் வாகனத்தை அப்புறப்படுத்துதல் மற்றும் அப்புறப்படுத்தாமல் விடுதல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு,
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/9, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
2024-03-10**



Uva Wellassa University

### தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

## பெறுகை அறிவித்தல்

### வாகனத்தை வாடகைக்கு/குத்தகைக்கு வழங்கல்

பின்வரும் சேவையை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

| விலைமனுப் பெயர் | விலைமனு இல. | விலைமனு பிணை (ரூபாவில்) | விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபாவில் | விலைமனு வழங்கப்படும் காலம் | விலைமனுவை திறத்தல் |
|---|---|---|---|---|---|
| Hire/Lease of vehicle (assign vehicle for Officer) | UWU/ GA/05/V/23/09 | 27,000.00 | 2,000.00 | 2024.03.11- 2024.04.02 | 2024.04.03 – பி.ப. 2.30 மணிக்கு |
| Hire/Lease of Pool vehicle | UWU/ GA/05/V/24/01 | 36,000.00 | 2,000.00 | 2024.03.11- 2024.04.02 | 2024.04.03 – பி.ப. 2.30 மணிக்கு |

மேலே குறிப்பிட்டுள்ள காலப்பகுதிகளுக்கு எந்தவொரு வேலை நாளிலும் (விடுமுறைகள் நீங்கலாக) மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் அல்லது 3114820 என்ற இலங்கை வங்கி கணக்கிற்கு நேரடியாக ரொக்கப் பணத்தைச் செலுத்திய பின்னர், நிருவாகத்திற்கான பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்த பின்னர், எந்தவொரு விலைமனுதாரரினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். விலைமனுதாரர் http://www.uwa.ac.lk/procurement/ என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்வோர் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களுடன் ''ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்'' என்ற பெயரில் வங்கி வரைவொன்றுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக அல்லது பணக்கொடுப்பனவுகள் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் 3114820 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படலாம் என்பதுடன் ரொக்கப்பண பற்றுச்சீட்டு/ பணவரவுத் துண்டு ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

விலைமனுக்கள் மேலேயுள்ள திகதிகளில் பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விகள் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் உரித்தான விலைமனு இலக்கம் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 055-2226470 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொது நிருவாகத்திற்கான பிரதி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,
பதுளை.
2024.03.10.**



## கேள்வி அறிவித்தல்

உடனடியாக அவர்களின் பொறித்தொகுதிகளிலுள்ள பின்வரும் கழிவுப் பொருட்களை உடனடியாகவே விற்பனை செய்வதற்காக முதன்மையாக ஆடை தயாரிப்பாளரொருவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**மீதியாகவுள்ள அகற்றுவதற்கான அம்சங்கள்:**

- OFF CUT – COTTON
- OFF CUT – SYNTHETIC
- CARDBOARD
- PAPERS
- USED THREAD CONES
- STEEL
- POLYTHENE
- PLASTIC TUBE

Foundation Garment (Pvt) Ltd ஆனது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Sale of Used Materials" என குறிப்பிடப்பட்டு அனுப்பப்படலாம் அல்லது கொழும்பு-06, பாலபொக்குண வீதி, 35 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.

விலைமனுதாரர்கள் சிறந்த நிதிசார் பலத்தையும் அனுபவத்தையும் கொண்டுள்ளார்களென சான்று பகர வேண்டுமென்பதுடன் சட்டப்படியான அனுமதியையும் (BOI & EPL) கொண்டுள்ளதுடன் நிறுவனத்தினால் தேவைப்படும்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கழிவிற்கான அனைத்து கொள்வனவுகளும் ஒழுங்கான முறையில் நடத்தப்படல் வேண்டும். விற்பனைகள் கண்டிப்பாக ரொக்கப் பண அடிப்படையில் இருத்தல் வேண்டுமென்பதுடன் கடன் வசதிகள் அனுமதிக்கப்படமாட்டாது.

எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்து முன்வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையைக் கம்பனியானது கொண்டுள்ளது.

அனைத்து விலைமனுக்களும் 2024 மார்ச் 15 ஆம் திகதியன்று (வெள்ளிக்கிழமை) பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்களை மூடிய பின்னர் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

சித்திகரமான விலைமனுதாரர்கள் பவுண்டேஷன் கார்மெண்ட்ஸ் (பிவிடி) எல்டிடீ இனால் விதித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுமாறு தேவைப்படுத்தப்படுவார்களென்பதுடன் ஒப்பந்த ரீதியிலான உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடுமாறும் கேட்கப்படுவார்கள்.

தயவு செய்து குறித்துக் கொள்ளவும்: விலைமனுவுடன் இணைந்த தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பான அனைத்து ஆகுசெலவுகளுக்கும் விலைமனுதாரரே பொறுப்பாகவிருப்பார். விலைமனுக்கோரல் செயற்பாட்டின் நடத்துதல் அல்லது விளைவுகளுக்கு கம்பனியானது பொறுப்பாகவிருக்கமாட்டார்.

**இல. 35, பலபொக்குண வீதி, கொழும்பு-06.
பிராண்ட் புரொடெக்ஷன் அலகு
பவுண்டேஷன் கார்மெண்ட் (பிவீடி) எல்டிடீ
இல. 35, பாலபொக்குண வீதி,
கொழும்பு-06.**

Uva Wellassa University

## தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

# பெறுகை அறிவித்தல்

## உணவக சேவைகளை வழங்கல்

பின்வரும் சேவையை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

| விலைமனுப் பெயர் | விலைமனு இல. | விலைமனு பிணை (ரூபாவில்) | விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபாவில் | விலைமனு வழங்கப் படும் காலம் | விலைமனுவை திறத்தல் |
|---|---|---|---|---|---|
| பிரதான உணவக சேவையை வழங்கல் | UWU/GA/05/ CS/2024-2025/01 | இல்லை | 2,000.00 | 2024.03.11- 2024.04.02 | 2024.04.03 – பி.ப. 2.30 மணிக்கு |
| புதிய உணவக சேவையை வழங்கல் | UWU/GA/05/ CS/2024-2025/02 | இல்லை | 2,000.00 | 2024.03.11- 2024.04.02 | 2024.04.03 – பி.ப. 2.30 மணிக்கு |
| G உணவக சேவையை வழங்கல் | UWU/GA/05/ CS/2024-2025/03 | இல்லை | 2,000.00 | 2024.03.11- 2024.04.02 | 2024.04.03 – பி.ப. 2.30 மணிக்கு |

மேலே குறிப்பிட்டுள்ள காலப்பகுதிகளுக்கு எந்தவொரு வேலை நாளிலும் (விடுமுறைகள் நீங்கலாக) மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் அல்லது 3114820 என்ற இலங்கை வங்கி கணக்கிற்கு நேரடியாக ரொக்கப் பணத்தைச் செலுத்திய பின்னர், நிருவாகத்திற்கான பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்த பின்னர், எந்தவொரு விலைமனுதாரரினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். விலைமனுதாரர் **http://www.uwa.ac.lk/procurement/** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்வோர் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களுடன் ''ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்'' என்ற பெயரில் வங்கி வரைவொன்றுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக அல்லது பணக்கொடுப்பனவுகள் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் 3114820 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படலாம் என்பதுடன் ரொக்கப்பண பற்றுச்சீட்டு/ பணவரவுத் துண்டு ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

விலைமனுக்கள் மேலேயுள்ள திகதிகளில் பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விகள் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் உரித்தான விலைமனு இலக்கம் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 055-2226470 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொது நிருவாகத்திற்கான பிரதி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
**2024.03.10.**

Uva Wellassa University

## தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

# பெறுகை அறிவித்தல்

## வீடுகள் குத்தகைக்கு / வாடகைக்கு

பின்வரும் சேவையை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

| விலைமனுப் பெயர் | விலைமனு இல. | விலைமனு பிணை (ரூபாவில்) | விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபாவில் | விலைமனு வழங்கப்படும் காலம் | விலை மனுவை திறத்தல் |
|---|---|---|---|---|---|
| Lease/Rent house for Student Hostels, coordinating office and student Hostels in Colombo/ Nugegoda | UWU/GA/05/ LH/2024-2025/01 | இல்லை | இல்லை | 2024.03.11- 2024.04.01 | 2024.04.01 – பி.ப. 3.15 மணிக்கு |

மேலே குறிப்பிட்டுள்ள காலப்பகுதிகளுக்கு எந்தவொரு வேலை நாளிலும் (விடுமுறைகள் நீங்கலாக) மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் அல்லது 3114820 என்ற இலங்கை வங்கி கணக்கிற்கு நேரடியாக ரொக்கப் பணத்தைச் செலுத்திய பின்னர், நிருவாகத்திற்கான பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்த பின்னர், எந்தவொரு விலைமனுதாரரினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். விலைமனுதாரர் **http://www.uwa.ac.lk/procurement/** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்வோர் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களுடன் ''ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்'' என்ற பெயரில் வங்கி வரைவொன்றுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக அல்லது பணக்கொடுப்பனவுகள் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் 3114820 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படலாம் என்பதுடன் ரொக்கப்பண பற்றுச்சீட்டு/ பணவரவுத் துண்டு ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

விலைமனுக்கள் மேலேயுள்ள திகதிகளில் பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விகள் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் உரித்தான விலைமனு இலக்கம் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 055-2226470 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொது நிருவாகத்திற்கான பிரதி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
**2024.03.10.**

# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடம்

## கல்வி, கல்வி உதவியாளர், நிர்வாகப் பணியாளர்கள், எழுதுனர் மற்றும் இணைந்த தரங்கள் மற்றும் கல்வி சாரா அலுவலக ஊழியர்கள்

விண்ணப்பிக்கும் பாடப் பிரிவு / பிரிவுகள் பின்வரும் பிரிவுகளுடன் தொடர்புடையதாக இருப்பதுடன் மேலும், பாடப் பிரிவுகள், விசேட குறிப்புகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான விடயங்களை தெரிந்தக்கொள்ள ஆங்கிலப் பத்திரிகை விளம்பரத்தை அல்லது பல்கலைக்கழக இணையதளத்தைப் பார்க்கவும்.

### கல்வி மற்றும் கல்வி உதவி ஊழியர்கள்

01. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / தரம் II,

#### மருத்துவப் பீடம்

மருத்துவ விஞ்ஞானப் பிரிவு

02. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / தரம் II, விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத) பதவி, விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவி

#### பொறியியல் பீடம்

மின்னியல், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பிரிவு

#### தொழில்நுட்பப் பீடம்

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு

#### இணைந்த சுகாதார விஞ்ஞானப் பீடம்

கதிர் வீச்சியியல் மற்றும் கதிர் வீச்சு சிகிச்சை பிரிவு

#### உயர் ஆராய்ச்சி மற்றும் கல்வி ஒருங்கிணைப்பு பிரிவு (KDU-CARE) (தகுதிகாண் பதவி)

### சூரியவெவ தெற்கு வளாகம்

#### செயற்கை சூழலியல் மற்றும் நில அளவியல் பீடம்

அளவியல் பிரிவு
தொழில்துறை தர முகாமைத்துவ பிரிவு

#### கணனிப் பீடம்

கணனி பொறியியல் பிரிவு - இரத்மலானை வளாகம்
தகவல் தொழிநுட்பப் பிரிவு - சூரியவெவ வளாகம்

03. ஆலோசகர் பதவி தரம் - II

#### பொறியியல் பீடம்

மின்னியல், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பிரிவு
எந்திரப் பொறியியல் பிரிவு
வான் பொறியியல் பிரிவு

#### பாதுகாப்பு மற்றும் மூலோபாயக் கற்கைப் பீடம்

மூலோபாயக் கற்கை பிரிவு

#### கணனிப் பீடம்

கணனி பொறியியல் பிரிவு - இரத்மலானை வளாகம்
தகவல் தொழிநுட்பப் பிரிவு - சூரியவெவ வளாகம்

### நிர்வாக ஊழியர்கள்

01. உள்ளக கணக்காய்வாளர் பதவி

### எழுதுநர் மற்றும் இணைந்த தரங்கள்

01. முகாமைத்துவ உதவியாளர் (எழுதுநர் சேவை) தரம் III - இரத்மலானை வளாகம் மற்றும் சூரியவெவ வளாகம்
02. நூலக தகவல் உதவியாளர் தரம் III - இரத்மலானை வளாகம்

### கல்வி சாரா அலுவலக ஊழியர்கள்

01. மின்னுட்பவியளாலர் தரம் II - இரத்மலானை வளாகம் மற்றும் சூரியவெவ வளாகம்

### சம்பள அளவுத் திட்டம்

#### கல்வி மற்றும் கல்வி துணை ஊழியர்கள்

01. **சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I**
U-AC 3 (I) ரூ. 91,310 - 7x2,170 – 106,500 p.m.+
(176% கல்விசார் கொடுப்பனவு+அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)
02. **சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II**
U-AC 3 (II) ரூ.79,360 - 11x1,630 – 97,290 p.m. +
(176% கல்விசார் கொடுப்பனவு+அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)
03. **விரிவுரையாளர் பதவி (நிரந்தரமாக்கப்படாத)**
U-AC 3 (III) ரூ.69,580 - 5x1,630 – 77,730 p.m. +
(156% கல்விசார் கொடுப்பனவு+அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)
04. **விரிவுரையாளர் பதவி**
U-AC 3 (IV) ரூ.54,600 - 10x1,335 – 67,950 p.m. +
(140% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)
05. **ஆலோசகர் பதவி தரம் II**
U-AS 1 (I) ரூ.48,385 - 19x690 - 61,495 p.m. +
(அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)

#### நிர்வாக ஊழியர்கள்

01. **உள்ளக கணக்காய்வாளர் பதவி**
U-EX 3 (II) ரூ. 95,320 -7x2,170; 11x2,700-140,210 p.m. + (ரூ.12,800 வாழ்க்கைச்செலவுப்படி + ரூ. 5,000 p.m. கொடுப்பனவு + 45% கல்விசார் கொடுப்பனவு + 20% ஏனைய கொடுப்பனவுகள்)

#### எழுதுநர் மற்றும் இணைந்த தரங்கள்

01. **முகாமை உதவியாளர் (கல்வி சாரா) தரம் III / நூலக தகவல் உதவியாளர் தரம் III**
U-MN 1 (III) – ரூ.30,725 – 17x300 – 35,825 p.m + (ரூ.12,800 வாழ்க்கைச்செலவுப்படி + ரூ.5,000 p.m. கொடுப்பனவு + 45% கல்விசார் கொடுப்பனவு + 20% ஏனைய கொடுப்பனவுகள்)

#### கல்வி சாரா அலுவலக ஊழியர்கள்

01. **மின்னுட்பவியளாலர் தரம் II :-**
U-PL 3 (III) - ரூ.29,915 – 16x270 – 34,235 p.m + (ரூ.12,800 வாழ்க்கைச்செலவுப்படி + ரூ.5,000 p.m. கொடுப்பனவு + 45% கல்விசார் கொடுப்பனவு + 20% ஏனைய கொடுப்பனவுகள்)

#### ஏனைய நன்மைகள் :

சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II மற்றும் அதற்கு மேலான பதவிகள் நிமித்தம் 7 வருட சேவைக்குப் பின்னர் ஊதியத்துடன் ஒரு வருட காலத்திற்கு அல்லது சம்பளமில்லாத 2 வருட காலத்திற்கு ஏழு வருடகால விடுமுறை, ஏற்புடைய பதவிகளுக்குரிய கொடுப்பனவுகள் மற்றும் 35% ஆராய்ச்சி கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, கைக்குலிப்பு கொடுப்பனவுகள், இலவச சுகாதார காப்புறுதிகள், வருடாந்த மிகை ஊதியம் ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள், பல்கலைக்கழக வைத்தியசாலையில் சலுகை அடிப்படையிலான சிகிச்சை வசதிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள்.

#### பொது நிபந்தனைகள் :

01. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரிகள் குறித்தப் பதவிகளுக்கு அல்லது தரங்களுக்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாத்திரம் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவ சபையினால் தேர்தெடுக்கப்படுவார்கள்.
03. விண்ணப்பதாரிகள் இணையத்தளத்திலுள்ள **(www.kdu.ac.lk)** மாதிரிப் விண்ணப்பப்படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க அல்லது நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்.
04. கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.
05 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
06. பல்கலைக்கழகங்களில் / நிறுவனங்களில் / அரசாங்கத் திணைக்களங்களில் / அல்லது நியதிச்சட்டச்சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும்.
07. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் **(www.kdu.ac.lk)** விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொண்டு குறித்த பதவிகளுக்கு அந்த விண்ணப்பப்படிவங்களின் மூலம் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும், உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத அல்லது மாதிரிப் படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
08. விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
09. தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.
10. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
11. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும், பதவி உயர்வு நடைமுறைகளுக்கும், மற்றும் நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளுக்கும் ஏற்ப விண்ணப்பதாரிகள் தேர்தெடுக்கப்படுவார்கள்.
12 விண்ணப்பதாரர்கள் பொது உளச்சார்பு பரீட்சைக்கு அல்லது மதிப்பீட்டு செயல்முறைக்கு பரிந்துரைக்கப்படுவதற்கும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கும் முன்னரும் தகைமையுடைய பெயர் பட்டியலை தயாரிக்கும் உரிமையும், அதிகாரமும் பல்கலைக்கழகத்திற்கு உண்டு.
13. நிரந்தர பதவியிலுள்ள பதவியினருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சமீபத்திய சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
14. துணைவேந்தரினதும் மற்றும் நிர்வாகக் குழுவினதும் அங்கீகாரத்துக்கு அமைய, திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்த பின்னர் ஒப்பந்த காலம் ஆண்டுதோறும் நீடிக்கப்படும்.
15. பதவிகளுக்கு ஏற்புடைய பிரிவுகளுக்கும் மற்றும் தகைமைகளுக்கும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையதளத்திலும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையிலும் காணப்படுகின்ற விசேட குறிப்புகளையும் மற்றும் பதவியுடன் தொடர்பான பாடப் பகுதிகள் மற்றும் தகுதிகள் என்பன தொடர்பான திருத்தங்களையும் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

- **சிரேஷ்ட பேராசிரியர் பதவி தரம் I / II , விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவி** UGC ஆ.சுற்றிக்கை இல.721, 935, 08/2016, 08/2016 (ii), 08/2016 (iii)
- **விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத) பதவி** - UGC ஆ.சுற்றிக்கை இல 07/2018
- **ஆலோசகர் பதவி தரம் II** - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல 725
- **உள்ளக கணக்காய்வாளர் பதவி** - UGC ஆ.சுற்றிக்கை இல 01/2017
- **தொழிநுட்ப உத்தியோகத்தர் தரம்** - UGC ஆ.சுற்றிக்கை இல 06/2018
- **நூலக தகவல் உதவியாளர் பதவி தரம் III** - UGC ஆ.சுற்றிக்கை இல 06/2019

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
பதிவாளர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை 10390, இலங்கை.
மின்னஞ்சல் : **staffrecruit@kdu.ac.lk**
மேலதிக விபரங்களுக்கு **www.kdu.ac.lk** இனை பார்க்கவும்.

**இறுதித்திகதி 2024. 03. 31**

# தேர்தலை விரைவில் எதிர்பார்த்து சூடு பிடிக்கும் அரசியல் களம்!



**இலங்கையின் அரசியலமைப்பின்படி, 2024 செப்டெம்பர் மாதத்திற்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுடன், அரசியலமைப்பின் காலவரம்பை சந்திக்க விரும்புவதாக ஜனாதிபதியே ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளார்.**

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படுமா என்ற கருத்தாடல்கள் வலுவடைந்துள்ளன. அரசியலமைப்பிற்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பருக்குள் நடத்தப்பட வேண்டியிருந்தாலும், பொதுத்தேர்தல் என்னவோ அடுத்த வருடம் நவம்பர் வரை நடத்தப்படாமல் இருக்கலாம்.

எனினும், ஜனாதிபதி நினைத்தால் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலொன்றுக்குச் செல்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளார். இலங்கையைப் பொறுத்தவரையில் அனைத்துத் தேர்தல்களும் அதாவது ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாணசபைகளுக்கான தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியுள்ளன.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் காலங்கள் முடிவடைந்து பலவருடங்கள் ஆகியுள்ளபோதும், அவற்றுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே இருக்கின்றன. நாடு பொருளாதார ரீதியில் சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில் சகல தேர்தல்களையும் ஒன்றன்பின் ஒன்றாக நடத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

இலங்கை போன்ற பொருளாதார ரீதியில் நெருக்கடியான நாட்டில் தேர்தல் என்பது வெறுமனே ஒரு ஜனநாயக நடவடிக்கை அல்ல, மாறாக அதன் பொருளாதாரப் பாதையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு முக்கியமான தருணமாகும். அரசியல் மாற்றங்களைச் சுற்றியுள்ள உள்ளார்ந்த நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் அச்சங்கள் நிலவும் பொருளாதார பலவீனத்துடன் இணைந்து, விரிவான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு நுட்பமான தொடர்புகளை உருவாக்குகின்றன.

எனவே தேர்தல்கள் குறித்த முடிவுகளை எடுக்கும்போது வெறுமனே ஆட்சி, அதிகாரம், நிர்வாகம் என்பவற்றை மாத்திரம் கருத்தில் கொண்டு தீர்மானங்களை எடுக்க முடியாது. எதுவாக இருந்தாலும், அரசியல் கட்சிகளோ தம்மைத் தேர்தலுக்கு ஆயத்தப்படுத்தத் தொடங்கியுள்ளன. கூட்டணி அமைப்பது குறித்த ஆரம்பகட்டப் பேச்சுக்கள் தொடங்கியுள்ளன.

அரசியல் அரங்கத்தில் பொதுஜன பெரமுனவின் நிறுவுனரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவின் இலங்கை விஜயம் அதிகம் பேசப்படும் ஒன்றாக மாறியுள்ளது. முன்னாள் நிதி அமைச்சராக இருக்கும் அவர் அமெரிக்கப் பிரஜாவுரிமை கொண்டவர் என்பதால் அடிக்கடி தனது நாட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்புவார்.

தேர்தல் குறித்த ஆரவாரங்கள் தொடங்கியிருப்பதால் கடந்த 5ஆம் திகதி இலங்கை திரும்பிய பசிலின் வருகை பெரிதாக எதிர்பார்க்கப்பட்டது. பசில் நாடு திரும்பியதும் முக்கியமான தீர்மானங்களை பொதுஜன

## பொதுஜன பெரமுன முக்கியஸ்தர்கள் பலர் பல துருவங்களாகப் பிரிந்து நிற்பதால் கட்சிக்குள் நெருக்கடி!

பெரமுன எடுக்கும் என்ற வகையிலான செய்திகள் வெளியாகியிருந்தன. விமான நிலையத்தை வந்தடைந்த பசில் ராஜபக்ஷவை அவருடைய வி.ஐ.பி ஆதரவாளர்கள் பலர் நேரில் சென்று வரவேற்றனர்.

அனைத்துத் தேர்தல்களும் தமக்கு சவால் மிக்கவை என்றும், சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியிருந்தார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் அதற்கு பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் பசில் ராஜபக்ஷ கூறியிருந்தார். கடந்த காலங்




## ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் முரண்பாடுகள் தீவிரம்!

களில் சில விடயங்கள் தமக்குப் பிழைத்துவிட்டதாகவும், பிழைகளைச் சரிசெய்து தேர்தலுக்கான ஒருங்கிணைப்புப் பணிகளைத் தான் முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

பொதுஜன பெரமுன கட்சி ஆளும் அரசாங்கத்தின் பிரதான கட்சியாக இருக்கின்ற போதும் கடந்த பொதுத் தேர்தலில் குறித்த கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களில் பலர் அரசாங்கத்திலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சுயாதீன உறுப்பினர்களாக அமர்ந்துள்ளனர். அவ்வாறு அமர்ந்துள்ளவர்களில் சிலர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவானவர்களாக இருப்பதுடன், சிலர் சுயாதீனமானவர்களாக இருக்கின்றனர்.

மறுபக்கத்தில் ஆளும் கட்சிக்குள் இருக்கும் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பலர் ஜனாதிபதிக்கு ஆதரவானவர்களாக இருப்பதுடன், சிலர் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிப்பதற்கான தனியான கூட்டணியொன்றையும் உருவாக்கியுள்ளனர். இவ்வாறு பொதுஜன பெரமுன பல்வேறு துண்டுகளாகப் பிரிந்திருக்கும் சந்தர்ப்பத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல் அவர்களுக்கு சவால் மிக்கதாக இருக்கும் என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பாக உள்ளது.

மறுபக்கத்தில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடுகள் அதிகமாகியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள அனைவரும் கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் மீண்டும் தாய் கட்சிக்கும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைப் பெரும்பாலானவர்கள் கொண்டிருப்பதாகவும், இதன் விளைவாகவே தலைமைத்துவத்துக்கும் அவர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

பொதுத்தேர்தலொன்றுக்குச் செல்வதைவிட ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டைப் பலர் எடுத்திருப்பதாகவும் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. அதேநேரம், கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக இருந்த முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள் பலரையும் தன்னுடன் இணைக்கும் முற்சிகளை எதிர்க்கட்சித் தலைவர் மேற்கொண்டு வருகின்றார். முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்கவை இணைத்த விவகாரம் சஜித் பிரேமதாசவுக்கும், பொன்சேக்காவுக்கும் இடையிலான முரண்பாட்டுக்கு வழிவகுத்தது.

இதனால் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து தன்னை நீக்குவதற்கு எதிராக பொன்சேகா நீதிமன்றத்தை நாடியிருந்ததுடன், அதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவையும் பெற்றிருந்தார். இவ்வாறான நிலையில் சிவில் பாதுகாப்புப் படையின் வன்னி பிரதேசத்துக்குப் பொறுப்பாக இருந்தவரும், மக்களின் மனங்களை வென்றவர் என்று பாராட்டப்பட்டவருமான கேணல் ரத்னப்பிரிய பந்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து கொண்டார்.

முன்னாள் பாதுகாப்புப் படைத் தலைவர்களை இணைத்துக் கொள்வதில் காணக்கூடிய அரசியல் கணக்கு எவ்வாறு உள்ளது என்பது புரியவில்லை.

இது இவ்விதமிருக்க, மக்கள் அனைவரும் தமது பக்கம் ஆதரவாக இருக்கின்றனர் என்று கணிப்பீட்டை மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி தொடர்பிலான மக்களின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியிருப்பதாகவும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். நிர்வாகம் தொடர்பில் அனுபவம் இல்லாதவர்களை நம்பி மீண்டும் நாட்டைக் கையளிப்பதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழ ஆரம்பித்திருப்பதாகவும் தெரியவருகிறது. இருந்தபோதும் அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியதும் மக்களின் நிலைப்பாடுகளும் தெளிவாகத் தெரியவரும்.

**பி.ஹர்ஷன்...**

# இஸ்ரேலின் பிராந்திய உறவுகளை சீர்குலைத்துள்ள காஸா யுத்தம்!



**முஸ்லிம்களின் ரமழான் நோன்பு காலம் ஆரம்பிக்க முன்னர் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் யுத்தநிறுத்தமொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, எகிப்து, கட்டார், இஸ்ரேல், ஹமாஸ் ஆகிய தரப்புக்கள் இப்பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றன.**

இதன் நிமித்தம் பிரான்ஸ், கட்டார் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து கடந்த 3 ஆம் திகதி முதல் எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. ஆனாலும் முதல் மூன்று நாட்களிலும் இப்பேச்சுவார்த்தைகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லையென சர்வதேச ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

அதேநேரம் காஸாவில் இடம்பெயர்ந்துள்ள பலஸ்தீன சிறுவர்கள் ரமழான் நோன்புக்கு முன்னர் யுத்தநிறுத்தத்தை நடைமுறைக்கு கொண்டுமாறு கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தியுள்ளனர்.

இதேவேளை இஸ்ரேல் காஸாவின் மீது தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. வடக்கு காஸாவில் மனிதாபிமான நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் காத்திருந்த மக்கள் மீது கடந்த 29 ஆம் திகதி இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 117 பேர் கொல்லப்பட்டதோடு, 700 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்று காஸா சுகாதாரத் தரப்பினர் குறிப்பிட்டிருந்தனர்.

மனிதாபிமான உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலுக்கு உலகளாவிய ரீதியில் கடும் கண்டங்கள் எழுந்தன. இந்நிலையில், அவர்கள் சனநெரிசலில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்திருந்தது. ஆனால் இதேபோன்ற தாக்குதல்கள் அதன் பின்னரும் இடம்பெற்றுள்ளன.

இவை இவ்வாறிருக்க, காஸாவுக்குள் மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்வதில் பாதுகாப்பற்ற நிலை நிலவுவதால் வடக்கு காஸா உட்பட காஸாவின் அனைத்துப் பிரதேசங்களிலும் வறுமையும், பட்டினியும் தலைதூக்கியுள்ளன. போஷாக்கின்மை காஸாவில் அதிகரித்துள்ளது. இற்றைவரையும் 20 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் போஷாக்கின்மை, உடலில் நீரிழப்பு காரணமாக உயிரிழந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காஸாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு ஜோர்தான், எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகள் மாத்திரமல்லாமல் அமெரிக்காவும் கூட விமானங்கள் மூலம் மனிதாபிமானப் பொருட்களை காஸாவில் கொட்டி வருகின்றது.

உலகின் கவனத்தை ஈர்த்துள்ள காஸாவின் மனிதாபிமான பேரவலம் உடனடி யுத்தநிறுத்தத்தை உலகம் வலியுறுத்தும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் நிமித்தம் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் கடும் இராஜதந்திர அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இருந்த போதிலும் காஸாவின் 14 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் ரபா மீது தரைவழி யுத்தத்தை முன்னெடுப்பதில் இஸ்ரேல் கவனத்தை குவித்துள்ளது.

பிராந்திய நாடுகளினதோ, உலக நாடுகளினதோ கோரிக்கைகளையும் வேண்டுகோள்களையும் பொருட்படுத்தாது இஸ்ரேல் செயற்படுவதால் உலகின் சில நாடுகள் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொண்டுள்ளன.





குறிப்பாக முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட துருக்கியே (1949 இல்) இஸ்ரேலை அங்கீகரித்த முதல் முஸ்லிம் நாடாகும். ஆனாலும் துருக்கி-இஸ்ரேல் இராஜதந்திர உறவில் அண்மைக் காலமாக நெருக்கடிகள் ஏற்பட்டு வந்த சூழலில் காஸா மீதான யுத்தம் துருக்கி இஸ்ரேல் உறவு வீழ்ச்சியடைய வழிவகுத்துள்ளது. அத்தோடு துருக்கி அதிபர் தையிப் எர்துகான் 'இஸ்ரேல் ஒரு பங்கரவாத நாடு' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவை இவ்வாறிருக்க, காஸா மீதான யுத்தம் காரணமாக 14 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள ரபா பிரதேசத்தின் மீது தரைவழி யுத்தத்தை முன்னெடுக்க இஸ்ரேல் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு எகிப்து ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

அத்தோடு எகிப்தை காஸாவில் இருந்து பிரிக்கும் ஒரு குறுகிய நடைபாதையான பிலடெல்பி நுழைவாயிலின் கட்டுப்பாட்டை தாம் விரும்புவதாக கடந்த டிசம்பரில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டிருந்தார். இதனால் கோபமடைந்த எகிப்து, '14 கிலோமீட்டர் (சுமார் 8.7 மைல்) நீளமும் 100 மீட்டர் அகலம் (328 அடி அகலம்) கொண்ட நடைபாதையின் ஆக்கிரமிப்பு முயற்சி எகிப்தின் இறைமையை மீறும் செயலாக அமையும்' என்றுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரின் ஏற்பாட்டில் 1979 இல் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் செய்து வைக்கப்பட்ட கேம்ப் டேவிட் சமாதான உடன்படிக்கை வீழ்ச்சியடைந்து விடக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையானது எகிப்துஇஸ்ரேல் சமாதான உடன்படிக்கைக்கான நிபந்தனைகளையும், 1967 இல் ஆறு நாள் போரின் போது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலை திரும்பப் பெற அழைப்பு விடுத்த ஐ.நா தீர்மானம் 242 ஐப் பயன்படுத்தி இஸ்ரேல்-பலஸ்தீனிய அமைதிக்கான ஒரு கட்டமைப்பையும் உருவாக்க வழிவகுத்தது. இதன் ஊடாக இஸ்ரேலுடன் சமாதான உடன்படிக்கை செய்து இராஜதந்திர உறவை ஆரம்பித்த முதல் நாடானது எகிப்து.

அதனைத் தொடர்ந்து 1994 இல் ஜோர்தான் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்தன. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிங்கடன் தலைமையில் ஜோர்தானுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் சமாதான உடன்படிக்கை செய்து வைக்கப்பட்டதோடு தூதரக உறவும் ஆரம்பிக்கப்பட்டன.

## ரமழானுக்கு முன்பாக காஸாவில் யுத்த நிறுத்தம்?

மேலும் இஸ்ரேலுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி வைக்கும் நோக்கில் ஐக்கிய அமெரிக்கா ஆபிரகாம் உடன்படிக்கையை 2020 இல் அறிமுகப்படுத்தியது. அன்றைய ஜனாதிபதி ட்னால்ட் ட்ரம்ப் அறிமுகப்படுத்திய இந்த சமாதான உடன்படிக்கையில் 2020 செப்டம்பர் 15 ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்ஸும், பஹ்ரெய்னும் கையெழுத்திடப்பட்டன. அதனைத் தொடர்ந்து சூடானும் மொரோக்கோவும் இஸ்ரேலுடனான இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடும் என்று ட்ரம்ப் அறிவித்திருந்தார். என்றாலும் 2020 நவம்பரில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரொனால்ட் ட்ரம்ப் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஆபிரகாம் உடன்படிக்கை ட்ரம்ப் காலத்தைப் போன்று வேகமாக முன்னெடுக்கப்படாவில்லை. ஆனாலும் சவுதி அரேபியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளைத் தொடக்கி வைப்பதற்காக அமெரிக்க தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் சவுதி அரேபியா, பலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத வரை இஸ்ரேலுடன் இயல்பு நிலையை ஏற்படுத்தத் தயாரில்லை எனத் தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறது. இந்தச் சூழலில் காஸா மீதான யுத்தம் சவுதியின் இந்நிலைப்பாட்டுக்கு வலு சேர்த்துள்ளது. 1967 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லைகளின் அடிப்படையில் பலஸ்தீன இராச்சியத்தை ஸ்தாபிக்குமாறும் அதன் ஊடாக பலஸ்தீனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுமாறும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது சவுதி அரேபியா.

மேலும் காஸா மீதான யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு அரபு நாடுகள் உட்பட உலக நாடுகள் மாத்திரமல்லாமல் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளைப் கொண்டுள்ள பிராந்திய நாடுகளும் கேட்டும் கூட அதற்கும் இஸ்ரேல் செவிசாய்ப்பதாக இல்லை.

அதனால் ஜோர்தான், பஹ்ரெய்ன் போன்ற நாடுகள் தமது தூதுவர்களைத் திருப்பி அழைத்துக் கொண்டுள்ளன. இஸ்ரேலுக்கான எமிரேட்ஸ் விமான சேவையை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடைநிறுத்தியுள்ளது.

ரபாவானது எகிப்துக்கு அருகிலுள்ள ஒரு பிரதேசம். அங்கு முட்கம்பிகளைக் கொண்டு எகிப்து வேலி அமைத்துள்ளது. அதனால் சனநெரிசல் மிக்க ரபா மீது தரைவழி யுத்தத்தை இஸ்ரேல் முன்னெடுத்தால் அதிக உயிரிழப்புக்களும் காயங்களும் ஏற்படும். மக்கள் எகிப்துக்குள் தஞ்சமடையக்கூடிய அபாயமுள்ளது. அதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் மற்ற உறுப்பினர்கள் திட்டமிட்ட இஸ்ரேலிய தாக்குதலை எதிர்த்துள்ளனர்.

மேலும் காஸாவில் இருந்து பலஸ்தீன மக்கள் வெளியேறினால் அவர்கள் மீளக்குடியேற இஸ்ரேல் அனுமதிக்காது என்ற அச்சமும் பல நாடுகளிடம் காணப்படுகிறது. அதனால் ரபா மீது யுத்தத்தை முன்னெடுக்க வேண்டாம் என்று எகிப்து இஸ்ரேலிடம் கூறியுள்ளது. அதற்கும் இஸ்ரேல் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. அதனால் ரபா எல்லைப் பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்திவரும் எகிப்து, 40 இற்கும் மேற்பட்ட கவச வாகனங்களை அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தியுள்ளது.

இந்த யுத்தம் எகிப்துடனான இஸ்ரேலின் இராஜதந்திர உறவையும் சீர்குலைக்கக்கூடிய அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சூழலில் எகிப்துக்கு விஜயம் செய்த துருக்கிய ஜனாதிபதி, காஸா மக்கள் வெளியேற்றப்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம் என்று எகிப்த்திய அதிபருடன் இருந்தபடி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஹமாஸ் ஆயுதங்களைக் கடத்துவதற்கு எகிப்தின் நிலத்தைப் பயன்படுத்துவதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ள கருத்துக்களை கடுமையாக சாடியுள்ள எகிப்து, காஸா மீதான யுத்தம் காரணமான அழிவு மற்றும் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதற்கு எதிராகவும் எகிப்திய ஜனாதிபதி உரையாற்றியுள்ளார். அதனால் ரபா மீது யுத்தத்தை விரிவுபடுத்தினால் 1979 இல் கைச்சாத்திடப்பட்ட கேம்ப் டேவிட் உடன்படிக்கை என்னவாகும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலின் போக்குவரத்து அமைச்சர் மிரி ரெகெவ், 'உத்தேச ரஃபா தாக்குதல் தொடர்பான எகிப்தின் கவலைகளை தனது நாடு அறிந்திருப்பதாகவும் கெய்ரோ மற்றும் டெல் அவிவ் பேச்சுவார்த்தை மூலம் இவ்விஷயத்தை தீர்க்க முடியும்' என்றுள்ளார்.

ஆக, காஸா மீதான யுத்தம் இஸ்ரேலின் பிராந்திய மற்றும் சர்வதேச இராஜதந்திர உறவுகளில் பாதிப்புக்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தியுள்ளது. இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. அதனால் ரமழானுக்கு முன்னர் இரு தரப்பினருக்கும் இடையில் மனிதாபிமான யுத்தநிறுத்தம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் சர்வதேச நிபுணர்களின் கருத்தாகும்.



**மர்லின் மரிக்கார்...**



# ஜே.வி.யின் 39 ஆசனங்கள் மூன்றாகக் குறைந்த விதம்

வாக்குச் சீட்டில் புள்ளடி இடும் வரைக்கும் ஒவ்வொருவரும் தங்களை ஜே.வி.பிக்காரராகவே காண்பிப்பார். இந்தக் கதை கடந்த காலம் முழுவதிலும் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் பேசப்பட்ட பிரபலமான கதையாகும். எனது நினைவு சரியானதெனில், இந்தக் கதை மிகவும் பிரபல்யமாக அமைந்தது 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊவா மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களின் போதாகும். யுத்த வெற்றியின் சூட்டோடு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது அதிகூடிய வாக்குகளால் வெற்றி பெற்ற மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் செல்வாக்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்த காலகட்டமாக இருந்ததால் இவ்விரு மாகாண சபைத் தேர்தல்களின் போதும் எதிர்க்கட்சிகள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் தற்போதைய அமைச்சரான ஹரீன் பெர்னாண்டோவை களமிறக்கியது. ஜே.வி.பி, சமந்த வித்யாரத்ன உள்ளிட்ட தரப்பினரை ஊவாவில் களமிறக்கியது. மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் எதிர்க்கட்சி குறிப்பாக ஜே.வி.பி கணிசமான வெற்றியைப் பெறும் என்று பலர் நினைத்தனர். காரணம் அந்நேரத்தில் ஜே.வி.பி தேசிய மற்றும் சமூக ஊடக வெளியினைப் போன்று பொதுக் கூட்டங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் அதிகளவில் பிரகாசித்தது.

எனினும் அந்த தேர்தல் முடிவுகள் வெளியாகும் போது ஜே.வி.பியின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிப் போனது. மிகவும் அவதானத்தைப் பெற்றிருந்த பதுளை மாவட்டத்தின் மொத்த பெறுபேற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 47.37 வீத வாக்குகளைப் பெற்று 09 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய கட்சி 44.79 வீத வாக்குகளைப் பெற்று 08 ஆசனங்களையும் பெற்றுக் கொண்ட போது மக்கள் விடுதலை முன்னணியினால் பெற முடிந்தது மொத்த வாக்குகளில் 4.67 வீத வாக்குகள் எனும் 20,625 வாக்குகளை மாத்திரமேயாகும். ஐந்து வீதத்திற்கும் குறைந்த வாக்கு வீதத்திற்கு ஒரு ஆசனம் மாத்திரமே கிடைத்தது.

மொனராகலை மாவட்டத்திலும் ஜே.வி.பி அதிக கவனத்தைச் செலுத்தியது. எனினும் மொனராகலையிலும் கூட 241,426 என்ற மொத்த மாவட்ட வாக்குகளில் 15,955 வாக்குகளை அதாவது 6.61 வீத வாக்குகளை மாத்திரமே ஜே.வி.பியினால் பெற முடிந்தது. இதற்கு ஒரு ஆசனம் மாத்திரம் அவர்களுக்குக் கிடைத்தது.

மொத்தமாக ஊவா மாகாணத்தில் ஜே.வி.பி பெற்றுக் கொண்டது 682,797 என்ற மொத்த மாகாண வாக்குகளில் 36,580 எனும் 5.357 வீத வாக்குகளை மாத்திரமேயாகும். மொனராகலை ஆசனத்துடன் 34 ஆசனங்களுள் இரண்டு ஆசனங்களை மாத்திரமே ஜே.வி.பி வெற்றி கொண்டது.

ஜே.வி.பியின் அனைத்து கனவுகளும் சிதைந்து போனாலும், ஜே.வி.பியின் 'சரியான இடத்தை' காட்டிய இந்த தேர்தல் முடிவின் மூலம்தான், 'வாக்குச் சீட்டில் புள்ளடி இடும் வரைக்கும் அவர் ஜே.வி.பி காரர்' என்ற வேடிக்கையான கதை பிரபலமடைந்தது.

இன்று மக்கள் விடுதலை முன்னணி தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்திருப்பது ஜே.வி.பி பாரம்பரிய இடதுசாரிக் கட்சியின் உருவத்தை கழற்றிவிட்டு தேசிய மக்கள் சக்தி என்ற பெயரிலேயே என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த அரசியல் கூட்டணியினுள் தேசிய மட்டத்தில் ஜே.வி.பி மாத்திரமே அரசியல் கட்சியாக இருப்பது தெரியவந்துள்ளது. தேசிய மக்கள் சக்தியைச் சுற்றி திரண்டிருக்கும் மற்றைய அனைவரும் வெவ்வேறு குழுக்கள் என்பதை தெளிவாகக் காணலாம். எனவே, ஜே.வி.பி.யின் தற்போதைய பலம் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ள நாம் ஜே.வி.பி.யின் தேர்தல் வரலாற்றையும் அதன் போக்குகளையும் ஆய்வு செய்ய வேண்டும். அதற்குக் காரணம், எந்த ஒரு அரசியல் கட்சியினதும் 'கட்சி வாக்குத் தளம்' தான் இறுதியில் தீர்க்கமானதாக அமையும். உதாரணமாக, 35 வீத நிலையான வாக்குப் பலத்தைக் கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சிக்கு (ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட) மற்றும் ஸ்ரீ.ல.சு.கட்சி (மொட்டு உள்ளிட்ட),தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான குறைந்த வாக்கு வீதமான 45% என்ற எல்லையைத் தாண்டிச் செல்வதற்கு சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது, பாரிய பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பது மற்றும் இன்னும் எதிர்பாராத பல நிகழ்வுகளின் ஊடாக வாய்ப்பு கிடைக்கின்றது.

எனினும் 5 வீதத்திற்கும் குறைந்த அல்லது அதற்கு அண்மித்த வாக்கு பலத்தைக் கொண்டுள்ள கட்சியினால் 45 வீதத்தை நெருங்குவதற்கு 09 பங்கினால் வாக்கு பலத்தினை அதிகரித்துக் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறான வளர்ச்சியைப் பெற்ற அரசியல் கட்சி ஜனநாயக உலகில் எங்குமே இல்லை.

எனவே, ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு எதிர்பார்த்து இயங்கிய கட்சி என்ற வகையில் ஜே.வி.பி முதன் முதலில் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் நுழைந்தது 1982ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலாகும். அந்நேரம் 5/6 பாராளுமன்ற அதிகாரத்துடன் இருந்தாலும் ஜே. ஆர். ஜயவர்தன ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டது 1978 அரசியலமைப்பின் காரணமாகவே அன்றி, ஜனாதிபதித் தேர்தலின் மூலம் அல்ல. அதேபோன்று ஆரம்பத்திலிருந்து ஜே. ஆர். ஜயவர்தன ஒரு 'பிரபலமான' தலைவர் அல்ல. அத்துடன் 1982ஆம் ஆண்டளவில், அரசாங்கம் மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவில் செல்வாக்கை இழந்தது. அதனால் 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே. ஆரைப் போன்றே ஜே.வி.பியின் தலைவர் ரோஹன விஜேவீரவுக்கும் தனது 'உண்மையான பலம்' பற்றிய புரிதலைப் பெற இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே. ஆர். ஜயவர்தன 52.91 வீத வாக்குகளைப் பெற்ற போது ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவ 39.07 வீத வாக்குகளையும், ஜே.வி.பியின் தலைவர் ரோஹன விஜேவீர 4.19 வீத வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். 1988ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை ஜே.வி.பி பகிஷ்கரித்ததோடு, அவர்கள் தமது இரண்டாவது ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் ஆர். பிரேமதாச 50.43 வீத வாக்குகளையும், ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் 44.95 வீத வாக்குகளையும் பெற்றுக் கொண்டிருந்தனர். 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி தனது வேட்பாளரை நீக்கிக் கொண்டதோடு, அவர்களது ஆதரவைப் பெற்ற ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் வேட்பாளர் நிஹால் கலப்பதி 0.30 வீத வாக்குகளைப் பெற்றுக் கொண்டிருந்தார்.

1982ஆம் ஆண்டின் பின்னர் ஜே.வி.பி மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக முகங்கொடுத்தது 1999ஆம் ஆண்டின் நான்காவது ஜனாதிபதித் தேர்தலிலாகும். அந்த தேர்தலில் ஜே.வி.பி வேட்பாளர் நந்தன குணதிலக பெற்றுக் கொண்டது 3,44,173 எனும் 4.08 வீத வாக்குகளேயாகும். அதற்குப் பின்னர் இடம்பெற்ற 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் முழுமையான ஆதரவு மஹிந்த ராஜபக்சவுக்கும், 2010ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் தெரிவான சரத் பொன்சேனாவுக்கும் கிடைத்த போதும் 2015ஆம் ஆண்டில் அவர்களது ஆதரவு மைத்திரிபால சிரிசேனாவுக்கு கிடைத்தது.

2004ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி தனது சொந்த வேட்பாளர்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்குவதில் மிகவும் கவனமாக இருந்ததோடு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட கூட்டணியின் விருப்பு வாக்குகள் ஜே.வி.பி தலைவர்களுக்கு கிடைத்ததன் காரணமாக அவர்களுக்கு அதிக பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்த போதிலும், அந்த ஆச்சரியமான வெற்றி கடைசியில் ஜே.வி.பிக்கு அழிவாக மாறியது. ஜே.வி.பியின் முக்கிய தலைவர்களான விமல் வீரவங்ச உள்ளிட்ட தலைவர்கள் ஜே.வி.பியை விட்டு விலகி அரசாங்கத்துடன் இணைந்தனர். பின்னர் அவர்கள் 'நிரந்தர' ஜே.வி.பிக்கு நிரந்தர எதிரிகள் ஆயினர்.

சில அரசியல் விமர்சகர்களின் கூற்றுப்படி, 2004இல் கிடைத்த ஆச்சரியமான பாராளுமன்ற வெற்றியானது ஜே.வி.பிக்கு 'துரதிர்ஷ்டத்தை' தந்ததோடு, கட்சி திறமையான பேச்சாளர்களை இழந்தமை மற்றும் ஜே.வி.பி தொடர்பில் 'பொது மக்கள்' மத்தியில் இருந்த அபிமானம் மற்றும் நம்பிக்கை சரிவடைவதற்கும் காரணமாகியது. அதேபோன்று ஜே.வி.பி.யின் அரசியல் 'ஒருமைப்பாடு' இத்துடன் அழிவடைந்ததோடு, சிலரின் கருத்துப்படி, ஜே.வி.பியின் புரட்சிகர பாதைக்கு துரோகம் செய்தவர்கள் 'அரசியல் விபசாரிகளாக' மாறினார்கள்.

எதிர்பார்த்தது போலவே 2010ஆம் ஆண்டில் ஜே.வி.பி தனது அரசியல் எதிரியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் செய்தது.

**மாதவ விஜேசேன**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**





# சிலி நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து எவ்வாறு மீண்டது?

## கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீட பேராசிரியர் பிரியங்க துனுசிங்க

தளினால் முழுமையடைந்த ஒரு நாடாகும். குறிப்பாக கடந்த காலத்தில் நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் உலோகத்தை அடிப்படையாகக் கொண்ட வெள்ளி போன்ற வணிகப் பொருட்களின் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டதாகும். உலகில் செப்பு உற்பத்தி செய்யப்படுவது சிலி நாட்டிலாகும். எவ்வாறாயினும் 1950ஆம் ஆண்டு வரைக்கும் சிலி நாட்டின் பொருளாதாரம் தங்கியிருந்தது தனியார் துறையிடமாகும். தனியாரிடமிருந்த பிரதான பொருளாதார நடவடிக்கைகளை தேசிய மயப்படுத்தும் நடவடிக்கைகள் பின்னைய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

வளங்கள் அனைவருக்குமிடையில் பிரிந்து செல்ல வேண்டும் என்பதுடன், அது நாட்டின் சிறு தரப்பினரால் பயன்படுத்தப்படுகின்றது என்ற அடிப்படையில் இந்த தேசிய மயமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாட்டின் வருமானத்தைப் பகிர்ந்து கொள்வது அனைவருக்குமிடையில் இடம்பெற வேண்டும் என்ற கருத்து இதன் நோக்காக அமைந்தது. அமெரிக்கா, சீனா, பிரேசில், ஆர்ஜன்டீனா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் சிலிநாட்டின் முக்கிய வர்த்தக பங்காளிகளாக உள்ளன. இந்த வளங்களை தேசியமயமாக்குவதன் மூலம், அமெரிக்கா போன்ற நாடுகள் அதற்கு எதிராக சில உலோகங்கள் போன்ற பொருட்களை சிலி நாட்டிலிருந்து இறக்குமதி செய்தல், வாங்குதல் போன்ற செயற்பாடுகளை நிறுத்தும் நிலை ஏற்பட்டது.

இந்த தேசியமயமாக்கல் அவ்வாறான எதிர்வினைகளை நோக்கிப் பயணித்தது. எவ்வாறாயினும் 1973ஆம் ஆண்டில் சோசலிச நிலைப்பாட்டில் இருந்தவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்த்து இராணுவச் சதியின் மூலம் பினோ சேவின் தலைமையில் சர்வாதிகார ஆட்சியை ஆரம்பித்தனர்.

அதன் போது 1970ஆம் ஆண்டுகளில் உலகில் எண்ணெய் விலை குறைந்த மட்டத்தில் இருந்ததால் ஈட்டிக் கொள்ளப்பட்ட பணத்திலிருந்து கடன் பெறு முடிந்தது. அதன் போது வளர்ச்சியடைந்த நாடுகள் மிகவும் குறைந்த வட்டி வசதிகளின் கீழ் கடன் பெறும் வாய்ப்புக்கள் இருந்தன.

இதனால் அனேக நாடுகள் 1970ஆம் ஆண்டி நடுப்பகுதியில் இந்தக் கடன்களைப் பெற்றுக் கொண்டன. 1980ஆம் ஆண்டாகும் போது கடனுக்கான வட்டி வீதங்கள் அதிகரித்த போது கடனைத் திருப்பிச் செலுத்தும் நெருக்கடியை நோக்கி பயணிக்க நேர்ந்தது. இந்த நெருக்கடியை சிலி நாடும் எதிர்கொண்டது.

அரசாங்க வருமானத்தில் அதிகரிப்பு இல்லாமல் அவர்கள் அந்த நெருக்கடியில் பயணிக்க நேர்ந்தது. இங்கு கடன் சேவை இல்லை என்பதால் , திருப்பிச் செலுத்தும் நெருக்கடி ஏற்பட்டது. முக்கியமாக நாட்டில் பணவீக்கம் மிக வேகமாக அதிகரித்தது.

1980ஆம் ஆண்டாகும் போது பணவீக்கம் 10% ஆக இருந்தது. அது 1983ஆம் ஆண்டாகும் போது 27% வரை அதிகரித்தது. 1990ஆம் ஆண்டின் முற்பகுதியில், அது 20% வரை உயர்ந்துள்ளது. இது அதிக நெருக்கடிமிக்க பணவீக்க நிலையாக இல்லாத போதிலும் அதிக பணவீக்க நிலையாகவே காணப்பட்டது. அதேபோன்று கடன் நெருக்கடியுடன் மற்றொரு முக்கியமான விடயமும் நடந்தது.

சிலி நாட்டின் வங்கிக் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்தது. அதனுள் வங்கித் துறையின் சரிவை நிறுத்துவதற்கு அந்நாட்டின் திறைசேரி மற்றும் மத்திய வங்கி பாரிய தலையீட்டை மேற்கொண்ட போதும் சில வங்கிகள் முழுமையாகவே வீழ்ந்தன.

இந்த நிலையினுள் சர்வதேச நாணய நிதியம் (IMF) உடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

1982ஆம் ஆண்டில் அது அவ்வாறு இடம்பெற்றதன் பின்னர் இந்த ஒப்பந்தத்தை சிலிநாடு மேற்கொண்டாலும் வேறு நாடுகள் மறுசீரமைப்புக்குச் சென்றன.

சிலி நாட்டின் சிறப்பு அம்சம் என்னவென்றால் பணம் செலுத்தும் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களாகும். அதாவது ஐந்தாண்டுகளில் செலுத்த வேண்டிய கடனை பத்து வருடங்களாக நீடித்ததால் கடன் தவணை குறையும். அதனடிப்படையில், 1983, 1985 மற்றும் 1989ம் ஆண்டுகளில், IMF உதவியுடன் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

சிலிநாடு லத்தீன் அமெரிக்க நாடுகளைப் போல உண்மையில் BRADY BOND திட்டத்தில் நுழையவில்லை. அந்த வகையில் அவர்கள் மற்ற கடன் பத்திரங்கள் வெளியிடுவதை மேற்கொள்ளவில்லை.

> **சிலி நாட்டின் சிறப்பு அம்சம் என்னவென்றால் பணம் செலுத்தும் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களாகும். அதாவது ஐந்தாண்டுகளில் செலுத்த வேண்டிய கடனை பத்து வருடங்களாக நீடித்ததால் கடன் தவணை குறையும். அதனடிப்படையில், 1983, 1985 மற்றும் 1989ம் ஆண்டுகளில், IMF உதவியுடன் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது.**

அமெரிக்க திறைசேரி மற்றும் IMF உதவியின் கீழ், அதற்காக காலாவதியாகும் காலம் நீடிக்கப்பட்டது. இந்த நெருக்கடியால் சிலியில் பொருளாதார நெருக்கடி உருவானது. இந்த பொருளாதார நெருக்கடி எந்தளவுக்கானது என்றால், தனிநபர் வருமானம் 20% ஆகக் குறைந்தது.

1991ஆம் ஆண்டில் மீண்டும் வழமைக்குத் திரும்பியது. 1981ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்த தனிநபர் மொத்த தேசிய உற்பத்தியை மீண்டும் சிலி நாட்டினால் மீட்டிக் கொள்ள முடிந்தது 1991 ஆம் ஆண்டிலாகும். 1980 மற்றும் 1990ஆம் ஆண்டு கால எல்லைகளுக்கு அமைய சிலி நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சியுடன் 1980 _90 காலப்பகுதி லத்தின் அமெரிக்க நாடுகள் அபிவிருத்தியில் பின்னோக்கி நகர்ந்த காலப் பகுதியாகும்.

1983, 1985 மற்றும் 1989 கடன் மறுசீரமைப்புகளைத் தொடர்ந்து, கடந்த முப்பது ஆண்டுகளினுள் சிலி நாட்டு அரசாங்கம் அவ்வாறான எந்தவொரு கடன் மறுசீரமைப்பு செயல்முறையையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு மேல் நோக்கி வருவதற்கு காரணமாக அமைந்த பல விடயங்கள் உள்ளன.

அதாவது பொருளாதாரக் கொள்கை தொடர்பாக முக்கிய அரசியல் கட்சிகளுக்கு இடையே பாரிய உடன்பாடு ஏற்பட்டது. அதனடிப்படையில், நாட்டில் பொருளாதார தாராளமயமாக்கல் தொடர்ந்தது. கட்சி, எதிர்க்கட்சி வேறுபாடின்றி இந்த நெருக்கடி புரிந்து கொள்ளப்பட்டது.

மத்திய வங்கியை சுயாதீனமாக மாற்றுவது மிகவும் முக்கியமாகும். மத்திய வங்கியினை சுயாதீனமாக்கும் சட்டத்துடன், பணவீக்கக் கட்டுப்பாடு மத்திய வங்கியின் முக்கிய விடயமாக ஆக்கப்பட்டு, இந்தப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் விளைவாக, 1991ல் 22% ஆக இருந்த பணவீக்கம் 2001இல் 3.5% ஆகவும், 2021 இல் 5% க்கும் குறைந்த மட்டத்திலும் இருந்தது.

மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமாக ஆக்கியதோடு, அரசாங்கம் அதன் வரவு செலவுத் திட்ட இடைவெளியைக் குறைக்க வரிகளை வசூலிக்கத் தொடங்கியது.

ஒருபுறம் அரசின் செலவுகள் குறைக்கப்பட்டன. அரசாங்கத்தின் கீழ் இருந்த நிறுவனங்களை தனியார் மயமாக்குவதன் மூலம், தனியார் துறையை பொருளாதாரத்தில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதோடு, மத்திய வங்கி சுயாதினமயமாக்கலின் பின்னர் மத்திய வங்கியின் மூலம் அரசாங்கம் கடன் வாங்கும் முறை முற்றிலும் கைவிடப்பட்டது.

வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதற்கு உள்நாட்டு தொழில்முயற்சிகளை பலப்படுத்தல், அதேபோன்று சட்டத்தின் ஆட்சியைப் பேணிச் செல்லவும் சிலி நாட்டினால் முடிந்தது. சுயாதீன நிறுவனங்கள் செயல்பட இடம் கொடுக்கப்பட்டது. அதன் மூலம் மோசடி, ஊழல், வீண் விரயத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் லஞ்சமும் ஊழலும் இருந்தது. அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு நிறுவனங்களைச் சுயாதீனமாக்குவதற்கு முடிந்தது. அதன்மூலம் , மோசடி, ஊழல், வீண் விரயத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த நிறுவனங்கள் சுயாதீனமயப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுக்குத் தேவையான உரிய அதிகாரங்களை வழங்குவதற்கு வாய்ப்புக்கள் கிடைத்தன. அதன் மூலம் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும் நல்ல சூழலை உருவாக்கவும் முடிந்தது.

கடந்த 30 ஆண்டுகளினுள், சிலி நாடு எந்தவொரு கடன் நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்காமல் குறுகிய கால எல்லைக்குள் கடன் தொடர்பான நெருக்கடிகளைத் தீர்த்துக் கொண்டு மீண்டும் முன்னேற முடிந்திருக்கின்றது. சிலி நாட்டிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் அதிகமுள்ளன. கடன் நெருக்கடி ஏற்படாதவாறு எவ்வாறு நாட்டை மீளக் கட்டியெழுப்புவது என்பதில் உலகிற்கு அவர்கள் முன்னுதாரணத்தை வழங்கியுள்ளனர்.

**சுபத்ரா தேசப்பிரிய**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கனேமுல்ல நகரில் கடவத்த வீதிக்கு முகப்பாக 06 கடை அறைகளைக் கொண்ட இரு மாடி வியாபாரக் கட்டிடம் விற்பனைக்கு. 077 4023330. 017247

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

கலஞ்சிய சாலை வாடகைக்கு கொட்டாஞ்சேனை புளுமென்டல் வீதியில் அளவு 12' 900 சதுர அடி 40 கொள்கலனுக்கான கிழக்கு பிரவேசம் வீதி பிரவேசம் 60 அடி வீதி துறைமுக அதகார சபைக்கு 1 km Trico Yard இற்கு 500 மீட்டர்கள் 24/7, பாதுகாப்பு சேவைகள் CC TV வாடகை மாதாந்தம் 990, 000 இலங்கை ரூபா விசாரணைகளுக்கு. தயவு செய்து 071 4937191 தொ. பே., SMS, WhatsApp ஊடாக தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு தேவையான எந்த மேலதிக தகவல்களையும் நாம் வழங்குவோம். 017009

கலஞ்சிய சாலை வாடகைக்கு கொட்டாஞ்சேனை புளுமென்டல் வீதியில் அளவு 9'120 சதுர அடி 40, கொள்கலனுக்கான கிழக்கு பிரவேசம் வீதி பிரவேசம் 60 அடி வீதி துறைமுக அதிகார சபைக்கு 1 km Trico Yard இற்கு 500 மீட்டர்கள், 24/7, பாதுகாப்பு சேவைகள் CC TV வாடகை மாதாந்தம் 800, 000 இலங்கை ரூபா. விசாரணைகளுக்கு. தயவு செய்து 071 4937191 தொ. பே., SMS, WhatsApp ஊடாக தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு தேவையான எந்த மேலதிக தகவல்களையும் நாம் வழங்குவோம். 017008

பிலியந்தலை கட்டுபெத்த பிரதான வீதியுடன் இணைந்ததாக முதன்மையான வர்த்தக இடவசதி வர்த்தக உரிமையாளரின் கவனத்திற்கு! எமது மூன்று வர்த்தக இடவசதிகளை வாடகைக்கு பெறுவதற்கான அரிய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். பிரதான வீதிக்கு அடுத்ததாக மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு 150m தூரத்தில் அமைந்துள்ளது. வாகன நிறுத்துமிடம் உண்டு. மேலதிக விபரங்களுக்கு இப்போது விசாரியுங்கள். 071 8306849. lawdddd402@gmail.com 016414

## வேலைவாய்ப்பு

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கொழும்பில் வசிக்கும் பிரபலமான தனியார் நிறுவனத்திற்கு கனரக வாகன அனுமதிப்பத்திரம் உள்ள 40 வயதிற்கு குறைந்த அனுபவமுள்ள சாரதி தேவை. கொழும்பு பிரதேசத்திற்கு அருகாமையில் வசிப்பவர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 0777 323265. 016732

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

அப்பம், கொத்து, இந்தியன் உணவுகள், கேக், ஐசிங் பாஸ்மார் தேவை. தங்குமிட வசதியுண்டு. நிவ் விஜய லங்கா கேட்டரஸ் பேக்கர்ஸ் கம்புறுபிட்டிய (மாத்தறை). 077 2004590. 016640

அம்பலங்கொட பயோதா ஹோட்டலுக்கு மிகத் திறமையான சைவ உணவு, இந்திய உணவு (தோசை, வடை) போன்றவை தயாரிப்பதற்கு தெரிந்த மிகத் திறமையான ஒருவர் தேவை. கவர்ச்சியான சம்பளம் 077 2925085/ 076 6582337. 016980

### 325 தொழில்துறை பொது

ஐந்து நட்சத்திர விடுதிகளில் (ஹவுஸ் கீப்பிங்) தொழில் புரிவதற்கான வெற்றிடங்கள் உள்ளன. உணவு, சீருடை மற்றும் தங்குமிட வசதிகளுடன் அதிக சம்பளம். கிலென்ஸ்டார் கம்பனி பிரைவேட் லிமிடெட். 40/ 1/ 5, மெட்ரோ ஹோம்ஸ், மலே வீதி, கொழும்பு 02 தொடர்புகளுக்கு. 077 8455525, 077 6373153. 017173

பெயின்ட் அலுமினியம், வெல்டர் பாஸ்மார் மற்றும் ஏனைய சகல வேலைகளுக்கும் கையுதவியாட்கள் வீடமைப்புத்தொகுதிக்குத் தேவை. களுபோவில. 0777 126910, 076 8172910. 016981

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

தலவத்துகொட மயான வீதியில் கௌரவமான அமைதியான சூழலில் அமைந்த 27 பேர்ச் காணி முழுமையாக அல்லது பகுதிகளாக விற்பனைக்கு. ஹோகந்தர பிரதான வீதிக்கு 100 மீட்டர், 1 பேர்ச், 22 லட்சம். 077 8700690. 016972

தெஹிவளை 10 பேர்ச் 3 மாடி கூட்டு ஆதண உறுதி. வீடு விற்பனைக்கு . மல்வத்த வீதி, ஹில் வீதிக்கு அப்பால் ரூ. 60 மில்லியன் 077 6443679. 017413

பாதுக்க 61 பேர்ச் காணியுடன் சிறந்த வீடு விற்பனைக்கு. சிறிய வியாபாரத்திற்குப் பொருத்தமானது. விபரங்களுக்கு. 077 9870975. 016648

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கந்தானை பழைய டிஆர்ஓ வீதியில் கௌரவமான அமைதியான சூழலில் அமைந்த சகல வசதிகளுடனான 4 அறைகளுடன் இரு மாடி வீடு விற்பனைக்கு. 35 மில்லியன். 077 8700690. 016973

கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிட்டிய வைத்தியசாலைக்கு அருகில் 05 பஸ் பாதைக்கு 1.5 km தூரத்தில் 01 ஏக்கர் காணி மற்றும் சாதாரண வீடு விற்பனைக்கு. 85/ சுத்தமான சுற்றாடல். புரோக்கர்கள் தேவையில்லை. 070 3989403. 017072

ஜாஎல நகரிற்கு 800m 278, கனேமுல்ல வீதிக்கு அருகில் நவீன வீட்டுடன் 20 பேர்ச் விற்பனைக்கு. 077 4023330. 017242

நீர்கொழும்பு கட்டான மிரிஸ்வத்தையில் எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் முழுமையான வீட்டுடன் 39 பேர்ச் விற்பனைக்கு. 071 8405047, 071 8854718. 017135

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777 282147 சிாிதலதா மாளிகையின் மணியோசை கேட்கும் தூரத்தில் விடு, வெற்றுக் காணி ஹோட்டல், தோட்டம், பல்வேறு வியாபாரஸ்தலம் கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் உத்தேசித்திருப்பின் அழையுங்கள். சிங்கள, தமிழ், முஸ்லிம் எவருக்கும் பொருத்தமானது. 0777 438169. 011583

### 622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு

மாத்தளை மாநகரில் மையப் பகுதியின் (People's Bank புதிய கட்டிடத்தின் பின் பகுதி) 14 Perch சதுர வடிவிலான SBMI COMMERCIAL AREAவில் அமைந்துள்ள காணி விற்பனைக்குண்டு. வியாபார அலுவலக நோக்கங்களுக்கு உகந்தது. ஒரு PERCH 3 MILLION. பேசி தீர்மானிக்கலாம். தொடா்புகளுக்கு. 077 8143116. 017048

### 631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

வெலிகாமம் கல்பொக்க அமைதியான சூழலில் 6.5 பேர்ச் 2 அறைகள், 1 குளியலறை கொண்ட ஒருமாடி வீடு விற்பனைக்கு. 85 இலட்சம். 077 3412786. 017140

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இராஜகிரிய ஒபேசேகரபுர Food City இற்கு பின்னால் 2 அறைகள் மற்றும் குளியலறை அத்துடன் சமையலறையுடனான வீடு வாடகைக்குண்டு. 076 6806220, 077 5152451. 016881

கொழும்பு 15 இல் 2 படுக்கையறை அப்பார்ட்மென்ட் வாடகைக்கு உண்டு. ஆர்வமுள்ளவர்கள் தயவு செய்து அழையுங்கள். 074 0455473/ 0777 702520. 017402

முதன்மையான அமைவிடம்! பல்கலைக்கழகத்திலிருந்து 150m தூரத்தில் மொறட்டுவை பல்கலைக் கழகத்திற்கு அருகில் பாதுகாப்பான குடியிறுப்பு வசதிகள் எமது தளபாடமற்ற அப்பாட்மென்ட் பல்கலைக் கழகத்திலிருந்து 150m தூரத்தில் பிலியந்தல கட்டுபெத்த பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்துள்ளது. ஒரு படுக்கையறை மற்றும் , இரண்டு படுக்கையறை வாய்ப்புக்கள். மேலதிக தகவல்களுக்கு இப்போது எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள். 071 8306849, lawdddd402@gmail.com 016409

மூன்று அறைகளையும் இரு குளியளறைகளுடனும் 2வது மாடி வீடு தளபாடங்களுடன் வாடகைக்கு களுபோவிலையில் வாகன தரிப்பிடம் இல்லை. 0777 414262. 016979

### 642 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

மாபோல தூவவத்த வீதி (டயஸ் அன்ட் டயஸ்) 10 பேர்ச் முதல் மாடியில் 3 படுக்கையறைகள், ஒரு பெரிய மண்டபம் வாடகைக்கு. மாதம் 55,000 ரூபா வாடகை, புதிய வீடு தூவ முஸ்லீம் பள்ளிக்கு முன்னால். சமூன் 077 3688818, இர்பான் 075 4798639 015518

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகன்

நீர்கொழும்பு ஓய்வுபெற்ற அரசாங்க நிறைவேற்று அதிகாரியான தந்தை, தமது 35 வயது, 5'8" பொது நிறமான, திடகாத்திரமான புகைத்தல் மற்றும் குடிப்பழக்கமற்ற கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த ஓர் வீட்டுடன் பயிரிடப்பட்ட காணியைக் கொண்ட ஓர் சர்வதேச ஹோட்டலில் சிரேஷ்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளராக கடமையாற்றும் தமது ஒரே மகனுக்கு திருமணமாகாத, கல்விகற்ற, புத்திகூர்மையுள்ள, பராமரிப்பு சிந்தையுள்ள, புலம்பெயர விரும்பும் மகளைத் தேடுகிறார். பாகு பாடு காட்டப்பட மாட்டாது. Email : matri.ideal@gmail.com. G214273



Lost Found

---

# BUDGET adz

தினகரன் வாரமஞ்சரி

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு

FREE INSPECTION

Leemaka PEST SOLUTIONS

**Solution to Get rid of Termites**

**Pre & Post Construction treatments For Termites**

RODENT CONTROL — To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean

COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES

Hotline: 074 031 5517

Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides

**Leemaka Industries (Pvt)Ltd.** (PV 120625)
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

## අමානෝ වැහිපිලි සහ සෙවිලි

Zinc Aluminium Sheet

වැහිපිලි සහ සෙවිලි

0777 394 679 | 070 663 33 88

## LAKE FRONT HOME For Sale



2 STOREY, 2500SQFT, 12.5 PERCH 4 BED ROOM, MODERN SOLID WOOD PANTRY, 3X3 FT ITALIAN PORCELAIN TILES, ROOMS & LIVING ROOM A/C, GARAGE, SERVANTS QUARTERS, SOLID CLAY BRICK WALLS, SINHALA TILE ROOF, 24 HOURS GATED SECURITY, LOCATION MILLENNIUM CITY KURUNEGALA (MUNICIPAL COUNCIL LIMITS), CLEAR TITLES, FREE HOLD DEED. ONLY AVAILABLE LAKE FRONT UNIT.

LKR 475 LAKHS WITH FURNITURE 0770-331-331

## HOUSE FOR SALE RATHMALANA

**10 PERCH UPSTAIR HOUSE FOR SALE**

4 BEDROOMS, 3 BATHROOMS, 1 SERVANT BATHROOM, 2 PANTRIES, 2 BALCONIES, PARKING FOR TWO VEHICLES, 100M FROM GALLE ROAD

**0775 931 766**

## பிரமிக்கும் தன்மையில் இரு மாடி வீடு அனுராதபுரத்தில் விற்பனைக்குண்டு

ஆடம்பர வாழ்வின் உருவகமான அனுபவத்துடனான இந்த நேர்த்தியான இரு மாடி வீடானது திசாவெவவிற்கு அருகாமையில் ஒரு கல் வீசும் தூரத்தில் புகழ்வாய்ந்த ஹெரிடேஜ் ஹோட்டல். இந்த இடமானது அண்ணளவாக 22 பேர்ச் காணியில் அமைந்துள்ளது. இந்த ஆதனமானது பூர்த்தி செய்யப்பட்ட தரை மாடியுடன் இடமும் நவீன வாழ்க்கைக்கான பிரதேசமும் உள்ளது.

Contact us now for more details
lawdddd402@gmail.com
071 830 68 49

## ARIYARATHNE CONSTRUCTIONS



සියලුම ඇලුමිනියම් වැඩ

POLYCARBONATE

Warehouse Construction

අමානෝ පීලි 0.47 (mm)

0777 24 23 19 / 0711 24 23 19

senakaariyarathne@yahoo.com
www.ariyarathneconstructions.com
www.facebook.com/ariyarathneconstruction

## நீர்கொழும்பு நகரின் மத்தியிலுள்ள ஆதனம்



நீர்கொழும்பு நகரின் கிறீன்ஸ் வீதியிலுள்ள வாகன நிறுத்துமிட வசதியுடனான ஒரேயொரு ஆதனம்

அமைவிடம் : கிறீன்ஸ் வீதி
பேர்ச்சுக்கள் : 18.6
கார் நிறுத்துமிடம் : முன்பக்கம் 5 கார்கள். பின்பக்கம்: 6 கார்கள்
கட்டிடம் : 3000 ச.அடி (2017)

எதிர்பார்க்கப்படும் விலை 295 மில்லியன் (பேசித் தீர்க்கலாம்)

தொடர்பிலக்கம் : 0777 445 448

## WANTED

**7000 sq.ft. - 10000 sq.ft. Warehouse within Colombo & Suburbs for a Central Kitchen**

**0712 955 213**

## கொடகம வட்டரேக்கா

புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலும் மாதுகுலாவ வீதிக்கு முகப்பாகவும் 04 ஏக்கர் தென்னங் காணி விற்பனைக்கு.




தொடர்பிலக்கம் : 0768 760 641

## வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



Peugeot 2008 SUV 2018 - Second owner, Milage 52,000km, Service record available, Emission test available, Daytime running lights, Company fitted DVD/ Reverse Camera, Auto retract mirrors, LED scope headlights, Chrome nickel grill, Company fitted alloy wheels, Winker mirrors, Dual multifunction, Cruise control, Many more extras...

077 251 98 88

kup 01



Toyota Noah, Hybrid, 2014, First Owner, Wine Red 074 26 20 492

tvm-1784

காஸாவில் அமையவுள்ள துறைமுகம்

# போருக்கான அறைகூவலா சமாதானத்துக்கான சமிக்ஞையா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

ஹமாஸ், இஸ்ரேல் போர் எதிர்பார்க்கப்பட்டது போல் நீட்சியானதாக மாறிவருகிறது. இஸ்ரேல் எதிர்பார்த்தது போல் போரை இலகுவில் நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டதுடன் இஸ்ரேலின் இருப்புக்கே அதிக அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது இஸ்ரேலின் நட்பு சக்திகளான மேற்கு உலகத்தையும் அதன் வர்த்தக மற்றும் ஆயுத விநியோகத்தையும் அதற்கான கடல்மார்க்கத்தையும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது. செங்கடல் மீதான ஆதிக்கத்தை ஹவுத்தி கிளர்ச்சிக் குழுவின் பெயரால் ஈரான் ஆதிக்கம் செலுத்த தொடங்கியுள்ளது. ஆனாலும் இப்போர் வரலாற்றில் அதிமுக்கியத்துவத்தை பெறும் போராகவே விளங்குகிறது. இப்போர் உலக ஒழுங்கை மாற்றும் திறனைக் கொண்டுள்ளது என்பது எதிர்பார்க்கப்பட்டதொன்றாகும். இக்கட்டுரையும் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளும், அமைப்புக்களும் காஸாவில் அமைக்கவுள்ள புதிய துறைமுகத்தின் அரசியல் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ள முயலுவதாகவே உள்ளது.

கடல்வழியாக காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்குடன் காஸாவில் துறைமுகம் ஒன்றை அமெரிக்க இராணுவம் நிர்மாணிக்குமென அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் காங்கிரஸில் உரையாற்றும் போது 08.03.2024 அன்று தெரிவித்துள்ளார். தற்காலிக துறைமுகம் பலஸ்தீனர்களுக்கான மனிதாபிமான உதவிகளின் அளவை அதிகரிக்குமெனவும், எனினும் காஸாவில் அமெரிக்கப் படைகள் இணையாது எனவும் குறிப்பிட்டிருந்தார். காஸாவில் 25 சதவீதமான மக்கள் உணவின்றி தவிப்பதாக ஐக்கிய நாடுகள் எச்சரித்துள்ள நிலையில் சிறுவர்கள் குழந்தைகள் போதிய உணவின்றி இறப்பதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. ஏற்கனவே கட்டார், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் மனிதாபிமான உதவிகளை விமானம் மூலமாக வழங்குவதற்கு எடுத்த முயற்சி அதிகளவில் சாதகமானதாக அமையாமையும் இத்தகைய முயற்சிக்கு காரணம் எனத் தெரியவருகிறது.

காஸாவில் ஆழமான கடற்பகுதி இல்லாமையும் அதனால் பலமான துறைமுகமொன்று அமைக்க முடியாமை பற்றியும் மேற்கு நாடுகள் கவனத்தில் கொள்கின்றன. இத்தகைய துறைமுகம் அமைக்கப்பட்டதன் பின்னர் சைபிரஸ் வழித்தடத்தில் கப்பல்கள் காஸாவை நோக்கி பயணிக்குமெனவும் அவற்றை இஸ்ரேலிய இராணுவம் துருக்கியின் தலைநகரில் வைத்து பரிசோதனை செய்யும் எனவும் ஆரம்பகட்ட நடவடிக்கையில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நோக்கும் போது அமெரிக்கா காஸாவில் துறைமுகம் அமைப்பதற்கான அனைத்து பூர்வாங்க நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. இங்கு பொதுவான ஒரு கேள்வி எல்லாத்தளத்திலும் எழுகிறது. அதாவது அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் இஸ்ரேலுக்கு ஆயுத தளபாடங்களை வழங்கி போரை வழிநடத்தும் போது ஏன் பலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவி வழங்க வேண்டும் என முனைகின்றன. மேற்குலகத்தின் ஆயுதங்களும் போர்த் திட்டமிடல்களுமே 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட பலஸ்தீன மக்களை கொன்றொழித்தது. அதே நாடுகள் மனிதாபிமான உதவி என ஏன் முயலுகின்றன. இதற்கான புரிதலை விரிவாக நோக்குவது அவசியமானது.

முதலாவது, மனிதாபிமான உதவிக்கான திட்டத்துடன் அமெரிக்கா காஸாவில் நிரந்தரமான துறைமுகம் ஒன்றினை உருக்குவதன் மூலம் நிரந்தரமான கடற்படையைக் கட்டமைத்துக் கொள்ள திட்டமிடுவதாகவே தெரிகிறது. அது மேற்காசிய அரசியலில் அதீதமான முக்கியத்துவத்தை தரக்கூடியதாக அமைய வாய்ப்புள்ளது. குறிப்பாக இஸ்ரேலின் இருப்புக்கு பாதுகாப்பளிப்பதுடன் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் இருப்பும் நிரந்தரமானதாக அமையக் கூடியதாக உள்ளதாகவே தெரிகிறது. ரஷ்யா, சீனாவுக்கு அடுத்தபடியாக எழுச்சிபெற்றுவரும் ஈரானுக்கு சவாலாக அமெரிக்காவின் இருப்பு மட்டுமன்றி ஹவுத்தி, ஹமாஸ், ஹிஸ்புல்லா போன்ற அமைப்புக்களின் எதிர்காலத்தை கையாளவும், கண்காணிக்கவும் காஸாவில் அமையவுள்ள துறைமுகம் அமெரிக்காவுக்கு உதவக்கூடியதாக அமைய வாய்ப்புள்ளது. தற்போது செங்கடல் மீதான நெருக்கடி, சுயஸ்கால்வாயின் போக்குவரத்தை பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது. அதனால் நிரந்தரமான கண்காணிப்பும் தாக்குதல் முறியடிப்பு உத்தியும் அவசியமானதாக உள்ளது. மனிதாபிமானத்தின் பெயரால் அமைக்கப்படவுள்ள கடற்படை துறைமுகமே காஸா துறைமுகமாகும்.

இரண்டாவது, தற்போது இஸ்ரேலுக்கு ஆயுததளபாடங்கள் போதியளவு கிடைக்காமையால் சரிவர போரை நிகழ்த்த முடியாதுள்ளதுடன் அதிக தோல்விகளுக்கு முகங்கொடுத்துவருகிறது. அதிலும் காஸாவுக்குள் இஸ்ரேல் தரைவழியாக நுழைந்த பிற்பாடு அதிக இராணுவ இழப்புக்களை இஸ்ரேலியப் படைகள் எதிர்கொண்டு வருகின்றன. மேற்கு நாடுகள் கடல்வழியாகவும் ஆயுத தளபாடங்களை இஸ்ரேலுக்கு சேர்ப்பிப்பதில் அதிக நெருக்கடி நிலவுகிறது. அதனால் மனிதாபிமான உதவியின் பெயரால் இஸ்ரேலிய இராணுவத்தின் போருக்கான ஆயுத தளபாடங்களை கைமாற்றுவதற்கு காஸா துறைமுகம் தேவையானதாக உள்ளது. இஸ்ரேலியப் போருக்கு ஆயுதங்களும் திட்டங்களும் வழங்கி பலஸ்தீனர்களை அழிக்க முன்னின்று செயல்படும் அமெரிக்கா மனிதாபிமான உதவியில் எத்தகைய புனிதத்தையும் பின்பற்றாது என்பது தெளிவான விடயம்.

மூன்றாவது, இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்க இராணுவத்தை நேரடியாக ஈடுபடுத்தும் நோக்கமும் அமெரிக்காவுக்கு உண்டு. தற்போது விமானப்படையையும் கடற்படையையும் மறைமுகமாக பயன்படுத்துகிறது. எதிர்காலத்தில் தரைப்படையை காஸா பகுதியில் தரையிறக்க வாய்ப்பு கிடைத்துள்ளதாகவே தெரிகிறது. காரணம் துறைமுகத்தை பாதுகாப்பது என்ற பெயரில் தரைப்படையையும் பயன்படுத்த முடியும். அதனை அப்போது எந்தத் தரப்பும் ஆட்சேபிக்க முடியாத நிலை ஏற்படும். அது இஸ்ரேலிய இராணுவத்தின் உளத்திறனை அதிகரிப்பதுடன் போரில் ஏற்படும் நெருக்கடிகளை சரி செய்து கொள்ள முடியுமென அமெரிக்கா கணிப்பிட்டுள்ளதாகவே தெரிகிறது. இதில் அமெரிக்கா ஏற்கனவே எச்சரித்தது போல், காஸா தரைவழித் தாக்குதல்களுக்கு பல வருடங்களாகலாம். அவ்வாறே அப்போரில் இஸ்ரேல் தோற்கடிக்கப்படலாம் என்பது போன்ற நிலைமை தற்போதுள்ளது. அதனால் இஸ்ரேலை தோற்கவிடாது பாதுகாப்பதில் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகத்திற்கு பங்குள்ளது என்ற வகையிலேயே காஸா துறைமுகம் சார்ந்த அரசியலை புரிந்து கொள்வது பொருத்தமானது. இஸ்ரேலின் தோல்வி ஒட்டுமொத்த மேற்குலகத்தின் மேற்காசியா பொறுத்த தோல்வியாகிவிடும் என்பதுவும் கவனத்தில் கொள்ளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் போரில் இஸ்ரேல் முழுமையான தோல்வியை எதிர்கொள்ளக் கூடாது என்ற தூரநோக்குடனேயே, அமெரிக்காவினதும் மேற்குலகத்தினதும் கொள்கை வகுப்புக்கள் வடிவமைக்கப்படுகின்றன.

நான்காவது, மேற்குலகத்தினது மனிதாபிமான முகம் பலஸ்தீன மண்ணில் மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகத்திலும் சிதைந்துவருகிறது. அதனைத்தூக்கி நிறுத்த வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுவிட்டது. ஏனெனில் கொல்லப்பட்டவர்களில் பெண்களும் சிறுவர்களுமே அதிகமாக உள்ளனர். அவர்களுக்காகவும் மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்களையும் பிரகடனங்களையும் மேற்கு வகுத்துவைத்துள்ள போதும் அதனை பலஸ்தீனத்தில் அந்த அரசுகளே மீறிவருகின்றன. மேற்குலகம் மீதான விமர்சனம் அத்தகைய கோணத்திலேயே நிகழ்கிறது. இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவரது மனித உரிமை பற்றிய விவாதங்கள் போலித்தனமானவை என்ற பகிரங்க விமர்சனங்கள் உண்டு. ரஷ்யாவை இலக்குவைத்துச் செயற்படும் குற்றவியல் நீதிமன்றம் காஸாவில் இஸ்ரேல் நிகழ்த்தும் படுகொலைகளை வீட்டோவைப் பாவித்து அமெரிக்கா தடுக்கிறது என்ற விமர்சனம் அவற்றின் மீதான போலித்தன்மைகளை உலகளாவிய தளத்தில் வெளிப்படுத்திவருகிறது. இவற்றை எல்லாம் சரி செய்வதற்கே அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா அண்மையில் மனிதாபிமான நோக்கில் உணவுப் பொதிகளை காஸா பரப்பில் வீசின. அதற்கு கூறப்பட்ட காரணம் இஸ்ரேல் பலஸ்தீனத்திற்கு தரைவழியாக உதவிகளை வழங்க மறுப்பதனால் விமானம் மூலம் உதவுவதாக கூறியது. இது வேடிக்கையான உரையாடல் அல்லவா? அமெரிக்காவினதும் ஏனைய மேற்கு நாடுகளதும் ஆயுத தளபாடங்களையும் இராணுவத் திட்டமிடலையும் ஏற்கும் இஸ்ரேல், உதவிகளை வழங்க அந்த நாடுகள் வழங்க முன்வந்தால் நிராகரித்துவிடுமா? இது கூட்டுத்திட்டமிடல் போர்.

இதில் மேற்கு இஸ்ரேல் கூட்டே, போரை நிகழ்த்துகிறது. அதில் ஓரங்கமே மனிதாபிமானம். இராணுவத் தோல்விகளை மறைக்கவும் எதிர்கால போரை திட்டமிடவும் பயன்படுத்தப்படும் உரையாடல் மனிதாபிமானம். அதற்கானதே சர்வதேச விதிகளும் நியதிகளும்.

ஐந்தாவது, மனிதாபிமானத்தின் இன்னோர் தேவைப்பாடாக ஹமாஸ் அமைப்பினரால் கைது செய்யப்பட்ட இஸ்ரேலிய, அமெரிக்க பணயக் கைதிகளை தேடுவதற்கான நகர்வாகவும் இது நோக்கப்பட வேண்டும். கடந்த போர்நிறுத்த காலத்தில் ஹமாஸ் அமைப்பினால் விடுவிக்கப்பட்டவர்களில் அமெரிக்கர்கள் யாரும் இடம்பெறவில்லை என்பது கவனத்திற்குரியது. அவர்களை மீட்பதற்கான நடவடிக்கையில் இஸ்ரேலும் அமெரிக்காவும் தற்போதுவரை தோல்வியையே அடைந்துள்ளன. அதனால் இத்தகைய நடவடிக்கைகளால் கைதிகளை மீட்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் அல்லது இத்தகைய முயற்சிகளால் ஹமாஸ் அமைப்பிடமிருந்து பேரம் பேசலின் மூலம் கைதிகளை மீட்க முடியுமென அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுத் திட்டமிடுவதாகவே தெரிகிறது.

ஆறாவது, ஜோ பைடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளவுள்ள நிலையில் இத்தகைய அறிவிப்புகள் காஸா மீதான போரை நிராகரிப்பவர்களுக்கு தேவையாக உள்ளது. டிசம்பா 2024 நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் மட்டுமல்ல அமெரிக்க உயர்வர்க்கமே டொனால்ட ரம்ப்ட் என்ற எதிரியை எதிர்கொண்டுள்ளனர். அதனால் ஏற்பட்டுள்ள சவாலை முறியடிக்க இத்தகைய மனிதாபிமானம் பற்றிய உரையாடல் தேவைப்படுகிறது.



# தடைகளை தவிடு பொடியாக்கி வாழ்வில் வளம் காணும் சாதனைப் பெண்கள்!

அருள் சத்தியநாதன்...

மகளிர் வாரத்துக்கான சிறப்பு கட்டுரை


உரும்பிராய் தர்மலக்ஷ்மி


வவுனியா ஷோபனா


புதுக்குடியிருப்பு சாஜிராணி


தளவாய் விஜயநிலா

தெருவிலும் பொது இடங்களிலும் ஒய்யார நடைபோடும் பெண்களைக் காணும் ஆண்கள், ஆஹா என தன்னிலை மறக்கலாம். ஆனால் இப்பெண்களில் சிலர் நெஞ்சம் கொள்ளாத சோகங்களையும், பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கான வழிகளை தேடிக் கொண்டுமிருக்கின்றார்கள் என்பதை அவர்களது வெளித்தோற்றம் ஆண்களுக்கு புலப்படுத்துவதுமில்லை.

பெண் என்றால் கணவனுக்கு அடங்கியும், அவனைத் திருப்திப்படுத்தியும், குடும்பத்துக்காக உழைத்துக் கொண்டும் இருக்க வேண்டும். பின்னணியில் இருந்தே செயல்படவேண்டும். மற்றும் பெட்டிப் பாம்பாக இருந்தாலே போதும் என நினைக்கும் ஆண்களே அனேகர். ஆனால் அந்நிலை தற்போது படிப்படியாக மாறி வருகிறது என்பதே உண்மை.

வன்னிச் சமரின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களில் மகளிரே அதிக எண்ணிக்கையானோர் என்பது தெரிய வந்தது. போராளிகளாக பாதிக்கப்பட்ட பெண்கள், கணவரை இழந்து விதவையான பெண்கள், பிள்ளைகளை இழந்த தாய்மார், சார்ந்து வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள், நிர்க்கதியாகி நடுத்தெருவுக்கு வந்த பெண்கள், தமது குடும்பத்தவருக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் அவர்களை தேடிக்கொண்டிருக்கும் பெண்கள் என அடுத்த அடியை எங்கே வைப்பது, எப்படி வைப்பது என்பது தெரியாமல் அல்லாடும் பெண்கள் அனேகர்.

பெண்கள் அபலைகளாவது யுத்தத்தினால் மட்டுமல்ல. குடும்பத்தை அம்போவெனக் கைவிடும் கணவன் (தந்தை)மார், கட்டிய மனைவியை வேறொருத்தி மீதான ஈர்ப்பால் கைவிடும் கணவன்மார், குடும்ப வறுமை காரணமாக கல்வி வசதி கிடைக்காமல், சொற்ப வருமானத்துக்காக கடுமையாக உழைத்தும் தன் வாழ்வைத் தொலைக்கும் பெண்கள் எனக் குமுறும் இதயங்களை நாட்டின் எல்லா பகுதிகளிலும் காணலாம்.

மார்ச் எட்டாம் திகதி அனைத்துலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இலங்கையிலும் மகளிர் விழா நடத்தப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள். சங்க காலத்தில் புலியை முறத்தால் அடித்து விரட்டிய வீர மங்கை முதல், வேலு நாச்சியார், வரையிலும், துப்பாக்கி ஏந்தி சுதந்திரத்துக்காக போராடும் பெண் போராளிகள் வரை இத்தினத்தில் நினைவுகூரப்படுவது வழமை, ஆணாதிக்க உலகில் பெண்கள் சமூக மட்டத்திலும், அரசியல், பொருளாதார மட்டங்களிலும் எவ்வளவு சவால்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. எவ்வாறெல்லாம் அவர்கள் புறக்கணிப்புக்கு ஆளாகிறார்கள் என்பதை வெளிப்படுத்தும் மேடைகள் மிகக் குறைவு. இத்தனை ஆண்டுகளாக மகளிர் தினத்தை கொண்டாடி வந்தாலும், இலங்கையில் பெண்களின் சமூக நிலை, அங்கீகாரம் ஆண்கள் அளவுக்கு உயர்ந்துள்ளதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அமங்கலி என்ற சொல் பெண்கள் மீது மட்டுமே பிரயோகிக்கப்படுகிறது. சத்தான உணவுகள் தொடர்ச்சியாகக் கிடைக்காத சிறுமியர் வயதுக்கு வருவது முன்னர் 17, 18 வயதுவரை நடப்பதில்லை. இப்படித் தாமதமாகும் போது அச் சிறுமியை 'இருளி' என அழைக்கும் ஒரு காலம் இருந்தது. இருளி என்றால் விடியலை காணாதவர் என்று பொருள். ஒரு பெண்ணுக்கு திருமணம் தள்ளிப்போகும்போது அப் பெண் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்படுகிறார். மூளி என்ற பட்டம் பெண்ணுக்கு மட்டும்தான்.

கணவனை இழந்தவள் மிக மோசமாக, மனிதத் தன்மையற்ற வகையில் நடத்தப்படுவது தமிழ்ச் சமூகத்தில்தான். மங்கள நிகழ்வுகளில் அவளுக்கு இடமில்லை. மாதவிடாய் அசுத்தமும் அசூசையும் கொண்டதாக இன்றளவும் பார்க்கப்படுகிறது.

இவ்வாறு சமூக, சமய ரீதியாகக் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்க எந்த முயற்சியும் செய்யாமல் மகளிர் தினம் கொண்டாடுவதில் என்ன அர்த்தம்? அலுவலகங்களில் மகளிருக்கு சம அந்தஸ்து என்கிறார்கள். அலுவலகத்தில் ஒரு வைபவம் நடக்கிறது என்றால் பெண்களை 'மங்கள'கரமாக வரச் சொல்வார்கள். சிற்றுண்டித் தட்டுகளை ஏந்தி பரிமாறுவது பெண் ஊழியர்கள்தான். வரும் விருந்தினர்களை திலகமிட்டு பன்னீர் தெளித்து வரவேற்க அழகிய பெண்களைத்தான் நிறுத்துவார்கள். அங்காவது, எச்சந்தர்ப்பத்திலாவது, மகளிர் தின வைபவத்திலாவது இவற்றை ஆண்கள் செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா?

பெண்கள் கல்வித்தரம், விசேட சித்திகள் அடிப்படையில் உயர் பதவிகளைப் பெறுகிறார்கள், தொழில் அடிப்படையில் ஆண்கள் பெண் அதிகாரிகளுக்கு பணிந்து போகிறார்களே தவிர, பெண் இரண்டாம் தரம்தான் என்ற மனப்பான்மை மட்டும் அவர்களிடம் அப்படியே தான் இருக்கும்.

இந்த மனப்பான்மையை மாற்ற எடுத்துக் கொள்ளும் முயற்சி தொடர்ச்சியாக நடைபெற வேண்டிய ஒன்று. ஒரு தினத்தில் மட்டும் நினைவு கூரப்பட வேண்டியவள் அல்ல. ஆணாதிக்க சமூகத்தில் ஆண்களின் கொடுமைகளை எதிர்த்து போராடும் பெண்களை சமூகம் பாராட்டி கௌரவம் தர வேண்டும். சாதனைப் பெண்களைத் தேடி அவர்களது சாதனை வரலாற்றை எடுத்துச் சொல்லி ஏனைய பெண்களுக்கும் முன்மாதிரியாக நிறுத்த வேண்டும்.

கொக்குவில்லை பிறப்பிடமாகக் கொண்ட தர்மலக்ஷ்மி கிளிநொச்சியில் வாழ்ந்தவர். வறுமைச் சூழல். அங்கு அவருக்கும் சில்லறைக் கடை முதலாளியான இளைஞனுக்கும் இடையே காதல் மலர்ந்தது. திருமணமும் நடைபெற்றது. மூன்று பெண் குழந்தைகள். தொழில் விஷயமாக அடிக்கடி கிளிநொச்சி நகருக்கு சென்ற வரும் கணவர் அங்கே ஒரு பெண்ணை சந்தித்தார். அவருடன் காதல் வயப்பட்டார். அதைப்பற்றிக் கேட்டால் தர்மலக்ஷ்மிக்கு தர்மஅடி, உதை கிடைக்கும். ஒரு நாள் வீட்டை விட்டு வெளியேறி அப் பெண்ணுடன் தனிக்குடித்தனம் நடத்தத் தொடங்கினார். அந்த ஆண் சிங்கம்! கூடவே தன் மூத்த மகளையும் தன்னுடன் கூட்டிச் சென்றுவிட்டார். வருமானமின்றி தவித்த தர்மலக்ஷ்மி கிளிநொச்சி ஹோட்டல் ஒன்றில் தினசரி இரண்டாயிரம் இடியப்பம் அவித்துத்தர ஒப்புக் கொண்டு அதை மாலை வேளையில் செய்யத் தொடங்கினார். பகல் பொழுதில் தையலில் ஈடுபட்டார். சில சமயம் ஹோட்டலின் சமையல் கட்டுக்கே வரும் கணவர் இடியப்பம் பிழியும் தன் மனைவியைப் பார்த்து நக்கல் புன்னகையை வீசிவிட்டு செல்வாராம்!

வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறிய தர்மலக்ஷ்மி, நீதிமன்றத்தின் ஊடாக தன் மூத்த மகளை தன்னுடன் இருத்திக் கொண்டார். அப்பாவினால் அழைத்துச் செல்லப்பட்ட மூத்த மகளிடம் நன்றாக வேலை வாங்கியிருக்கிறார்கள். அடி உதை வேறு. ஒரு முறை அடித்த அடியில் தோள்பட்டை எலும்பு முறிந்துபோனது. இன்றளவும், பல சிகிச்சைகளின் பின்னரும், மூத்த மகள் முழுமையாக சுகமடையவில்லை.

தற்போது ஐம்பது வயதான தர்மலக்ஷ்மி உரும்பிராயில் ஒரு வாடகை வீட்டில் வசிக்கிறார் தன் மூன்று மகள்மாருடன். காளான், மாட்டிறைச்சி, மரக்கறி, கடலுணவுகள் எனப் பல்வகையான ஊறுகாய்களையும்,மாசிச் சம்பல், மூலிகை கோப்பி போன்ற பல உணவுப் பொருட்களையும் தயாரித்து விற்பனை செய்து வருகிறார். பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு இவை ஏற்றுமதியாகின்றன. கலைந்த குடும்பம், வாழ வழியற்ற வறுமைச் சூழல், வியர்த்தமான முயற்சிகள் எனப் பல சோதனைகளைத் தாண்டிய தர்மலக்ஷ்மி என்ற சாதனைப் பெண் இன்று சொந்தக் காலில் நின்று வசதிகளுடன் வாழ்கிறார். சொந்த வீட்டில் வாழ வேண்டும். தனித் தொழிலகம் அமைத்து வர்த்தகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற அவரது கனவுகள் நனவாகட்டும்.

வவுனியா கன்னாதிட்டியில் சந்தித்த நிஷாந்தன் ஷோபனாவுக்கு 35 வயதாகிறது. ஒன்றரை மற்றும் இரண்டரை வயதில் இரண்டு குழந்தைகளின் தாயார். எடுப்பான தோற்றத்தில் தைரியமும் நம்பிக்கையும் தென்படுகிறது. வசீகரிக்கும் குரல், யுத்த காலத்தில் குடும்பத்துடன் தமிழகம் சென்றவர்கள் மீள்குடியேறியிருக்கிறார்கள். அப்பா தினக்கூலி வேலைகள் செய்ய, தமிழகத்தில் தான் பயின்ற வாழைநார் உற்பத்திகளை இங்கே செய்து பார்த்தால் என்ன என்று ஷோபனாவுக்கு தோன்றியிருக்கிறது. தொப்பி, மேசை விரிப்பு போன்றவற்றை வாழைநாரைப் பயன்படுத்தி உருவாக்கி விற்க முனைந்ததில் தோல்வியே கிட்டியது. பின்னர் வந்த கொரோனா, பொருளாதார சரிவு, பணப் புழக்கம் குறைந்து போனமை எனப் பல இன்னல்கள். வாழைநார் பொருட்கள் தாக்குப் பிடிக்காமல் சுருங்கி பொலிவிழந்துவிடும் என்ற மக்களின் மனப்பான்மையை உடைத்தெறிவது சிரமமாக இருந்தது ஷோபனாவுக்கு.

கொவிட் தொற்று முடிவுக்கு வந்த பின்னர்தான் இயற்கை பொருட்களினால், இரசாயன கலப்பற்றதாக தயாரிக்கப்படும் பக்க விளைவுகளற்ற பொருட்களின் மகிமையை மக்கள் உணரத் தலைப்பட்டனராம். தான் உற்பத்தி செய்யும் பொருட்களை இன்னொருவர் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் இவருக்கு சமீபத்தில் காமினி

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# தண்ணீர் வசதியின்றி அல்லலுறும் கல்கந்தை தோட்ட மக்கள்

மனிதர்களின் அன்றாட வாழ்வுக்கு தண்ணீர் அத்தியாவசியமானதாகும். இன்றைய காலத்தில் இலங்கையில் அதிகரித்துள்ள வெப்பம் காரணமாக தண்ணீரின் பயன்பாடு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. அந்த வகையில் மலையகத்தில் நுவரெலியா மாவட்டம் அதிக நீர் வளத்தை கொண்டுள்ள போதிலும் இம்மாவட்டத்தில் தற்போது அதிக வெயில் காரணமாக நீர் நிலைகளில் தண்ணீர் குறைந்து வருகிறது.

இந்த நிலையில் நானு ஓயா கிறேட் வெஸ்டன் கல்கந்தை தோட்டத்தில் 262 குடும்பங்களை சேர்ந்த ஆயிரம் பேர் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள தண்ணீர் இன்றி அல்லல்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கிறேட் வெஸ்டன் கல்கந்தை தோட்ட மக்கள் இலக்கம் 11 தேயிலை மலைக்கு அருகில் ஒடும் கல் ஆற்றில் இருந்து தமது அன்றாட தேவைக்கான தண்ணீரை பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த கல் ஆற்றில் ஓடும் ஊற்று நீரை தலவாக்கலை நீர் வழங்கல் சபை ஒட்டு மொத்தமாக தலவாக்கலைக்கு கொண்டு செல்லும் முகமாக புதிய அணைக்கட்டொன்றை அங்கு அமைக்க கட்டுமாப் பணியை ஆரம்பித்துள்ளது.



இதன் காரணமாக கல்கந்தை தோட்ட மக்கள் தமது அன்றாட தேவைக்கு பெற்று கொண்ட தண்ணீருக்கு பங்கம் ஏற்பட்டுள்ள நிலையில் பாரிய தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தோட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கல்கந்தை தோட்டத்தில் பூதாகரமாக கிளம்பியுள்ள இந்த தண்ணீர் பிரச்சினை தொடர்பாக அங்குள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பீதுறுதலாகலை மலைத் தொடர்களில் ஒன்றான கிறேட் வெஸ்டன் மலை உச்சியிலிருந்து ஊற்றெடுக்கும் தண்ணீர் கல்கந்தை தோட்டம் இலக்கம் 11 தேயிலை மலையில் அமைந்துள்ள கல் ஆற்று வழியாக ஒடுகிறது.

கல்கந்தை தோட்ட காட்டு மாரியம்மன் ஆலய அடிவாரத்தில் இந்த கல் ஆறு ஆரம்பிக்கிறது. இந்த ஆற்றினூடே பெருக்கெடுத்து ஓடும் ஊற்றுத் தண்ணீர் பாமஸ்டன் ரட்ணகிரி ஆற்றுடன் இணைந்து தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தில் சங்கமிக்கிறது.

அதேநேரத்தில் இந்த கல்லாற்றுத் தண்ணீரை ஆண்டாண்டு காலமாக கல்கந்தை தோட்ட மக்கள் அணை கட்டி பாவனைக்கு தேவையான தண்ணீரை பெற்று வந்தோம்.

இந்த நிலையில் இந்த கல் ஆற்றிலிருந்து கல்கந்தை தோட்ட மக்கள் பாவனைக்கு எடுத்து கொண்ட நீருக்கு மேலதிகமாக வழிந்தோடும் நீரை 2001ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தலவாக்கலை லிந்துலை பிரதேச மக்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது தலவாக்கலை நகர சபை உறுப்பினர்கள் சிலர் கல் ஆற்றுக்குச் செல்லும் பிரதான வீதியை செப்பனிட்டுத் தருவதாக வாக்குறுதியையும் வழங்கினர். ஆனால் 23 வருடங்கள் ஆகியும் வீதி செப்பனிடவில்லை.

இருப்பினும் கல் ஆற்றில் வழிந்தோடும் தண்ணீரை தலவாக்கலைக்கு கொண்டு செல்ல மனிதாபிமான ரீதியில் ஒப்பு கொண்டோம். இதையடுத்து கல் ஆற்றின் ஒரு பகுதியில் அணை கட்டி அதனூடாக பாரிய குழாய் பொருத்தப்பட்டு தண்ணீரும் தடையின்றி கொண்டு செல்லப்பட்டது.

இது இவ்வாறிருக்க 23 வருடங்களுக்கு பின் அண்மையில் தலவாக்கலை நீர் வழங்கல் சபையினர் கல்கந்தை கல்ஆற்று பகுதிக்கு வந்து அங்கு கட்டுமான பணியை ஆரம்பித்தனர்.

அதாவது இக் கல்லாற்றில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த அணைக்கு அருகில் முழு ஆற்று நீரையும் தலவாக்கலைக்கு கொண்டு செல்லும் வகையில் மேலும் ஒரு அணையை அமைக்க நடவடிக்கை எடுத்தனர்.

அதேநேரத்தில் அணையை அமைத்து அதிலும் ஒரு பாரிய இரும்புக் குழாயைப் பொருத்தி இந்த கட்டுமான பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவ்விடத்திற்கு சென்ற தோட்டத் தலைவர்கள், இவ்வாறு புதிய அணையை அமைத்து முழு ஆற்று தண்ணீரையும் தலவாக்கலைக்கு கொண்டு சென்றால் கல்கந்தை மக்களுக்கு எவ்வாறு தண்ணீர் கிடைக்கும் என கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதனால் இக்கட்டுமான பணியை முன்னெடுத்த தலவாக்கலை பிரதேச நீர் வழங்கல் சபை அதிகாரிகளுக்கும் கல்கந்தை தோட்ட மக்களுக்கும் இடையில் வாக்குவாதமும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தோட்ட தலைவர்கள் மற்றும் மக்கள் அனைவரும் திரண்டு இவ்விடத்தை கல்கந்தை தோட்ட நிர்வாக அதிகாரிக்கு தெரிவித்துள்ளனர்.

ஆனால் தோட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க தவறிய பட்சத்தில் கடந்த (05.03.2024) அன்று தோட்ட மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு பெற்று தருமாறு அழுத்தம் கொடுத்து பணிப் பகிஷ்கரிப்புச் செய்துள்ளனர்.

அதேநேரத்தில் தலவாக்கலை பிரதேச நீர் வழங்கல் சபை, முழுமையாக ஆற்று நீரை ஆக்கிரமிக்க கட்டப்படும் அணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தாம் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கங்களுக்கும் நேரடியாகச் சென்று புகார் தெரிவித்துள்ளனர்.

இதனை உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்த போதும் அவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என கல்கந்தை தோட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த நிலையில் மலையக மக்கள் முன்னணி தலைவர் வே. இராதாகிருஷ்ணனிடம் இவ்விடயம் தொடர்பாக முன் வைத்த கோரிக்கையை அவர் ஏற்றுக் கொண்டு அவர் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து கட்டுமான பணியை இடை நிறுத்தியதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து மலையக மக்கள் முன்னணி உயர்பீட குழுவினரான முன்னணியின் பிரதி தலைவர் ஆர். ராஜாராம், வீ.புஸ்பா மற்றும் தா.சுதாகர் ஆகியோர் கல்கந்தை தோட்டத்திற்கு கள விஜயத்தை மேற் கொண்டு நிலைமையை கண்டறிந்தனர்.

அதேநேரத்தில் ம.ம.முன்னணி தலைவர் வே.இராதாகிருஷ்ணன் கடந்த (05.03.2024) அன்று பாராளுமன்ற அமர்விலும் கல்கந்தை தோட்ட மக்களின் தண்ணீர் பிரச்சினையை எடுத்துரைத்துள்ளார்.

இந்த நிலையில் தலவாக்கலை பிரதேசத்திற்கு வழமையாக அனுப்பி வைக்கப்படும் தண்ணீரைக் கொண்டு செல்ல தடை விதிக்கப்படவில்லை. அதேநேரத்தில் முழுமையாக ஆற்று நீரை ஆக்கிரமிக்க இடமளிக்கப் போவதிலைலை என்ற நியாயமான கோரிக்கையை கல்கந்தை மக்கள் முன் வைத்துள்ளனர்.

அத்துடன் கல்கந்தை தோட்டத்தில் 262 குடும்பங்கள் வாழ்கின்றன, இதில் விவசாயம் செய்பவர்கள், கால்நடை வளர்ப்போர் என கிட்டத்தட்ட ஆயிரம் பேர் இந்த கல் ஆற்று தண்ணீரை நம்பியே வாழ்வதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இந்த தோட்ட மக்களின் தண்ணீர்ப் பிரச்சினைக்கு உரிய தீர்வை சம்பந்தப்பட்டவர்கள் காலம் தாழ்த்தாது பெற்று கொடுக்க முன்வர வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

ரமேஸ் ஆறுமுகம்



# 200 வருடங்களாக லயன் வாழ்க்கையில்

## தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே உடனடித் தேவை

இந்த நாட்டை ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலத்தில் இந்தநாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு உழைக்கவென தென்னிந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட மக்களின் வழித்தோன்றல்களே நாடெங்கிலும் உள்ள பெருந்தோட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்கள்.

இந்த மக்களின் கடும் உழைப்பினால் இலங்கை தேயிலை ஏற்றுமதியில் சீனாவுக்கு அடுத்த இடத்தில் உலகளவில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. இந்த நாட்டுக்கு கிடைக்கும் அந்நியசெலாவணியில் ஏறத்தாழ அறுபது சதவீதம் தோட்டத் தொழிலாளர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பினாலேயே கிடைக்கிறது.

உண்மை இதுவாக இருந்தும், இந்த நாடெங்கிலும் உள்ள பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் தோட்டத் தொழிலாளர்கள், இந்த நாட்டில் இதுவரை பதவிக்கு வந்த அத்தனை அரசாங்கங்களினாலும் அவர்களை தொழிற்சங்க ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தும் தோட்டத் தொழிற்சங்கங்களினாலும் அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளினாலும் தோட்ட நிர்வாகங்களினாலும் பல வழிகளிலும் ஏமாற்றப்பட்டும் வஞ்சிக்கப்பட்டும் உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெறாதவர்களாகவும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தவர்களாக வாழ்கிறார்கள்.

இந்த நாட்டின் இந்திய வம்சாவளி தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு நடப்பு வருடத்துடன் ஏறத்தாழ இருநூற்றொரு வருட வரலாறு உள்ளது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் மனித வாழ்வில் வியக்கத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்று இந்த உலகத்தில் எந்த மூலை முடுக்கில் வாழ்ந்தாலும் அவருடன் நினைத்த மாத்திரத்தில் தொடர்புகொள்ளக் கூடிய விதத்தில் உலகம் ஒரு குறுகிய வட்டத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால், தோட்டத் தொழிலாளர்களின் கணிசமான தொகையினர் இன்னும் ஆங்கிலேயரினால் கட்டப்பட்ட லயன் அறை குடியிருப்புகளிலேயே பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் மன வேதனையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

இன்று வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் வானளாவ உயர்ந்து கொண்டிருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு வானளாவ உயர்ந்துவரும் வாழ்க்கை செலவுகளை சமாளிக்கும் விதத்தில் சம்பளம் வழங்கப்படாததனால் அவர்கள் யாசகர்கள் போன்று வாழ்கின்றார்கள்.

தோட்டத் தொழிலாளர்களை தொழிற்சங்க ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தும் தோட்டத் தொழிற்சங்கங்களும் அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக அரசியல் கட்சிகளும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் கூடுதலான அக்கறை செலுத்தாத காரணத்தினால் சம்பளப் பேச்சுவார்த்தைகளில் உரிய, நியாயமான ஒரு தொகையை நாளாந்த சம்பளமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாத நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பெருந்தோட்ட கம்பனி உரிமையாளர்களை தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா வழங்குவது சம்பந்தமாக கலந்துரையாடி அவர்களின் முடிவை அறிவிக்கும்படி கோரினார். ஆனால் அந்த திகதி கடந்து ஏறத்தாழ இரண்டு மாதங்கள் கடக்கவுள்ள சூழ்நிலையில் கூட பெருந்தோட்ட கம்பனியினர் தங்களது முடிவை அறிவிக்கவில்லை.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை தீர்மானிப்பதற்கு பெருந்தோட்ட கம்பனிக்காரர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும் தோட்டத் தொழிற்சங்கங்களான இலங்கை தொழிலாளர் காங்கிரசின் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி ஆகிய தொழிற்சங்கங்கள் மேலும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும். பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் குறித்து அவற்றின் முடிவை அறிவிக்காதமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு சென்று அரசாங்கத்தை தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் சம்பந்தமான பேச்சுவார்த்தையில் தலையிடச் செய்து பெருந்தோட்டக் கம்பனிகள் மூலம்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தோட்டத் தொழிற்சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், மற்றும் அவர்களின் சேம நலன்கள் சம்பந்தமாக தீர்வுகாக மீண்டும் கூட்டு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என வலியுறுத்துகின்றன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான ஜனாதிபதியின் ஆலோசகராக இலங்கை தேசிய தோட்டத் தொழலாளர் சங்கத்தின் பொது செயலாளர் வடிவேல் சுரேஷ் பதவி வகிக்கிறார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சராக உள்ளார். இவர்கள் இருவரும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் சம்பந்தமான ஒப்பந்தத்தில் தொடர்ந்தும் கையொப்பம் இட்டு வருபவர்கள்.

இலங்கை தேயிலை ஏற்றுமதியில் உலக அளவில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடம் வகிக்கிறது. உலகளவில் இலங்கையை தமது கடும் உழைப்பினால் இரண்டாம் இடத்தை வகிக்கச் செய்துள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான தொகையை சம்பளமாக பெற்றுக் கொடுக்க அரசாங்கமும் தோட்டத் தொழிற்சங்கங்களும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாடளாவிய ரீதியில் பெருந்தோட்டங்களில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாதுள்ளன. அந்த தரிசுக் காணிகளை பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து அந்தந்த பிரதேசங்களுக்கு ஏற்ப பயிர்செய்கையை மேற்கொள்ளவும், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, மலர்ச் செய்கை, பழவகை உற்பத்தி ஆகிய தொழில்துறைகளிலும் அவர்களை ஈடுபடச் செய்தால் என்பனவற்றின் மூலம் அவர்களுக்கு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடிவதோடு இந்த நாடும் மேலே குறிப்பிட்டுள்ள தொழில் முயற்சிகளின் மூலம் தன்னிறைவு பெறக்கூடிய நிலை உருவாகும்.

மலையக அரசியல்வாதிகளில் பலரும் தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என கருத்து தெரிவித்து வருவதை அறியக் கூடியதாக உள்ளது. ஜனாதிபதி தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தோட்டத்தில் தொழிலாளர்களை சிறு தோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என எடுத்த எடுப்பில் கோரிக்கை விடுவது புத்திசாலித்தனமான கோரிக்கையாக அமைய வாய்ப்பில்லை.

ஏனெனில் அந்தக் கோரிக்கை சம்பந்தமாக தீர்க்கமாக அலசி ஆராயந்து இறுதி முடிவு எடுத்த பின்பு ஏகோபித்த கோரிக்கையாக முன்வைப்பதன் மூலமே உரிய பயன் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிட்டக் கூடியதாக இருக்கும்.


சு.ப.சீலன்

# பலம் இழக்கிறதா இந்தியா கூட்டணி?

## இந்தியா ஒரு நோக்கு

### வாராந்த அலசல் 09

### நந்தவனம் சந்திரசேகரன்



காங்கிரயை விட எல்லாவகையிலும் நாங்கள் சிறந்தவர்கள் என்று தெரிவித்திருக்கிறார் கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள ஆனிராஜா. இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் கடந்த 45 ஆண்டுகளாக பணியாற்றி வரும் இவரை தற்போது மக்களவை உறுப்பினராக இருக்கும் ராகுல் காந்தியின் வயநாடு தொகுதியில் போட்டியாளராக நிறுத்தியிருப்பது அரசியலில் அதிர்வலையை ஏற்படுத்தியிருக்கிறது.

காங்கிரஸ் தலைமையிலான இந்திய கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்தாலும் கேரள மாநிலத்தில் ஆளும் இடதுசாரிகளும் காங்கிரஸும் கூட்டணியின்றி தனித்தே அரசியலில் களம் காண்கின்றன. அந்த மாநிலத்தில் மார்ச்சிஸ்ட் தலைமையில் இடதுசாரி ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆகியவற்றுக்கு இடையே தான் நேரடிப்போட்டி உள்ளது. பா.ஜ.கவும் தனி அணி அமைத்து தேர்தல்களம் காண்கிறது.

இந்தியா கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இருந்து கொண்டு கேரளாவில் தனித்து போட்டியிட்டு ராகுல் காந்திக்கு நெருக்கடியைக் கொடுப்பதாக அரசியல் மட்டத்தில் பேசப்படுகிறது. நீங்கள் உள்ளூர்காரர் ராகுல் காந்தி வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர் என்று சொல்ல வருகிறீர்களா? என்று ஆனி ராஜாவிடம் கேட்டபோது. அப்படி எல்லாம் நான் சொல்லவில்லை இந்தியாவில் எந்தத் தொகுதியில் யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம். நான் வயநாட்டைச் சேர்ந்தவள். எனது சகோதர, சகோதரிகள் கேரளத்தில் தான் உள்ளனர். வயநாடு எனக்குப் புதிய இடமல்ல. கேரள மாநிலத்தில் மகளிர் அணியின் மாநில உதவிச் செயலாளராகப் பணியாற்றும் போது கேரளத்தின் வட மாவட்டங்களுக்கு நான் பொறுப்பாளராக இருந்தேன். ஆகவே வயநாடு எனக்கு வீடு மாதிரி என்று தெரிவித்திருக்கிறார்.

ராகுல் காந்தி மீண்டும் வயநாட்டிலேயே போட்டியிட்டால் வெற்றி பெறுவாரா? என்ற கேள்வியும் எழுகிறது. இந்தியா கூட்டணியில் பல குழப்பங்கள் நீடித்து வரும் நிலையில், இது போன்ற அரசியல் நகர்வுகளால் இந்தியா கூட்டணி பலம் இழக்கிறதா என்ற என்றும் கூட்டணிக் கட்சியினர் பார்க்கத் தொடங்கியுள்ளனார்

மக்களவைத் தேர்தலில் போட்டியிட குடும்ப அரசியல்வாதிகளுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே மாநிலங்களவை எம்.பி.யாக நாடாளுமன்றத்திற்குள் நுழைய முற்படுகிறார்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி சோனியா காந்தியை மறைமுகமாக தாக்கியுள்ளார். காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி ராஜஸ்தானில் இருந்து மாநிலங்களவை எம்.பி.யாக போட்டியின்றி அண்மையில் தேர்வான



நிலையில் பிரதமர் இந்த விமர்சனத்தை முன்வைத்திருக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களில் பிரதமர் பயணம் செய்து பொதுக்கூட்டங்களில் பேசும்போது குடும்ப அரசியல் செய்யும் கட்சிகள், ஊழல் கட்சிகள் எல்லாம் ஒன்று கூடி தேர்தலில் நின்று மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள், என்று இந்தியா கூட்டணியை தொடர்ந்து விமர்சித்து வருகிறார்.

அண்மையில் மேற்கு வங்கத்தில் பொதுக் கூட்டத்தில் பேசும்போது அடக்குமுறை, வாரிசு அரசியல் நம்பிக்கைத் துரோகம், ஆகியவற்றின் அர்த்தமாக திரிணாமுல் காங்கிரஸ் மாறியுள்ளது. அரசுத் திட்டங்களை ஊழலாக மாற்றுவதில் அக்கட்சி நிபுணத்துவம் பெற்றுவிட்டது. மேற்குவங்க அரசு செயல்படும் விதத்தால் மாநில மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பெரும் எதிர்பார்ப்புகளுடன் அக்கட்சிக்கு மக்கள் தொடர்ந்து ஆட்சி அதிகாரம் வழங்கினர். ஆனால் ஊழல் மற்றும் பாரபட்சத்துக்கே திரிணமுல் அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. வளர்ச்சியைப் புறக்கணித்து விட்டது. திரிணமுல் காங்கிரஸ் கட்சியால் மேற்கு வங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது என்று விமர்சித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கிவரும் நேரத்தில் இந்தியா கூட்டணி நெருக்கடிகளை சந்திக்கத் தொடங்கியுள்ளது என்பதையும் மறுக்க முடியாது. தமிழ்நாட்டிலும் தொகுதிப் பங்கீடு பிரச்சினையால் இந்தியா கூட்டணியில் இருக்கும் தி.மு.க.வை விட்டுஅதிக தொகுதிகளைத் தரத் தயாராக இருக்கும் அ.தி.முக பக்கம் போகலாம் என காங்கிரஸ் நிர்வாகிகள் சிலர் கோரிக்கை எழுப்புவதாகத் தெரிகிறது. ஏனென்றால் தி.மு.க.விடம் அதிகத் தொகுதிகளைக் கேட்கும் காங்கிரஸ் கட்சிக்கு தி.மு.க இன்னு பதில் தராமல் இருப்பதும் கூட்டணி பிரச்சினை இழுபறியில் இருப்பதும் காங்கிரஸ் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துவிடுமோ என்ற பரபரப்பும் இங்கே நிலவுகிறது. ஆனால் உயர் மட்டத்தில் ராகுல் காந்தியும் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலினும் நெருக்கமான நட்போடு இருப்பதால் தமிழ்நாட்டில் கூட்டணியில் மாற்றம் வர வாய்ப்பு இல்லை. என்றே தெரிகிறது.

பிராமர் நரேந்திர மோடி, இந்தியா கூட்டணி மீது பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தாலும். கடந்த பந்தாண்டுகளாக இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் பா.ஜக. தலைமையிலான அரசு கொடுத்து வாங்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் தனது எக்ஸ் தளத்தில் சில குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வில்லை. அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியும் உற்பத்தி துறையை மேம்படுத்த செலவிடவில்லை.

(தொடரும்)




## மணக்காத பூக்கள்...

வேண்டும் என்றேதும் செய்யவில்லை
வேண்டாம் எனத் தவிர்த்தாலும்
வேகமாய் முட்டி மோதி வருகிறது

தேகத்திற்கு ஒவ்வாத உணர்வுகள்
புரியவில்லை முதலில்
தெரியவில்லை என்னை யாரென்று

பாவாடை அணிய
ஆசைப்பட்ட என்னை
மேலாடை இன்றி வேட்டியுடன்

அனுப்பினர் கோவிலுக்குள்
இறைஞ்சித் தொழ
வேண்டிய கரங்களோ

விரைந்து சென்று மெய்
மறைத்துக் கொண்டன என்னை
கை எடுத்துக் கும்பிடென

கண்டித்தாள் அன்னை

காரணம் பல தேடி தவிர்த்துக்
கொண்டேன்
ஆலயம் செல்வதை

யாரிடம் சென்று
சொல்வேன் – என்
தாயிடமே தயங்குவதை

இயற்கையே என்னை

ஏன் இப்படி
செயற்கை என பிறர் எண்ண

பாவம் என்ன செய்தேனோ ...
பரம் பொருளே பதில் கூறு
கனக்குதம்மா எந்தன் மனம் ...
மணக்காத பூக்கள் நாம். ..

**காரை கீதாலெட்சுமி**

## இனிய வருகை



உன்னோடிருந்த பள்ளிக்காலம்!
இனிய வசந்த காலம்!
நெஞ்சம் தனில் இனிக்கும்......
நினைவை தந்த உன் சிரிப்பு!
ஏன்?நீ அழுதவுடன்.....
மனதில் வலியை தருகிறதோ!
எரி கனலாய் கொதிக்கும்....
நெஞ்சம் தனில்....
நீங்கா இடம் பிடித்தாய்!
வந்தாய்! வாழ்ந்தாய்!
கல்லூரி கடந்தும்....
வாழ்க்கையின் எல்லை வரை.....
உன் தோழியாய் தொடர!
வல்லவனை வேண்டுகிறேன்!

**கவிக்குரல் யசரத் யசார்**
புத்தளம்

## ஊர் போற்றிட

சரித்திரம் படைத்து சாதனை புரிவான்
தரித்திரம் தடுத்திடுவான்
நரித்தனம் வருவதை அழித்திடுவான்
சரித்திரம் சீர் பெற்றிட வாழ்ந்திடுவான்

வந்தது போனதை மறந்திடுவான்
வாழ்ந்ததை நினைத்து மறந்திடுவான்
பந்த பாசத்தை நினைத்திடுவான்
வந்தே மாதரம் பாடிடுவான்

மண்ணை உழுது வாழ்ந்திடுவான்
உண்மை பேசி உயர்ந்திடுவான்
கண்ணைக் காப்பதுபோல் காத்திடுவான்
திண்ணம் திழைத்து திகைத்திடுவான்

வெற்றி வேங்கையாக வென்றிடுவான்
ஊற்றிய உணர்வை உயர்த்திடுவான்
தேற்றிய மனதில் தெளிவடைவான்
மாற்றிய எண்ணத்தில் வாழ்ந்திடுவான்

அடிமை விலங்கை உடைத்திடுவான்
கடின காரியத்தை விட்டிடுவான்
தேடிய செல்வத்தை அடைந்திடுவான்
பாடிய பாடலை மீட்டிடுவான்

தடை தாண்டி விளையாடிடுவான்
மடை திறந்த வெள்ளம் தடுத்திடுவான்
நடை போட்டு நடந்திடுவான்
பாடை கட்டிப் பாடி பயணமாவான்

உண்மை சொல்லி உயர்ந்திடுவான்
நன்மை செய்தோருக்கு நன்றியுரைப்பான்
வெண்மை வெளிச்சம் வென்றிடுவான்
கண்ணிமை போல் காத்திடுவான்

சீரோடு சிறப்புக்களில் சிறந்திடுவான்
பாரோடு புகழை பாடிடுவான்
பேரோடு எண்ணத்தை போக்கிடுவான்
ஊரோடு உண்மையை உயர்த்திடுவான்

**உடப்பூர் வீரசொக்கன்**





## விடியலைத் தா ரமழானே..!

இறைநேசக் கவி
அல்லாமா இக்பால்
உவமித்த
இரு முனையும் கூரான
இளம் பிறை

இளசுகள் ஆரவாரித்திட
அகமது குளிர்ந்திட
அந்தி வானில் அழகாய் தோன்றியது
ரமழானின் தலைப் பிறையாய்

விடியலைப் பெறுவதற்காய்
விழித்திருந்தே அமல் செய்து
இரு விழி ஓரங்களில்
ஈரம் கசிந்திட
ஆவலோடு ஆசையாய்
காத்திருந்தோம்
கண்ணியம் மிகு ரமழானே

உலக மாயைகளில் உந்தப்பட்டு
மனோ இச்சைகளுக்கு வழிபட்டு
வாழ்வு இழந்து தவிக்கின்றோம்
வல்லோனின் மகிமை மிகு ரமழானே

முழுமதியாம் நபி (ஸல்)
கைற உம்மத்தாய் நாம்
விட்டில் பூச்சிகளாய்
வீணில் அழிகின்றோம்
விரக்தியில் வாடுகின்றோம்

அராஜகத்தின் உச்சியில்
அவலங்களின் மத்தியில்
ஈமானிய சொந்தங்கள்
இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு
இல்லாது ஒழிக்கப்படுகின்றனர்

பண பலம் படை பலம் பலவிருந்தும்
பலன்கள் ஏதும் இல்லை
லாயங்களில் ஆழ்ந்த நித்திரையில்
அரேபியக் குதிரைகள்

நீண்ட வரிசையில்
நிராயுதபாணிகளாய்
நெஞ்சுறுதியோடு
சுவனப் பயணத்திற்காய்

காத்திருக்கும்
சாம் தேசத்து மைந்தர்கள்

வானில் நாளும்
வலம் வரும்
பத்றுடைய மலக்குள்
படையணி கொண்டு
பாலஸ்தீன் விசுவாசிகளை
பாதுகாத்திட யாசிக்கின்றோம்
யா ரமழானே

கரங்களைப் பலப்படுத்தி
கால்களை ஸ்திரப்படுத்தி
வெற்றியை அளித்திடச் செய்
யா! ரமழானே

கண்சிமிட்டும்
வானகத்து தாரகையாய்
நாளும் மாறும்
வையகத்து தாரகைகளாம்
பலஸ்தீனத்தின்
பால்மணம் மாறாப் பாலகர்கள்

மேன்மைக்கு உரிய ரமழானே
உள்ளம் உருகியதாய்
உனதான பொருட்டால்
மறையோனிடத்தில்
மன்றாடுகின்றோம்

ஆதரவற்ற அநாதைகளாய்
தவிக்கும் இந்த
பாலஸ்தீன அப்பாவிகள் மீது
உனதருளைச் சொரிந்திடு
யா ரமழானே

பாலஸ்தீன தியாகிகளுக்கு
விரைவாய் விடியலைத் தந்திடு
யா ! ரமழானே

சுதந்திர காற்றை
சுவாசித்திடும் பாக்கியத்தை
வெகு சீக்கிரத்தில் தந்திடு
யா ! ரமழானே

**கலாபூசணம்**
**டிவாங்ஸோ மலாய்க்கவி**

## காதலைத் தந்துவிடு

கண்ணெதிரே தோன்றி என்
கல்பினிலே ஊன்றி
எண்ணங்களில் வண்ணங்களை
எடுத்தோத வைத்தவளே

சலனங்கள் எனக்குள்
சங்மித்தே படர்ந்திட
மெளனங்கள் எனக்குள்
மடைதிறந்தே போகிறது

காதல் வயப்பட்டே நானும்
கானங்களை இசைக்கிறேன்
களிப்புகளை
உணர்ந்தே நாளும் மன
செழிப்புகளை ரசிக்கிறேன்

வாழ்க்கையின் வேட்கைகள்

வாகையாய் தெரிந்திட உன்
வருகையைத் தினமுமாய்
வரவேற்க பார்த்திருக்கிறேன்

உன்னோடு என் வாழ்க்கை
உரிமையாய் இணைந்திட்டால்
கண்ணோடு வைத்தே உனை
காலமெல்லாம் காத்திடுவேன்

உள்ளத் துடிப்பின் ரீங்காரம்
உன் பெயராய் ஒலிக்கிறது
மெல்லத் திறந்திடு உன் மனதை
மேன்மையாகிடும்
நம் வாழ்க்கை

இதயத்தில் இறுக்கமாய்
இரண்டறக் கலந்தவளே
உதயத்தில் உலாவிட
உண்மையாய் வந்துவிடு



அன்பே....
களங்கமில்லா
என் உள்ளம்
கவலையின்றி
ஒளிர்ந்திட
கனிவாய் மொழி பேசி
காதலைத் தந்துவிடு!

**உசனார் எம்.பஷீர்,**
ஏறாவூர்

## மாண்புமிகு நோன்பே வருக வருக



மாண்புமிகு நோன்பே
வருக வருக
மானிடம் செழித்திட
நன்மைகளைத் தருக
மாற்றம் காணவே
மனங்களில் நிறைக
மாசில்லா வாழ்வை
பாரினில் வரைக

ஐக்கியம் பெருகிட
நோன்பே வருக
ஐவேளைத் தொழுதிட(ப்)
பயிற்சியைத் தருக
ஐந்து கடமைகளில்
நோன்பும் ஒன்றே
ஐயம் களைதலே
நன்மைக்குச் சான்றே

இறைவனின் கட்டளையை
எடுத்தே வெல்வோம்
இன்பம் காணவே
சொர்க்கம் செல்வோம்
இல்லாதோரும் வாழவே
வாரி வழங்கிடுவோம்
இன்னல் நிலையில்லையென
நாமும் விளங்கிடுவோம்

அயலவரை மதித்தே
நாளும் வாழ்ந்திடுவோம்

அண்ணலாரின் வாழ்வை(ப்)
பின்பற்றியே உயர்ந்திடுவோம்
அனைவரும் சமமென
அகிலத்தை அணைத்திடுவோம்
அன்பைப் பகிர்ந்தே
புன்னகையில்
இணைந்திடுவோம்

வானை நோக்கியே
கைகளை உயர்த்துவோம்
வாசம் நிறைந்த
வாழ்வில் உயர்வோம்
வாடிவதங்கியே நன்மைக்கு
உரியவராய் மாறுவோம்
வாழ்வும் நிலையில்லையென
உணர்ந்தே தேறுவோம்

ஏழைகளின் வரியை
மறவாது கொடுப்போம்
ஏணியாய் மாறியே
அவர்களை உயர்த்துவோம்
ஏகனின் அச்சத்தால்
நாமும் வாழ்வோம்
ஏற்றம் பெற்றே
மறுமையில் வெல்வோம்..!

**ஏரூர் கவிமாமணி**
**எம்.ரி.எம்.அன்ஸார்.**
ஏறாவூர்

## மீண்டெழு மனமே!

மறதி வந்தள்ளிச் செல்ல
மலையளவு ஞாபகங்கள்
மனதிலே மண்டியிட்டிருக்க

மீண்டெழ முடியாது
முண்டியடித்துக் கொண்டு
மலர்கின்றன புதிதாய் பல
மனங்கொள்ளும் நினைவுகள்

மாண்டு போனாலும்
ஒரு கணம்
மல்லுக்கட்டியவற்றை
முறியடித்து முன்செல்ல
மன்றாடிடும் மறுகணம்

முறிவுகளும்
மனச்சரிவுகளுமில்லாது
முதிர்வேதிந்த மண்ணிலே!

**பாத்திமா சில்மியா**
மாவனல்லை

## இடமாற்றம்

இடமாற்றங்கள்
தவிர்க்க முடியாதவை
எதிர் பார்த்திடா கணங்களிடை
அது நிகழ்ந்து விடுகின்றன

சில இடமாற்றங்கள்
இயற்கையானவை
சில இடமாற்றங்கள்
செயற்கையானவை

மனிதர்களால் நிகழ்த்தப்படும்

இடமாற்றங்கள்
எப்போதும் தற்காலிகமானது
அதற்காக கைசேதப்படுவதில்
எந்த அர்த்தங்களுமில்லை

ஆனால் காலத்தால்

நிகழ்த்தப்படும்
இடமாற்றங்கள் நிரந்தரமானது
ஒரு முறை மாறிச் சொன்றால்
மறுபடி திரும்பி வரவே முடியாது

எல்லோரும் நிரந்தரமான
இடமாற்றத்திற்கான ஓலையை
ஏந்தியபடிதான் திரிகிறோம்

அது எப்போது நிகழுமென்று

சரியாக தெரியாததனால்
வாழ்ந்து தொலைக்கிறோம்

ஒரு தற்காலிக இடமாற்றம்
ரத்துச் செய்யப்படுகையில்
இன்னுமொரு நிரந்தர இடமாற்றம்
எங்கோ ஒரு மூலையில்
நிகழ்ந்து கொண்டுதானிருக்கும்

**ஜமீல்**

## பெண்கள் நாட்டின் கண்கள்

மானம் காத்த மாதரசிகள்...
வீட்டிற்காகவும் நாட்டிற்காகவும்
உன்னத சேவை செய்யும்
உயர்ந்தவர்கள் பெண்கள்...

தாயாக தாரமாக தாதியாக
சமூகத்திற்காக விழிப்போடும்
தன்னலம் பாராத
பறந்து விரிந்த தாராளமானதோடு
அரிய சேவை செய்யும்
பெண்கள் நாட்டின் கண்கள்...

பெண்கள் அடக்கப்பட்டவர்களாகவும்....
ஒடுக்கப்பட்டவர்களாகவும்....
உள்ளக் குமுறல்களையும்
வேதனைகளையும்
மெல்லவும் முடியாமல்
சொல்லவும் முடியாமல்
பல சுமைகளை தாங்கியவர்களாக.....

பெண்களின் தேவையே சேவை தான்...
ஊதியம் இல்லா சேவைகள்...

பரந்து விரிந்த மனதோடு
குடும்பத்திற்காக ஓயாத
அலைகள் போல
தாயாகச் சேவை செய்யும் பெண்கள்...
மதிக்கப்படவேண்டியவர்கள்!

உடலாலும் உடையாலும்
அலங்கரிக்கப்பட்டு
அநாகரீக அசையும் பொம்மைகளாக
வீதி உலா வருவதல்ல பெண் சுதந்திரம்!
தன் உரிமைகளை விட்டுக் கொடுக்காது..
தட்டிக் கொடுத்து அன்பாலும் பணிவாலும்
சாதிப்பதே வீரம்!

பொய் களவு கொலை கொள்ளை
சூது வஞ்சனை மது மாது ஏமாற்றம்....
இந்த பட்டியலிலிருந்து
பிரித்தெடுத்து படித்தெடுத்து
வருங்கால சந்ததிகளை உருவாக்குவதே
பெண்களின் உயரிய சாதனை!!

தன்னந்தனியாக

குடும்ப பாரத்தை சுமக்கும்
சுமைதாங்கிகள் மீது
கட்டவிழ்த்து விடப்படும்
கறுப்புப் புள்ளிகள்
வெறுப்புப் புள்ளிகளாக...
வேதனை கீறல்களாக...
காயப்படுகின்ற போது
நோய்ப்படும் ஊமைகள் எத்தனையோ....

வியர்வை சிந்தி இரத்தம் சிந்தி
சம்பாதிக்கும் ஊதியங்களின் சுரண்டல்கள்...
கூலியை பெறுவதில் எதிர்கொள்ளும்
மிரட்டல்கள்...
இல்லத்து வன்முறைகள்...
பாலியல் துன்புறுத்தல்கள்...!

உடலாலும் உள்ளத்தாலும்
நாகரிகமாகவும் அநாகரிகமாகவும்
நகைச்சுவையாகவும் துன்புறுத்தும்
செயற்பாடுகள்...
இவற்றை கண்டும் காணாமலும்
கண்களுக்குள்ளே...



கண்களுக்கு வெளியே...
முற்றுப்பெறாத முடிவுரையாக....

பதாகைகள் ஏந்துவதும்
பகல் விளக்கு எரிவதும்
கூட்டங்கள் கூடுவதும்
கூச்சலிட்டு பேசுவதும்
ஊடகங்களில் உலா வருவதும்
உப்பில்லா உணவு போல்தான்....

அகதியாய் அநாதையாய்
உள்ளக்கிடக்கையை
வெளியே சொல்ல
முடியாமல் தவிக்கும்
ஊமைக்கிளிகள்தான் எத்தனை....??
விடியாத இரவுகளாக.....

**மாஜிதா தவ்பீக்**
மருதமுனை

### இலங்கையில் முதற் தடவையாக

# மின்சார முச்சக்கர வண்டிகளை முழுமையாகத் தயாரிக்கும் தொழிற்சாலை!



இலங்கையில் முதற் தடவையாக மின்சார முச்சக்கர வண்டிகளைத் தயாரிக்கும் அனைத்து வசதிகளையும் கொண்ட தொழிற்சாலை மருதானை புகையிரத திணைக்களத்தின் பொருட்கள் களஞ்சியசாலை வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

வேகா இன்ஜீனியரிங் நிறுவனத்தினால் மருதாரனை புகையிரத பொருட்கள் களஞ்சியசாலை தொகுதி வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மின்சார முச்சக்கர வண்டிகளைத் தயாரிக்கும் மற்றும் முச்சக்கர வண்டிகளை மின்சாரத்திற்கு மாற்றும் தொழிற்சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன வின் தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

முழுமையாகவே இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வேகா



நிறுவனத்தின் ELEKTRATEQ முச்சக்கர வண்டியின் முழுமையான உற்பத்திச் செயற்பாடுகள் இந்த தொழிற்சாலையினுள் மேற்கொள்ளப்படுகின்றன.




அதிநவீன தொழிற்நுட்பத்தின் கீழ் தானியங்கி முறையில் செயற்படும் தகடு வெட்டுதல், வளைத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், பெட்டரி உற்பத்தி இயந்திரங்கள் உள்ளிட்ட பல தொழில்நுட்ப கருவிகளை இந்த தொழிற்சாலை கொண்டமைந்துள்ளது.

அத்துடன், தற்போது பெற்றோல் மூலம் இயங்கும் முச்சக்கர வண்டியினை இரண்டு மணி நேரத்திற்குள் முழுமையாகவே மின்சாரத்திற்கு மாற்றிக் கொடுப்பதற்குத் தேவையான முழுமையான வசதிகளையும் இந்த தொழிற்சாலை கொண்டுள்ளது.

தற்போது தனியார் நிதி நிறுவனத்துடன் ஒன்றிணைந்து ஒரு மாதத்திற்குள் 100 முச்சக்கர வண்டிகளை மின்சாரத்திற்கு மாற்றும் வேலைத் திட்டம் இந்த தொழிற்சாலையினுள் இடம்பெற்று வருகின்றது.

வருங்காலத்தில் மாகும்புர பல நோக்கு போக்குவரத்து மையத்தினை அண்மித்ததாக பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளை மின்சாரத்திற்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இதன் போது அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை மேலும் விரிவுபடுத்தியதன் மூலம், இந்த தொழிற்சாலை வளாகத்தின் உள்ளேயே மின்சாரத்திற்கு மாற்றப்பட்ட முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வது உள்ளிட்ட ஏனைய சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரை அந்த இடத்தில் பணியாற்ற நியமிக்குமாறு அமைச்சரினால் மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அதேபோன்று வரும் காலங்களில் இலங்கை முழுவதிலும் உள்ள மின்சார முச்சக்கரவண்டிகளை அடையாளம் காண்பதற்காக இலக்கத் தகட்டில் விசேட நிறமொன்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும், அனைத்து மின்சார முச்சக்கர வண்டிகளும் சுற்றுச் சூழலுக்கு உகந்தது என்பதைக் குறிக்கும் வகையில் ஒரே நிறத்தினைக் கொண்டதாக இருக்கும் வகையிலும் நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க, வேகா இன்ஜீனியரிங் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஹசர் சுபசிங்க, புகையிரத பொது முகாமையாளர் எச். எம். கே. டப்ளிவ். பண்டார, மோட்டார் வாகன ஆணையாளர் நிசாந்த அனுருத்த வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

எம். எஸ். முஸப்பிர்



# கனடாவின் ஒட்டாவாவில் 6 இலங்கையர் கோரக் கொலை!

## 19 வயதான இலங்கை இளைஞர் சந்தேகத்தில் கைது

கனடா தலைநகர் ஒட்டாவா பகுதியிலுள்ள வீடொன்றில் நான்கு சிறார்கள் உள்ளிட்ட 6 இலங்கையர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் கடந்த வியாழனன்று இடம்பெற்றுள்ளதாக ஒட்டாவா பொலிஸார் தெரிவிக்கின்றனர். கனடாவிற்கு புதிதாக வருகை தந்த குடும்பமொன்றின் உறுப்பினர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர்களில் மூன்று மாதங்களுக்கும் குறைவான வயதை கொண்ட சிசுவொன்றும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த குடும்பத்துடன் வசித்த வந்ததாக கூறப்படும் 19 வயதான இளைஞன் ஒருவனே இந்த கொலையை செய்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

''இது முழுமையாக அப்பாவி மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட அர்த்தமற்ற வன்முறைச் செயல்" என ஒட்டாவாவின் உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.ஒட்டாவா புறநகர் பகுதியான பார்ஹேவன் பகுதியிலிருந்து அந்த நாட்டு நேரப்படி வியாழக்கிழமை இரவு 22:52க்கு அவசர அழைப்பொன்று பொலிஸாருக்கு கிடைத்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சந்தேக நபரை விரைவாக கைது செய்துள்ளதாக ஒட்டாவா பொலிஸ் தலைமை அதிகாரியான எரிக் ஸ்டப்ஸ் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, வீட்டிற்குள் சென்ற அதிகாரிகள் கொல்லப்பட்டவர்களை அடையாளம் கண்டு கொண்டுள்ளனர். உயிரிழந்த நிலையில், தாய், நான்கு குழந்தைகள் மற்றும் அந்த குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பை பேணிய நபர் ஆகியோரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தில் படுகாயமடைந்த தந்தை, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். 35 வயதான தர்ஷினி திலந்திகா ஏக்கநாயக்க, அவரது 7 வயதான குழந்தை இனுக்கா விக்ரமசிங்க, 4 வயதான அஸ்வினி விக்ரமசிங்க, 2 வயதான ரியானா விக்ரமசிங்க மற்றும் 2 மாத குழந்தை கேலி விக்ரமசிங்க ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இந்த குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பை பேணி வந்த 40 வயதான காமினி அமரகோன் என்ற நபரும் இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் 19 வயதான மாணவர் பெப்ரியோ டி சொய்சா என பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேகநபர் மீது 6 கொலை குற்றச்சாட்டுக்கள் மற்றும் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூரிய ஆயுதத்தை பயன்படுத்தி இந்த கொலைகள் நடாத்தப்பட்டுள்ளதாக தலைமை பொலிஸ் அதிகாரி ஸ்டப்ஸ் கூறுகின்றார்.

கனேடிய பொலிஸ் அதிகாரிகளின் கூற்றுப்படி, டிசொய்சா பாதிக்கப்பட்டவர்களுடன் சிறிது காலமாக வாழ்ந்து வந்தார், அதே நேரத்தில் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு அவரது 19 ஆவது பிறந்தநாளையும் கொண்டாடினர்.

சந்தேகநபர் முன் குற்றப் பதிவுகள் ஏதும் இல்லாதவர், குடும்பத்துக்கும் டி சொய்சாவுக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த இளைஞன் சமீபத்தில் ஒட்டாவாவில் தனது கல்வியைத் தொடர அவர்களின் வீட்டின் அடித்தளத்திற்குச் குடிபெயர்ந்திருந்தான், பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையில் இருந்தபோது குற்றம் சாட்டப்பட்டவரது பெற்றோரையும் சந்தித்தனர்.

எவ்வாறாயினும், டி சொய்சா பாடசாலையில் பிரச்சினைகளை எதிர் நோக்கி வருவதாகவும் அண்மையில் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் அவரது நண்பர் தெரிவித்ததாக பௌத்த மதகுரு தெரிவித்தார்.

ஒட்டாவாவில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற மிகவும் கொடூரமான கொலைச் சம்பவமாக இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

''உண்மையில் சோகமான சம்பவம். இது நாட்டின் தலைநகரில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்" எனவும் அவர் கூறியுள்ளார். "இப்பகுதியினர் மீதும் இந்த சம்பவம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். சம்பவம் நடந்த இடத்திலிருந்து இப்பகுதியினர் விலகியிருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது." என்றும் தெரிவித்தார். இந்த சம்பவமானது முதலில் துப்பாக்கி சூடு என கூறப்பட்ட போதிலும், பின்னர் அது கூரிய ஆயுதத்தால் நடத்தப்பட்ட கொலை என கண்டறியப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்த சம்பவத்தைக் "கொடூரமான வன்முறை" என்று குறிப்பிட்ட கனட பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது அதிர்ச்சியை வெளிப்படுத்தினார். ஒட்டாவா நகரின் மேயர் மார்க் சட்க்லிஃப் "நகரின் வரலாற்றில் நிகழ்ந்த மிக அதிர்ச்சிகரமான வன்முறை சம்பவம்" என்று தெரிவித்தார். "பாதுகாப்பான சமூகத்தில் வாழ்வது குறித்து பெருமை கொள்கிறேன். ஆனால் இந்த சம்பவம் ஒட்டாவா நகர மக்களுக்கு பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது." என்று X தளத்தில் பதிவிட்டிருந்தார்.

"இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளித்து, விசாரணையை நடத்தி வரும் அவசர கால ஊழியர்களுக்கு நன்றி" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அதேவேளை கல்விக்காக கனடா வரும் இளைஞர்களின் உள ஆரோக்கியத்தில் அவர்களது பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.



சார்ஜா வர்த்தகம் மற்றும் தொழில்சபையின் தலைவர் அப்துல்லா சுல்தான் அல் ஒவைஸ் உடன் அமீரகத்துக்கான இலங்கை நாட்டின் துணைத் தூதர் அலெக்சி பொன்சேகா குணசேகரா சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போது இரு தரப்பு உறவு, வர்த்தகத்துறையில் ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேசப்பட்டது.



# வாழ்நாள் சாதனையாளர் விருதுபெறும் மூத்த எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன்..!

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த படைப்பாளிகளைக் கௌரவித்து ஊக்குவிக்கும் பொருட்டு கடந்த பல வருடங்களாக 'இரா. உதயணன் விருதுகளை" வழங்கி வருகின்றனது. கொரோனாப் பரவல் காரணமாக 2020, 2021, 2022 ஆண்டுகளுக்குரிய விருது வழங்கல் அறிவிக்கப்படாமலிருந்தது. தற்போது அந்த ஆண்டுகளுக்குரிய விருதுகள் யாவும் அறிவிக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டுக்குரிய"வாழ்நாள் சாதனையாளர் விருது"க்கு மூத்த எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 2021ஆம் ஆண்டுக்கான "வாழ்நாள் சாதனையாளர் விருது" மூத்த எழுத்தாளர் மலரன்னைக்கும் 2022 ஆம் ஆண்டுக்கான விருது மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரனுக்கும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விருது வழங்கும் விழா குறித்த விபரம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. மூத்த எழுத்தாளர் இளங்கோவன் சிறுகதை, கட்டுரை, கவிதை, மருத்துவம் ஆகிய துறைகளில் 21 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் 14 நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

கல்லூரிக் காலம் முதல் சுமார் 36 வருடங்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஊடகவியலாளராகவும் பணியாற்றியுள்ளார். வடக்குக் கிழக்கு மாகாண சபையில் தகவல் வெளியீட்டுத் திணைக்களம், திட்டமிடல் அமைச்சு

ஆளணிப் பயிற்சித் திணைக்களம் ஆகியவற்றில் பதிப்பாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கை, இந்தியா, கனடா, ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற இலக்கியக் கருத்தரங்குகள், மாநாடுகள் பலவற்றில் இவர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியுள்ளார். இவரது சிறுகதைத் தொகுதியின் ஹிந்தி மொழிபெயர்ப்பு புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் (2012) சிறப்பாக வெளியிடப்பட்டு பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்தொகுதியின் ஆங்கில மொழிபெயர்ப்பு சென்னையில் (2014) இல் வெளியிடப்பட்டது. எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர், விமர்சகர், ஊடகவியலாளர் நடிகர் எனப் பல்துறை ஆளுமை மிக்க, 'இளந்தலைமுறைப் பல்கலை வேந்தன்" என அன்று பாராட்டுப்பெற்ற இளங்கோவன் இலக்கிய சமூகப் பணிகளுக்காகப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். ஐ. நா. தொண்டராக பிலிப்பைன்ஸ் நாட்டில் (1983 – 1984) மூலிகை மருத்துவ சமூக அபிவிருத்திப் பணியாற்றி, மேற்கு மின்டனாவோ மாநில சுயாட்சி அரசின் 'முதல்வர் விருது" உட்பட பல அமைச்சுகளின் விருதுகளையும் பெற்றவர்.

அசலை

### ஏல விற்பனையில்

# அதிகூடிய விலையைப் பதிவு செய்த பிட்டிகல அத்துகோரள தேயிலை



சர்வதேச தேயிலை சந்தைக்கு எப்போதும் மிகவும் உயர் தரத்தில் தயாரிக்கப்பட்ட தேயிலையினை அனுப்பும் பிட்டிகல அத்துகோரள கூட்டு நிறுவனத்திற்குச் சொந்தமான அத்துகோரள தேயிலை தொழிற்சாலை 2024 மார்ச் 06ஆம் திகதி இடம்பெற்ற தேயிலை ஏல விற்பனையில் அத்துகோரள குறூப் சுப்பர் விற்பனை நாமத்தின் கீழான FBOPFEXSP ஒரு கிலோ தேயிலைக்கான அதிகூடிய விலையான (TOP PRICE) 5,950 ரூபாவினைப் பெற்றுக் கொண்டது.

லங்கா கொமொடிட் ப்ரோக்கர்ஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏல விற்பனையில் இத் தேயிலை UNI WORLD TEAS (PVT) LTD என்ற நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.


ISO 22000:2018 / HACCP என்ற சர்வதேச தரச் சான்றிதழுக்கு அமைவாக முன்னெடுத்துச் செல்லப்படும் இந்த தேயிலைத் தொழிற்சாலையானது சிறப்பான விருதுகள் பலவற்றைப் பெற்றுக் கொண்டு சிலோன் டீ என்ற நாமத்தை உலகம் முழுவதும் பிரபலப்படுத்துவதற்கு அதிகூடிய முயற்சியை எடுத்த ஒரு நிறுவனமாகும்.

ஓர்கானிக் தேயிலை (Organic Tea) எண்ணக்கருவிற்கு முதலிடத்தை வழங்கி அத்துகோரள தேயிலை, பிட்டிகல தேயிலை உள்ளிட்ட பல்வேறு வகையான தேயிலைகளை விலைக்கு வாங்குவதை தொழிற்சாலையின் www.athukoralagroup.com என்ற இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும்.

அத்துடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தேயிலையை சுவை பார்த்து சுதந்திரமாக விடுமுறையினைக் கழிப்பதற்கும், எமது பல்வேறு வகையான தேயிலைகளை வாங்குவதற்கும் தேயிலை விற்பனை நிலையம் ஒன்றையும், குருந்துவத்த விலா விடுமுறை இல்லத்தையும் நடத்திச் செல்வதாகவும் நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான அனுர அத்துகோரள தெரிவித்தார்.

எம். எஸ். முஸப்பிர்

# குடைகளின் கதை



குடைகளின் கதை அந்த அதிபரின் வாழ்வோடு தொடர்ந்த வண்ணமே உள்ளது. சில விடயங்கள் சிலரோடு தொடர்புள்ளதாக தொடர்ந்த வண்ணமிருக்கும் அவை அவரவரது வாழ்க்கை நடைமுறைகளோடு தொடர்பு பட்டது.

அதிபர் மனோகரன் மாபெரும் பாடசாலையின் அதிபராக மிகச் சமீபத்தில்தான் பதவி உயர்வு பெற்றார். புதிய சூழல், புதிய ஆசிரியர்கள், பெற்றோர் என எல்லாம் மாற்றங்களுக்குள்ளானது.

அப்பாடசாலையின் கணனிக் கட்டடத் திறப்பு விழா, நூலகம், மனையியற் கூடம், சித்திரக் கூடம் போன்றன உள்ளடங்கிய ஒரு அலகின் திறப்பு விழாவை ஒரே தடவையில் செய்ய ஏற்பாடுகள் நடந்தேறி இருந்தன.

மே, ஜூன் மாதங்களில் அப்பிரதேசத்தில் தொடங்கும் மழை, காற்று, குளிர், செப்டெம்பர் வரை தொடரும். குடை இல்லாமல் எவரும் வெளியில் செல்லுதல் இயலாது. ஆசிரியைகள் எப்படியும் கைக்கு அடக்கமான ஒரு சிறு குடையை கொண்டு தமது மேனியை மழையிலிருந்து பாதுகாத்திட முயல்வர். சில பெண் ஆசிரியைகள் மழைக்கோர்ட் அணிந்தும் வருவர். நுவரெலியாவில் இதனை சர்வ சாதாரணமாக காணலாம். ஆண் ஆசிரியர்களுள் சிலர் சிறு குடைகளையும், இன்னும் சிலர் பெரிய குடைகளையும் கொண்டு திரிவர். சிலர் தமது கைகளையே குடைகளாக்கிக் கொள்வர். சிலர் நூல்கள், கொப்பிகளையும் சிறு மழைத்தூறல்களுக்காக 'குடையாக' உபயோகிப்பர்.

இப்பிரிவுகளுக்குள் உள்ளடங்காத கூட்டம் ஒன்றும் உள்ளது. இக்கூட்டம் குடைகளே கொண்டுவருவதில்லை. இக்கூட்டத்தின் உறுப்பினர்கள் பெருமளவில் ஆண் ஆசிரியர்களாகவே திகழ்வர். ஏனெனில் பெண் ஆசிரியர்கள் சிறுகுடைகளையே விரும்புவர் எனலாம். அதிலும் பல் நிறங்களிலான குடைகள் அவர்களுக்குப் பிடிக்கும். ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டம், பாடக்குறிப்பு போன்ற இன்னோரன்ன உள்ளடங்கிய மற்றொரு பேக்கும் அவர்களின் கைகளில் காணப்படும். கைப்பை, கைக்குட்டை, அதனுள்ளே நீர்ப்போத்தல் இதுவே ஆசிரியை என்பதற்கான அடையாளமாகக் காணப்படும் என்பது தேசிய ரீதியாக எல்லாப் பிரதேசங்களிலும் ஏற்கக்கூடியதான ஒன்றாக உள்ளது.

கணனிக் கூடத்திற்கு பொறுப்பான ஜோன் ஆசிரியர், ஆசிரியை மலர் போன்றோர் வெகு சிறப்பாக கணனி அறையை அலங்கரித்திருந்ததுடன், அதிபருடன் தத்தமது குடைகளை பிடித்தவாறு மழைத்தூறல்களுக்கூடாக ஓடியாடி இயங்கிக் கொண்டிருந்தனர்.

இதேபோல பிரபலமான அப்பாடசாலை வளாகம் வாழைமரத் தோரணங்களாலும், தென்னங் குருத்தோலை அலங்கரிப்புகளாலும், மாவிலைகளாலும் ஓர் எழிலூட்டும் அழகோவியமாகி மிளிர்ந்தது. ஆங்கே தமிழர் தம் கலாசார அடையாளங்கள் பிரதிபலித்தன.

அழகான மலர்கள் பற்பல முறைகளில் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந்தூரியம், பாபடன்ஸ், செவ்வந்தி, டேலியா, மெடொனா லில்லி ரோஜா, ஓர்கிட்ஸ் என அவை உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இவற்றுக்கிடையே 'சைப்பிரஸ் மரத் தோரணங்கள் பச்சைப் பசேலெனக் காணப்பட்டன. இந்த அலங்காரங்களுக்கெல்லாம் ஜோன் சேரும், சில்வெஸ்ரா சேரும் உரிமை கொண்டாட வேண்டியவர்கள் எனலாம்.

மழை மேலும் கூடியது. காற்று ஏடா கூடமாக பல பக்கமும் மாறி மாறி வீசத் தொடங்கி இருந்தது. அவை வெள்ளைக் கவுன்களோடு விளையாடின. சில்லுபூட்டித் திரியும் பெண் மாணவிகளின் கவுனை இலக்கு வைத்தன. மாணவர்களின் வெண்ணிற சேர்ட்டையும், காற் சட்டையையும் பதம் பார்க்கத் தவறவில்லை. கரங்களில் பலவண்ண குடைகளோடு மாணவர் கூட்டம் அல்லோலகல்லோலப்பட்டது. கிண்டல்கார இந்தப் பருவப் பெயர்ச்சிக் காற்று இக்காலத்தில் பெண்களின் சேலைகளோடும், குட்டைக் கவுன்களோடும் செல்லமாக விளையாடத் தவறுவதில்லை. இப்பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவிலும் அது தன் லீலையைக் காட்டியது.

பிரதி அதிபர், உப அதிபர்கள் பகுதித் தலைவர்கள் அனைவரும் ஒரே விதமான உடைகளுடன் காட்சி தந்தனர். கழுத்துப் பட்டிகளும் ஒரே நிறத்தில் காணப்பட்டன. ஆனால் அதிபர் மாத்திரம் கோட் அணிந்திருந்ததுடன், கழுத்துப் பட்டியின் நிறத்தையும் வேறு விதமாகக் கொண்டிருந்தார்.

பரபரப்பான இச்சூழ்நிலையில் சிவஜோதி சேர் கைப்பேசியில் வருகை தர இருக்கும் பிரதம அதிதியுடனும், ஏனைய அதிதிகளுடனும் ஏதோ சீரியஷாக பேசிக் கொண்டிருந்தார். இடையிடையே, "யேஸ் யேஸ்" என்பதும் "ஓகே ஓகே" என்பதும் அவரது முகபாவ சுளிப்புகளும் அதிபரின் அவதானத்துக்கு உட்படாமலில்லை.

பிரபல தொழிற்சங்கம் ஒன்றின் தூணாக தன்னைக் காட்டிக் கொள்ளும் குறித்த ஆசிரியர் ஊரே நன்கு அறிந்த ஒருவர். திருவிளையாடலில் "சிவன் எல்லாம் நானே" என்று சிவாஜி (சிவன்) கூறுவது போலவும் சீதையில் கண்ணன் எல்லாம் நானே என்பது போலவும் சிவஜோதி ஆசிரியர் காட்டிக் கொள்வது மாத்திரம் அல்ல அவற்றைச் செயலிலும் காட்டுபவர். சுழியோடுவதில் மாத்திரமல்ல சுழிகளுக்குள்ளும் சுழி போட்டு சுழிக்கக்கூடிய திறன் படைத்தவர்.

"என்னா சேர்?" என அதிபர் சிவஜோதி சேரைப் பார்த்துக் கேட்க, "சரியாக பத்து முப்பத்தைந்துக்கு பிரதம அதிதி மினிஸ்டர் வருவார். சரியாக ஒன்பது முப்பத்தைந்திற்கு மாகாண கல்வி அமைச்சர் வர உள்ளார். முதலில் மாகாண அமைச்சரே வருவார்" என்றார்.

அதிபர், பிரதிஅதிபர், உப அதிபர்கள் இச் செய்தியை கேட்டவுடன் உற்சாகமடைந்தார்கள். அக்கல்லூரியின் அலுவலகத்திலிருந்து தூரத்திலிருக்கும் புதிய கட்டடப் பகுதி, கணனிக் கூட பகுதிகளுக்குத் தத்தமது குடைகளுடன் பரிவாரமாய் புறப்பட்டனர்.

அதிபர் தனது பெரிய கலர் குடையை விரித்துப் பிடித்தவாறு பேண்ட் குழுவினரை ரெடி பண்ணுமாறும் மினிஸ்டர் பத்து முப்பத்தைந்திற்கு சரியாக நமது கோயிலடிக்கு வரும் வேளையில் அங்கிருந்து பேண்ட் மற்றும் எமது கலாசார வாத்தியமான மேள தாளங்களோடும் அழைத்து வர வேண்டும்" என்றும் கூறினார். இவ்வேற்பாடுகளுக்கு பொறுப்பான ஆசிரியை மாலாவை கூப்பிட்டு இவ்விபரங்களை கூறினார்.

"சேர் சின்ன ஒரு மாற்றம் செய்யலாமா? என்றார் ஆசிரியர் சிவஜோதி.

"சொல்லுங்க சொல்லுங்க" என்றார் மாலா டீச்சர்.

"மழை மோசமாக இருப்பதால் நீண்ட தூரம் மழையில் பிள்ளைகளை நனைய விடல் இயலாது. கோயிலடியிலிருந்து மேள தாளத்துடனும், பேண்ட் குழுவை கேட்டடியிலிருந்தும் ஏற்பாடு செய்யலாம் தானே" என்றார் ஏற்பாட்டாளர் சிவஜோதி. அதிபரும் இடையிலே குறுக்கிட்டு,

"அதுதான் சரி பிள்ளைகள் நனைவதை மினிஸ்டர் விரும்ப மாட்டார். அவர் எம்மீது குறைபடுவார்" என்றார் தொடர்ந்து,

"அப்படியானால் ஒரு சில சீனியர் ஆசிரியர், ஆசிரியைகளுடனும், மாணவர்களுடனும் அங்கு செல்லலாம்" என்றார்.

"நீங்கள் எல்லாப் பிள்ளைகளையும் குடைகளுடன் வரச்சொல்லுங்க சில பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களையும் வரச் சொல்லுங்க" என்றார்.

திடீரென கோல் வர அலைபேசியை எடுத்துப் பேசிய ஏற்பாட்டாளர் சிவஜோதி "ஓகே, ஓகே, எல்லாம் ஓகே" என்றவாறு, "சேர் மாகாண அமைச்சர் இன்னும் பத்து நிமிடத்தில் வருகிறார். அவரை கேட்டடியில் அழைத்து வர சீனியர் ஆசிரியர், ஆசிரியைகள் சிரேஷ்ட மாணவர் தலைவர், உட்பட சிலரை ரெடி பண்ணனும் சேர்" என்றார்.

மாகாண அமைச்சர வரவேற்றிட ஆயத்தமானார்கள். இதற்கிடையில் அதிபர் அலுவலகத்திற்கு வெளியில் வைக்கப்பட்டிருந்த சில கைக்குட்டைகளை காணவில்லை என ஓர் ஆசிரியர் சத்தமிடுவதை அவதானித்தார். ஆனால் அதனை அவர் அச்சூழ்நிலையில் கவனத்திற் கொண்டு ஆவன செய்ய இயலாத நிலையிலிருந்தார்.

மாகாண அமைச்சரை வரவேற்க ஆயத்தமாகிச் சென்று அழைத்து வந்தனர். அவர் அதிபரின் அறையின் முன்னிருந்த அதிதிகளுக்கான அல்லது விருந்தினர்களுக்கான அறையில் அமர வைக்கப்பட்டார். அமைச்சர் தனது பாதுகாப்பு உத்தியோகத்தரின் குடையினுள் வந்து சேர்ந்தார். மிக நல்ல நிலையில் இருப்பதை அவரது முகப்புன்னகை புலப்படுத்தியதுடன் மாணவர்களையும் தட்டிக் கொடுத்திருந்தார்.

நேரம் இருபத்து நான்கு மணி நேரத்தில் அதிகாலைப் பொழுது பறந்து செல்வது போல் கடந்து போய்க் கொண்டிருந்தது. மாகாண அமைச்சர் தனது கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்ப்பதும் "லேட்டாகுதே" என்றவாறு "கட்டடங்களைத் திறக்கலாமா" என்பதுமாக இருந்தார்.

மனையியற் கூடம் உள்ளடங்கலான அவ்வலகு அமைச்சராலேயே திறக்கப்பட பெயர்ப்பலகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையை அதிபர் மாகாண அமைச்சரிடம் விளக்கிக் கூறினார். இவ்வுரையாடலை அங்கே கவனித்துக் கொண்டிருந்த சிவஜோதி சேர், மினிஸ்டர் பதினைந்து நிமிடங்களில் வர உள்ளதாக கூறினார். மாகாண அமைச்சரின் சில, பல உடல்மொழியை அவதானித்துக் கொண்டிருந்த ஜோன் சேர், மலர் டீச்சர், பிரதி அதிபர், ஆசிரியர் சிவஜோதி ஆகியோர் திடீரென ஏதோ கூடிக் குசுகுசுத்தனர். ஏற்பாட்டாளர் சிவஜோதி ஏதோ ஒரு விடயம் பற்றிக் கூறுவதையும் அவதானித்த அதிபர் அவ்விடத்திற்கு வந்தார்.

இதன் பின்னர் ஆசிரியர் ஜோனும், மலர் டீச்சரும் கணனிக் கூடத்தை நோக்கி விரைந்தனர். அதிபர் மிக வேகமாக தனது அலுவலகம் நோக்கி ஓட்டமும் நடையுமாய் சென்றார்.

சிறிது நேரத்தில் அதிபர் பிரதி அதிபர், உப அதிபர்கள் சிரேஷ்ட ஆசிரியர்கள் புடைசூழ மாகாண அமைச்சர் கணனிக் கட்டடம் நோக்கி அழைத்துவரப்பட்டார். கணனிக் கட்டட பட்டியை அமைச்சர் வெட்டி உள் செல்ல ஆங்கே கைலாகு கொடுத்து ஜோனாலும், ஆசிரியை மலராலும் வரவேற்கப்பட்டார். கணனிகளை பார்வையிட்ட வேளையில் புகைப்பட பிடிப்பாளர்கள் 'பளிச்', 'பளிச்' என கிளிக் செய்தனர். கணனியில் மாகாண அமைச்சரின் பெயர், பதவிகளுடன் வரவேற்பு வசனங்கள் ஓடிக் கொண்டிருக்க அமைச்சரும் புன்னகைத்துக் கொண்டு,

"எப்படி பிள்ளைகள் படிக்கிறாங்களா? யார் இக்கட்டடத்திற்கு பொறுப்பு?" என வினவ ஜோன் சேர் அதற்குப் பதிலளித்தார். அமைச்சரும் கணனிகளை இயக்கிப் பார்த்தார்.

இவ்வேளையில் உள்ளே வந்த சிரேஷ்ட மாணவர் தலைவர் மினிஸ்ட்டர் வந்து கொண்டிருப்பதாக அதிபரிடம் கூறினான். "Minister in one the way?" என்ற வண்ணம். அதிபர் மாகாண அமைச்சரை அழைத்துக் கொண்டு சென்றார். மழைமேலும் வலுக்கத் தொடங்கியது. மினிஸ்டரை வரவேற்க விரைவாக கோயிலடி சென்றனர். அவ்வேளை அதிபர் தனது குடையை சற்றுக் கவனித்துப் பார்த்தார், திகைப்படைந்தார். அது அவரது குடை அல்ல அவரது குடை போன்ற ஒரு குடை. ஆனால் பெரியது, பழையது சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மகேஸ்வரி டீச்சரைப் பார்த்து,

"டீச்சர் இது எனது குடை இல்லையே" என்றார்.

"சேர் இது பழைய குடை. நீங்க 'டிஸ்டப்' ஆகாதீங்க நீங்க கோயிலுக்கு போங்க, நா கவனிக்கிறேன்" என்றார்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஜீப் வண்டிகள், கார்கள் ஒலி எழுப்பின. அமைச்சர் கோவிலடியில் வந்திறங்கினார். மேள தாளங்கள் முழங்கவும், நாதஸ்வர ஒலி எழுப்பப்படவும், பட்டாசுகள், பட பட் பட்டென பேரிரைச்சல் எழுப்பவும், மாலைகள் அவரின் மேனியைத் தழுவவும் பாடசாலை நோக்கி நடக்கலானார். நல்லவேளை மழை சற்றுவிட்டு தூறலாக தூறிக் கொண்டிருந்தது.

சிரித்த வண்ணமிருந்த மினிஸ்ட்டர், "பிள்ளைகளை நனைய விடாதீர்கள்! என அதிபரை பார்த்து வினயமாக வேண்டிக் கொண்டார். இவ்வேளை இடையில் இணைந்து கொண்ட நகர வர்த்தகர்கள் சிலர் அவருக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். கேட்டடியில் பேண்ட் குழுவினர் அவரை வாத்தியங்களுடன் வரவேற்று அழைத்துச் சென்றனர். "

அதிபர் மண்டபத்திற்குள் நுழையும் வேளையில் மகேஸ்வரி டீச்சரிடம் குடையைக் கொடுத்துவிட்டு சென்றார் "பழைய குடை என்றாலும் கிடைத்த குடையை இழக்க இயலாதே" என அவர் மனதுக்குள் எண்ணிக் கொண்டார்.

வழமையான நிகழ்வுகளுடன் நிகழ்ச்சிகள் நடந்தன. அதிபரின் வரவேற்புரை, பாடசாலை தேவைகள் பற்றி பா.அ.ச. செயலாளரின் உரை, மாணவர்களின் சில கலை நிகழ்வுகள் என அவை ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. இதனிடையே எவ்வித சலசலப்பும் ஏற்படவில்லை. இறுதியில் மனையியல் கூடத்தில் இரு அமைச்சர்களும் அதிதிகளும் தேநீர் விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டனர். எங்குமே எளிதில் விருந்துகளில் கலக்க விரும்பாத அமைச்சர், இப்பாடசாலையில் மாத்திரம் தேநீர் அருந்துவார் என்பது பலரால் சிலாகித்து பேசப்பட்டிருக்கின்றது. மகிழ்ச்சியுடன் காணப்பட்ட இரு அமைச்சர்களும் நல்ல நிலையில் காணப்படுவதற்கான அறிகுறிகளாகும் என சிவஜோதி சேர் கூறி மகிழ்ந்தார்.

இதன் பின்னர் ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பகல் உணவு ஆரம்பமானது. இது ஏலவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றுதான். இதில் பா.அ.சங்க உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர். எல்லோரும் மகிழ்ச்சிகரமாகவும், குதூகலமாகவும் காணப்பட்டனர். அவர்கள் தத்தமது கடமைகளை செம்மையாக நடத்திவிட்டதான ஒரு திருப்தி கொண்டவர்களாக இருந்தனர்.

உணவு முடிய ஆசிரியர்கள் சங்கக் கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. அதிபர் அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்வு பற்றிய குறைபாடுகள் உரையாடல்களில் இடம்பெற்றன. இதனிடையே அதிபர் தனது குடை மாற்றப்பட்டிருந்ததாகக் கூறினார். புதிய குடைகளை எடுத்துக் கொண்டு தமது பழைய குடைகளை விட்டுச் செல்லும் பழக்கம் சிலரிடம் உள்ளதை அவர் கூறினார். கடையில் குறுக்கிட்ட மல்லிகா ஆசிரியை "சேரின் குடை போன்ற ஒரு குடையை ஒருவர் வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்ததாகவும். தான் அதுபற்றி வினவிய போது அது தனது குடை என்றதாகவும் அவர் நகரத்திலிருக்கும் ஒரு வர்த்தகர் என்றும் அது தவறுதலாக நடந்திருக்க வாய்ப்புள்ளது என்றும் கூறுனார். அந்நேரம் சிவஜோதி குடையை வைக்கும் கூடையை உள்ளே வைக்க ஏற்பாடு செய்யுமாறு வேண்டியதாகவும் கூறினார்.


நேரம் ஓடிக் கொண்டிருக்க சில ஆசிரியைகள் வீடு செல்ல ஆயத்தம் செய்வது போல் தத்தமது கைப்பைகளை தூக்கினர். நிலைமையை புரிந்து கொண்ட அதிபர் மீண்டும் அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

ஆசிரியர்கள் புறப்பட்ட வேளை வெளியில் மேகமூட்டம் பாடசாலையையே விழுங்கி இருந்தது. கடுமையான ஒரு குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. மழைக் கோட்டு, தொப்பிகள், ஸ்காஃப், குடைகள் என புறப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் கூட்டம் மன நிறைவுடன் மழைத்தூறலுக்கும் மத்தியில் வீடு புறப்பட்டனர். நாளையும் அவர்கள் இதே காலநிலைக்கு மத்தியில் தமது பயணத்தைத் தொடர்வார்கள்.

– மொழிவரதன்

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி

இல: 112



திரு/திருமதி.செல்வி ..............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................

..............................................

..............................................

திகதி ..................... கையொப்பம் .....................

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
போட்டி இல. 112
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 112

### இடமிருந்து வலம்

1. மக்கள் தொகுதி
4. அமைதியான இயல்புடையவர்
6. வீடு
7. தித்திக்கும் தீன் பண்டம்
8. சூட்டுத் தன்மை, உஷ்ணம்
9. குதிரை(குழம்பியுள்ளது)
10. அறு சுவைகளுள் ஒன்று. இந்த மரத்தின் பழமும் அதே சுவைதான். (திரும்பியுள்ளது)
11. சுவை (திரும்பியுள்ளது)
12. ஆகாயக் கப்பலைச் செலுத்துபவர்.(திரும்பியுள்ளது)
14. பாக்கு மரம்
16. ஒலி எழுப்பாத சிரிப்பு (திரும்பியுள்ளது)
19. ஒரு தமிழ் மாதம் (குழம்பியுள்ளது)
21. கேள்விக்குரிய விடை குழம்பிவிட்டது.
22. ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் அதிகாரத் தோரணை மிகுந்த நடத்தை கொண்டவர் திரும்பிவிட்டார்.
23. பாசமும் நேசமும் கலந்தது.

### மேலிருந்து கீழ்

1. மேடு பள்ளம் இல்லாத நிலப்பகுதி
2. ஒரு பணியைச் செயற்படுத்துவதில் காட்டும் தீவிரம்
3. உடம்பு உருக்குலைந்து விட்டது.
4. நிறைந்த பண்பு
5. துளை
7. நீர்வீழ்ச்சி
11. பல்லக்கு
12. சமையலறை (குழம்பியுள்ளது)
13. விலங்கு இனத்தைச் சேர்ந்தது. இறைச்சிக்காகவும் பயன்படுத்துவர் (தலைகீழ்)
14. நாற்காலி
15. சிப்பிக்குள்ளே காணப்படுவது
17. நீர் (குழம்பியுள்ளது)
18. அறிவுபூர்வமாக புரிந்துகொள்ள முடியாத மர்மம்.
20. முழுமையல்ல, பாதிதான் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 111

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. அவமதிப்பு
7. திகைப்பு
8. வானம்
10. புத்திரன்
11. ஆதி
12. கோதுமை
13. கணை
14. விழிப்பு
16. தப்பு
18. ஒடியல்
19. கால்
20. வளி
21. புவி
22. பசி

**மேலிருந்து கீழ்**

1. அதிதி
2. வகை
3. மதிப்பு
4. புத்தி
5. புனரமைப்பு
6. நாம்
9. வான்கோழி
11. ஆணை
13. கண்
14. புதல்வி
15. வியப்பு
17. வைகாசி
18. ஒளி
19. பல்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 111

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எம்,ஏ.எப். அஸ்கா** | **எப். ஆர். ஏ. ஷக்கூர்** | **எம். ஏ. முஹன்னித்,** |
| இல 41/15 டீ, | 145, குன்னேபான மடிகே, | இல 170 ஏ, ஆர்.டி.எஸ் வீதி, |
| வித்தியாலய வீதி, | மடவள பஸார். | அட்டாளைச் சேனை. |
| பதுளை. | | |

### பாராட்டு பெறுவோர்

1. **ஜீ. துவாரகன்,** பெரியநீலாவணை.
2. **ஏ. புஹாரி,** உக்குவளை.
3. **எஸ். செல்வராஜ்,** கொழும்பு 11.
4. **கே. உதயரட்ணம்,** பாண்டிருப்பு.
5. **பி. ஸ்ரீவர்ஷினி,** யாழ்ப்பாணம்.
6. **எம்.ஏ. நஜிமுத்தீன்,** அக்கறைப்பற்று.
7. **எஸ். சல்பியா,** பாணதுறை.
8. **ஏ.சீ. ஸ்ரீதரன்,** கோப்பாய்.
9. **வேல்நாயகம் ராஜேந்திரன்,** காரைதீவு.
10. **வீ. பாலேந்திரன்,** வெள்ளவத்தை.

# சுதந்திரத்திற்கு பின் காத்தான்குடி கவிதைகளும் கவிஞர்களும்

*கடந்த வாரத் தொடர் ......*

**ஜூனைதீன்.**

*2000 க்குப் பிற்பாடு. முழு உலகையும் திரும்பிப் பார்க்க வைத்த 2k எனப்படும் 2000 ஆண்டுகளுக்கு பிறகும் நிறைய கவிஞர்கள் காத்தான்குடியிலே உருவாகி பல நூல்களை கவிதை உலகுக்கு தந்திருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. அவர்களுள் கவிஞர் இல்மி அஹமட் லெப்பை, நசீகா முகைதீன், கவிஞர் முகைதீன் சாலி, எம்.டி.எம் யூனுஸ், மௌலவி இக்பால், காத்தான்குடி ருஸ்தா, ஏ.ரி.எம் ரியாஸ், ரம்சி சிராஜுன், உட்பட பல கவிஞர்கள் அந்தக் காலகட்டங்களில் காத்தான்குடி பிரதேசத்தில் கவிஞர்களாக தங்களை அடையாளப்படுத்தி இருக்கிறார்கள் எம்.டி.எம். யூனுஸ் இவர்களுள் கவிஞர் எம்.டி.எம் யூனுஸ் ஒரு நல்ல கவிஞராகத் திகழ்வது காத்தான்குடி மண்ணுக்கு பெருமை. மூன்றாம் சாமத்து புன்னகை என்கின்ற ஒரு புதுக்கவிதை நூலையும் தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கியவர். மிகச் சிறப்பாக எழுதக்கூடிய யூனுஸ் பின் நவீனத்துவ சிந்தனை சார்ந்த கவிதைகளையும் கையாளக் கூடிய ஒருவர். கவியரங்குகளிலும் பாடி வருகிறார்.*

**முகைதீன் சாலி**

*அதேபோன்று கவிஞர் முகைதீன் சாலியும் ஒரு அடையாளப்படுத்தப்படக்கூடிய நல்ல கவிஞர். அவருடைய பல கவிதை நூல்கள் காத்தான்குடி மண்ணிலே வெளிவந்திருக்கின்றன. அவரது நன்னம்பிக்கை நாயகமே என்கின்ற கவிதை நூல் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு கவிதை நூலாகும். அதேபோன்று பல புதுக்கவிதை நூல்களையும் கவிதை உலகுக்கு தந்தவர்.*

**மொகிதீன் சாலி**

*பல கவியரங்குகளிலும் கவிதை பாடியுள்ள மொய்தின் சாலி, சிறுகதைகளையும் லாவகமாக எழுதக்கூடிய ஒருவராக திகழ்கிறார். ஏ.டி.எம்.ரியாஸ், ரம்ஸி சிராஜுதீன் ஆகியோர் அந்த காலகட்டங்களில் வந்த கவிஞர்கள். இவர்கள் கவிதை நூல்களைத் தராவிட்டாலும் சிறப்பாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.*

**2010 களில் கவிஞர்கள்.**

*2010 களுக்குப் பிறகும் பல புதிய கவிஞர்கள் காத்தான்குடி பிரதேசத்தில் கவிஞர்களாக உருவாகி இருக்கிறார்கள். சமூக வலைத் தளங்களின் வருகை குறிப்பாக முகநூலின் வருகை பல புதிய கவிஞர்களையும், படைப்பிலக்கியவாதிகளையும், உருவாக்கியிருக்கிறது. அந்த வகையில் எம்.எம். ஸாகிர் ஹுசைன், உசனார் ஜாபீர், எம்.எம்.நிசவ்ஸ், மிம் அன்சார்,ஏ. எல்.எம். சப்ரி, அஜீரா ஹலீல்தீன், ஆ.லெ.பதுர்தீன், மௌலவி எம். எச்.எம்.இக்பால், ஹாஜரா கலீலுர் ரஹ்மான், கருமுகிலன் ஜுரைஸ் ஜவ்பர்கான், ஜாஹிதா ஜலால்தீன், முபிதா ரமீஸ், டாக்டர் ஹயாத் சுபைர், அபு மின்ஹாஜ் உட்பட பல கவிஞர்கள் இவ்வாறு புதிதாக கவிதைத் தளத்தில் தங்களை வரவு வைத்திருக்கிறார்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. இவர்களுள் எம்.எம்.சாகிர்.ஹுசைன் ஒரு நல்ல மரபுக் கவிஞராக, நல்ல மரபுக் கவிதையாளராக இருக்கிறார். காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தில் பல கவியரங்களுக்கு தலைமை தாங்கியதையும் காணக்கூடியதாக இருக்கிறது. அதேபோன்று நிஷவ்ஸ் ஒரு நல்ல கவிஞராகவும் திகழ்கிறார். ஏனைய கவிஞர்களும் தங்களை கவிதை தளத்தில் நிலையாக பதித்து இருக்கிறார்கள்.*

*இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மிகப்பெரிய இலக்கிய விருதாகக் கருதப்படுகின்ற தேசிய சாகித்திய மண்டல விருது இரண்டு கவிஞர்களுக்கு காத்தான்குடியில் கிடைத்திருக்கிறது. ஒருவர் கவிஞர் அப்துல் காதர் லெப்பை. அவருடைய மொழிபெயர்ப்பு கவிதை நூலான ருபய்யாத் என்கின்ற நூலுக்கு தேசிய சாகித்திய மண்டல விருது கிடைத்திருக்கிறது. அதை அடுத்து 2000ஆம் ஆண்டுகளில் கவிஞர் .ரீ.எல்.ஜவ்பர்கானின் மௌன தேசம் என்கின்ற மரபுக் கவிதை நூலுக்கு தேசிய சாகித்திய மண்டல விருது கிடைத்திருக்கிறது. ஒரு சொந்த கவிதை நூலுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவதாக தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற கவிஞராக ரீ.எல். ஜவ்பர்கான் பார்க்கப்படுகிறார்.*

*கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் கவிதை நூலுக்கு சாகித்திய மண்டல விருது கிடைத்திருந்தாலும் அது ஒரு மொழிபெயர்ப்பு நூலுக்காகவே வழங்கப்பட்டதாக பார்க்கப்படுகிறது.*

*அதே நேரம் மாகாண சாகித்திய விருதும் கவிஞர் ரீ.எல்.ஜவ்பர்கானுக்கே கிடைத்திருக்கிறது. 2015 ஆம் ஆண்டு அவரது 'மறைந்த சிறகும் என் வானமும்' என்கின்ற புதுக்கவிதை நூலுக்கு விருது கிடைத்திருக்கிறது.*



கவிமாமணி
ரீ. எல் ஜவ்பர்கான்

---

**பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

# வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அக்ரகார மருத்துவ காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதி, சாதாரண காப்புறுதி போன்ற காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதோடு உள்நாட்டு காப்புறுதியாளர்களின் மீள்நிதியப்பாளராக செயற்படும் இலங்கையினுள் நிறுவப்பட்டுள்ள ஒரே நிறுவனமாகும். இந்த நிதியம் 16 வருடங்களுக்கு மேலாக அதன் இருப்பில் அடைந்த பெறுமைமிக்க சாதனை கண்டுபிடிப்பு, வளர்ச்சி மற்றும் இலாபம் ஆகியவற்றுடன் உள்நாட்டு காப்புறுதி தொழிலில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ள அரச நிறுவனமாகும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள் (HM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனிதவள முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   இயைபுடைய துறை தொடர்பான பட்டப் பின்படிப்பு (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் (Associate Membership)

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது நியாயாதிக்க நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

2. இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது நியாயாதிக்க நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமை
2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் 1ஆம் வகுப்பு முகாமைத்துவ வகுதியில் (MM) குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : HM 1-2 - 2016: ரூபா [81,670 - 15 x 2,270 – 115,720.00]

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 2. முகாமையாளர் - மீள்காப்புறுதி மற்றும் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் போராட்டங்கள் (HM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவம், நிர்வாகம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் பொருளாதாரம் தொடர்பான பட்டம் அல்லது துறைக்கு இயைபான வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   பட்டப் பின்படிப்புத் (Masters) தகைமை

   **அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல். (Associate Membership)

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது நியாயாதிக்க நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்
2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் 1ஆம் வகுப்பு முகாமைத்துவ வகுதியில் (MM) குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : HM 1-2 - 2016: ரூபா [81,670 - 15 x 2,270 – 115,720.00]

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 03. உதவி முகாமையாளர் - வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் போராட்டங்கள் மற்றும் பயங்கரவாத காப்புறுதி (MM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் காப்புறுதி மற்றும் இடர் முகாமைத்துவம் அல்லது வியாபார நிர்வாகம் அல்லது வியாபார முகாமைத்துவம் தொடர்பில் காப்புறுதி / வர்த்தகம் / நிதி / கணக்கியல் அல்லது இயைபுடைய துறையில் இயைபான பட்டத்தைப் பெற்றிருத்தல்.

   **மற்றும்**

2. பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் தகைமைக்குப் பிந்திய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்
2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் கனிஷ்ட முகாமைத்துவ வகுதி (JM) மட்டத்தின் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : MM 1-2 – 2016 : ரூபா [54,550- 10 x 1,375 - 15 x 1,910 – 96,950.00]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 04. உதவி முகாமையாளர் - சட்டம் (MM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்

   **மற்றும்**

   பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய துறையில் கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது நியாயாதிக்க நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் தகைமைக்குப் பிந்திய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்
2. பதவிக்குரித்தான விடயப்பரப்பில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் கனிஷ்ட முகாமைத்துவ வகுதி (JM) மட்டத்தின் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : MM 1-2 – 2016 : ரூபா [54,550- 10 x 1,375 - 15 x 1,910 – 96,950.00]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 05. காப்புறுதி அதிகாரி - (JM 1-1)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **அல்லது**

2. காப்புறுதி தொடர்பில், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனத்தில் உயர் டிப்ளோமாவைப் (NVQ Level 06) பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் 05 வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

3. காப்புறுதி தொடர்பில், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனத்தில் உயர் டிப்ளோமாவைப் (NVQ Level 05) பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் 10 வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

4. இயைபுடைய காப்புறுதி தொடர்பில் பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்
2. பதவிக்குரித்தான விடயப்பரப்பில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் முகாமைத்துவ உதவியாளர் IIஆம் தரத்தில் (தொழில்நுட்பம்/ தொழில்நுட்பம் அல்லாத) சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : JM 1-1 – 2016 : ரூபா [42,600- 10 x 755 - 18 x 1,135 – 70,580.00]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 06. பாவனையாளர் சேவை உதவியாளர் - (MA 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**கல்வித் தகைமைகள்**

**க.பொ.த. (சா.தர) பரீட்சையில்**

1. சிங்களம் / தமிழ்
2. ஆங்கில மொழி
3. கணிதம்

உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

க.பொ.த. (உ/த) பரீட்சையில், (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

ஏனைய தகைமைகள்

பாவனையாளர் சேவை அல்லது அழைப்பு நிலைய சேவை தொடர்பில் ஆகக் குறைந்தது ஆறு மாத கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

ஆரம்ப தரத்திற்குரித்தான (தேர்ச்சி/ அரைத் தேர்ச்சி / தேர்ச்சியற்ற) உத்தியோகத்தர்கள்

**க.பொ.த. (சா.தர) பரீட்சையில்**

1. சிங்களம் / தமிழ்
2. ஆங்கில மொழி
3. கணிதம்

உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

மேற்கூறப்பட்ட தரங்களில் நிரந்தர சேவையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : MA 1-2 – 2016 : ரூபா [27,910- 10 x 300 - 7 x 350 – 12 x 600 – 12 x 710 - 49,080.00]

**வயது** : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தர நியமனம் என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் உண்டு.

**நிபந்தனைகள்:**

**சகல விண்ணப்பதாரர்களும்**

- இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- பதவிக்குரித்தான கடமையைச் செய்வதற்கான உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை தன்மையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள்**

- உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரி சகிதம் தயாரித்துக்கொண்ட சுய தரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பப் படிவத்தை, சகல கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவத்தை உறுதி செய்யும் பிரதிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டச்சபைகளில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு 2024-03-25ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**

## தடைகளை தவிடு பொடியாக்கி... (12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொரயா நிதியம் நடத்திய ஒரு போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசான நான்கு லட்ச ரூபாவைப் பெற முடிந்திருக்கிறது. வறுமையில் இருந்து மீள வேண்டும் என்பதற்காகவே தான் விடா முயற்சியுடன் செயல்பட்டு வருவதாக சொல்லும் ஷோபனாவுடன் அவர் கணவர் இல்லை. தன் சோகத்தை மூட்டைகட்டி வைத்துவிட்டு தொழிலில் முன்னேறிச் செல்ல முழு மூச்சுடன் செயல்படுகிறார் ஷோபனா! ஐயோ கடவுளே! என மூலையில் உட்கார்ந்து புலம்பும் பெண்களுக்கு இச் சாதனைப் பெண் ஒரு முன்மாதிரி. பிரச்சினைகளில் மூழ்காமல் அவற்றை வெற்றி கொண்டு முன்னேறிச் செல்லுங்கள் என்கிறார் ஷோபனா.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் சதுஸ்டார்ஸ் என்ற நிறுவனத்தையும் தொழிலகத்தையும் நடத்திவரும் சாஜிராணி என்ற பெண்மணி ஒரு சமயத்தில் தேக்கு மரத்தடியில் கச்சான் விற்றவர் என்றால் நம்ப முடிகிறதா? யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, போராளியான கணவரை இழந்து அடுத்ததாக என்ன செய்வது என்று விழி பிதுங்கி நின்ற இப் பெண்மணி இன்று பத்து கோடிக்கும் அதிக முதலீட்டுடன் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார்.

அகதி முகாமில் இருந்து வெளியே வந்தபோது சில பொருட்களை கையில் கொடுத்து அனுப்பி இருக்கிறார்கள். அவற்றை கடையில் கொடுத்து 1300 ரூபாவை பெற்ற அவர், அப்ப மா மற்றும் அப்பத் தயாரிப்புக்கான பொருட்களை வாங்கி வரும் அவருடைய அம்மாவும் மரத்தடியில் அமர்ந்து அப்பம் தயாரித்து விற்றிருக்கிறார்கள். முதல் நாள் வியாபாரத்தில் அவருக்கு ஐயாயிரம் ரூபா கிடைத்திருக்கிறது. ஆயிரத்து 300 ரூபா முதலீட்டில் ஐயாயிரமா என்று வியந்து போன அவர், கோவில், திருவிழா, விசேஷங்கள் என பல்வேறு இடங்களுக்குச் சென்று கச்சான் விற்கத் தொடங்கியிருக்கிறார். பின்னர் மிளகு, பட்டை, உள்ளிமாவு, இஞ்சிமாவு, ஏலக்காய் போன்ற பண்டங்களை மரத்தடியில் வியாபாரமாக செய்து வந்திருக்கிறார்.

தவறுகள் மூலம் சரியானதை கற்கும் வழிமுறையில் அனுபவப் பாடங்களைப் பெற்ற சாஜிராணி, மூலிகை பப்படங்களை தயாரித்து விற்கத் தொடங்கியிருக்கிறார். கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்ட கண்காட்சியில் கலந்து கொண்ட அவருக்கு, இயற்கை பொருட்களைக் கொண்டு இரசாயனம் கலக்காத உணவுப் பண்ட தயாரிப்பில் இரண்டாம் இடம் கிடைத்திருக்கிறது. கூடவே அமெரிக்க சுற்றுப் பயணத்துக்கான வாய்ப்பும் வாய்த்திருக்கிறது.

அந்தப் பயணத்தை மறுத்த இவர், பதிலாக பாதையோரமாக ஒரு காணித் துண்டைப் பெற்றுத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார். காணி கிடைத்தது. அவர் பரிசு பெற்றதை அறிந்த பலரும் அவரிடம் வந்து ஏராளமான ஓடர்களைத் தர ஆரம்பித்தார்களாம். இவ்வாறு ஆரம்பித்த அவரது ஏறுமுகம், இன்று அவரை நிறுவன அதிபராக்கி இருக்கிறது.

இது மட்டுமல்ல, பெருந் தொழிலதிபர் அம்பானியியன் அழைப்பை ஏற்று முப்பை சென்று அம்பானியின் விருந்தினராக உபசரிக்கப்பட்டுள்ளார். கீழ் மட்டத்திலிருந்து உழைப்பினால் மேலே வந்தவர் என்ற வகையில், சுய தொழிலில் இரண்டாம் இடத்தைப் பிடித்த தன்னைப் பற்றி எங்கேயோ கேள்விப்பட்டு கூறிய அம்பானி, இந்தியத்தரத்துக்கு பொதியிடல், இந்திய வார்த்தைகள் என்பன இல்லாததால் பப்படத்தை மொத்தமாக வாங்கி இந்தியாவில் தானே சந்தைப்படுத்த விரும்புவதாக கூறியதாக பெருமைப்படுகிறார் சாஜிராணி.

மூன்றாவது சாதனைப் பெண் மட்டக்களப்பு தளவாய் கிராமத்தைச் சேர்ந்த விஜயநிலா. இவருக்கு இரண்டு சகோதரர்கள். இவரது இளமையில் தந்தையார் குடும்பத்தைக் கைவிட்டுச் சென்றுவிட்டார். இரு சகோதரர்கள் உழைப்பில் குடும்பம் நடந்து கொண்டிருந்தபோது க.பொ.த. சாதாரணதர தேர்வின் பின்னர், பனம் பொருள் அபிவிருத்தி சபை நடத்திய ஒரு பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பனை ஓலையைப் பதப்படுத்தி, சாயமேற்றி எவ்வாறு ஓலைப் பெட்டிகள், தட்டுகள் போன்றவற்றை உருவாக்குவது என்ற கலையைக் கற்றுக் கொண்டார். சரியாகச் சொன்னால் யாழ்ப்பாணத்தில் விற்பனையாகும் பனையோலைகளால் தயாராகும் பொருட்களின் தரத்துக்கு இவரது தயாரிப்புகள் அமைந்திருந்தன. இதையடுத்து வீட்டிலேயே பனையோலைப் பெட்டிகளைத் தயாரிக்கத் தொடங்கினார். ஒரு இந்தியப் பெண்மணி தானாகவே முன்வந்து உதவிகள் செய்து விற்பனைக்கு வழிவகுத்ததாகக் கூறும் இவர், இரண்டு நபர்கள் தனக்கு தொடர்ச்சியாக ஒர்டர்களை அளித்து வருவதாகவும் அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவதாகவும், வருமானம் மகிழ்ச்சி அளிப்பதாகவும் சொல்கிறார். முதல் முறையாக இவரைத் தொடர்புகொண்ட போது, அழைப்புக்கு காது கொடுக்காமல் வையுங்கள் போனை என்று அதட்டலாகச் சொன்னார் விஜயநிலா. இந்தப் பெண் இப்படி முசுடாக இருந்தால் எப்படி சுயதொழிலில் வெற்றி பெறுவார் என்ற சந்தேகத்துடன் மீண்டும் அழைப்பை எடுத்து நான் யார், ஏன் பேசுகிறேன் என்பதை சுருக்கமாகச் சொன்ன பின்னர்தான் மன்னிப்பு கேட்டுக் கொண்டு சுமுகமாகப் பேசத் தொடங்கினர்.

அவர் வாழ்க்கையில் வெற்றி பெற்று வருவதை சகிக்காத சில ஆண்கள் அழைப்பை எடுத்து கண்டபடி போசுவார்களாம். அப்படியான அழைப்போ என எண்ணிய கடுமையான தொனியில் பேசி விட்டதாக காரணம் சொன்னார் விஜயநிலா. மகளிர் சொந்தக் காலில் நிற்பதை சில ஆண்கள் விரும்புவதில்லை என்பதற்கு இது ஓர் உதாரணம். நாற்பதை எட்டிப் பிடிக்கும் இவர் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை. தந்தை ஏற்படுத்திச் சென்ற வடு காரணமாக இருக்கலாம். திருமணம் பற்றிக் கேட்டபோது, சிறு புன்னகையுடன் ஆமாம் செய்து கொள்ளலாம் தான் என்றார்.

---

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### மத்திய அதிவேக நெடுஞ்சாலை செயற்றிட்டம் II

### பொதுமக்களுக்கான அறிவிப்பு

அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம - குருநாகல் பிரிவின் நாகலகமுவ முதல் தம்பொக்க வரையிலான வீதிப் பிரிவின் இரண்டு பாதைகள் மாத்திரம் 14 மார்ச் 2024 முதல் 28 மார்ச் 2024 வரை இயங்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த காலகட்டத்தில் ஏற்படும் அசௌகரியத்திற்கு எங்களது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**

---

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மக்கள் வங்கி

**கொழும்பு 02, இல. 30/101, கிவ் வீதியிலுள்ள மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்திற்கு ஒற்றை மாடி களஞ்சியசாலைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்**

**ஒப்பந்த இல. 006/2024**

கொழும்பு-02, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கொழும்பு 02, இல. 30/101, கிவ் வீதியிலுள்ள உத்தேச மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்திற்கு ஒற்றை மாடி களஞ்சியசாலைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இதற்கான மதிப்பீட்டுத் தொகை சுமார் 22.0 மில்லியன் ரூபாவாகும். (பெறுமதி சேர் வரியின்றி)

உத்தேசக் கட்டிடம் ஒற்றை மாடிக் கட்டிடம் என்பதுடன் ஏறத்தாழ 3465 சதுர அடி மொத்த தரைப் பரப்பைக் கொண்டதாகும். உருக்குக் கட்டமைப்பு சட்டக வேலைகள், கொங்கிறீட் அடித்தள வேலைகள், மேசன் வேலைகள், வெளிப்புற உறைப்பூச்சு வேலைகள், அலுமினியக் கதவுகள், யன்னல்கள், ZnAl கூரை, சீலிங்குகள் மற்றும் ஏனைய முடிவுறுத்தல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைக் கொண்டது.

நிர்மாணக் காலம் 90 நாட்காட்டி நாட்களாகும்.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு முறையின் கீழ் விலைக்கோரல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, தகைமை வாய்ந்த விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதராகவும், பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) C5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டிட நிர்மாணத் துறைக்காக பதிவைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவைகள்:

- கடந்த ஐந்து (5) வருடங்களில் ஆகக்குறைந்தது முப்பத்திஆறு மில்லியன் ரூபா (ரூபா 36,000,000.00) இலங்கை ரூபா பெறுமதியான சராசரி வருடாந்த புரள்வைக் கொண்ட நிர்மாண வேலை செய்திருத்தல்
- கடந்த 5 வருட காலத்தினுள் ஆகக்குறைந்தது 25 மில்லியன் ரூபா பெறுமதியுடையதும் மற்றும் 03 மாத காலத்திற்குள் இதனையொத்த சிக்கல் தன்மையுடைய கட்டிட நிர்மாணத் திட்டமொன்றை வெற்றிகரமாக நிறைவு செய்த அனுபவம் அல்லது அதிக பெறுமதியுடைய திட்டமொன்றை நிர்ணயிக்கப்பட்ட காலம் மற்றும் நேரத்தில் நிறைவு செய்துள்ளமை.
- திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் ஆகக்குறைந்த தொகை (ஏனைய ஒப்பந்தப் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்) மற்றும் ஏதேனும் முற்பணக் கொடுப்பனவாக இச்செயற்றிட்டத்திற்கென பிரத்தியேகமான தொகை 8.0 மில்லியன் ரூபாவாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

05. இது தொடர்பாக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, தலைமையகக் கட்டிடம், மக்கள் வங்கி, 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112481373, தொலைநகல் 0112341591) மற்றும் 2024-03-13ஆம் திகதி முதல் 2024-04-02ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான சாதாரண வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மீளளிக்கப்படாத பத்தாயிரம் ரூபா (ரூ. 10,000.00) கட்டணத்தை செலுத்திய பின் 2024-03-13ஆம் திகதி முதல் 2024-04-02ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விமைனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றினை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கொழும்பு 02, இல. 30/101, கிவ் வீதியிலுள்ள உத்தேச மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்திற்கு ஒற்றை மாடி களஞ்சியசாலைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்'' எனக் குறிப்பிட்டு 2024-04-03ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதன் முன் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம், 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிந்தவுடன், அத்தருணத்தில் சமுகந்தர தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

08. விலைமனுக்கள் 2024-07-03ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

09. அனைத்து விமைனுக்களுடனும் மக்கள் வங்கியைத் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் இயங்கும் உரிமம் பெற்ற வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட இரண்டு இலட்சத்து இருபதாயிரம் இல. ரூபா (இல. ரூ. 220,000.00) பெறுமதியான விலைமனுப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைமனுப் பிணை 2024-07-31ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. முன்னோடி விலைமனுக் கூட்டமொன்று 2024-03-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, தலைமையகம், மக்கள் வங்கி, 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் இடம்பெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

PEOPLE'S BANK
Pride of the Nation

---

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

## பதவி வெற்றிடம்

### தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் உதவியாளர்

மேலேயுள்ள பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **தகைமைகள்** : | MT 1 – தகைமை<br>க.பொ.த. (உ/த) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனமொன்றிலிருந்து கணனி கற்கைநெறிகளில் பெற்ற டிப்ளோமா அல்லது நிகரான தகைமை. |
| **அனுபவம்** : | அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் உதவியாளராக 04 வருட அனுபவம். |
| **வயது** : | 25 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். |
| **சம்பள அளவுத்திட்டம்** : | MT 1 – III ஆம் தரம்<br>மாதாந்தம் 40285 – 10 x 405 – 44,335 ரூபா.<br>மேலேயுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மேலதிக படிகளும் வழங்கப்படும். |
| **வேலைவாய்ப்பு நியதிகள்** : | நிரந்தரமானதும் சேமலாப நிதி அடிப்படையிலும் அமைந்துள்ளது. |

அரசாங்க சேவையில் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்கள் பணியாற்றும் நிறுவன தலைவருடாகவும் நேரடியான பிரதியொன்றுடனும் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரியானவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் விடுவிக்கப்படுவார் என நிறுவன தலைவரிடமிருந்து தெரிவிக்கும் சான்றிதழும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

நியமனமொன்றை வழங்கல் அல்லது வழங்காமலிருத்தல் தொடர்பான உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையானது கொண்டுள்ளது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது குறிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை முழுமையான சுயதரவுடன் மற்றும் இரு (02) உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் விபரங்களுடனும் 2024 மார்ச் 25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**
**2024 மார்ச் 06.**

---

### இலங்கை மருத்துவச் சபை

## பதவி வெற்றிடம்

### முகாமைத்துவ உதவியாளர் பதவி – தரம் III

மேற்கூறப்பட்ட பதவிக்காக 2024 ஏப்ரல் 01ஆம் திகதியில் 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 45 வயதிற்குக் குறைந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைத் தேவைப்பாடுகள் மற்றும் அனுபவம்**

1. க.பொ.த (சா/த) பரீட்சை (சிங்களம் / தமிழ் மொழி, ஆங்கில மொழி மற்றும் கணிதம் எனும் பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)
2. க.பொ.த (உ/த) பரீட்சை (ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)
3. இயைபுடைய துறையில் பட்டப் படிப்பு மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
4. ஆங்கிலம் மற்றும் தமிழ்/ சிங்கள மொழிகளில் தேர்ச்சி
5. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆறு (06) மாதத்திற்குக் குறையாத கணனி பிரயோகங்களில் (computer applications) ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமைகள்
6. இதனையொத்த பணி மற்றும் நிறுவனத்தில் முன்னைய அனுபவம் (இரண்டு வருடங்கள் விரும்பத்தக்கது) மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**பணி விபரங்கள்**

தலைமைப் பிரிவுகளின் நிர்வாக உதவிகளை வழங்குவதற்கு பொறுப்பாகவிருத்தல் மற்றும் பிரிவுகளோடு தொடர்புடைய சகல விடயங்களையும் ஒருங்கிணைத்தல். இந்த நிலைப்பாட்டின் நோக்கம் பதிவாளர் அல்லது பிரிவின் தலைவரால் ஒதுக்கப்படும் முக்கிய செயல்முறைகள் மற்றும் நாளாந்த கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பின்வரும் சம்பள அளவில் அமர்த்தப்படுவர்.

U MN-1- 2016 ரூபா 30,725-10x300 - 11x355 - 10x470 - 10x615 - 48,480.00

சுய தரவுகளை உள்ளடக்கிய விண்ணப்பங்களை, உறவினரல்லாத இருவரின் விபரங்கள் சகிதம் பதிவாளர், இலங்கை மருத்துவச் சபை என முகவரியிட்டு 2024-04-01ஆம் திகதி அல்லது அதற்கு முன் இலங்கை மருத்துவச் சபைக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''முகாமைத்துவ உதவியாளர் பதவி'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**இலங்கை மருத்துவச் சபை,**
**இல. 31, நொரிஸ் கெனல் வீதி,**
**கொழும்பு-10.**
2024-03-10.

---

### இலங்கை மருத்துவச் சபை

## பதவி வெற்றிடம்

### இலங்கை மருத்துவ சபையின் ஒழுக்கக் குழுவிற்கு உதவுவதற்கான ஒருங்கிணைப்பாளர் பதவி – ஒப்பந்த அடிப்படை

மேற்கூறப்பட்ட பதவிக்காக் 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 60 வயதிற்குக் குறைந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைத் தேவைப்பாடுகள் மற்றும் அனுபவம்**

1. நிர்வாகம் அல்லது ஏதாவது பொருத்தமான துறையில் பட்டம் அல்லது டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சி, வாய்மொழி மற்றும் எழுதுதல் இரண்டும் கட்டாயமாகும்.
3. மருத்துவ பின்புலங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. இதனையொத்த பணி மற்றும் நிறுவனத்தில் முன்னைய அனுபவம் (இரண்டு வருடங்களுக்கு முன்னுரிமை) மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு ஒப்பந்தக் காலப்பகுதியில் பதினைந்து (15) நாட்களுக்கு மேற்படாத வகையில் நாளொன்றுக்கு 7500.00 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.

**பணி விபரங்கள்**

இலங்கை மருத்துவ சபையின் ஆரம்ப செயற்பாட்டுக் குழு மற்றும் நிபுணத்துவ குழுவின் நடத்தை மற்றும் ஒருங்கிணைப்பிற்கு பொறுப்பாகவிருத்தல் மற்றும் மேற்கூறப்பட்ட குழுக்களின் நடவடிக்கைகளைத் தயாரித்தல். இந்த நிலைப்பாட்டின் நோக்கம் கூட்டங்கள் திறம்பட ஒழுங்கமைக்கப்படுவதையும், இலங்கை மருத்துவ சபையின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்வதாகும்.

சுயதரவுகளை உள்ளடக்கிய விண்ணப்பங்களை, உறவினரல்லாத இருவரின் விபரங்கள் சகிதம் பதிவாளர், இலங்கை மருத்துவச் சபை என முகவரியிட்டு 2024-04-01ஆம் திகதி அல்லது அதற்கு முன் இலங்கை மருத்துவச் சபைக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''ஒருங்கிணைப்பாளர் பதவி - ஒப்பந்த அடிப்படை''** எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**இலங்கை மருத்துவச் சபை,**
**இல. 31, நொரிஸ் கெனல் வீதி,**
**கொழும்பு-10.**
**2024-03-10.**

---

### இலங்கை மருத்துவச் சபை

## பதவி வெற்றிடம்

### அலுவலகப் பணி உதவியாளர் – ஒப்பந்த அடிப்படை

இலங்கை மருத்துவச் சபையின் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடத்திற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை மற்றும் அனுபவம்:**

(i) க.பொ.த சாதாரண தரத்தில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி சகிதம் ஆகக்குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) NVQ Level 2 அல்லது அதற்கு மேலான மட்டத்தில் தகைமையைப் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

(iii) மின்னியல் மற்றும் நீர்க்குழாய் முறைமை பராமரிப்பு உட்பட சிறு கட்டிட திருத்தவேலைகள் தொடர்பான அனுபவமுள்ள விண்ணப்பதாரர்கள் விசேடமாக கவனத்திற் கொள்ளப்படுவர்.

**பணி விபரம்**
ஒப்படைக்கப்படும் பிரிவின் ஆவணங்களை கோவைப்படுத்தல், செய்தியாளராக சேவை செய்தல், மின்சாரக் கோளாறுகளுக்கு தீர்வை வழங்குதல், நீர்க் குழாய் பராமரிப்பு உட்பட சிறிய கட்டிட திருத்தவேலைகள் மற்றும் நிர்வாகக் கடமைகளுக்கு உதவியளித்தல் போன்றவற்றுக்குப் பொறுப்பு கூறுதல் வேண்டும். கடமையை ஏற்றுக்கொள்ளும்போது விபரமான பணி விபரம் வழங்கப்படும்.

**ஆட்சேர்க்கும் நடைமுறை**
நேர்முகப்பரீட்சை மூலம்.

**வயதெல்லை**
2024-04-01ஆம் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்**
பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்பதுடன் நேர்முகப்பரீட்சையின் போது தீர்மானிக்கப்படும்.

**நிபந்தனை**

ஆரம்ப நியமனம் ஒரு (01) வருடமாகும் என்பதுடன் இலங்கை மருத்துவச் சபையின் தேவைப்பாடு மற்றும் வினைத்திறன் அடிப்படையில் இலங்கை மருத்துவச் சபையின் அபிப்பிராயத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காலத்தை நீடித்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய பதவிக்காக ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் உறவினரல்லாத இருவரின் விபரங்கள் சகிதம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பப் படிவங்களை தகைமைகளை உறுதி செய்யும் இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் சகிதம் 2024-04-01ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அலுவலகப் பணி உதவியாளர் - ஒப்பந்த அடிப்படை எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**இலங்கை மருத்துவச் சபை,**
**இல. 31, நொரிஸ் கெனல் வீதி,**
**கொழும்பு-10.**
**2024-03-10.**

## களனி பல்கலைக்கழகம் - இலங்கை

# பதவி வெற்றிடங்கள்

2022/2023 ஆம் கல்வி ஆண்டிற்காக பின்வரும் பதவிக்காக 2024.03.20 ஆம் திகதியன்று வரையும் களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்.

- **தற்காலிக விரிவுரையாளர்**

**வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ கற்கைநெறிகள் பீடம்**

**சந்தைப்படுத்தல் முகாமைத்துவ திணைக்களம்**

**விண்ணப்பிக்கும் முறைமை:**

விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஒன்-லையினூடாக மாத்திரமே அழைக்கப்படுகின்றன. ஒன்-லையின் விண்ணப்பம், விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டி மற்றும் தகைமைகள் தொடர்பான தகவல். சம்பளம் மற்றும் அனுகூலங்கள் ஆகியவற்றை அணுகுவதற்காக https://www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**06.03.2024**

# கொள்வனவு செய்பவர்களை பதிவு செய்தல் – 2024

2024 ஆம் ஆண்டிற்காக பல்லின வகையான பாவிக்கப்பட்ட/பாதிக்கப்பட்ட/பாவனைக்கொவ்வாத பின்வரும் பண்டங்களை அடக்கும் ஆனால் வரையறுக்கப்படாத கொள்வனவு செய்வோராக தம்மை பதிவு செய்ய விரும்பும் நபர்களிடமிருந்து லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோர்பரேஷன் பிஎல்சி (பிகியு 180) விண்ணப்பங்களை கோருகின்றது.

- மருத்துவ உபகரணம்
- பாரமான இயந்திராதி
- தளபாடம் மற்றும் இணைப்புக்கள்
- மின்னியல் சாதனங்கள்
- இலத்திரனியல் கழிவு
- அச்சுப்பொறி/ கோப்பியர் டோனர்கள்
- PET போத்தல்கள்
- இரத்தமாற்று கொள்கலன்கள்
- இரசாயன கொள்கலன்கள்
- பிளாஸ்டிக் கழிவு
- கதிரியக்க கழிவு
- கண்ணாடி போத்தல்கள்
- உலோக மூடியுடனான கண்ணாடி குப்பிகள்
- சேலைன் போத்தல்கள்
- LED/CFL/Fluorescent மின்குமிழ்கள்
- நிர்மாண கழிவு
- தாள்
- காட்போட்
- உணவுக் கழிவு
- தேங்காய் சிரட்டைகள்
- கழிவு எண்ணெய்
- அழுக்குத் துணிகள்

கொள்வனவுக்காரர் பதிவு செய்தலுக்காக பதிவு செய்ய நீங்கள் விரும்பினால் 2024.03.11 ஆம் திகதியிலிருந்து 2024.03.29 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கீழேயுள்ள அலுவலகத்தில் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து அத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாக 1000 ரூபாவையும் செலுத்தி பதிவு செய்தலை மேற்கொள்ளலாம்.

- வியாபார பதிவு செய்தலின் பிரதி
- சூழல் பாதுகாப்பு உரிமம் அல்லது ஏனைய பிரயோகப்படுத்தக்கூடிய உரிமங்களின் பிரதி.

எந்தவொரு தெளிவுறுத்தல்களுக்கும் 0115438516/0115438517 ஆகிய இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

LANKA HOSPITALS

**ஆதரவு சேவைகள் திணைக்களம் (ஐந்தாம் மாடி)**
**லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் நிர்வாக அலுவலக கட்டிடத்தொகுதி**
**598, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு -5.**

# தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

## பகிரங்க ஏலவிற்பனை

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள், பல்கலைக்கழக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**திகதி : 2024 மார்ச் 25**
**நேரம் : மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை**
**இடம் : பல்கலைக்கழக வளாகம்**

ஏலவிற்பனைக்காக உள்ள பொருட்கள்
- மின்சார உபகரணங்கள்
- தளபாடங்கள்
- கட்புல செவிப்புல உபகரணங்கள்
- கணனி
- வேறு உபகரணங்கள்

ஏலவிற்பனைக்கு சமுகமளிப்பவர்கள் ஏலவிற்பனை வளாகத்திற்கு பிரவேசிப்பதற்கு ரூ.500/- மீளளிக்கப்படாத தொகை அறவிடப்படுவதுடன் தமது அடையாள அட்டை கட்டாயமாகும்.

குறித்த தொகையைச் செலுத்தி பொருட்களை ஒதுக்கிக் கொள்ள வேண்டியதுடன் குறித்த தினத்திலேயே மாலை 5.00 இற்கு முன்பு நீங்கள் கொள்வனவு செய்த பொருட்களை பல்கலைக்கழக வளாகத்திலிருந்து அகற்றிக் கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் எந்த அனுமதியும் அதற்காக வழங்கப்படமாட்டாது.

**கவனிக்கவும் :**

**மேற்கண்டவாறு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஏல விற்பனையை மறுஅறிவித்தல் இன்றி பல்கலைக்கழகத்தின் விருப்பின் பிரகாரம் இரத்துச் செய்தல் அல்லது பிற்போடும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரியது.**

**பணிப்பாளர் நாயகம்,**
**தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்**
**இல. 100,**
**கந்தவல, இரத்மலானை**

**0112630700**
**www.uovt.ac.lk**
**2024 மார்ச் 10ம் திகதி**

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

SMIB

# பயிலுநர் வங்கி உதவியாளர்களுக்கான தொழில் வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கியாகி (SMIB) நாம் எமது ஊழியர்களுக்காக ஆதரவான மற்றும் கூட்டு வேலைச் சூழலை வழங்கும் அதேநேரம், எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு கடப்பாடு பெற்றுள்ளோம். ஒரு தொழில் வழங்குநராக சம வாய்ப்பை வழங்கி பன்முகத்தன்மையை ஆதரிப்பதோடு, அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு உறுதிபூண்டுள்ளோம். பயிற்சி வங்கி உதவியாளர்களாக எமது அணியில் இணைவதற்கு அர்ப்பணிப்புள்ள மற்றும் சுறுசுறுப்பான தனிநபர்களை SMIB தற்போது தேடி வருகிறது.

சிறப்பான வாடிக்கையாளர் சேவையை வழங்குவது தொடர்பில் ஆர்வமுடையவராகவும் வங்கித் துறையில் வளர்ச்சிக்கு வாய்ப்பை தேடுபவராகவும் நீங்கள் இருந்தால் விண்ணப்பிப்பதற்கு நாம் ஊக்குவிக்கிறோம். வங்கியியலின் எதிர்காலத்தை வடிவமைப்பது மற்றும் எமது வாடிக்கையாளர்களின் வாழ்வில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு எம்முடன் இணையுங்கள்.

**தகைமைகள்**

தாய்மொழி (சிங்களம்/ தமிழ்), கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட குறைந்தது 5 திறமை சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

ஒரே அமர்வில் 3 சித்திகளுடன் (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு) க.பொ.த. உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல்.

பொது ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருத்தல் மேலதிக அனுகூலம் ஒன்றாக கருதப்படுவதோடு கணினி பயன்பாடுகளில் அறிவை பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது :** விண்ணப்பங்களின் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**தேர்வு நடைமுறை :** எழுத்துமூல பரீட்சை மூலம் குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட அபேட்சகர்களின் அறிவு சோதிக்கப்படும். பரீட்சையில் 50% அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெறும் அபேட்சகர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**பயிற்சி மற்றும் பணியமர்த்தல் :**

நியமிக்கப்படுபவர்கள் வங்கியியலின் அனைத்து அம்சங்களும் உள்ளடக்கிய இரண்டு ஆண்டு பயிற்சிக் காலம் ஒன்றை பெற வேண்டும். பயிற்சிக் காலத்தில் ஆறு மாத மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். IBSL இன் பயன்பாட்டு வங்கி மற்றும் நிதி இடைநிலையை (IABF) பூர்த்தி செய்த சான்றிதழை சமர்ப்பித்த பின்னர் மாத்திரமே நிரந்தர பணி நிலையில் உள்வாங்குவது பற்றி கருத்தில் கொள்ளப்படும்.

நிரந்தர பணி நிலைக்குள் உள்வாங்கப்பட்டவர்கள் வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவு மற்றும் வாடகை கொடுப்பனவு) சேர்த்து மாதாந்தம் ரூபா 41,670 – 320 x 20 - 48,070 சம்பள அளவின் ஆரம்ப சம்பளப் படியில் வங்கி உதவியாளர் தரம் III (சம்பள தரம் IX (a) இல் பணியமர்த்தப்படும்).

**தகுதிகாண் காலம்:**

கணக்கிடப்பட்ட இரண்டு ஆண்டுகளின் பயிற்சிக் காலத்தின் பின், உறுதிப்படுத்தல் ஓர் ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது என்பதோடு தகுதிகாண் காலப்பகுதியில் செயல்திறன் மதிப்படப்படும்.

**ஊதியம்:**

பயிற்சி பெறுவோருக்கு இரண்டு ஆண்டு பயிற்சி காலத்தில் (அனைத்தும் உள்ளடங்கிய) நிலையான மாதாந்த கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும்;

முதல் ஆண்டு - ரூபா 33,500.00

இரண்டாம் ஆண்டு - ரூபா 38,500.00

**விண்ணப்பங்கள்:**

நீங்கள் விண்ணப்பிக்க விரும்பினால், உங்களது விண்ணப்பங்களை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில், 2024.03.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு கீழ் கையொப்பமிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை கண்டிப்பாக கடைப்பிடிப்பதற்கு அறிவுறுத்தப்படுகின்றனர்.

பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை www.smib.lk என்ற SMIB இணையதளத்தில் அல்லது உதவி பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் ஏற்பாட்டியல்கள்), அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இல. 269, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு சுய முகவரியுடன் (9”x4” அளவான) தபால் உறை ஒன்றை அனுப்பி பெற்றுக்கொள்ள முடியும்.

அனைத்து விண்ணப்பங்களும் இரகசியமானதாக நடத்தப்படும் என்பதோடு எந்த வடிவத்தினாலான ஆதரவு திரட்டலும் தகைமை இழப்பு ஒன்றாக கருதப்படும். ஆட்சேர்ப்பின் தேர்வு, ஒத்திவைப்பு அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கை மற்றும்/ அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு அளவுகோலில் மாற்றம் செய்யும் உரிமை வங்கி வசமுள்ளது. பணிப்பாளர்கள் சபையின் முடிவு இறுதியானது மற்றும் முடிவானதாகும்.

விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்;

**உதவி பொது முகாமையாளர் - HR &L**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு 03.**

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்புக் கருத்திட்டம் (TNSWSP)

# பதவி வெற்றிட அறிவித்தல்

வர்த்தகர்கள் நாட்டின் எல்லைக்கு குறுக்கான தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கான (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பரிமாற்றங்கள்) ஆவணங்கள் மற்றும் தரவுத் தேவைகளை எல்லை வர்த்தக ஒழுங்குமுறை முகவர் நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கான ஒற்றை நுழைவுப் புள்ளியாக வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வகையான செயன்முறைகளின் இறுதி விளைவானது தானியங்கி வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பின் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.

இதன்படி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, முன்மொழியப்பட்ட வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக பிரத்தியேகத் திட்ட அமுலாக்கப் பிரிவொன்றினை (PIU) நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளது. வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்புத் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டதும் 2024 இன் இரண்டாம் காலாண்டில் செயற்படுத்தப்படவிருப்பதுமான இப்பிரத்தியேகத் திட்ட அமுலாக்கப் பிரிவின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**தகுதிகள்**

**1. கருத்திட்டப் பணிப்பாளர்**

- பொருளாதாரம் அல்லது சர்வதேச வர்த்தகம் அல்லது பொது நிர்வாகம் அல்லது பொதுக் கொள்கையில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையொன்றில் முதுமாணிப் பட்டம் **அல்லது**
- **சம்பந்தப்பட்ட துறையில் தகுதிக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியொன்று**
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கருத்திட்ட முகாமைத்துவச் சான்றிதழ் விரும்பத்தக்கது. **மற்றும்**
- கருத்திட்ட முகாமைத்துவத்தில் குறைந்தபட்சம் 12 வருட அனுபவத்துடன் (இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனத்தில் நேரடி அனுபவம் விரும்பத்தக்கது) இதில் குறைந்தபட்சம் 06 வருட அனுபவம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தலும் வேண்டும்
- ஒருங்கிணைக்கப்பட்ட / நிறுவனங்களுக்கு இடையேயான செயன்முறை நிர்வாகத்துடன் பணிபுரிவதில் நிபுணத்துவம் மற்றும் அனுபவம் விரும்பப்படுகிறது

**2. தகவல் தொழில்நுட்ப நிபுணர் - I**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் அல்லது மென்பொருள் பொறியியல் அல்லது தொடர்புடைய துறையொன்றில் இளமாணிப் பட்டம்

**அல்லது**

- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது.
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கருத்திட்ட முகாமைத்துவச் சான்றிதழ் விரும்பத்தக்கது **மற்றும்**
- பெரிய அளவிலான த.தொ.தொ அமைப்புகளுடன் தொடர்புடைய 09 வருட அனுபவம், இதில் குறைந்தபட்சம் 04 வருட அனுபவம் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் இருத்தல் வேண்டும்

**3. ஒருங்கிணைந்த எல்லை செயன்முறை முகாமைத்துவ நிபுணர்**

- பொருளாதாரம் அல்லது வணிகம் அல்லது பொது நிர்வாகம் அல்லது சர்வதேச வர்த்தகம் அல்லது பொதுக் கொள்கையில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையொன்றில் இளமாணிப் பட்டம் **அல்லது**
- **சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி**
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது **மற்றும்**
- எல்லை தாண்டிய முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான 08 வருட அனுபவத்துடன், அதில் குறைந்தது 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலான அனுபவம் **அல்லது**
- நாடளாவிய சேவைகளின் வகுப்பு I இல் அல்லது அதற்கு சமமான நிலையில் சம்பந்தப்பட்ட துறையில் வகுப்பு I பதவியில் குறைந்தபட்சம் 02 வருட அனுபவம்.

**4. தகவல் தொழில்நுட்ப நிபுணர் - II**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் அல்லது மென்பொருள் பொறியியல் அல்லது தொடர்புடைய துறையொன்றில் இளமாணிப் பட்டம் **அல்லது**
- **சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி**
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது.

**மற்றும்**

- தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அமைப்புகளின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய குறைந்தபட்சம் 05 வருட அனுபவம்.

**5. சிரேஷ்ட சட்ட மற்றும் ஒழுங்குமுறை விவகார உத்தியோகத்தர்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத் துறையிலான இளமாணிப் பட்டம் **அல்லது**
- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது **மற்றும்**
- சர்வதேச வர்த்தக சட்டம் மற்றும் கொள்கை, சுங்கம் மற்றும் எல்லைக் கொள்கை, அரசாங்க வழக்கு மற்றும்/ அல்லது கொள்கை இடர் பகுப்பாய்வு ஆகியவற்றுடன் தொடர்புடைய குறைந்தபட்ச 05 வருட அனுபவம் **மற்றும்**
- இலங்கை உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞராகவிருத்தல்.

**பொது நிபந்தனைகள்**

- வயது 2024.03.25 இல் உள்ளபடியாக 63 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் 36 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்படுவார்கள். இது வருடாந்திர செயல்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் ஆண்டுதோறும் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு உட்பட்டது.
- தேவையான அனைத்து தகுதிகளும் 2024.03.25 அன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
- வெற்றிடங்கள் நிரப்பப்படல் அவசியமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரையே சாரும்.
- இந்த ஆட்சேர்ப்புச் செயற்பாட்டின் போது இதில் இல்லாத ஏதேனும் ஒரு விடயத்திலோ அல்லது ஏதேனும் சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பத்திலோ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமானதாக அமையும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி இதர சலுகைகள் வழங்கப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

தேசிய அடையாள அட்டை, தொழில் அனுபவம், கல்வி / தொழில் தகைமைகளுக்கான சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் இரு தொடர்பற்ற சான்றளிப்பவர்களின் தொடர்பு விபரங்கள் இணைக்கப்பட்ட விரிவான சுயவிபரக்கோவையானது பின்வரும் முகவரியிற்கு 2024.03.25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபால் / நேரடியாக கையளிப்பதன் மூலமாக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களினால் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

**முகவரி:**
**பணிப்பாளர் நாயகம்**
**வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்**
**தேசியக் கொள்கைகள் அமைச்சு,**
**செயலகம்,**
**கொழும்பு 01.**

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன் கோரப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் பூரணப்படுத்தப்படாத சுயவிபரக்கோவையானது தகுதி நீக்கத்திற்கான ஒரு காரணமாக இருக்கும்.

பதவி விவரங்களின் சுருக்கம் உள்ளிட்ட மேலதிக விவரங்களுக்கு. https://www.treasury.gov.lk/news

**செயலாளர்**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்**
**தேசிய கொள்கைகள் அமைச்சு**
**செயலகம்**
**கொழும்பு 01.**

திகதி : 2024.03.10

www.adz.lk
it's what you want

## IMMEDIATE VACANCIES

Beston Species (1985ம் ஆண்டு முதல்) இரத்மலானை பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னணி பலசரக்கு உற்பத்திக் கம்பனியாகும். எமது பலசரக்கு உற்பத்தித் துறையில் சிறந்த அனுபவம் உடைய விற்பனையாளர்கள் (Sales - Representatives) உடன் தேவை.

பலமான பாவனையாளர் தொடர்புடையவர்களுக்கு ஆறு இலக்கம் கொண்ட மாதாந்த வருமானத்தை இலகுவாக பெற்றுக் கொள்ளலாம். கல்கிசை, மொறட்டுவை, பிலியந்தலை, பாணந்துறை ஆகிய பிரதேசங்களுக்கு அருகில் வசிப்பவர்களுக்கு மாத்திரம் பொருந்தும்.

**உங்களது நாளதுவரைக்கு உட்படுத்தப்பட்ட CV bestonenterprises 1985@gmail.com இற்கு அனுப்புங்கள் - மேலதிக விசாரணைகளுக்கு: 070 - 02223922 / 071 - 9432005**



## For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office

+94 112429342

+94 112429343


Uva Wellassa University

### தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

## பெறுகை அறிவித்தல்

### பாதுகாப்பு சேவையை வழங்கல்

பின்வரும் சேவையை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

| விலைமனுப் பெயர் | விலைமனு இல. | விலைமனு பிணை (ரூபாவில்) | விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபாவில் | விலைமனு வழங்கப்படும் காலம் | விலை மனுவை திறத்தல் | விலைமனு முன்னோடிக் கூட்டம் |
|---|---|---|---|---|---|---|
| பாதுகாப்பு சேவையை வழங்கல் 2024-2025 | UWU/GA/SEC/05/2024-2025/01 | 590,000.00 | 10,000.00 | 2024.03.11-2024.04.01 | 2024.04.02 – பி.ப. 2 மணிக்கு | 2024.03.21 – மு.ப. 11 மணிக்கு |

மேலே குறிப்பிட்டுள்ள காலப்பகுதிகளுக்கு எந்தவொரு வேலை நாளிலும் (விடுமுறைகள் நீங்கலாக) மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் அல்லது 3114820 என்ற இலங்கை வங்கி கணக்கிற்கு நேரடியாக ரொக்கப் பணத்தைச் செலுத்திய பின்னர், நிருவாகத்திற்கான பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்த பின்னர், எந்தவொரு விலைமனுதாரரினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். விலைமனுதாரர் **http://www.uwa.ac.lk/procurement/** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்வோர் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களுடன் ‘‘ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்’’ என்ற பெயரில் வங்கி வரைவொன்றுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக அல்லது பணக்கொடுப்பனவுகள் 3114820 என்ற ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் 3114820 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படலாம் என்பதுடன் ரொக்கப்பண பற்றுச்சீட்டு/ பணவரவுத் துண்டு ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

விலைமனுக்கள் மேலேயுள்ள திகதிகளில் பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விகள் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் உரித்தான விலைமனு இலக்கம் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 055-2226470 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொது நிருவாகத்திற்கான பிரதி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
**2024.03.10.**

Uva Wellassa University

### தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

## பெறுகை அறிவித்தல்

### மனிதவலு சேவையை வழங்கல்

பின்வரும் சேவையை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

| விலைமனுப் பெயர் | விலைமனு இல. | விலைமனு பிணை (ரூபாவில்) | விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபாவில் | விலை மனு வழங்கப் படும் காலம் | விலை மனுவை திறத்தல் | விலைமனு முன்னோடிக் கூட்டம் |
|---|---|---|---|---|---|---|
| மனிதவலு சேவையை வழங்கல் 2024-2025 | UWU/GA/05/MPS/2024-2025/01 | 720,000.00 | 10,000.00 | 2024.03.11-2024.04.01 | 2024.04.02 – பி.ப. 2.30 மணிக்கு | 2024.03.21 – மு.ப. 10 மணிக்கு |

மேலே குறிப்பிட்டுள்ள காலப்பகுதிகளுக்கு எந்தவொரு வேலை நாளிலும் (விடுமுறைகள் நீங்கலாக) மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் அல்லது 3114820 என்ற இலங்கை வங்கி கணக்கிற்கு நேரடியாக ரொக்கப் பணத்தைச் செலுத்திய பின்னர், நிருவாகத்திற்கான பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்த பின்னர், எந்தவொரு விலைமனுதாரரினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். விலைமனுதாரர் **http://www.uwa.ac.lk/procurement/** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்வோர் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களுடன் ‘‘ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்’’ என்ற பெயரில் வங்கி வரைவொன்றுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக அல்லது பணக்கொடுப்பனவுகள் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் 3114820 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படலாம் என்பதுடன் ரொக்கப்பண பற்றுச்சீட்டு/ பணவரவுத் துண்டு ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

விலைமனுக்கள் மேலேயுள்ள திகதிகளில் பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விகள் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் உரித்தான விலைமனு இலக்கம் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 055-2226470 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொது நிருவாகத்திற்கான பிரதி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
**2024.03.10.**

### மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIMS)

### பேராதனை பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

பேராதனை பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமான தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கட்டளை விதிகளுக்கு அமைய பணிப்பாளரானவர் நிறுவகத்தின் முழுநேர அதிகாரியாகவும் முதன்மை நிறைவேற்று அதிகாரி, முதன்மை கல்விசார் அதிகாரி மற்றும் நிறுவகத்தின் கணக்கியல் அதிகாரியுமாவார். பணிப்பாளரானவர் நிறுவகத்தின் பதவிநிலை உறுப்பினராகவும் முகாமைத்துவ சபையின் தலைவராகவும் ஒவ்வொரு கற்கை சபை பதவிநிலை உறுப்பினராகவும் இருப்பார். பதவிக் காலமானது மூன்று வருடங்களாகவும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாகவும் விண்ணப்பங்களை மூடும் திகதியன்று 63 வயதிற்கு குறைவாகவுமிருத்தல் வேண்டும்.

எதிர்பார்க்கப்படும் அபேட்சகரானவர் சபை சான்றழிப்பு அல்லது மருத்துவ விஷேடத்துவத்தைக் கொண்ட கலாநிதி பட்டப்பின்படிப்பு தகைமை (PhD அல்லது நிகரானது) கொண்டிருத்தல் வேண்டும். கல்விசார் அமைப்பொன்றை நிருவாகப்படுத்தலின் அனுபவம் சேர்க்கப்பட்டதொரு தகைமையாக கருதப்படும். மேலும் அபேட்சகரானவர் பல்துறை கல்விசார் சூழல் ஒன்றில் பணியாற்றுவதற்கு தேவையான ஆளிடைத் திறன்களை கொண்டுள்ளவராகவும் நிறுவகத்தினால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பொறுப்புக்களை உணர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். அவர் (ஆண்/பெண்) கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதற்கான பொறுப்பினையும் கொண்டிருப்பார்.

பணிப்பாளரானவர் இப்பதவிக்கு பொருந்தக்கூடிய சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

I. பிறந்த திகதி அடங்கலாக விண்ணப்பதாரியின் முழுமையான சுயதரவு.

II. நிறுவகத்தின் அபிவிருத்திக்கான சுய தொலைநோக்கு அறிக்கை மற்றும் விண்ணப்பதாரி பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் சாதிக்கத் திட்டமிட்டுள்ளவை பற்றிய சுருக்கப் பட்டியல்

III. இப்பதவிக்கு விண்ணப்பதாரியானவர் நியமிக்கப்படுமிடத்து அவர் (ஆண்/பெண்) பணியாற்றும் அரசசேவை, கூட்டுத்தாபனம், நிதியச்சட்ட தாபனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் தொழில் வழங்குநரிடமிருந்து அவர் விடுவிக்கப்படுவார் என்பதற்கான ஒரு கடிதம்.

விண்ணப்பமானது உதவிப் பதிவாளர், மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம், கெட்டம்பே, பேராதனை என முகவரியிடப்பட்டு **2024 ஏப்ரல் 04 ஆம் திகதிய பி.ப 3.30க்கு அல்லது அதற்கு முன்னராக** வந்தடையும்வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Post of Director, Postgraduate Institute of Medical Sciences, University of Peradeniya”** என குறிப்பிடப்படல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, மேலேயுள்ள ஆவணங்களின் மென்பிரதியொன்றும் வேறேதாவது சான்று பகரும் ஆவணங்கள் ஆகியன **PDF** உருமாதிரியில் **ar@pgims.pdn.ac.lk** என்ற மின்னஞ்சலூடாக அனுப்பப்படல் வேண்டும்.

பணிப்பாளர் பதவி நியமனத்திற்கான நடைமுறை தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு 2024 சனவரி 01 ஆம் திகதியிடப்பட்ட 01/2024 என்ற பமாஆ இன் சுற்றறிக்கையை தயவு செய்து பார்வையிடவும்.

இதுவொரு மீள்விளம்பரம். முன்னைய விளம்பரத்திற்கு பதிலிறுக்கும் தன்மையில் ஏற்கனவே தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்கள் மீளவும் சமர்ப்பிக்கத் தேவையில்லை. உங்கள் விண்ணப்பமானது செல்லுபடியாகும் தன்மையிலுள்ளது.

மேலதிக விபரங்களை சாதாரண அலுவலக நேரங்களில் 081-2389757 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவக உதவி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**உதவிப் பதிவாளர்,**
**மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம்,**
**பேராதனை பல்கலைக்கழகம்,**
**2024 மார்ச் 10**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு

### (Ref. No. RDA/DM/DIS/2024/01)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) பணிப்பாளர் நாயகத்தினால் அங்குலான புகையிரத வீதி, இலக்கம் 50 இல் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் காணப்படும் கீழே காட்டப்பட்டுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

| வகை | மாதிரி | உற்பத்தி விபரம் மற்றும் மாதிரி | இடம் |
|---|---|---|---|
| Light Vehicles | Cars (3 Nos) | Nissan Sunny (3 Nos) | Angulana RDA Workshop |
| | SUVs (11 Nos) | Mitsubishi Pajero (3 Nos), Mitsubishi J44 (1No), Maruthi Gypsy (3Nos), Micro (4 Nos) | |
| | Pickups (25 Nos) | Mitsubishi L200 (10 Nos), Isuzu (7 Nos), Ford Ranger (5 Nos), Toyota (2 Nos), Nissan (1No) | |
| Special Purpose Vehicles | Fuel Bowser (3 Nos) | Nissan (2 Nos), Hino (1 No) | |
| | Snooper Truck (1 No) | Ford/Bronto (1 No) | |
| | Mobile Crane (1 No) | Nissan Diesel (1 No) | |
| | Bitumen Bowser (8 Nos) | Xian Dagang (7Nos), Hino (1 No) | |
| | Emulsion Bowser(4 Nos) | Hino (4 Nos) | |
| | Mobile Workshop(1 Nos) | Hino (1 No) | |
| | Chip Sealer (1 No) | Dagang (1 No) | |
| | Spray Bowser (1 No) | Lanka Ashok Leyland (1 No) | |
| | Water Bowser (1 No) | Tata (1 No) | |
| Motor Cycles | | Jialing (5 Nos), Hero Honda (29 Nos), Yamaha (13 Nos), Bajaj (1 No), TVS (2 Nos) | |
| Registration Cancelled Vehicles & Motor Cycles | | Cars (2 Nos), SUVs (3 Nos), Double Cabin Pickup (7 nos), Wheeled Tractors (9Nos), Dump Truck (2 Nos), Motor Cycles ( 10 Nos) | |
| Machinery & Equipment | | Excavators (2 Nos), Concrete Mixer (7 Nos), Wheel Loader (1 No), Plate Compactors (5 Units), Double Drum Vibration Roller -1 Ton (24 Nos) & Parts of Crusher plants | |
| Chip Spreaders (11 Units) | | DAGANG SS4000 (3 Units) | Angulana RDA Workshop |
| | | DAGANG SS4000 (8 Unit) | Mirigama & Muwagama RDA Units, EE's office Kundasale, Udukawa RDA Workshop, EE's office Vauniya, Batticaloa RDA Workshop, Anuradhapura RDA Workshop, CE's office Monaragala |

இதற்காக ஆர்வம் காட்டுபவர்கள் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை 2024 **மார்ச் 11ம் திகதியிலிருந்து மார்ச் நவம்பர் 29 ம்** திகதி வரை காரியாலய நாட்களில் மு.ப.10.00 **இலிருந்து பி.ப.3.00 மணி** வரை **இல-50, புகையிரத வீதி, அங்குலான மொரட்டுவையில்** அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாகனப் பிரிவில் பார்வையிட முடியும் என்பதுடன் மனு விண்ணப்பங்களை **இல-50, புகையிரத வீதி, அங்குலான மொரட்டுவையில்** அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாகனப் பிரிவில் அல்லது **பணிப்பாளர் (இயந்திரவியல்), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 5வது மாடி, "மகநெகும மஹமெதுர" இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, செத்சிரிபாய, பத்தரமுல்லையில் ரூ.1,000/- (வரி உள்ளடங்கலாக)** ஐ செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

மனுதாரர்கள் சமர்ப்பிக்கும் முழு விலையில் (வரி இல்லாமல்) 5% வீதத்திற்கு குறைவாகாத மனுப் பிணையை (Bid Bond) சமர்ப்பிக்க வேண்டும். **மனுப்பிணையை பணிப்பாளர் நாயகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை** என்ற பெயருக்கு வங்கியில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிக்கட்டளை (Bank Draft) அல்லது வங்கி உத்தரவாதம் (Bank Guarantee) மூலம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் அவை மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் முடிவுத் திகதியிலிருந்து குறைந்தது **90 நாட்கள்** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். மனு உத்தரவாதமில்லாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

மனுக்கள் **2024 ஏப்ரல் 03 ஆம் திகதி காலை 10.00 மணி** வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் விலைகளை முத்திரையிடப்பட்ட உறைகளில் இட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரம், திகதிக்கு முன் **பணிப்பாளர் (இயந்திரவியல்), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 5வது மாடி, "மகநெகும மஹமெதுர" இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, செத்சிரிபாய, பத்தரமுல்லையில்** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் மனுக்கள் முடிவுத்திகதி முடிந்த அன்றைய நாளிலே மேற்குறிப்பிடப்பட்ட அதே இடத்தில் உடனடியாகத் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரரோ அல்லது மனுதாரரின் பிரதிநிதிகளோ பிரசன்னமாயிருக்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**பணிப்பாளர் (இயந்திரவியல்), 5வது மாடி, இல.216, "மகநெகும மஹமெதுர"**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லை.**



# வாரபலன்

10.03.2024 - 16.03.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் சுமத்திய வீண் குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். திடீர் மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதைச் சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நன்மை தரும். பெண்கள் மற்றவர்களால் ஏற்படும் தொல்லைகளில் சிக்காமல் இருக்க கவனமாக செயல்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மெத்தனப் போக்கு காணப்படும். மிகவும் கவனமாக படிப்பது கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

வீண்செலவு ஏற்பட்டாலும் அதைச் சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல் அதிருப்தி உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத்தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாகச் செயல்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகி விடும். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும். பெண்கள் மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும். மாணவர்களுக்கு கல்வியை தவிர மற்றவைகளில் கவனத்தை சிதற விடலாம் கவனம் தேவை.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சுகள் சாதகமாக முடியும். வீடு, வாகனம் வாங்குவது அல்லது புதுப்பிப்பதில் நாட்டம் அதிகரிக்கும். பெண்கள் எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிப்பர். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை நீங்கும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

பிரச்சினையை சமாளிக்கும் திறமை அதிகரிக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டுப் பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வதன் மூலம் எல்லாப் பிரச்சினைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்கள், அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியம் தடைப்பட்டுப் பின்னர் நல்லபடியாக நடந்து முடியும். மனதில் எதைப்பற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பர். மாணவர்கள் கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிபெறும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எந்த காரியத்திலும் வேகம் அதிகரிக்கும். தந்தையின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளில் சாதகமான நிலை காணப்படும். தான, தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம் சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். கணவன் மனைவிக்கிடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி தரும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு தடைகளைத் தாண்டி கல்வியை கற்க செய்யும் முயற்சி வெற்றி பெறும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்ப்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் சரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டாகும். சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்படவும் வாய்ப்பு உண்டு. கணவன், மனைவிக்கிடையே திடீர் மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. பெண்கள் தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

மங்கள காரியங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடம் சில்லறைச் சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். தொழில் வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள், மேலதிகாரிகளுடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். இயந்திரங்கள், ஆயுதங்கள், நெருப்பு ஆகியவற்றை கையாளும் தொழிலாளர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர்ப் பிரச்சினைகள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலை பளு அதிகரிக்கும். மாணவர்கள் அடுத்தவரைப் பற்றிய விமர்சனங்கள், கிண்டல், கேலி பேச்சு போன்றவற்றை தவிர்த்து கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். கடன் பிரச்சினை கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். மேலதிகாரிகள் ஒத்துழைப்பும் இருக்கும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சினையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவார்கள். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்புக் கூடும். பெண்கள் எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். மாணவர்கள் சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டு படிப்பது நல்லது.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

மற்றவர்கள் ஒப்படைத்த வேலையை பொறுப்போடு செய்து முடிப்பீர்கள். மனச் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்வதன் மூலம் வீண் பிரச்சினை வராமல் தடுக்கலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தருவதாக இருக்கலாம். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளிடம் அனுசரித்துச் செல்வதும் அவர்கள் போக்கில் விட்டுப் பிடிப்பதும் நல்லது. பெண்கள் கோபத்தை கட்டுப்படுத்துவது நன்மை தரும். மாணவர்கள் மிகவும் பொறுமையுடனும், கவனமாகவும் பாடங்களை படிப்பது அவசியம்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சுணங்கிக் கிடந்த காரியங்கள் மீண்டும் வேகம் பெறும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, இரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். எளிதில் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பேச்சில் கவனம் தேவை. குடும்ப செலவை சமாளிக்க பணவரத்து இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் ஆன்மிக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கைத் துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். பெண்களுக்கு எந்தப் பிரச்சினையையும் சமாளிக்கும் திறமை கூடும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டி குறையும். எதையும் அவசரப்படாமல் நிதானமாக செய்வது நல்லது.

## கும்பம்

**(அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

நீண்ட நாட்களாக தடைப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். அதிகம் பேசுவதை தவிர்ப்பது நல்லது. அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப்பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்கள் மேலதிகாரிகளால் நன்மையும் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை குறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆதரவு இருக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைய கூடுதல் கவனத்துடன் படிப்பர்.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண்வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதூரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை இலாபகரமாகச் செய்வார்கள். தேவையான பண உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிக உழைப்பும் அதற்கேற்ற பலனும் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடமும் உறவினர்கள், நண்பர்களிடமும் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு மனதில் தைரியம் உண்டாகும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு தேவை.

---

தமிழ் ஆராய்ச்சி மாநாடு
2023 – கோலாலம்பூர்

# 2000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த சீன, தமிழ் மக்களிடையேயான உறவு

அருணாசலம் லெட்சுமணன் 27

முகநூல் மற்றும் யூடியூப் தளங்களில் "நான் உங்கள் தோழி நிலானி பேசுகிறேன்" என கொஞ்சும் தமிழில் பேசும் அந்த குரலுக்கு சொந்தமான சீனப்பெண்மணி ஹீலி யுவான் என்ற இயற்பெயரைக் கொண்டவர். சீன தகவல் தொடர்பாடல் பல்கலைக்கழகத்தில் நிறைமதியுடன் ஒன்றாக கல்வி கற்றவர். பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி இப் பாடநெறியை தெரிவு செய்யும் வரையில் இவருக்கு தமிழ் மொழி தொடர்பில் எந்த அறிமுகமும் இருந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சீன வானொலியின் தமிழ்ப் பிரிவில் நீண்டகாலம் அறிவிப்பாளராக கடமையாற்றுபவர். சீனப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியை கற்றதுடன் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திலும் தமிழ் கற்று தமிழ் மொழி மீதான ஆர்வத்தை வளர்த்துக்கொண்டவர். தமிழ் மொழி அருமையானது. அதன் உச்சரிப்பில் உள்ள இன்பம் உலகில் வேறு எங்கும் காண முடியாது. தமிழ் மொழிக்கு எந்த சந்தர்ப்பத்திலும் ஆங்கிலம் மாற்றலாகாது. ஆங்கிலத்தை முன் வைத்து தமிழை அலட்சியப்படுத்துவதால் அவ்வினம் அழிவதோடு அவ்வினம் சார்ந்த பண்பாடும் கலாசாரமும் அழிந்துவிடும். அந்நிலைமை தமிழ் மொழிக்கு வந்துவிடக்கூடாது. தமிழ் மொழி போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய அருமையான மொழியாகும். என்ற கருத்து நிலையில் மிகுந்த அக்கறையுடன் வலம் வருபவராக நிலானி என்கிற ஹீலி யுவான் விளங்குகிறார்.

பொதுவாக சீனர்களிடம் அவர்கள் வேற்று மொழிகளை கற்கும் போது அம் மொழி சார்ந்த பெயர்களை சூடிக்கொள்வது வழக்கமான விடயமாகும். நிலானி போன்ற பல மாணாக்கர்களுக்கு தமிழ் மொழியை கற்றுத் தேறுவதில் சுந்தரம் என தனது பெயரை மாற்றிக்கொண்ட சீனப் பேராசிரியரின் பங்களிப்பு மிகப் பெறுமதி வாய்ந்ததாக அமைகிறது. நிலானி, நிறைமதியைப் போன்று பூங்கோதை, கலைமகள் போன்ற தமிழ் பெயர்களில் பல இளையதலைமுறைச் சீனர்கள் தமிழ் மொழிச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டு விளங்குகிறார்கள். இவர்களுடைய முகநூல் பக்கங்கள், யூடியூப் தளங்கள் இப் பணியில் மிகப் பிரசித்தத்திற்குரியதாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சீன, தமிழ் மக்களுக்கிடையிலான உறவு சுமார் 2000 வருடங்களுக்கு மேலாக தொடர்புபடுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். தமிழ் அடையாளத்துடன் கூடிய கட்டடங்கள், எழுத்துக்கள், கலை, பண்பாட்டு அம்சங்கள், உணவு முறைகள் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். தமிழ் கலாசாரம் உலகளவில் கவனத்தை ஈர்க்கச் செய்வதில் இத் தளங்களும் ஏதுவாக அமைகின்றமையும் கவனத்திற்குரியதாகும். பெய்ஜிங் நகரில் உள்ள உலகப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள தாஜ் மஹால் இந்திய நாகரிகத்தின் அடையாளமாகவும் அதனுடன் இணைத்து அமைக்கப்பட்டுள்ள நடராஜர் சிலை தமிழர்களின் வெண்கல சிற்பக்கலையின் கலை நுட்பத்தை எடுத்துரைப்பதாக அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பரத நாட்டியம் தமிழர்களின் அடையாளங்களின் முக்கிய கலை வடிவமாக திகழ்கிறது. இந்தியாவிற்கு வருகைதந்து, இந்தியாவின் புகழ்பெற்ற பரத நாட்டியக் கலைஞரான லீலா சாம்சனிடம் பரத நாட்டியம் கற்றுக்கொண்ட சீன பரத நாட்டியக் கலைஞர் ஜின் ஷன்ஷன் ஆற்றி வருகின்ற பணி குறிப்பிடத்தக்கதாகும். இவர் பயிற்றுவித்த பல மாணவர்கள் இந்தியக் கலையான பரத நாட்டியத்தை சீனாவில் நிலைபெறச் செய்வதில் மிகுந்த பங்களிப்பை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவரது முயற்சியினால் 2006ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நிறுவப்பட்டுள்ள "இந்திய நடனக் கலை மையம்" அமைப்பினால் தொடரப்படுகின்ற பணி இக் கலையை வளர்ப்பதில் சிறப்பிற்குரிய பங்களிப்பை ஆற்றுகின்றமை அவதானத்திற்குரியதாகும்.

தமிழ்ச் சிற்பங்கள் குறித்த அவதானத்தைக் கொண்டதாவும் சீனாவுடனான தொடர்பு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். சீனாவின் ஃபூஜியன் மாகாணத்தின் ட்சுவன்சோ வெளிநாட்டுப் போக்குவரத்து வரலாற்று அருங்காட்சியகம் இவ் விடயங்களை ஆவணப்படுத்துவதில் முக்கியத்துவத்தை வழங்கியுள்ளமை சிறப்பிற்குரியதாகும். விஷ்ணுவின் சிலை, இலட்சுமியின் சிலை, யானை லிங்க வடிவ சிற்பங்கள், தமிழ் மொழி கல்வெட்டுகள் என்பவற்றோடு கையுவான் கோயிலில் இந்துக் கோயில்களின் காணப்படும் கற் தூண்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை கவனத்திற்குரியதாகும். அவ்வாறே சீன, தமிழ் உறவுகளில் போதி தர்மர், யுவாங்சுவாங் ஆகிய ஆளுமைகள் பற்றிய தேடல் மேலும் ஆவணங்களை விரிவுப்படுத்துவதாக அமையப்பெறும்.

சீன வானொலி 1963ஆம் ஆண்டு தமிழ் ஒலிபரப்பினைத் தொடங்கியுள்ளது. இவ் வானொலி ஊடாக ஆற்றி வருகின்ற சேவை தமிழ் மொழி வளர்ச்சிக்கான முக்கிய தடமாக நோக்கப்படுகின்றமை அவதானத்திற்குரியதாகும். இவ் வானொலி ஊடாக பல பிரபலமான அறிவிப்பாளர்கள் தங்களை உலகத் தரத்தில் அடையாளத்திற்குரியவர்களாக நிலைப்படுத்தி வருகிறார்கள். அவர்களுள் மிகந்த அவதானத்தை பெற்றவராகவே நிலானியும் திகழ்கிறார். பதினோராம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் நிலானியின் வரவும் உரையும் பேராளர்களால் மிகுந்த அவதானத்திற்குட்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் உணவுகளில் தோசையை மிகவும் விரும்பும் நிலானியின் யூடியூப் தளத்தில் இது தொடர்பான அவரது விவரணம் மிகுந்த செல்வாக்கை பெற்று விளங்குகிறது. சீன மொழியைப் போன்றே தமிழ் மொழியும் ஓர் கடினமான மொழியாக அமைகின்ற நிலையில் இம் மொழியை கற்க தெரிவு செய்த போது பலரும் விமர்சனத்தை முன் வைத்தார்கள். இருந்த போதிலும் தொடர்ந்து முயற்சி செய்தேன். "சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்" என்பார்கள் அதற்கமைய தொடர்ந்து பல பிரயத்தனங்களில் முயற்சி செய்து தமிழ் மொழியைக் கற்றேன். இன்று எனக்கு உலகளவில் கவனம் அமையப்பெற்றுள்ளது. அதனை



பார்த்து தமிழ் மொழியை கற்க துணிந்த போது விமர்சித்த அனபர்கள் வாழ்த்தும் மாற்றம் மிகுந்த சந்தோசத்தை தருகிறது, எனக் குறிப்பிடும் நிலானி மிகுந்த மரியாதையுடனும் அன்போடும் உரையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. தன்னை அறிமுகப்படுத்தும் போது இரு கரங்களையும் கூப்பிய நிலையிலேயே வணக்கம் தெரிவித்து உரையாற்றத் தொடங்குவதை அவதானிக்க முடிகிறது. இப் பழக்கத்தை தன்னிடம் உரையாற்ற வருகின்ற அனைவரிடமும் கடைப்பிடிக்கின்ற தன்மை அனைவராலும் போற்றப்பட்டமையும் கவனிக்கத்தக்கது.

அவருடனான உரையாடல் தொடர்ந்த நிலையில் தமிழ் கலைகளில் உங்களை மிகவும் கவர்ந்த விடயம் எதுவென வினவிய போது தமிழ்க் கலை அம்சங்கள் அனைத்துமே என்னைக் கவர்ந்தன என மிக ஆர்வமாக பதிலளித்தார். இது வரையில் குறைவான தமிழ் கலை அம்சங்களையே அனுபவிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. எண்ணற்ற கலைகள் உள்ள நிலையில், அவற்றை அறிந்து கொள்ள முயற்சி செய்வேன். தமிழ் சினிமா ஆடல் பாடல்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்காமல் சமூக பிரச்சினைகளைப் பற்றிய அவதானிப்புகளுக்கு முக்கியத்துவம் வழங்குவது சிறப்பிற்குரியது.

இவ்வாறான கதை அம்சங்களுடன் கூடிய படங்களுக்கு சீனாவில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. அண்மையில் பீஜிங்கில் இடம்பெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் "ஜெய்பீம்" திரைப்படம் மிகுந்த வரவேற்பை பெற்றது. அங்குதான் நானும் இத் திரைப்படத்தை பார்த்தேன்.

மக்களின் வாழ்வியல் ஏற்றத்தாழ்வு எவ்வகையிலான தாக்கத்திற்குறப்பட்டது என்பதை எடுத்துரைக்கும் விதம் சிறப்பிற்குரியது. இத்திரைப்படம் சீனாவில் பலரின் அபிமானத்தை வென்றதாக அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

என்னுடைய யூடியூப், முகநூல் பக்கங்கள் தமிழ் அபிமானிகளிடம் மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது. இத் தளங்களில் முதன் முதலாக சீனப்பெருஞ்சுவர் பற்றிய விவரணத்தையே வழங்கியிருந்தேன். பல தவறுகள் இருந்த நிலையில் அத் தவறுகளை அவ்வப்போது சுட்டிக்காட்டிய அன்பர்களின் வழிகாட்டல் என்னை மிகுவும் வழிப்படுத்துயுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் தமிழ் மொழி உச்சரிப்பில் தேர்ச்சி பெற்று வருகின்றமையை என்னால் உணரமுடிகிறது. பேராதரவை வழங்கும் தமிழ் மொழியை நேசிக்கும் அன்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். ர, ற உச்சரிப்பு தொடர்பில் மிகுந்த சிரமத்தை எதிர் நோக்கியதாக குறிப்பிடும் நிலானி சீன மொழியில் அவ்வாறான உச்சரிப்பு இல்லை என்பதையும் குறிப்பிடுகிறார்.

தமிழ் கலாசாரம், சீன கலாசாரம் தொடர்பில் பல ஒற்றுமைத் தன்மைகள் நிலவுகின்றன. அவ்விடயம் தொடர்பிலான ஆய்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறேன். நீண்ட வரலாற்றைக் கொண்ட மொழிகளை தாய்மொழியாக கொண்டவர்கள் என்ற வகையில் சீனர்களுக்கும் தமிழர்களுக்கும் ஓர் ஒற்றுமை நிலவுகிறது. சீனாவின் பல தொல்பொருள் காட்சியகங்கள் அவற்றை ஆவணப்படுத்தி வருகின்றன. உழைப்பு, ஞானம், விருந்தோம்பல் முறைகளில் தமிழர்களுக்கும் மிகுந்த நெருக்கமான தொடர்புகள் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றிய தேடல்களுக்கு பல பல்கலைக்கழகங்கள் தமிழ்த்துறையையும், பிறமொழி கற்கைத் துறைகளையும் மேம்படுத்தி வருகின்றன. எங்களைப் போலவே பல மாணவர்கள் தமிழ் மொழி கற்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். தமிழ் சினிமா தொடர்பிலான அவதானத்தை சீன நண்பர்களிடம் ஏற்படுத்தி வருகிறோம். இச் சினிமா ஊடாக இந்தியர்களினதும் தமிழர்களினதும் வாழ்க்கை முறைகளையும் நம்பிக்கைகளையும் சீனர்கள் உணர்த்து வருகிறார்கள். இரண்டு சமூகங்களின் கிராமிய வாழ்க்கை முறைகளை சரியாக ஒப்பிடுகின்ற போதே இரண்டு சமூகங்களின் பூர்வீக ஒற்றுமைகளை அடையாளம் காணலாம். அதற்கான முயற்சிகளில் எனது பணிகள் தொடர்கின்றன. அத்தோடு பாரம்பரிய ஆடைகள் தொடர்பிலான கவனமும் மேலும் எமது பூர்வீகம் தொடர்பிலான உண்மை நிலையை எடுத்துரைப்பதாக அமையப்பெறும். காலத்திற்கேற்ற தொழில்நுட்பத்தைக் கவனத்தில் கொண்டு அவை ஊடாகவும் அதனை வெளிப்படுத்தி வருகிறோம். "தமிழ் பேசும் சீனர்கள" என்ற முகநூல் பக்கமும், "நிலானி நிலானி" யூடியூப் தளமும் அதற்கான வாய்ப்பை விரிவுபடுத்துகின்றன.

தமிழ் மீது நான் கொண்டுள்ள பற்று ஏனைய நாடுகளுக்கிடையும், சீன, தமிழ் மொழிகளுக்கிடையேயும் பாலமாக விளங்குகின்றமை கவனத்திற்குரியது. சீன மொழியைப் போலவே தமிழ் மொழியும் மிகவும் சக்தி வாய்ந்தது, என்ற அவரது உரையின் சாராம்சம் பேராளர்களின் பாராட்டிற்குரியதாக அமைந்தது.

பயணம் தொடரும்...

# படித்ததும் பகர்வதும் 182

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### அதீத வெப்பநிலை



இலங்கையின் தற்போதைய காலநிலை சடுதியாக மாற்றமடைந்து, வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுகிறது. குறிப்பிட்ட சில மாவட்டங்களில் இவ் அதிகரிப்பு மிகவும் கூடுதலாக உள்ளது. இந்நிலைமை மேலும் ஓரிரு மாதங்களுக்குத் தொடரக் கூடுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் மக்கள் பல்வேறு வகையான கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதன் விளைவாக மக்கள் வெளியே வெயிலில் நடமாடுவதை இயன்ற அளவில் குறைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் விளையாட்டு நிகழ்ச்சிகளோ, வெளியில் செய்யப்படும் விடயங்களோ தவிர்க்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வெப்ப அதிகரிப்பின் காரணத்தினால் பல்வேறு வகையான உடல் நலப் பாதிப்புகள் ஏற்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் இவை சம்பந்தமாக அதிக கவனத்துடனும் அவதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. வீடுகளிலிருந்தும், அலுவலகங்களிலிருந்தும், வியாபார நிலையங்களிலிருந்தும் வெளியே செல்வதை இயன்ற அளவில் குறைத்துக் கொள்வதும், வெயிலில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்வதும், அதிக அளவில் தண்ணீர் அருந்துவதும், வெளியே செல்லும் போது, வெள்ளை நிற எளிமையான பருத்தி ஆடையை அணிதல் அத்துடன் தொப்பி போன்றவற்றை அணிந்து அல்லது குடைகளை பாவித்து வெயிலில் இருந்து தற்காத்துக் கொள்வதும் ஒவ்வொருவரும் தவறாது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளாக உள்ளன.

பெற்றோர் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுத்து தம் பிள்ளைகளை இவ் வெப்பநிலையிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான தற்காப்பு முறைகளை பின்பற்றுதல் அவசியம். இதேபோன்று பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் இவ்விடயத்தில் உரிய கவனத்தை செலுத்துவதோடு தமது சூழலுக்கு ஏற்ற வகையில் பாதுகாப்பு முறைகளை அமுல் செய்வது அவசியமாகும்.

இவை தொடர்பான அரசாங்க அறிவிப்புகள், வைத்தியர்களின் ஆலோசனைகள் சுகாதார உத்தியோகத்தர்களின் வழிகாட்டல்கள் போன்றவற்றை ஒவ்வொருவரும் இயன்ற அளவில் கடைப்பிடித்து இவ் அசாதாரண சூழ்நிலையில் தம்மையும், தம்மைச் சார்ந்தோரையும் பாதுகாத்துக்கொள்ளும் விதத்தில் செயல்பட முன்வர வேண்டும்.

## பிரிந்தார் பெருமை

### உடுதெனிய ஷாபிர் ஹாஜியார்

உலகளாவிய ரீதியில் புகழ் பெற்றவர்கள், நாடளாவிய ரீதியில் பிரபலமானவர்கள் என பலர் இருந்த போதிலும், ஒரு சிலர் தமது பிரதேச மட்டத்தில் சிறப்பிடம் பெற்றவர்களாக திகழ்கின்றனர். இந்த வகையில் கண்டி மாவட்டத்தின், ஹேவாஹெட்ட தேர்தல் தொகுதியின், உடுதெனிய கிராமத்தின் பிரபலம் மிக்க தலைவராக இருந்த எஸ். எம். ஷாபிர் கடந்த மார்ச் மாதம் மூன்றாம் திகதி (2024.03.03) இவ்வுலகை பிரிந்தார். தனது வாழ்நாளின் முழுமையையும் உடுதெனியவின் அபிவிருத்திக்காக செயல்பட்ட மாமனிதர் இவர் என்றால் மிகையல்ல.



1970களில் உடுதெனிய ஜாமிஉல் அஸ்ஹர் ஜும்மா மஸ்ஜிதின் தலைவராக பொறுப்பேற்ற இவர், தனது தலைமையின் கீழான பரிபாலன சபையின் ஆதரவோடு, அரும்பாடுபட்டு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வசதியும் வாய்ப்பும் மிக்க, விசாலமான, இன்று கம்பீரமாக காட்சியளிக்கும் பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்தார். இவரது நிர்வாக காலத்தில் இப்பள்ளி பரிபாலன சபையின் பொதுச் செயலாளராக கடமையாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தமையை நான் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

அன்று, பொருளாதார ரீதியில் பலவீனமாக இருந்த உடுதெனியவில், இன்று சிறப்பாக காட்சியளிக்கும் வசதியான மஸ்ஜிதை நிர்மாணிப்பதற்கு காலஞ்சென்ற ஷாபிர் ஹாஜியாரின் தலைமையில் செயலாற்றியவர்கள் எந்த அளவு தியாகத்தோடு செயல்பட்டு இருப்பார்கள் என்பதை எவரும் உணர்ந்து கொள்ள முடியும். உடுதெனிய முஸ்லிம் வித்தியாலய அபிவிருத்தி சங்க செயலாளராக இருந்து பாடசாலை அபிவிருத்திக்காகவும், கிராம மக்களின் கல்வி அபிவிருத்திக்காகவும், பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த முன்னின்று உழைத்துள்ளார்.

உடுதெனியவில் 1970களில் இளம் வாலிபர்களால் உருவாக்கப்பட்ட 'இளம் தளிர் இயக்கம்', 'வளர்பிறை சனசமூக இயக்கம்' என்பவற்றின் போசகராக இருந்து வாலிபர்களை வழி நடாத்தியுள்ளார். ஊரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல், வீதி அபிவிருத்தி, பஸ் போக்குவரத்து போன்றவற்றிலும் இவரது பங்களிப்புகள் குறிபிடத்தக்கவை.

உடுதெனிய ஜும்மா பள்ளிவாசலோடு இணைந்ததாக மதரசா கட்டடமொன்றை கட்டவும், ஜும்மா பள்ளிவாசலிலிருந்து சற்று தொலைவில் வாழ்வோரின் வசதிக்காகவும் 'மஸ்ஜிதுத் தக்வா' என்ற பெயரில் ஒரு சிறு பள்ளியை நிர்மாணிப்பதற்கும், துணையாக இருந்துள்ளார். சன்மார்க்க பணிகளிலே அதீத ஈடுபாடு கொண்ட ஷாபிர் ஹாஜியார், சிறுவர் முதல் பெரியோர் வரை ஊரிலுள்ள அனைவரும் சன்மார்க்க நெறிமுறைப்படி வாழ வேண்டும் என தொடர்ச்சியாக வழிகாட்டி வந்துள்ளார்.

உடுதெனிய ஜும்மா பள்ளிவாசலின் அபிவிருத்தியையும் நிர்வாகத்தையும் தன் முதன்மை பணியாகக் கொண்டு செயல்பட்ட ஷாபிர் ஹாஜியார், தனதும், தனது சகோதரி ஒருவரதும் காணி ஒன்றையும் பள்ளிவாசலுக்கென அன்பளிப்பு செய்துள்ளார். மேலும் சில காணிகளை பள்ளிவாசலுக்காக வாங்கவும், நன்கொடையாகப் பெறவும் முயற்சி செய்தமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பெறப்பட்ட காணிகளில் பேக்கரி, வீடுகள், கடைகள் என பொருத்தமான கட்டிடங்களை நிர்மாணித்து அவற்றிலிருந்து பள்ளிவாசலுக்கு நிரந்தர வருமானம் வருவதற்கான ஏற்பாடுகளை செய்வதில் முன்னின்று உழைத்துள்ளார்.

இவ்வாறு பள்ளிவாசலை தன் மூச்சாகக் கொண்டு செயல்பட்ட இவரது உயிர், அதே பள்ளிவாசலில் வைத்தே, கடந்த மார்ச் மாதம் மூன்றாம் திகதி அசர் தொழுகையை நிறைவேற்றிய பின் பிரிந்துள்ளமை ஓர் அபூர்வ நிகழ்வாகும்.

பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவராக இவர் இருந்த காலத்திலும், நிர்வாக சபை உறுப்பினராக இல்லாத வேளையிலும், அவ்வப்போதைய பள்ளி நிருவாகங்கள் இவரது ஆலோசனைகளைப் பெற்று செயற்பட்டு வந்தமையும், இவரது ஆலோசனைகளை அமுல் செய்தமையும், இவர் உடுதெனிய கிராமத்தின் உத்தியோக பற்றற்ற தலைவராக இருந்தார் என்பதற்கு சான்றாக உள்ளது எனலாம். அல்லாஹுத்தஆலா அன்னாரின் மறுமை வாழ்வை வெற்றிகரமானதாக ஆக்கி ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்கியருள்வானாக!.

## புது வரவு

### "தேடலில் வந்த தோழன்"

கம்பஹா மாவட்ட, திஹாரியவைச் சேர்ந்த முஷ்பிகா முன்சிர் தந்துள்ள கவிதைத் தொகுப்பு;'தேடலில் வந்த தோழன்'. மூதூர் ஜே.எம்.ஐ. பப்ளிகேஷன் வெளியீடான இந்த நூறு பக்க நூலில், எண்பத்து நாலு பக்கங்களில் 91 கவிதைகள் இடம் பிடித்துள்ளன.

இந்நூலிலுள்ள முஷ்பிகா முன்சிரின் கவிதைகள் பற்றி, பஹமுன, குரிகொடுவ, ஹாதியா கல்வி நிலைய அதிபர் அக்ரம் அப்துல் ஸமத், "நேசத்தையும் ரசனையையும் தாண்டி மற்றொரு பேருண்மை இவளது கவிதைகளில் தொனிக்கின்றது. அதுதான் நம்பிக்கையளித்தல் உற்சாகமூட்டல் துவண்டுவிடாதே நம்பிக்கையிழக்காதே முன்னேறு முயற்சிசெய் என்ற அழைப்புக்கள் எல்லா வரிகளிலும் இழையோடியிருக்கின்றன. அதற்காக வரலாற்றையும் அறிவியலையும் ஆளுமைகளையும் துணைக்கழைத்திருக்கிறாள். இங்கு கவிதை ஊடாக வாழ்வியல் கற்றுத் தரப்படுகின்றது.



இலக்கியத்தின் பணி அதுதான். அவ்வப்போது தனது சிந்தனையில் உதித்தவற்றை கவிதையாய் மொழி பெயர்த்து அதற்கு நூலுருக் கொடுத்திருக்கும் இந்தக் கன்னி முயற்சி பாராட்டத்தக்கது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

"நான் மகிழ்ந்து பாராட்டும் ஒரு விடயம் தான் முஷ்பிகா முன்சிரின் "கலை" ஆர்வம். கற்பனை என்பது ஒரு ஊற்று. அந்த ஊற்றைப் பெரும் நதியாக மாற்றும் ஆற்றல் அந்த கற்பனை வளத்திற்கு உண்டு. இவரது இந்த முயற்சியும், கவிதை கருத்துகளும் வறண்டு போன மானுட பூமிக்குள் ஊடுருவி நறுமணங்கமழும் நந்தவன பூக்களாய் பலரது உணர்வுகளில் மணத்திட வேண்டும் நிலைத்திட வேண்டும்." என வாழ்த்தியுள்ளார், மத்ரசதுன் ஜன்னாவின் முன்னாள் அதிபரும், பிரபல எழுத்தாளருமான ஏ. சி. ஜரினா முஸ்தபா.

நூல்: தேடலில் வந்த தோழன் (கவிதைத் தொகுப்பு), ஆசிரியர்: முஷ்பிகா முன்சிர், முதற்பதிப்பு: 25 பெப்ரவரி 2024, பக்கங்கள்: 100, விலை: ரூபா. 500/=, வெளியீடு: மூதூர் ஜே.எம்.ஐ. பப்ளிகேஷன். தொடர்புகளுக்கு: 0767477897

## நெஞ்சோடு நெஞ்சம்

**உலகமெங்கும் மார்ச் 8ஆம் திகதியன்று சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண்களின் கலாசார, அரசியல், சமூக மற்றும் பொருளாதார சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இத் தினம் அமைந்திருக்கிறது. பாலினச் சார்பு மற்றும் பாகுபாடுகளை முடிவுக்கு கொண்டு வந்து பாலின சமத்துவத்தை அடைவதற்கான முயற்சிகளை ஊக்குவிக்கும் வாய்ப்பாக இந்த நாள் அமைகிறது. 2024ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தின் கருப்பொருள் 'பெண்களில் முதலீடு செய்யுங்கள், முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்' என்பதாகும்.**

**உலகளாவிய ரீதியில் பெண்கள் சகல உரிமைகளும் பெற்று சுதந்திரமாக, சந்தோசமாக வாழ வாழ்த்துகிறோம்!**

### பெண்மையின் தியாகப் பயணம்!

சர்வதேச பெண்கள் தினத்தில் சுமையோடு போராடும் ஒரு பெண்ணின் புலம்பல் இது.



தியாகத்தின் மறு பெயர் தான் இந்தப் பெண்மை! மூத்த இடம் குடும்பத்தில் சுமைகளை சுமக்க ஆரம்பித்த என் ஏழாவது வயது. தொடங்கியது வீட்டு வேலை எனும் கடமைச் சுமை.

பாடசாலை எனும் பெயரில் பதின்மூன்று ஆண்டுகளாய் சுமந்த கல்விச் சுமைகளை, பல்கலை எனும் பெயரிலும், பட்டங்கள் எனும் பெயரிலும் சுமந்து அதில் கொஞ்சம் இளைப்பாற எண்ணி கண்ட என் கனவுக்கு அடுத்த நாமம் கொடுத்தது சமூகம் திருமணம் என்று. கிடைத்ததா ஓய்வு ? வாழ்க்கையை மும்மடங்கு கனத்த சுமையாக மாற்றியது.

சுகமான தலைப் பிரசவமும் சுமையானது. மாப்பிள்ளையின் வெளிநாட்டுப் பிரிவில்.

காரியாலய தொழில், குடும்பப் பணிகள், அடிக்கடி நுகரக் கிடைத்த வைத்தியசாலையின் வாடை, குற்றம் சொல்லும் சுற்றம், இடமாற்று தொல்லைகள் என அனைத்தும் ஓரளவுக்கு ஓய்ந்திட சந்தோஷம் எனும் முளை முதன் முதலாக என் வாழ்விலும் அரும்பு விடும்போதே, இவ்வுலகைப் பிரிந்தாள் என் தாய். இருண்டது சுமை சுமந்த என் பாதை. திணறினேன் எட்டு மாத கர்ப்பிணி. சுமைகளை இறக்கி விட்டு, அழுது நிமிர நீட்டினார் பாஸ்போட்டை என்னவர். நாட்டின் பொருளாதார சுமைகள் என் வீட்டிலும்.

தூக்கமும் பசியும் என்னை மறந்துவிட என் ஆரோக்கியத்தை நானும் மறந்தவளாய்

கட்டாய கடமை எனும் சுமையை சுமந்து, கரடுமுரடான வாழ்கைப் பாதையை கடக்கின்றேன், தினமும் என் பிஞ்சுக் கிளிகளுக்காக... ஓயாமல் தினமும் செல்கிறேன் காரியாலயம். ஓடி முடித்த பின் ஓய்வூதியமாவது வரும் என நினைத்து.

ஒவ்வொரு நாள் தூக்கத்துக்கு முன்னும், இளமையில் சுகமாக இனித்த என்

பெரும் பெரும் இலட்சியக் கனவுகள் எல்லாம் ஒட்டு மொத்த சுமையாக என் இதயத்தை நெருக்கும். வலி தாங்க முடியாமல் என் கண்ணீரும் விடை கூற முடியாமல் நானும் விழி நிறைய கண்ணீருடனும் இதயம் கனத்த சுமைகளுடனும் கழிகிறது என் ஒவ்வொரு இரவும்.

கிடைக்கும் அந்தக் கட்டாய ஓய்வு மரணத்திலாவது என்று நம்பி... தொடர்கிறது பெண்மையின் தியாகப் பயணம், அதே சுமைகளுடன் .... மறுநாளும் காலையிலே ....

**ஆர். சக்கீக்கா பானு**

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

---




ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்

# அடுத்தும் விழப்போகிறதாமே ஒரு கொலை அது யார் என்பதுதான் இப்போதுள்ள கவலை!

சிறிது நேரம் சிந்தித்த படியே அமர்ந்திருந்த துர்கா,
தன்னைக் கொஞ்சம் தயார்படுத்திக் கொண்டு,
மெல்லப் பேச ஆரம்பித்தாள்.

"எந்த இடத்தில் இருந்து ஆரம்பிப்பது என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நேற்று இரவு நீங்கள் இருவரும் மாடிக்குப் போனபிறகு ரொம்பவும் மோசமாகத்தான் கவனித்தார்" மிகவும் கேவலமாகத் திட்டினார். என்னை அவருக்குப் பிடிக்காது என்பதும் தெரியும்!"

"ஏன், அப்படி எல்லாம் உங்களைத் திட்டினார்? அவமானப்படுத்தினார்? இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

அவர் இப்படிக் கேட்டதும்,
லேசாக புன்னகை ஒன்று அவள் முகத்தில் அரும்பியது!
பிறகு,
சிந்துஜனைப் பார்த்துவிட்டு,
தனது பேச்சை ஆரம்பித்தாள் துர்கா.

"அதெல்லாம் அவ்வளவு பாரதூரமான விஷயமில்லை" சிந்துஜனுடன் நான் பேசிக் கொண்டிருந்தது அவருக்கு பிடிக்கவில்லை! அவருடைய கேவலமான பேச்சை கேட்க முடியாமல் நானும் அவருடன் வாயடித்தேன். இதனால் அவருடைய கோபம் இன்னும் அதிகமாகியது. அதனால் இந்த வீட்டை விட்டுப் போய்வரும்படி சொன்னார். நான் போவேன் என்று அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார். ஆனாலும் எனக்கு ஏற்பட்டிருந்த அவமானத்தினாலும் ஆத்திரத்தினாலும் இங்கிருந்து போவதற்கு நான் தூண்டப்பட்டேன். அதனால்தான் இரும்பு பிரோவில் இருந்த நகைகளையும், கொஞ்சப் பணத்தையும் இரண்டு மூன்று உடைகளையும் எடுத்துக் கொண்ட நேற்று இரவே இங்கிருந்து வெளியேறினேன்!"

"ஆமாம், நீங்கள் போனதை நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்!"

"உண்மையாகவா?! அப்போ ஜன்னல் வழியாகப் பார்த்திருப்பீர்கள்!" வியப்புடன் சொன்னாள் துர்கா!

"சரி மேலே சொல்லுங்கள்!"

"அந்த நேரத்தில் போவதற்கு வேறு இடமேதும் இல்லாததால் நான் நேராக தோமஸின் வீட்டுக்குத்தான் போனேன். அவர் நல்ல குணங்களைக் கொண்ட உத்தமமான மனிதர். கருணை உள்ளம் கொண்டவர். அப்பாவின் குணங்கள் எதுவும் அவருக்குப் பிடிக்காது. அப்பா என்னை நடத்தும் விதத்தைப் பார்த்து அவர் மனம் வருந்திப் போயிருந்தார். எந்த நேரத்திலும் எனக்கு உதவ அவர் தயாராக இருக்கிறார் என்பதைப் புரிந்து வைத்திருந்த நான், நடந்த எல்லா விஷயங்களையும் அவரிடம் சொன்னேன்! எல்லாவற்றையும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த அவர் கருணையான வார்த்தைகளால் என்னை சாந்தப்படுத்தி விடியற்காலை ஐந்து மணியளவில் கடிதம் ஒன்றையும் கொடுத்து, கொஞ்சம் பணத்தையும் கொடுத்து ஒரு இடத்துக்கு அனுப்பி வைத்தார். அவர் சொன்ன இடத்திற்கு நான் போன போது, சந்தித்த அந்த மனிதர் கருணையோடு பேசி என்னை நன்கு உபசரித்து தங்குவதற்கு இடமும் கொடுத்தார். பகல் இரண்டு மணி அளவில் பத்திரிகையைப் பார்த்தபோதுதான் இங்கே நடந்த சம்பவத்தை அறிந்து பரபரப்படைந்து உடனே அங்கிருந்து கிளம்பி வந்து விட்டேன்.

"இந்த தோமசுடன் நீங்கள் எவ்வளவு காலமாகப் பழகி வருகிறீர்கள்?"

"சுமார் மூன்று வருடங்கள் இருக்கும். அவர் இங்கு வந்த உடனேயே எனது நட்பு வட்டாரத்திற்குள் வந்து விட்டார்!"

"அதேபோல் உங்கள் இருவருக்கும் இடையில் சைகை பரிமாற்றல் இன்றும் இருந்ததல்லவா?"

சிரஞ்சீவி இப்படிக் கேட்டதும்,
வியப்புடன் அவரைப் பார்த்தார்!

"சைகை பரிமாற்றலா?"

"ஆமாம். மின் விளக்கை எரிய வைத்து!"

"இல்லை அப்படி எதுவும் இல்லை. ஏன் அப்படி எதையாவது நீங்கள் பார்த்தீர்களா?"

"ஆமாம் அப்படி ஒன்றை பார்த்ததாக ஞாபகம். சரி அது போகட்டும். நேற்றிரவு நீங்கள் அங்கே போனபோது அவர் தூங்கிக் கொண்டுதான் இருந்தாரா?"

"இல்லை அவர்தான் வந்து கதவைத் திறந்து என்னை வரவேற்றார். நீங்கள் அவரைச் சந்தித்தீர்களா?" விழிகளை உருட்டியபடியே துர்கா கேட்டாள்.

"ஆமாம், அதேநேரம் உங்களைப் பற்றிய உண்மைகளை மறைப்பதற்காக அவர் நிறையவே பொய்களையும் சொன்னார்!" என்றார் சிரஞ்சீவி.

"அவரது ஆபிஸ் அறையில் இருந்த சோபா ஒன்றில்தான் நான் விடியும் வரையில் சாய்ந்திருந்தேன்" அவர் என்னமோ எழுதிக் கொண்டிருந்தார்!"

அவள் சொன்னது எல்லாமே உண்மைதான் என்பது சிரஞ்சீவிக்குப் புரிந்தது.

"சரி, உங்கள் சப்பாத்துக்களில் ஒன்று எப்படி காணாமல் போனது என்பதைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?"

"ஓ, உங்களுக்கு அதுவும் தெரியுமா?"

கேட்டுவிட்டு மெல்லச் சிரித்தார் துர்கா.

"நேற்றிரவு அவரது பங்களாவிற்குப் போகும்போது நான் ரொம்பவும் பயந்து விட்டேன். யாரோ என்னைப் பின் தொடர்ந்து வருவதைப் போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது! பேய் பிசாசுகளைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்ததனால் அப்படி



ஏதாவதாக இருக்குமோ என்று கூட சந்தேகமாக இருந்தது. அதன்பிறகு கொஞ்சத் தூரம் ஓடிச் சென்றேன். பேய் ஒன்று புதர்களுக்குள் மறைந்தபடியே என்னைப் பின் தொடர்வதாக நான் உணர்ந்து கொண்டேன். அந்த சமயத்தில்தான் சகதியில் சிக்கி எனது சப்பாத்தும் காணாமல் போனது. எனக்கு ஏற்பட்டிருந்த பயத்தினால் அதைத் தேடுவதற்கு முயற்சிக்காமல் நான் ஓடியே வந்து விட்டேன்".

"ம்.. நீங்கள் மறைந்து போனதன் மர்மம் இப்போது தெளிவாகிவிட்டது. அதில் எனக்கொரு நிம்மதி. இனி அடுத்ததாக செல்வராகவனைப் பற்றிக் கொஞ்சம் பேசுவோம். ம்... துர்கா உங்கள் அப்பா டைரி எழுதுவதைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

ஏன் தெரியாமல்? நன்றாகத் தெரியுமே? தனது உயிரைவிட மேலாக பாதுகாத்த டைரிகள் அவரிடம் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன்!"

"ஆனால் அப்படியான டைரிகள் எதுவும் அவரது ஆபிஸ் அறையில் இருக்கவில்லையே. நான் எல்லா இடங்களிலும் நன்றாகத் தேடிப் பார்த்தேன்!" என்றார் சிரஞ்சீவி.

"அது ஒரு டைரியைப் போல் இருக்கவில்லை. அதைவிட கொஞ்சம் பெரியதாகவே இருந்தது. அநேகமாக அது அவரது சுயசரிதையை எழுதிய ஒன்றாகவே எனக்குத் தோன்றியது. அந்த புத்தகத்தில் இருந்து கிழிக்கப்பட்ட தாள் ஒன்றை ஒருநாள் நான் பார்த்தேன். அதில் சில வார்த்தைகளே, எழுதப்பட்டிருந்தன. ஆனாலும் எல்லாம் அழிக்கப்பட்டிருந்தன.

"அந்த வார்த்தைகள் என்ன என்று உங்களுக்கு நினைவிருக்கிறதா துர்கா?" ஆர்வத்துடன் கேட்டார் சிரஞ்சீவி.

அவர் இப்படிக் கேட்டதும்,
சிறிது நேரம்,
சிந்தனையுள் மூழ்கினாள் துர்கா.
பிறகு,

"ம் லேசாக ஞாபகம் வருகிறது!"

"சொல்லுங்களேன் பார்ப்போம்!" பரபரப்படைந்தார் சிரஞ்சீவி.

"இந்த கால கட்டத்தில்தான் மகேந்திரன், இவ்வளவு தான் அதில் இருந்தது!"

"மகேந்திரன்.. ம்.. அவன்தான் வங்கியில் கொள்ளை அடித்தவன். இவர்கள் இருவரிடமிருந்தும் தப்பிச் சென்றவன்!" என்று சொலமனைக் காட்டியபடியே சொன்னார் சிரஞ்சீவி.

"ஆமாம் எனக்கும் ஞாபகம் இருக்கிறது. செல்வராகவனுக்கும் எனக்கும் தண்ணி காட்டி விட்டு இந்தியாவுக்கு பாய்ந்தோடிய திருடன். தனது வாழ்க்கை வரலாற்றில் இந்த சம்பவத்தையும் செல்வராகவன் குறிப்பிட்டிருக்க வேண்டும். அதை வாசிக்கக் கிடைத்தால் சுவையாக இருக்கும் இல்லையா?" என்றார் சொலமன்.

"நான் செல்வராகவனின் மேசையை ஆராய்ந்து பார்த்தேன். அது ஒரு புதுமையான மேசையாகவே இருந்தது. எல்லா இடத்திலும் ரகசியமான லாச்சுகள் நாளை காலையில் அந்த மேசையை துண்டு துண்டாகக் கழற்றிப் பார்க்கலாம் என்று முடிவு செய்திருக்கிறேன்.!

திடீரென்று அவரது பேச்சு நின்றது!

அவர் புருவங்களை உயர்த்தி, சாத்தப்பட்டிருந்த வாசல் கதவைப் பார்த்தார்.

பூனையைப் போல் மெல்ல மெல்ல நடந்து சென்று,
படாரென்று கதவைத் திறந்தார்.
அங்கே,

நமக்கெல்லாம் அறிமுகமான ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார்.

அவர்,

"ஓ.. வணக்கம் தோமஸ் அவர்களே.. நீங்கள் எப்போது இங்கே வந்தீர்கள்?" என்று

வியப்புடன் அவரைப் பார்த்த படியே கேட்டார் சிரஞ்சீவி,
சிரஞ்சீவியைப் பற்றியோ,
அவர்கேட்ட கேள்வியைப் பற்றியோ எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை தோமஸ்.

அவர் கூர்மையான பார்வை,
துர்காவின் மீதே பதிந்திருந்தது,
அவளது முகமும்,
அவரது தோற்றத்தினால்,
பூரண சந்திரனாக மாறியிருந்தது.

"வாங்க.. உள்ளே வாங்க?"

அவரை வரவேற்ற படியே எழுந்து நின்றார்கள் துர்கா!

**(தொடரும்)**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 105

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | 04 | 05 |
| 06 | ■ | 07 | 08 | ■ | 09 |
| ■ | 10 | 11 | 12 | ■ | 13 |
| 14 | ■ | 15 | ■ | 16 | ■ |
| 17 | ■ | ■ | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | ■ | 24 | 25 |

பெயர் ..........................................................

வகுப்பு ..........................................................

தொலைபேசி இல ..........................................................

பாடசாலை பெயர் ..........................................................

வதிவிட முகவரி ..........................................................

..........................................................

.............................. ..........................................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) குதிரை போன்ற சாயல் உள்ள மிருகம். ஆனால் குதிரை போன்று வேகமாக ஓடக்கூடியதல்ல இம்மிருகம். பொதி சுமப்பதற்காக அந்நாளில் பயன்படுத்தப்பட்ட மிருகம்.

(4) மழை பெய்யாத மிகவும் வரட்சியான காலப்பகுதியைக் குறிக்கின்ற சொல்.

(7) இரண்டு பேரை சுமந்தவாறு மிகவும் வேகமாக ஓடக்கூடிய பலம் வாய்ந்த மிருகம். அக்காலத்தில் இம்மிருகம் இருந்திருக்காவிடில் மன்னர்கள் இராச்சியங்களையே உருவாக்கியிருக்க மாட்டார்கள். (தலைகீழான சொல்)

(10) வளிமண்டலத்தில் உருவாகின்ற தாழமுக்கம் காரணமாக, காற்று வேகமாக வீசுவதால் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தம். இந்த அனர்த்தம் காரணமாக உயிர், உடைமை இழப்புகள் ஏற்படுவதுண்டு.

(18) பருத்தி, இலவம் போன்ற மரங்களிலிருந்து பெறப்படுகின்ற மிருதுவான பொருள். ஆடை, தலையணை போன்றவற்றின் தயாரிப்பில் இது மூலப்பொருள்.

(21) காணியைச் சுற்றி சீமெந்தும் கல்லும் கொண்டு கட்டப்படுகின்ற தடுப்புச்சுவர்.

(24) உணவு உண்ண வேண்டிய தேவை ஏற்பட்டதும் எமக்கு உண்டாகின்ற உணர்வு இது. உணவு உட்கொண்ட பின்னர் நீங்கி விடும். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) சோறு உண்ண வேண்டுமானால், அதனுடன் சேர்த்து உண்பதற்கு இதுவும் தேவை.

(3) ஒவ்வொரு விடயத்திலும் அவதானம் அவசியம். ஆனால் வீணான அச்சம் கூடாது. உள்ளத்தில் இருக்க வேண்டிய துணிச்சலைக் குறிக்கும் மற்றொரு சொல்.

(5) பெரும்பாலும் சேறு நிறைந்த அல்லது ஈரலிப்பான நிலத்தில் வாழ்கின்ற புழு போன்ற தோற்றமுடைய உயிரினம். மனிதனில் மாத்திரமன்றி மிருகங்களின் உடலிலும் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து உயிர்வாழும் பிராணி. (தலைகீழான சொல்)

(8) உணவை வெட்டியும், அரைத்தும் உண்பதற்கு உதவுகின்ற அங்கம். மனிதனிலும் உள்ளது.

(14) தாவரங்களின் உறுப்பு இது. அழகிய தோற்றமும், நறுமணமும் கொண்டது. இதில் இனிமை மிகுந்த அமுதம் சுரக்கும். (தலைகீழான சொல்)

(16) எமது உணவுப் பொருட்களுக்கும், தேநீருக்கும் மணமும் சுவையும் சேர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வேர்த்தண்டுப் பகுதி.

(20) எமக்காக நிறையுணவான திரவ ஆகாரம் தருகின்ற அப்பாவி மிருகம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 104

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. எழுத்தாளர் 07. புண் 12. பாரதி 15. நாய்
17. அகம் 20. கவி 23. நாம் 25. அகதி

**மேலிருந்து கீழ்**

01. எண்ணெய் 02. புழு 04. தாவரம்
06. ஏர் 14. கடுகதி 16. நாகம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 103

### பாராட்டு பெறுவோர்

**1. கு. துவாரகன்**
தரம் 07C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை - 01.

**2. எம்.ஏ. முஹன்னித்**
தரம் 08, அறபா வித்தியாலயம்,
இல. 170A, அட்டாளைச்சேனை - 08.


**3. எம்.வை. யூசுப் உமர்**
தரம் 05, ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி,
இல. 17/1, தொரகமுவ வீதி, உடதலவின்ன, மடிகே.

**4. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**5. லீனா மர்யம் முஜாஹித்**
தரம் 06, தாருல் உலூம் மு.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 105
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.


தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**இல்வாழ்க்கை : ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து.**

*தெளிவுரை :*
*மற்றவரை அறநெறியில் ஒழுகச்செய்து தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை, தவம் செய்வாரைவிட மிகச்சிறந்த வல்லமை உடைய வாழ்க்கையாகும்.*

## சூரியனும்... குகையும்



சூரியனும் குகையும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தன. குகையால் ஒளி என்றால் என்ன என்பதையும், தெளிவு என்றால் என்ன என்பதையும் புரிந்துகொள்ள இயலவில்லை. அதேபோல், சூரியனுக்கு இருட்டு என்றால் என்னவென்றே தெரியவில்லை.

எனவே, இருவரும் தத்தமது இடத்தை மாற்றிக்கொண்டு அவற்றைப் புரிந்துகொள்ள விரும்பினர். குகை, வானத்தில் ஏறி சூரியனின் இடத்திற்கு சென்றது. சூரியன், பூமிக்கு இறங்கி வந்து குகையின் இருப்பிடத்துக்குச் சென்றது. சூரியனின் இடத்தை தற்போது அடைந்திருந்த குகை, 'அருமை! வெளிச்சம் என்றால் என்ன என்பது இப்போது தான் எனக்குப் புரிகிறது. பிரபஞ்சத்தில் உள்ள பொருட்கள் யாவும் தெளிவாகத் தெரிகின்றன. நான் இதற்கு முன் எவ்வளவு கீழ்மையாக வாழ்ந்தேன் என்பது இப்போது தான் புரிகிறது!' என்றது. குகையின் இருப்பிடத்தை அடைந்திருந்த சூரியனோ, 'எனக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை!' என்றது. அறியாமையில் உள்ளவர்கள் ஞானிகளின் அண்மையை அடையும்போது அவர்களது பார்வைகள் தெளிவாகி, உண்மையின் தரிசனமும் ஞானமும் அடையக் கிடைக்கிறது. அதனால், அவர்கள் தங்களது கடந்த கால வாழ்விலிருந்து தற்கால நிலைமையில் பெரும் வேறுபாட்டை உணர்கின்றனர். ஞானிகளைப் பொறுத்தவரை, அவர்கள் அறியாமை நிறைந்தவர்களின் பெரும் கூட்டத்தில் இருந்தாலும், அந்த அறியாமை அவரை சிறிதும் பாதிக்கப் போவதில்லை. தன்னுடைய ஞானத்தின் ஒளியில் அவர் எப்போதும் தெளிவாகவே இருப்பார்.

## அதிசயம் ஆனால் உண்மை

1. முதன் முதலில் நாணயத்தில் தனது உருவத்தைப் பொறித்தவர் மாவீரன் அலெக்சாண்டர்.

2. தொடர் கதைகளின் முடிவில் 'முற்றும்', 'முற்றிற்று' என்னும் சொற்களைப் பயன்படுத்துகின்றோம். இதனை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தவர் இளங்கோவடிகள். இவர் இயற்றிய சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு காண்டத்தின் முடிவிலும் நூலின் முடிவிலும் இச்சொற்களை அவர் பயன்படுத்தியுள்ளார்.


3. உலகின் முதன் முதல் வேலை நிறுத்தம் செய்தவர்கள் இசைக் கலைஞர்கள். கி.மு. 309இல் கிரேக்க நாட்டில் ஜூபிடர் தேவதையின் கோயிலின் இசைக் குழுவிலிருந்த ஒரு புல்லாங்குழல் கலைஞன் கோயிலினுள் தங்களை மதிய உணவு உண்ண அனுமதிக்காததால் தன் சகாக்களுடன் கோயிலின் வெளியே சென்று இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் வேலை நிறுத்தம் செய்துள்ளான்.

4. 'அக்குபஞ்சர்' சிகிச்சை முறையை கண்டுபிடித்தவர் 'சென்சங்' என்ற சீனப் பேரரசர். தேநீரை சீனர்கள் கண்டுபிடித்தாலும் அதனை முதன் முதலில் பயன்படுத்தியவர்கள் இந்தியர்களும் ஜப்பானியர்களும் தான்.

5. உலக வரலாற்றில் சட்டங்களை முதலில் தொகுத்து எழுதியவர் கி.மு. 18ஆம் நூற்றாண்டில் பாபிலோனை ஆண்ட 'ஹமுராபி' என்ற அரசன். இவர் சட்டங்களை 7 1/2 கல் தூண்களில் அழியாதவாறு செதுக்கி உள்ளார்.

7. பிரான்ஸ் சக்கரவர்த்தி நெப்போலியனே முதன் முதலில் 'செவாலியர்' விருதை உருவாக்கினார். தற்போது கலை, கல்வி, இலக்கியத்திற்கு வழங்கப்படும் இவ்விருது ஆரம்ப காலங்களில் சிறந்த போர் வீரர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது.

கு. அவினாஷ் - வத்தளை



## டார்வினின் 'Humbug'

விஞ்ஞானப் பேருண்மைகளுள் ஒன்றான பரிணாம வாதம் என்பதைக் கண்டவர் டார்வின். ஒரு நாள், குறும்புக்காரச் சிறுவன் ஒருவன், ஒரு பூச்சியின் உடலை வெட்டி அதன் தலையை டார்வினிடம் காட்டி, 'இது என்ன பூச்சி' தாத்தா என்று கேட்டான்.

டார்வின் அதைப் பார்த்து விட்டு, பிடிக்கும் போது இது 'ஹம்' என்று கத்தியதா? என்று கேட்டார்.

சிறுவன், மகிழ்ச்சியோடு 'ஆம்' என்றான்.

உடனே, டார்வின் அப்படியானால் இது 'ஹம்பக்' பூச்சி என்றார்.

இதைக் கேட்டதும் சிறுவன் டார்வினை ஏமாற்றி விட்டதாகக் குதூகலித்தான்.

'ஹம் பக்' (Humbug) என்றால், பாசாங்கு ஏமாற்று என்று பொருள்படும்

## இவ்வார மழலை



பி. கௌஷிக்

பிரசாத் – லாவன்யா






**கே. கிஷாலன்**
தரம் 09, லசாலி சர்வதேச பாடசாலை, கொழும்பு.



**ஷஹ்லா ஷிஹார்**
07C, அல் முபாரக் தேசிய பாடசாலை, மல்வானை.

## மூன்று நாள் தவணை



ஓநாய் ஒன்று பசிக்கு உணவு தேடி அலைந்து கொண்டிருக்கும்போது, ஒரு முயலை பிடித்து, 'முயலே, உன்னைக் கொன்று திண்ணப் போகிறேன்' என்றது. பீதியடைந்த முயல், நடு நடுங்கி என் மீது கருணை காட்டு, என் குழந்தைகள் எனக்காகக் காத்திருக்கும். என்னை விட்டு விடு' என்று கெஞ்சியது.

ஓநாய், கிடைத்த இறையை விட்டு விடுமா? 'எனக்கு மூன்று நாள் தவணை கொடு' என்றது முயல். 'சரி' என்று சம்மதித்து விட்டது ஓநாய்.

ஒரு நாள், இரண்டுநாள், மூன்றுநாள் தவணை முடிந்தது. 'முயலே, நீ கேட்ட தவணை முடிந்தது' என்றது. முயல் பரிதாபமாகக் கத்தத் தொடங்கியது. 'ஏன் ஓலமிடுகிறாய்?' என்றது ஓநாய்.

'ஓநாயே, எதற்காக தவணை கொடுத்தாய்? என்னைக் கண்ட அன்றே கொன்றிருக்க வேண்டும். அடுத்த மூன்று நாள், நான் பட்ட வேதனை என்னைக் கொல்லாமல் கொன்று விட்டது' என்றது முயல்.

சாரணா கையூம்...

## கொடுங்கோல் மன்னர்கள்


### காலிகுலா



கி.பி. 37ஆம் ஆண்டு உரோமாபுரி சக்கரவர்த்தியான இவர் முதல் 6 மாதங்கள் வரை மிகத் திறமையாக ஆட்சி செய்தார். பின்னர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு மனநிலை பாதிக்கப்பட்டு மிகவும் கொடூரமானவராக மாறினார். வீர விளையாட்டுக்கள் நடைபெறும் கொலோசியம் அரங்கில் 'கொலைத் திருவிழா' நடாத்தி மகிழ்ந்தார். அரண்மனையில் வளர்க்கப்படும் சிங்கங்களுக்கு குற்றவாளிகளையே உணவாகப் போடுவார். தன் வழிக்கு வராதவர்களை மிரட்டி அடிமைகளைப் போல் நடத்துவார்.

இறுதியில் தன்னையே கடவுள் என அறிவித்தார். உரோம் கடவுள்களின் சிலையில் உள்ள தலைகளைப் பெயர்த்து தனது தலையின் சிலையை அவற்றில் பொருத்தினார். தனக்கென ஒரு கோயிலை அமைத்து தனது உருவ சிலையை நிறுவினார். அந்த சிலையின் முன் பலரை பலி கொடுத்தார். இவரது ஆட்சியில் நான்காவது மெய்காப்பாளன் ஒருவனால் படுகொலை செய்யப்பட்டார்.

### நீரோ



ரோமானிய சக்கரவர்த்தியான இவரது முதல் ஐந்தாண்டு கால ஆட்சி அமைதியாகவே நடந்தாலும் பின்னர் தான்தோன்றித் தனமாக ஆட்சி செய்ய ஆரம்பித்தார் நீரோ. தனது தாய் மற்றும் மனைவியை கொன்றார். கி.பி. 64ஆம் ஆண்டு உரோம் நகரில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இதற்குக் காரணம் நீரோ தான் என சந்தேகம் ஏற்படவே கிறிஸ்தவர்களைக் கொடூரமாக கொன்றார். சிலர் கம்பத்தில் கட்டப்பட்டு கொளுத்தப்பட்டனர். பலர் சிலுவையில் அறையப்பட்டனர். சிலருக்கு உடலில் விலங்குகளின் தோல் போர்த்தி தைக்கப்பட்டு சிங்கங்களின் முன் வீசப்பட்டனர்.

தீக்கிரையான ரோமை மிகவும் பொருட் செலவில் கட்ட ஆரம்பித்தார். அதற்காக பல கடுமையான வரிகளை விதித்தார். இவருக்கு எதிராக கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டு செனட் இவரை மக்கள் விரோதி என அறிவித்தது. இவரை கைது செய்ய படைவீரர்கள் வருவதை தெரிந்து தற்கொலை செய்து கொண்டார்.

கு. அவினாஷ் - வத்தளை

## செவ்வானத்தின் இரகசியம்

சூரியன் உதயமாகும் போது வானில் தோன்றும் வண்ணங்களை விட, சூரியன் மறையும்போது தோன்றும் வண்ணங்கள் அதிகமாகவும் அழகாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா?

காலை நேரத்தில் காற்றில்/வாயு மண்டலத்தில் இருக்கும் தூசு துகள்களை விட மாலை நேரத்தில் இருக்கும் தூசு துகள்களின் எண்ணிக்கை அதிகம். நாள் முழுதும் கிடைத்த சூரிய வெப்பத்தால் உந்தப்பட்ட எக்கச்சக்கமான துகள்கள் காற்று மண்டலத்தில் மாலை நேரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும். சூரிய ஒளி இவற்றினூடே வரும்போது தான் அழகழகான வண்ணங்களைக் காண முடிகிறது.

அலைநீளம் (wavelength) குறைவாக இருப்பதால், பச்சை, நீலம் ஆகிய நிறங்கள் ஒளிச்சிதறலால் சூரிய ஒளிக்கற்றையிலிருந்து மறைந்துவிடுகின்றன. செவ்வானத்தின் இரகசியம் இதுதான். எரிமலை வெடிக்கும்போது வரும் புகைக்கும் (Ejecta) இந்த மாதிரி சூரிய ஒளியை அழகான வண்ணங்களாக மாற்றும் தன்மை இருக்கிறது. அதே நேரத்தில், எரிமலைக் குழம்பு சாம்பலாக மாறியபின், அந்தச் சாம்பலுக்கு சூரிய ஒளியிலிருந்து வரும் வண்ணங்களைத் தடுக்கும் தன்மை இருக்கிறது.

# விளையாட்டு




# உலகக் கிண்ணத்திற்கு தயாரா ?

பங்களாதேஷுக்கு எதிரான டி20 போட்டிகள் முடிந்துவிட்டன. இப்போது இலங்கைக்கு இருப்பது டி20 உலகக் கிண்ணம் தான். அதற்கு இடையே சர்வதேச அளவில் டி20 போட்டிகள் இல்லை. இன்னும் மூன்று மாதங்களில் அதாவது எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறும்.

இதற்கிடையே இந்திய பிரீமியர் லீக் போன்ற சர்வதேச லீக் போட்டிகள் தான் டி20 மட்டத்தில் நடைபெறப்போகிறது. அந்த லீக் கிரிக்கெட்டில் இலங்கையின் முழு வீரர்களும் விளையாடுவதும் இல்லை. இதனை வைத்து தேசிய அணியை தேர்வு செய்யவும் முடியாது.

அதேபோன்று ஒருநாள், டெஸ்ட் கிரிக்கெட்டின் ஆட்டத்தை வைத்து டி20 அணியை தேர்வு செய்யவும் முடியாது. அடிப்படையில் அவ்வாறான தேர்வு முழுமையாக பொருந்தவும் செய்யாது. எனவே, டி20 உலகக் கிண்ணத்திற்கு இப்போதைய தருணத்தில் முழு அணியும் தயாராக இருக்க வேண்டும்.

தேர்வுக் குழு தலைவர் உபுல் தரங்கவை பொறுத்தவரை, அனுபவத்துக்கு முன்னுரிமை வழங்கிய அணி ஒன்றே தேர்வு செய்யப்படும் என்கிறார். கடந்த சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான், கடைசியாக பங்களாதேஷுக்கு எதிரான டி20 போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட அணிகளை பார்க்கும்போது தரங்கவின் கூற்று புரிந்துவிடும்.

மத்திய வரிசையில் சகல துறை ஆட்டக்காரராக அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க சேர்க்கப்பட்டது அணிக்கு பலத்தை தந்திருக்கிறது. நீண்ட காலமாக பெரும் குறையாக இருந்த மத்திய வரிசையை பலப்படுத்தும் அதே நேரம் இவர்களின் பந்துவீச்சு வரிசையின் இடைவெளியை நிரப்புவதாகவும் உள்ளது.

குறிப்பாக மத்தியூஸுக்கு பந்துவீச முடியும் என்றாலே டி20 அணிக்கு சேர்ப்பதாக தேர்வுக் குழுவினர் ஆரம்பத்திலேயே நிபந்தனை விதித்து அதற்கு மத்தியூஸ் ஒப்புக்கொண்டதை அடுத்தே அணிக்கு அழைக்கப்பட்டார் என்பதை அண்மையில் மத்தியூஸே கூறியிருந்தார்.



மறுபுறம் தசுன் ஷானக்க அண்மைக்காலமாக சோபிக்கத் தவறினாலும் அவர் எந்த நேரத்திலும் ஆட்டத்தை திசைதிருப்பக் கூடிய வீரர். எனவே, உலகக் கிண்ணத்தில் அவரை தக்கவைப்பது அவசியம் என்று தேர்வுக் குழுவினர் நினைக்கக் கூடும்.

டி20 இன் புதிய அணித் தலைவர் வனிந்து ஹசரங்க ஒரு வீரராக உலகத் தரம் வாய்ந்தவர். இப்போது அணித் தலைவராகவும் முக்கிய பங்காற்றுவது கடந்த மூன்று போட்டித் தொடர்களையும் பார்த்தால் தெரிகிறது. என்றாலும் ஆப்கானுக்கு எதிரான கடைசி டி20 போட்டிகளில் நடுவருடன் முரண்பட்டு இரண்டு போட்டித் தடை வாங்கியது உகந்ததாக இல்லை.

'அவ்வாறான பரபரப்பான போட்டி ஒன்றுக்கு நடுவே வனிந்து தனது அமைதியை இழந்துவிட்டார் என்றே நான் நினைக்கிறேன். என்றாலும் அணித் தலைவராக எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் தெரிந்திருக்க வேண்டும். வனிந்து அணியில் முக்கியமான வீரர் என்பதோடு இது மீண்டும் மீண்டும் நடப்பதை நாம் விரும்பவில்லை ஏனென்றால் இரண்டு போட்டிகள் தடை விதிக்கப்பட்டது பெரும் இழப்பாகும்' என்று உபுல் தரங்க அணி குறித்து அண்மையில் நடத்திய ஊடக சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த காலங்களில் இலங்கை அணி தோல்விகளை சந்தித்தது மாத்திரம் அன்றி அணியின் நடத்தையும் மோசமாக இருந்தது. இந்த சூழலில் கடந்த காலத்தில் நடத்தை மீறலுக்காக போட்டித் தடை கூடப் பெற்ற விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான நிரோஷன் திக்வெல்ல இலங்கை டி20 அணிக்கு அழைக்கப்பட்டது சற்று சலசலப்பை ஏற்படுத்தியது.

'நடத்தை மிக முக்கியம். நான் திக்வெல்லவுடன் பேசினேன். அணி என்ற வகையில் அதற்கே முதலிடம் இருக்கும். ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை பற்றி நான் அவருக்கு விளக்கிக் கூறினேன். ஆட்டத்திறமையை விடவும் ஒழுக்கம் முக்கியமானது' என்றார் தரங்க.

பங்களாதேஷுக்கு எதிரான டி20 தொடரில் இடம்பெற்ற குசல் ஜனித் பெரேரா சுகவீனமுற்றதை அடுத்தே அந்த இடத்திற்கு திக்வெல்ல அழைக்கப்பட்டார். உலகக் கிண்ணம் அண்மித்திருப்பதாலேயே பல இளம் வீரர்கள் இருக்கும்போது திக்வல்ல அழைக்கப்பட்டார் என்கிறார் தரங்க.





'(பத்தும் நிசங்க மற்றும் குசல் பெரேரா) காயங்கள் ஏற்பட்டிருக்கும் நிலையில் ஆரம்ப வரிசையில் ஆடக்கூடிய வீரர்களை தேடினோம். இதில் ஷெவோன் டானியல், லசித் க்ரூஸ்புள்ளே மற்றும் திவல்ல இருந்தனர். ஆனால் முதல் இருவரும் இன்னும் இளம் வீரர்கள். அவர்களின் அண்மைய ஆட்டங்களை பார்க்கும்போது அவர்களை தேர்வு செய்வது கடினமாக இருந்தது.

இலங்கை அணிக்கு 10, 15 ஆண்டுகள் ஆடக்கூடிய ஷெவோன் போன்ற திறமையான வீர்கள் இருக்கிறார்கள். அவ்வாறான வீரர்களை கடினமான நேரத்தில் கைவிடுவதா? அல்லது அவர்களை தக்கவைத்து உள்ளூர் போட்டிகள், ஏ அணியில் ஆடச் செய்து அனுபவத்தை கொடுத்து பின்னர் அணிக்கு அழைப்பதா?

நாம் அணித் தலைவர், அதேபோன்று பயிற்சியாளருடன் பேசினோம், உலகக் கிண்ணத்தை எதிர்கொண்டிருக்கும் நேரத்தில் நிரோஷனை அழைப்பதே சிறந்த தேர்வு என்று அவர்களும் நினைக்கிறார்கள்' என்றும் தரங்க கூறினார்.

என்றாலும் பத்தும் நிசங்க, குசல் பெரேரா ஆகியோரே எதிர்வரும் உலகக் கிண்ணத்தில் ஆரம்ப வரிசையில் ஆட முதன்மையான தேர்வாக இருப்பார்கள். மத்திய வரிசையில் சதீர சமரவிக்ரம மற்றும் உப தலைவர் சரித் அசலங்க சிறப்பாக செயற்படுகின்றனர்.

என்றாலும் டி20 போட்டிகளில் மத்திய வரிசையில் ஆடக் கூடிய கச்சிதமான வீரர் பானுக்க ராஜபக்ஷ என்பது எல்லோருக்கும் தெரிந்தது. என்றாலும் அவருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. அது பற்றி தரங்கவிடம் கேட்டபோதும்,

'பானுக்க இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் தேசிய சுப்பர் லீக் போட்டியில் அணி ஒன்றில் இருந்தார். அந்த அணியின் முகாமையாளருடன் பேசியிருக்கும் அவர், தனக்கு ஏதோ உபாதை இருப்பதாகவும், மருத்துவர் ஓய்வெடுக்கும்படி கூறியதாகவும் தெரிவித்திருக்கிறார். இதனால் அவர் இந்தப் போட்டித் தொடரில் இருந்து விலகுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். இப்படியான சூழலில் அவரை தேர்வில் எடுத்துக்கொள்ள எம்மால் முடியாமல்போனது' என்றார்.

பானுக்கவை பொறுத்தவரை இப்போது அவரது போக்கு மாறிவிட்டது. தேசிய அணியை விடவும் சர்வதேச மட்டத்தில் நடைபெறும் லீக் போட்டிகளிலேயே அவதானம் செலுத்துகிறார். அவ்வாறான லீக் கிரிக்கெட்டில் காட்டும் திறமை அடிப்படையில் தேசிய அணிக்கு அவரை தேர்வு செய்ய முடியாது என்பதே தேர்வுக் குழுவினரின் நிலைப்பாடு. உண்மையில் அவர் அண்மைக் காலத்தில் உள்ளூர் போட்டிகளில் ஆடுவதற்கு தயக்கம் காட்டி வருகிறார். எல்லாவற்றையும் பணத்தை வைத்து மதிப்பிட்டால் இப்படியான நிலை ஏற்படும்.

பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன பிரதான சுழற்பந்து வீச்சாளராக செயற்பாடுவதோடு பிரதான வேகப்பந்த வீச்சாளரான துஷ்மன்த சமீர தற்போது உபாதைக்கு உள்ளாகி இருந்தபோதும் உலகக் கிண்ணம் நெருங்கும்போது உடல் தகுதி பெறுவார் என்று எதிர்பார்க்கலாம்.

அவருடன் டில்ஷான் மதுஷங்க, மதீஷ பதிரணவும் பிரதான வேகப்பந்து வீச்சாளர்களாக செயற்படுவதோடு அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் தசுன் ஷானக்க மேலதிக பந்துவீச்சாளர்களாக உள்ளனர்.

உபாதைகள் இல்லாத பட்சத்தில் அடுத்த டி20 உலகக் கிண்ணத்திற்கான முழு அணியும் தயாராகிவிட்டது என்றே கணிக்க முடிகிறது.

'அணியை தேர்வு செய்யும்போது சுழற்பந்து மற்றும் வேகப்பந்தில் சமநிலையை நாம் பேண வேண்டும். மேற்கிந்திய தீவுகளின் மந்தமான ஆடுகளங்கள் இருந்தபோதும் அமெரிக்காவில் எப்படி ஆடுகளம் இருக்கும் என்பது எமக்குத் தெரியவில்லை. முதல் சுற்றில் அமெரிக்காவில் எமக்கு மூன்று போட்டிகள் இருக்கின்றன. இதுவரை தெரிந்தமட்டில் நியூயோர்க்கில் அடிலெயிட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட ஆடுகளத்தில் போட்டி நடைபெறப்போகிறது. ஆடுகளங்களில் அங்கு மேற்கிந்திய தீவுகளை விடவும் வித்தியாசமாக இருக்கும்' என்கிறார் தரங்க.

எனவே, எதிர்வரும் டி20 உலகக் கிண்ணம் என்பது இலங்கை அணிக்கு அதிகம் பரீட்சயம் இல்லாத சூழலிலேயே நடைபெறப் போவது மாத்திரம் உண்மை. என்றாலும் அதற்கு விரைவாக பழகிக் கொண்டாலேயே முன்னேற முடியும். அதற்கு தயாராக இருக்கும் அணி பொருத்தமாக உள்ளதா? என்ற கேள்விக்கான பதிலிலேயே அனைத்தும் தங்கியிருக்கிறது.

எஸ்.பிர்தௌஸ்...

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த

# நீலங்களின் சமர்

## உலகின் மிக நீண்ட இடைவிடாத கிரிக்கெட் தொடர்



1837ஆம் ஆண்டில், ஒக்ஸ்போர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்கள் இங்கிலாந்தின் முதன்முறையாக நீலங்களின் சமர் என்ற பெயரில் ஒன்றுடன் ஒன்று விளையாடின. முதலாம் உலகப் போரின் போது இந்தக் கிரிக்கெட் போட்டி இடைநிறுத்தப்பட்டது.

ஆனால் கொழும்பு ரோயல் கல்லூரி மற்றும் பரிதோமாவின் கல்லூரிகளுக்கு இடையிலான நீலங்களின் சமர் அற்புதமான வரலாற்றைக் கொண்டுள்ளது, 1879 இல் கொழும்பு அகாடமி (பிற்காலத்தில் ரோயல் கல்லூரி) மற்றும் முகத்துவாரத்தில் அமைந்திருந்த பரி.தோமாவின் கல்லூரி என்பனவற்றுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி முதலில் நடத்தப்பட்டது. ஆஷ்லே வோக்கர் கொழும்பு அகாடமியின் தலைவராக இ ருந்தார். ஆனால் இந்தப் போட்டியில் ஆசிரியர்களும் பங்கேற்றதால் இது ஒரு போட்டியாகக் கருதப்படவில்லை.

1880 ஆம் ஆண்டில், மாணவர்கள் இவற்றில் கலந்து கொண்டனர், கொழும்பு அகாடமி மற்றும் முகத்துவாரம் பரி.தோமாவின் கல்லூரி என்பனவற்றுக்கு இடையேயான முதல் உத்தியோகபூர்வ போட்டி (கல்கிசைக்கு மாறுவதற்கு முன்பு) காலி முகத்திடல் மைதானத்தில் நடைபெற்றது. கொழும்பு அகாடமியின் தலைவராக ஜே.டபிள்யூ. டி சில்வாவும், தோமியன் தலைவராக எப்.டபிள்யூ. மெக்டொனல் இருந்ததாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முதல் மோதலில் கொழும்பு அகாடமி 62 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 1881 இல் கொழும்பு அகாடமி அதன் பெயரை ரோயல் கல்லூரி என்று மாற்றியது. ஆரம்ப காலத்தில் பாடசாலை அதிபர்கள் நடுவர்களாக இருந்தனர்.




பரிதோமாவின் படையணி சில கிரிக்கெட் ஜாம்பவான்களை உருவாக்கியது. அவர்கள் டி.எஸ். சேனாநாயக்க (இலங்கையின் முன்னாள் பிரதமர்), டட்லி சேனநாயக்க (இலங்கையின் முன்னாள் பிரதமர்), மைக்கேல் திசேரா (14 வயதில் தனது முதல் போட்டியில் விளையாடினார் மற்றும் 1957/58 இல் அணியின் தலைவராக இருந்தார்). அதனைத் தொடர்ந்து சிலோன் அணிக்கு மைக்கேல் தலைமை தாங்கினார். ஏனைய நட்சத்திரங்கள் அனுர தென்னக்கோன் (இலங்கை அணித் தலைவர் ), பிராட்மன் வீரக்கோன், லெப்டினன்ட் கேணல் எஸ். சரவணமுத்து, துலீப் மெண்டிஸ் (இலங்கை அணித் தலைவர்), கை டி அல்விஸ், பி. சரவணமுத்து, ரணில் அபேநாயக்க, சாந்த கோட்டேகொட (இராணுவத் தளபதி) மற்றும் ஜீவன் மெண்டிஸ்.

வெர்னான் பிரின்ஸ் இலங்கை அணியின் துடுப்பாட்டக்காரர் ஆவார், இவர் முதல் தர போட்டிகளில் இலங்கை அணியின் தலைவராக இருந்தார். பிரின்ஸ், கல்கிசையில் உள்ள பரி.தோமாவின் கல்லூரியில் பயின்றார், அங்கு அவர் பல வருடங்கள் முதல் XI அணிக்காக விளையாடினார், 1942_ 1943 இல் அணியின் தலைவராக இருந்தார்.



ரோயல் கல்லூரியும் பல பிரபல கிரிக்கெட் ஜாம்பவான்களைத் தந்தது

அவர்கள் ஜே.ஆர். ஜெயவர்தன (இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி). அவர் கிரிக்கெட் விளையாட்டில் சிறந்து விளங்கினார், கல்லூரி கிரிக்கெட் அணிக்காக விளையாடினார், 1925 இல் ரோயல் _ பரி.தோமாவின் தொடரில் அறிமுகமானார். சேர் ஜோன் கொத்தலாவல (இலங்கையின் முன்னாள் பிரதமர்) கொழும்பு ரோயல் கல்லூரியில் பயின்றார், ரோயல் _ பரிதோமா கிரிக்கெட் போட்டிகளில் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

பெர்ட்ராம். ஆர். ஹெய்ன் (இராணுவத் தளபதி) மற்றொரு பிரபல கிரிக்கெட் வீரர். அவர் ரோயல் கல்லூரியில் கி ரிக்கெட் அணிக்காக விளையாடினார், 1930 இல் அறிமுகமானார் மற்றும் ரோயல் பரி.தோமா போட்டிகளில் விளையாடினார். அவர் சிலோன் கிரிக்கெட் அணிக்காக விளையாடினார். சேர் டொனால்ட் பிராட்மனை கொழும்பில் நடைபெற்ற ஆஸ்திரேலியா மற்றும் ஆல்சிலோன் ஒரு நாள் போட்டியில் (1948) வெளியேற்றியது அவரது மிகவும் பிரபலமான சாதனையாகும்.

மற்ற ரோயலிஸ்ட்களில் சிலர் மேஜர் பெஞ்சமின். டபிள்யூ. பாவா (இலங்கையின் சொலிசிட்டர் ஜெனரல்), எம்.ஏ. மக்கான் மார்க்கர் (இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் மருத்துவப் பேராசிரியர்) கேணல் ஃபிரெட்ரிக் டி சாரம் (ரோயல் கல்லூரிக்காகவும் விளையாடினார். பின்னர் ஒக்ஸ்போர்டில் நுழைந்து இங்கிலாந்து கவுண்டி சீசனில் 1000 ரன்கள் எடுத்தார்.) ரஞ்சன் மடுகல்ல (இலங்கை கிரிக்கெட் வீரர் மற்றும் ஐசிசி போட்டி நடுவர்கள் குழுவின் தலைவர்), அசந்த டி மெல் (இலங்கை கிரிக்கெட் வீரர்) மற்றும் ஜெஹான் முபாரக் ஆகியோர் ரோயல் அணியை பிரபலப்படுத்தினர்.

பாடசாலை கிரிக்கெட் விளையாட்டு திறமைகளை வளர்ப்பது மட்டுமன்றி இலங்கை சமூகத்தில் உள்ளடங்கும் தன்மையையும் பன்முகத்தன்மையையும் ஊக்குவிக்கிறது. செழுமையான வரலாறு மற்றும் விளையாட்டின் மீதான நிலையான ஆர்வத்துடன், நீலங்களின் சமர் அழியாத முத்திரை பதித்துள்ளது.

இம்முறையும் ரோயல் மற்றும் பரி.தோமாவின் கல்லூரிக்கிடையிலான நீலங்களின் சமர் கடந்த வியாழனன்று எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் ஆரம்பமாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பரி. தோமாவின் கல்லூரி அணி 88.2 ஓவர்கள் 297 ஓட்டங்களைப் பெற்றது, இரண்டாம் நாளன்று பதிலுக்குத் துடுப்பெடுத்தாமிய ரோயல் கல்லூரி அணி 278 ஓட்டங்களைப் பெற்றது. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விபரம்

**பரி. தோமாவின் கல்லூரி முதல் இன்னிங்ஸ் 297** (88.2 ஓவர்கள்)

**ரோயல் கல்லூரி முதல் இன்னிங்ஸ் 278/9** (102.2 ஓவர்கள்)

**பரி. தோமாவின் கல்லூரி இராண்டாம் இன்னிங்ஸ் 229/4** (86 ஓவர்கள்)

## டயலொக் அனுசரணையில் நடைபெற்ற 117வது வடக்கின் சமர் போட்டி:

# வெற்றியை தனதாக்கி கெண்ட பரி. யோவான் கல்லூரி

பரி. யோவான் கல்லூரியின் அணித்தலைவர் நேசகுமார் எபினேஸர் ஜெய்ஸல் 117வது வடக்கின் சமரில் தன்னை நிலைநாட்டினார்.

இவருடன் புகைப்படத்தில் (இவ) நிர்மலன் நந்தகுமார், பிராந்திய முகாமையாளர், செலான் வங்கி, விஎஸ்பி துசீதரன் அதிபர், யாழ். பரி. யோவான் கல்லூரி, ஜே இந்திரகுமார் அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (பகுதியளவு மேற்பார்வை), நேசகுமார் எபினேஸர் ஜெய்ஸல் வெற்றிபெற்ற அணித்தலைவர், பரி. யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம், அமில திசர, பிராந்திய முகாமையாளர்,




டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, ஜெயராஜசிங்கம் ஐங்கரராஜ் உதவி முகாமையாளர், சமூக புத்தாக்கம், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, தேவ ஸ்ரீநாத் மாவட்ட முகாமையாளர், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சிடயலொக்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்

2024 மார்ச் 10 ஞாயிற்றுக்கிழமை





# தந்திரமான கடைசி ஆசை



முன்னர் எல்லாம் தூக்கில் இடுவதை விடவும் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றுவதே பிரபலம். மரணதண்டனை கைதியை நிற்க வைத்து படையினர் சுற்றிவர சுடுவார்கள். இப்படி அமெரிக்காவில் கடைசியாக துப்பாக்கியால் சுட்டு மரணதண்டனைக்கு முகம்கொடுத்தவர் ஜேம்ஸ் டபிள்யூ ரொஜர்ஸ். ஒரு சிறுவனை கொன்றதற்காக 1960 ஆம் ஆண்டு ரொஜர்ஸுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. மரணதண்டனைக்கு முன் கடைசி ஆசை கேட்கப்படுவது வழக்கம். அப்படி கடைசி ஆசை என்னவென்று ரொஜர்ஸிடம் கேட்கப்பட்டபோது, தனக்கு குண்டு துளைக்காத அங்கியை தரும்படி கேட்டார்!

அப்படித் தர முடியாது என்று அவரை துப்பாக்கிகளுக்கு முன் நிறுத்தியபோது அவர் கடைசியா, 'குண்டு துளைக்காத அங்கி தரும்படி கடைசி ஆசையாக நான் கேட்டேனே?' என்று கூச்சலிட்டார்.



# வேற்றுக் கிரக-வாசிகள் எங்கே?

தற்போதைய கணக்குப்படி எமது பால்வீதி மண்டலத்தில் 400 பில்லியன் நட்சத்திரங்கள் வரை இருக்கின்றன. அதில் 50 பில்லியன் கிரகங்கள் வரை இருக்கலாம் என்பது ஒரு குத்துமதிப்பான கணிப்பு. இதனை விட அதிகம் இருக்கவும் கூடும். இதிலே ஒரு வீதமான கிரகங்கள் தனது நட்சத்திரத்திற்கு நெருக்கமாகவோ அல்லது தூரமாகவோ இல்லாத பொருத்தமான இடத்தில் இருப்பதாக வைத்தால் கூட எமது பால்வெளி மண்டலத்தில் உயிர்வாழ சாத்தியம் கொண்ட 500 மில்லியன் கிரகங்கள் வரை இருக்க வேண்டும். இதில் ஒரு கிரகத்திலாவது வேற்றுக் கிரகவாசிகள் இருப்பார்களா என்பதுவே ஆய்வாளர்களை குடைந்தெடுக்கும் கேள்வி.

# லீப் ஆண்டு செய்தித்தாள் வெளியானது

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்




பிரான்ஸின் நையாண்டி பத்திரிகையான லா பௌகி டு சப்பியுர் தனது புதிய பதிப்பை கடந்த பெப்ரவரி 29 ஆம் திகதி வெளியிட்டது. அதாவது லீப் தினமான பெப்ரவரி 29 ஆம் திகதியில் மாத்திரம்தான் இந்தப் பத்திரிகை வெளியாகும். எனவே, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியாகும் உலகின் ஒரே பத்திரிகை என்ற பெருமையும் இதற்கு உண்டு.

1980ஆம் ஆண்டு முதல் பதிப்பை கண்ட இந்தப் பத்திரிகையின் 12 ஆவது இதழ்தான் 2024 ஆம் ஆண்டு வெளியானது.


நண்பர்கள் குழு ஒன்றினால் பொழுதுபோக்காக வெளியிடப்பட்ட இந்தப் பத்திரிகை இன்று 200,000 பிரதிகளை பிரசுரிக்கிறது. விலை 4.90 டொலர்கள். அதாவது செலவுகள் போக கணிசமான லாபமும் வரும்.

'முதல் வெளியீடு இரண்டு நாட்களுக்குள் விற்றுத் தீர்ந்தது. பத்திரிகை முகவர்கள், வாசகர்கள் புதிய பிரதிகளை கேட்க ஆரம்பித்தார்கள். ஆனால், நான்கு ஆண்டுகளின் பின்னர் கிடைக்கும் என்று பதில் கூறினோம்' என்று பத்திரிகையின் ஆசிரியரான ஜீன் இன்டி, குறிப்பிடுகிறார். அவரது பிரதான வேலை குதிரை ஓட்டக் கழகம் ஒன்றை நடத்துவதாகும்.

எனினும் ஒரு வழக்கமான பத்திரிகைக்குரிய அனைத்து அம்சங்களுடனும் ஒரு நையாண்டி தோரணையில் செய்திகள் வடிவமைக்கப்பட்டிருக்கும். இதில் அரசியல், விளையாட்டு, சர்வதேச விவகாரம் என அனைத்துமே இருக்கும்.

இந்த இதழின் பிரதான செய்தி, 'நாம் அனைவரும் அறிவாளிகளாக இருப்போம்' என்ற தலைப்பில் வந்திருக்கிறது. அதில் செயற்கை நுண்ணறிவினால் பரீட்சைகள் மற்றும் அறிவுசார் சாதனைகள் தேவையற்றதாக மாற்றப்படுவது பற்றி குறிப்பிடப்படுகிறது. ஆனால் இந்தப் பத்திரிகையில் தொடர் கதை ஒன்றும் இருப்பதுதான் எல்லாவற்றையும் விட சிறப்பானது. இந்த தொடர்கதையின் அடுத்த பாகத்தை 2028 ஆம் ஆண்டில்தான் வாசிக்க முடியும்!

# பிரான்ஸின் பயங்கர குளியல்



பிரெஞ்சுப் புரட்சி காலத்தில் ஏகப்பட்ட கொடுமைகள் நிகழ்ந்தன. அதில் ஒன்று தான் 'தேசிய குளியல்' நிகழ்வு.

குளிப்பதில் என்ன பயங்கரம் இருக்கப் போகிறது என்று சாதாரணமாக நினைக்க வேண்டாம். அது கடைசிக் குளியல்.

முடியாட்சிக்கு விசுவாசமான 4000க்கும் அதிகமானவர்கள் பிடிக்கப்பட்டார்கள்.

இவர்களில் பெண்கள், சிறுவர்கள், கத்தோலிக்க பாதிரியார் மற்றும் கன்னியாஸ்திரிகள் என்று சமூகத்தின் எல்லா அந்தஸ்த்தை சேர்ந்தவர்களும் இருந்தார்கள்.

எந்தக் கணக்கில் இவர்கள் பிடிக்கப்பட்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால் குடும்பம் குடும்பமாக பிடிக்கப்பட்டார்கள்.

ஊருக்குத் தெரியாமல் எல்லோரும் படகுகளில் ஏற்றப்பட்டார்கள். நான்டஸ் நதிக்கு நடுவே கொண்டு செல்லப்பட்டு நீரில் வீசப்பட்டார்கள்.

ஆயிரக்கணக்கானவர்கள் மூழ்கி பலியானார்கள்.

ஆனால் அடுத்த சில நாட்களில் இறந்தவர்களின் சடலங்கள் கரையொதிங்கியபோது உலகுக்கே அந்த கூட்டுப் படுகொலை அம்பலத்துக்கு வந்தது.



"கஞ்சசங்கிற தலைப்புல ஒரு கட்டுரை எழுது."
"இங்க, பேப்பர் செலவாகும். நான் சொல்றேன்... கேட்டுக்கங்க..."



"தலைவர்கிட்ட ஒரு விஷயமா 'எட்சர்' காட்டிப் பாத்தேன்...!"
"அவர் என்ன சொன்னார்?"
"இதெல்லாம் பத்தாதுங்கற மாதிரி கோடி காட்டிட்டார்!"



"தினம் இரண்டு வெங்காயத்தைப் பச்சையா சாப்பிட்டீங்கனா உடம்புக்கு நல்லது!"
"எங்கிட்ட அவ்வளவு பணவசதி இல்லீங்க, வேற டானிக் எழுதிக் கொடுங்க டாக்டர்!"



''முப்பால்களைக் கூறு..!"
''அறத்துப்பால், பொருட்பால், அமலா பால்...!''



"என் மனைவி, அம்மா வீட்டுக்கு கோவிச்சுட்டுப் போய்ட்டா. அந்த நேரம் அவளோட அம்மா என் வீட்டுக்கு வந்துட்டாங்க..."
"தலைவலி போய், திருகுவலி வந்திருச்சுன்னு சொல்லு!"



"ஜனாதிபதியைத் தவிர, ... மாறுகிற அதிகாரம் வேற யாருக்கு இருக்குன்னு தெரியுமா, உனக்கு?"
"தெரியலயே! யாருக்கு?"
"சுரேஷுக்கு-பரீட்சை தமிழ்நாட்டு கவர்னரையே மாத்திட்டு வந்துட்டானே!"



"நம்ம கட்சி தொடர்ந்து ஜெயிப்பது எதைக் காட்டுகிறது?"
"நியாயம், தர்மம் செத்துப் போச்சுனு காட்டுது தலைவரே!"



"டாக்டர்! நான் யார் வீட்டுக்குப் போனாலும் நல்லா தூங்கிடுவேன்.''
"சரி, இதுக்குப் போய் ஏன் கவலைப்படறீங்க?"
"திருடப் போன வீட்ல போய் தூங்கிட்டா நான் மாட்டிப் பேன்ல டாக்டர்.."



"எனக்கு எந்த கஷ்டம் வந்தாலும் நான் உடனே என் மனைவி முகத்தைப் பார்ப்பேன்...''
"அப்ப கஷ்டமெல்லாம் போயிடுமா?"
"இல்லை. வந்த கஷ்டம் சின்னதா தெரியும்...!''



"எனக்கு ஆபரேஷன் வேணாம் டாக்டர்!"
"அப்ப அதுக்கான ஃபீஸைக் கட்டிடுங்க, ரிலீஸ் பண்ணிடுறேன்!"



"டாக்டர்... ஆபரேஷன் தியேட்டர்ல சுப்பாரை யோட நிற்கறாரே யார் இவரு?"
"உங்க கிட்னிலே இருக்கற கல்லை உடைக்க வந்திருக்காரு!"



''மோப்ப நாய்கள்லாம் வச்சிருக் கானாமே, கபாலி!''
''லஞ்சம் வாங்கிட்டுப் போற, போலி பொலிஸ்காரங்கள கண்டு பிடிக்கத்தான்!''

# இனிய நந்தவனம் சஞ்சிகை ஏற்பாட்டில் கௌரவிப்பு








இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிறு சென்னையிலுள்ள விஜய் பார்க் ஹோட்டலில் இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் எஸ். சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்ற சர்வ தேச மகளிர் தின நிகழ்வில் உலக நாடுகளிலிருந்து கலந்து கொண்ட 25 மகளிர் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் இலங்கையை சேர்ந்த ஐந்து ஆற்றல் மிகு பெண்கள் இலங்கையில் இருந்து பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர். படங்களில் ஹாஷிம் உமர், செயலாளர் சாதிக் பாட்சா, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், துபாய் நாட்டு தொழிலதிபர் அப்துல் வஹீத் ஆகியோரும் காணப்படுகின்றனர். இந்நிகழ்விற்கு இலங்கையின் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் ஊடக அனுசரணை வழங்கியிருந்தன.

# தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் ஹதீஸ் கிரந்தங்களின் மொழிபெயர்ப்பு நூல்கள் கொ/ஸாஹிரா கல்லூரியில் வெளியீடு

தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் ‘ஸிஹாஹ் ஸித்தா’ஹதீஸ் கிரந்தங்களின் மொழிபெயர்ப்ப தொகுதி அறிமுகமும் ‘மிஷ்காத்துல் மஸாபீஹ்’ நூல் வெளியீடும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி அப்துல்கபூர் மண்டபத்தில் அதிபர் டி ரிஸ்வி மரைக்கார் தலைமையில் வெகு சிறப்பாக நடை பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஜாமியா நளீமியாவின் முதல்வர் அஷ் ஷெய்க் ஏ .சி.அகார் முஹம்மத்தும் சென்னை மந்தைவெளி மஸ்ஜிதின் தலைமை இமாம் மௌலானா கே.எல் எம்.இல்யாஸ் ரியாஜி , புதுப்பேட்டை மஸ்ஜிதே மஹ்மூத் தலைமை இமாம் ஏ.பீர் முஹம்மது பாகவி ஆகியோர் சிறப் புரையாற்றினார்கள்.

ரஹ்மத் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட ஸஹீஹ் ஸித்தா கிரந்தங்களின் தொகுப்புக்க ளும்,மிஷ்காத்துல் மஸாபீஹ் நூலும் , ரஹ்மத் அறக்கட்டளை நிறுவுனர் உரிமையாளர் எம் ஏ. முஸ்தபாவால் கல்லூரியின் நூலகத்துக்கு அன் பளிப்பு செய்யப்பட்டு அதிபர் ரிஸ்வி மரைக்கா ருக்கு வழங்கப்

பட்டது. ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனர் எம் .ஏ.முஸ்தபாவால் ரவூப் ஹக்கீம் (பா.உ), அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி, பிரபல சட் டத்தரணியும் கொழும்பு மாவட்ட மஸ்ஜித்கள் சம் மேளனத்தின் தலைவருமான சிராஸ் நூர்தீன், இ.ஒ.கூ.தாபன முஸ்லிம் சேவை பணிப்பா ளர் எம் . ஜே.பாத்திமா ரினூஸியா, முன்னாள் பணிப்பாளர் அஹ்மத் முனவ்வர், கலாநிதி கபூர்








டீன் ஆகியோருக்கும்,மேலும் பல பிரமுகர்களுக் கும் சிறப்புப் பிரதிகள் வழங்கி கௌரவிக்கப்பட் டனர்.

மேலும் ஆளுனர் சபை தலைவர் பௌஸுல் ஹமீத்,பிரதி அதிபர்எம்.சாஃஹுலி, தமிழ்ப் பிரிவின் உப அதிபர் ஏ.எம். மிஹ்ழார்(நளீமி),மற்றும் பல ஆளுனர்சபை அங்கத்தவர்கள், பழையமாண வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்,மாணவர் கள் கலந்து சிறப்பித்தனர்.

# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் நடாத்திய ஆடற்கலை போட்டி











# மாத்தளையில் 'கொலுசா' சிறுகதை வெளியீடு









மாத்தளை மலரன்பனால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட 'கொலுசா' என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா, மாத்தளை மகாத்மா காந்தி சபா மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த சிறுகதைத் தொகுதியை சாலிய குணவர்தன ஆங்கிலத்திருந்து சிங்களத்துக்கு மொழிபெயர்த்தார். இதனைத் தொடர்ந்து இச்சிறுகதைத் தொகுதியை மாத்தளை மலரன்பன் தமிழில் மொழிபெயர்த்தார். இந்நிலையிலேயே இதன் வெளியீட்டு விழா மாத்தளையில் நடைபெற்றது.

இலக்கிய ஆர்வலர், ஆதரவாளர், வெளியீட்டாளர் அமரர் துரை விஸ்வநாதனின் நினைவையிட்டு மாத்தளை தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் இச்சிறுகதையின் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது.

# மணக்காத பூக்கள் ...

வேண்டும் என்றேதும் செய்யவில்லை
வேண்டாம் எனத் தவிர்த்தாலும்
வேகமாய் முட்டி மோதி வருகிறது
தேகத்திற்கு ஒவ்வாத உணர்வுகள்
புரியவில்லை முதலில்
தெரியவில்லை என்னை யாரென்று
பாவாடை அணிய ஆசைப்பட்ட என்னை
மேலாடை இன்றி வேட்டியுடன்
அனுப்பினர் கோவிலுக்குள்
இறைஞ்சித் தொழ வேண்டிய கரங்களோ
விரைந்து சென்று மெய் மறைத்துக்
கொண்டன என்னை
கை எடுத்துக் கும்பிடென கண்டித்தாள் அன்னை
காரணம் பல தேடி தவிர்த்துக் கொண்டேன்
ஆலயம் செல்வதை
யாரிடம் சென்று சொல்வேன் – என்
தாயிடமே தயங்குவதை
இயற்கையே என்னை ஏன் இப்படி
செயற்கை என பிறர் எண்ண
பாவம் என்ன செய்தேனோ ....
பரம் பொருளே பதில் கூறு
கனக்குதம்மா எந்தன் மனம் ...
மணக்காத பூக்கள் நாம் ...

காரை கீதாலெட்சுமி

# சர்வதேச பகவத்கீதை மாநாடு







புத்தசாசன மத மற்றும் கலாசார அமைச்சும் இந்திய கலாசார மையமும் இணைந்து சர்வதேச பகவத்கீதை ஜெயந்தி உற்சவத்தை தாமரைத் தடாக அரங்கில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வின் ஒரு பகுதியாக நாட்டில் சமாதானம் வேண்டி சிவ ஸ்ரீ லக்ஷ்மண ஜெகதீச குருக்கள், சிவ ஸ்ரீ கு.வைத்தீஸ்வர குருக்கள், சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் பல சிவாச்சாரியார்கள் இணைந்து யாகம் வளர்ப்பதையும் இதில் அரியானா மாநில சுவாமி அருண் தாஸ் ஜீ மகாராஜ் கலந்து கொண்டிருப்பதையும் மற்றும் இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் அனிருத்தன் மற்றும் அமைச்சின் செயலாளர் சோமரட்ண விதான பத்திரண பூஜை பிரசாதத்தைப் பெறுவதையும் சுவாமிகளுக்கு நூல் ஒன்றை சிவாச்சாரியர்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.






# புதிய கல்வி எல்லைகளை தொடும் சிறார்கள்













வடமேற்கு மாகாணத்தில் உள்ள தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ பாடசாலைகளில் பௌதிக மற்றும் மனித வளம் குறைவாக காணப்படுவதன் காரணமாக கல்வி மேம்பாடு குறைவடைந்துள்ளது. இவ்வகையில் 75க்கு அதிகமான மாணவர்களைக்கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு டிஜிட்டல் ஸ்மார்ட் போர்ட் ஊடாக கற்பிக்கும் முறைமையை வழங்கி மனிதவள இழப்பை ஈடு செய்ய *IMHO* நிறுவனமும் *Ratnam Foundation* நிறுவனமும் இணைந்து வலயகல்விப்பகுதியினரின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்த செயற்றிட்டம் வெற்றிகரமாகவும் முன்னேற்றகரமாகவும் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

இம்மாதம் 1ம் திகதி புத்தளம் நகரில் இருந்து ஏறத்தாள 50 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கற்பிட்டியில் உள்ள அரசினர் றோமன் கத்தோலிக்க தமிழ் மகாவித்தியாலயத்திற்கு *IMHO* வதிவிட பிரதிநிதி திரு முத்து இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குழு விஜயம் செய்தது. இப்பாடசாலையில் 320 மாணவர்கள் கல்விகற்கின்றனர். இப்பாடசாலை மிகவும் பின்னடைவான கல்விபற்றிய அடிப்படைகள் குறைந்த சமூகத்தை பிரதிபலிக்கும் சூழலில் இருக்கின்றது. மாணவர் வரவு மிக குறைவு. இத்தகைய சவால்களைக் கொண்ட இப்பாடசாலை செயற் திட்டத்தில் உட்படுத்தப்பட்டு இப்பாடசாலைக்கு *IMHOUSA* மற்றும் *Ratnam Foundation UK* ஆகியநிறுவனங்களால் வழங்கப்பட்ட *Smart board* கற்றல் தொகுதி உத்தியோகபூர்வமாக அன்று திறந்து வைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது ஆசிரியர்களுக்கு முன்னரே வழங்கப்பட்ட பயிற்சியின்காரணமாக மாணவர்களுக்கு *smart board* ஊடாக கற்பித்து மாணவர்களும் *smart board* ஐ கையாளப்பழக்கப் பட்டிருந்தனர். இதனை ஆசிரியர்கள் கற்பித்தபோது மாணவர்களின் ஈடுபாட்டையும் உற்சாகத்தையும் பார்த்து விளங்கக்கூடியதாக இருந்தது.

*Smart board* மூலமாக மாணவர்கள் கற்றபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஒவ்வொரு மாணவனும் செயற்படுவதற்கு முண்டியடித்தனர். உற்சாகமாகவும் ஒரு ஆரோக்கியமான வகுப்பாகவும் இயங்கியது.




முன்னாள் அமைச்சர் பேரியல் இஸ்மாயில் அஷ்ரப் இலங்கை நாட்டிற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் ஆற்றிய சேவையினை கௌரவிக்கும் முகமாக IMRA வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். IMRA விருது வழங்கும் விழா, ஷங்கிரிலாவில் நடைபெற்றபோதே இவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இலங்கை முஸ்லிம் பெண் ஆளுமைகளை கௌரவிக்கும் பொருட்டு அகில இலங்கை முஸ்லிம் பெண்கள் அமைப்பு, டெனாரா பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த விருது வழங்கும் விழாவிலேயே அவர் இவ்வாறு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அஷ்ரப் ஏ சமட்





# உலகில் முதலாவதாக மெய்நிகர் சுற்றுலா முறையை அறிமுகம் செய்த சவூதிஅரேபியா

*சவூதி கலாசார அமைச்சு உலகின் முதலாவது தேசிய கலாசார மெட்டாவெர்ஸ் தளத்தினை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இது பயனர்களுக்கு மெய்நிகர் (Virtual Reality) வரலாற்று, உல்லாசப் பயணங்களில் பங்கேற்க உதவுகிறது. மெட்டாவெர்ஸ் இன் இந்த அற்புதமான கண்டுபிடிப்பானது ஜெனரேட்டிவ் மீடியா இன்டலிஜென்ஸ் (GMI) எனும் செயற்கை நுண்ணறிவு அமைப்பு மூலம் மேம்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.*



*GMI உடன் இணைந்து ஹைப்பர் லெட்ஜர் ஃபேப்ரிக் 2.5 பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி droppGroup மற்றும் 'phygital' metaverse உடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த அற்புதமான தளம் மெய்நிகர் ஆய்வு மற்றும் அத்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.*



*சவூதி ஹெரிடேஜ் மெட்டாவர்ஸ் தளமானது எண்ணற்ற வசீகர அனுபவங்களை பயனர்களுக்கு வழங்குகிறது. சவூதி அரேபியாவின் செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டாடும் கலாசார காட்சிகள் வரலாற்றுச் சுற்றுப்பயணங்கள், இசை நிகழ்ச்சிகள், கலைக் கண்காட்சிகள் மற்றும் சிறு விளையாட்டுகள் முதல் பல்வேறு வகையான செயல்பாடுகளை தூர தேசங்களில் இருந்து நிஜத்தில் அனுபவிப்பதை போல அனுபவிப்பதற்கான சந்தர்பத்தை இந்தத் தளம் ஏற்படுத்தித் தருகிறது.*

*மேலும் இத்தளமானது சவூதியின் புரட்சிகர தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு ஒரு சான்றாக உள்ளது. இது அண்மைய, சவூதியின் நிறுவன தின சிம்பொனி கச்சேரி போன்ற நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பை வழங்குகியதும் குறிப்பிடத்தக்கது. இந்த டைனமிக் டிஜிட்டல் சூழலானது மொபைல் போன்கள், VR ஹெட்செட்கள் மற்றும் டெஸ்க்டாப்புகள் உட்பட பல சாதனங்களின் மூலம் அணுகக்கூடியதாக உள்ளது.*





*சவூதி கலாசாரத்தை சர்வ தேச மக்களும் ரசிக்க, அனுபவிக்க வேண்டும் என அந்நாட்டு கலாசார அமைச்சகம் விரும்புகிறது. எனவே அவர்கள் உலகில் எங்கிருந்தாலும் கலாசார நிகழ்வுகளை அணுகச் செய்வதற்கான முயற்சியாக இது இருக்கிறது. இந்தப் புதிய முன்முயற்சி, மக்கள் கலாசாரத்தை குறிப்பாக ஒன்லைனில் எப்படி அனுபவிக்கிறார்கள் என்பதைப் பிரதிபலிக்கிறது. மெய்நிகர் அனுபவங்களில் பங்கேற்பதன் மூலம், மக்கள் கலாசாரங்களை தம்மிடையே பகிர்வதற்கான புதிய வழியை உருவாக்கித் தருகிறது. இது தொழில்நுட்பம் மற்றும் பாரம்பரியம் இரண்டினையும் இணைக்கும் பாலமாக காணப்படுகிறது.*

**காலித் ரிஸ்வான்**

Senthooram செந்தூரம்



# “ராஜேஷின் திரைக்கதையில் நடிப்பதில் பெருமை” நடிகர் அதர்வா

எம்.ராஜேஷ் இயக்கத்தில் அதர்வா நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பை படக்குழு அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளது. “பார்வையாளர்கள் ரசிக்கும் படமாக இது இருக்கும்” என இயக்குநர் ராஜேஷ் உறுதியளித்



துள்ளார்.

நடிகர் அதர்வா நடிப்பில் கடைசியாக கடந்த 2002ம் ஆண்டு வெளியானது ‘பட்டத்து அரசன்’. இந்தப் படத்தையடுத்து அவரது நடிப்பில் படங்கள் எதுவும் வெளியாகவில்லை. எம்.ராஜேஷை பொறுத்த வரை அவர் இயக்கத்தில் ஹன்சிகா நடித்த ‘மை3’ வெப்சீரிஸ் கடந்த ஆண்டு வெளியானது. இந்நிலையில் ராஜேஷ் இயக்கத்தில் அதர்வா நடிக்கும் புதிய படத்தை ஸ்ரீ வாரி பிலிம் பி.ரங்கநாதன் தயாரிக்கிறார். இப்படத்தில் அதிதி ஷங்கர் நாயகியாக நடிக்கிறார். படத்துக்கு சாம் சிஎஸ் இசையமைக்கிறார். ஒளிப்பதிவை சுகுமாரன் கவனிக்கிறார்.

படம் குறித்து நடிகர் அதர்வா முரளி கூறும்போது, “இயக்குநர் ராஜேஷின் திரைக்கதையில் நான் நடிப்பது பெருமையான விஷயம். முழுக்க முழுக்க எண்டர்டெய்ன்மென்ட் படங்களை எதிர்பார்த்து திரையரங்குகளுக்கு வருபவர்களை இந்தப் படம் நிச்சயம் ஏமாற்றாது” என்றார்.

இயக்குநர் எம்.ராஜேஷ் கூறும்போது, “காலத்துக்கு ஏற்றாற் போல, சினிமாவின் ஒவ்வொரு ஜானரிலும் மாற்றம் ஏற்படும். இருப்பினும், தமிழ் சினிமா ரசிகர்கள் என்டர்டெயினர் படங்களை ஒருபோதும் கொண்டாடத் தவறியதில்லை. பார்வையாளர்களை மகிழ்விக்கும் இதுபோன்றத் தருணங்களை என் படங்களில் கொடுப்பதை நான் பாக்கியமாக கருதுகிறேன். இந்தப் படம் மூலம் ரசிக்கத்தக்க பொழுதுபோக்குப் படத்தைக் கொடுக்க ஆவலுடன் காத்திருக்கிறோம்” என்றார்.

# Animal பார்க்க வேண்டாம் என குஷ்புவை எச்சரித்த மகள்கள்



ரன்பீர் கபூர் நடித்த ‘அனிமல்’ திரைப்படத்தை பார்க்க வேண்டாம் என தன்னுடைய மகள்கள் எச்சரித்ததாக நடிகையும் பாஜக நிர்வாகியுமான குஷ்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமீபத்திய கருத்தரங்கு ஒன்றில் பேசிய குஷ்பு, “அனிமல் திரைப்படத்தை நான் இன்னும் பார்க்கவில்லை. ஆனால் தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினராக, துன்புறுத்தல்கள், துஷ்பிரயோகங்கள், திருமணத்துக்கு பின்னான பாலியல் வன்கொடுமைகள் மற்றும் முத்தலாக் போன்ற பல வழக்குகளை நான் பார்த்திருக்கிறேன். ‘அனிமல்’ போன்ற ஒரு பெண் வெறுப்பு திரைப்படம் பாக்ஸ் ஆபிஸில் மிகப்பெரிய அளவில் வசூல் செய்யும் படங்களில் ஒன்றாக மாறினால், அதை வெற்றிபெறச் செய்யும் மக்களின் மனநிலையைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

‘அர்ஜுன் ரெட்டி’ மற்றும் ‘கபிர் சிங்’ படங்களிலும் கூட பிரச்சினை இருந்தது. ஆனால் நான் இயக்குநரைக் குறை கூறமாட்டேன். ஏனென்றால் அவரைப் பொறுத்தவரை, வெற்றிதான் முக்கியம். “சமூகத்தில் என்ன நடக்கிறது என்பதை படங்களில் காட்டுகிறோம். நாங்கள் பெண்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை பற்றி பேசுகிறோம்” என்று சொல்வார்கள். எனினும் மக்கள் அத்தகைய படங்களை பார்க்கிறார்கள். என் மகள்கள் அதுபோன்ற படங்களைப் பார்ப்பதை நான் விரும்பவில்லை. ஆனால் அது எதைப் பற்றி பேசுகிறது என்பதை அறிய விரும்பியதால் அவர்கள் ‘அனிமல்’ படத்தை பார்த்தார்கள். அவர்கள் திரும்பி வந்து, ‘அம்மா தயவு செய்து அந்த படத்தைப் பார்க்காதீர்கள்’ என்று எச்சரித்தார்கள். இப்படிப்பட்ட படங்களுக்கு ரிப்பீட் ஆடியன்ஸ் உருவாகும்போது நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது” என்றார்.

தெலுங்கு இயக்குநர் சந்தீப் ரெட்டி வங்கா இயக்கத்தில், ரன்பீர் கபூர் கதாநாயகனாக நடித்த படம், ‘அனிமல்’. இதில், ராஷ்மிகா மந்தனா, பாபி தியோல், அனில் கபூர் உட்பட பலர் நடித்துள்ளனர். திரையரங்குகளில் வெளியான இப்படம் ரூ.900 கோடி அளவில் வசூலித்தது. ஓடிடியிலும் சில வாரங்களுக்கு முன்பு வெளியாகி இப்படம் விவாதிக்கப்பட்டது.



# ஐஸ்வர்யா ராஜேஷ் 'வளையம்'

ஐஸ்வர்யா ராஜேஷ் நாயகியாக நடிக்கும் படத்துக்கு ‘வளையம்’ என்று தலைப்பு வைத்துள்ளனர். இதை அறிமுக இயக்குநர் மனோ பாரதி இயக்குகிறார். ஹீரோவாக தேவ் அறிமுகமாகிறார். ஆக்சஸ் ஃபிலிம் ஃபேக்டரி சார்பில் ஜி. டில்லி பாபு தயாரிக்கிறார். சேத்தன், தமிழ், பிரதீப் ருத்ரா, ஹரிஷ் பெரேடி, சுரேஷ் மேனன் ஆகியோருடன் மேலும் சிலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மகேந்திர எம். ஹென்றி ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு மைக்கேல் பிரிட்டோ ஒளிப்பதிவு செய்கிறார்.

த்ரில்லர் படமான இதன் தொடக்க விழா சென்னையில் நடந்தது. நடிகர் விஜய் சேதுபதி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

‘வணங்கான்’ படத்தின் படப்பிடிப்பின்போது தன்னை இயக்குநர் பாலா அடித்ததால் அப்படத்திலிருந்து விலகியதாக நடிகை மமிதா பைஜு கூறியது சர்ச்சையான நிலையில், தற்போது அந்த விவகாரம் குறித்து அவர் விளக்கம் அளித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு யூடியூப் சேனல் ஒன்றுக்கு பேட்டியளித்த நடிகை மமிதா பைஜு, “வணங்கான் படப்பிடிப்பின்போது இயக்குநர் பாலா அடித்ததால் படத்திலிருந்து விலகினேன்” என்று கூறியிருந்தார். இது சமூக வலைதளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது. பலரும் இயக்குநர் பாலா மீது கடும் விமர்சனங்களை முன்வைத்து வந்தனர்.

இந்த நிலையில், இந்த சர்ச்சை குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் மமிதா பைஜு விளக்கமளித்துள்ளார். இன்ஸ்டாகிராம் ஸ்டோரி பகுதியில் பதிவிட்டுள்ள அவர், “ஒரு தமிழ் திரைப்படம் குறித்து இணையத்தில் பரப்பப்படும் செய்திகள் முற்றிலும் ஆதாரமற்றவை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு படத்தில் விளம்பரத்துக்காக கொடுக்கப்பட்ட அந்தப் பேட்டியிலிருந்து குறிப்பிட்ட பகுதியை மட்டும் எடுத்து பகிரப்பட்ட அந்த வீடியோவில் கூறப்பட்டவை தவறாக புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

படத்தின் முன் தயாரிப்பு பணிகள் உட்பட ஒரு வருடத்துக்கு மேலாக இயக்குநர் பாலாவுடன் பணியாற்றியிருக்கிறேன். நான் ஒரு சிறந்த நடிகையாக மாற வேண்டும் என்பதற்காக அவர் எப்போதும் என் மீது அன்பு காட்டினார். அந்தப் படத்தில் நான் பணிபுரிந்தபோது மனரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ எந்த விதமான துன்புறுத்தலையோ அல்லது துஷ்பிரயோகத்தையோ நான் அனுபவிக்கவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்” என்று நடிகை மமிதா பைஜு கூறியுள்ளார்.

# “நான் துன்புறுத்தப்படவில்லை” பாலாவின் ‘வணங்கான்’ சர்ச்சைக்கு

நடிகை மமிதா விளக்கம்





# டிஜிட்டலில் மீண்டும் வெளியான அஜித்தின் ’வாலி’



பழைய படங்களை டிஜிட்டலில் மாற்றி மீண்டும் வெளியிடும் போக்கு இப்போது அதிகரித்து வருகிறது. வாரணம் ஆயிரம், விஜய்யின் கில்லி, அஜித்தின் பில்லா, விஜய் சேதுபதியின் 96 உட்பட பல படங்கள் மீண்டும் வெளியிடப் பட்டன.

இந்நிலையில், நிக் ஆர்ட்ஸ் எஸ்.எஸ்.சக்கரவர்த்தி தயாரிப்பில், அஜித் குமார், சிம்ரன் நடிப்பில் வெளியான ‘வாலி’ படமும் டிஜிட்டலில் மாற்றப்பட்டு வெளியாகி இருக்கிறது. 1999ம் ஆண்டு வந்த இந்தப் படத்தின் மூலம்தான் எஸ்.ஜே.சூர்யா இயக்குநர் ஆனார். சிக்கலான கதையை, சிறப்பான திரைக்கதையால் அசத்தல் திரில்லராக தந்திருந்தார் அவர். அஜித் இரு வேடங்களில் நடித்திருந்திருந்தார். அவர் நடித்த வாய்ப்பேச முடியாத அண்ணன் பாத்திரம் அப்போது பேசப்பட்டது.

பிளாக்பஸ்டர் வெற்றியைப் பெற்ற இந்தப் படம் 24 வருடங்களுக்குப் பிறகு, தற்போது டிஜிட்டலில் மாற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. நந்தினி தேவி பிலிம்ஸ் சார்பில் கே. கிருஷ்ணன் இதை வெளியிட்டுள்ளார். இந்தப்படம் ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்று வருகிறது.

# “அழைப்பு வந்தது... ஒரு மதத்தை போற்றும் கட்சியுடன் இணைய விருப்பமில்லை” - திவ்யா சத்யராஜ்

வரும் தேர்தலில் போட்டியிட எனக்கு ஒரு கட்சியிலிருந்து அழைப்பு வந்தது உண்மைதான். ஆனால், எந்த ஒரு மதத்தைப் போற்றும் கட்சியுடனும் இணைய எனக்கு விருப்பம் இல்லை” என சத்யராஜின் மகள் திவ்யா சத்யராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: “வணக்கம். எனக்கு அரசியலில் ஆர்வம் உண்டு என்று சில பத்திரிக்கை நண்பர்களிடம் சொல்லியிருந்தேன். அதற்குப் பிறகு எல்லோரும் என்னைக் கேட்கும் கேள்விகள் ‘நீங்கள் எம்.பி ஆவதற்காக அரசியலுக்கு வருகிறீர்களா? ராஜ்யசபா எம்.பி ஆகனும்கற ஆசை இருக்கா? மந்திரி பதவி மேல் ஆர்வம் உள்ளதா? சத்யராஜ் உங்களுக்குப் பிரச்சாரம் செய்வாரா?’ இப்படிப் பல கேள்விகள்.

நான் பதவிக்காகவோ, தேர்தலில் வெல்வதற்காகவோ அரசியலுக்கு வரவேண்டும் என்று நினைக்கவில்லை. மக்களுக்காக வேலை செய்வதற்காகத் தான் அரசியலுக்கு வரவேண்டும் என்று நினைக்கிறேன். நான் களப்பணிகள் செய்ய ஆரம்பித்து சில வருடங்கள் ஆகிறது. 'மகிழ்மதி இயக்கம்' என்ற அமைப்பை மூன்று வருடங்களுக்கு முன் ஆரம்பித்தேன்.

# இல்லற வாழ்வில் துணையிடம் நம்பிக்கை கொள்வோம்



**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுற வும்**
**தீரா இடும்பைத் தரும். (510)**

**விளக்கம்:**
**ஒருவனைப் பற்றி ஆராயாமல் நம்புவதும், அப்படி ஆராய்ந்து நம்பியவனிடத்திலே சந்தேகம் கொள்ளுவதும் தீராத துன்பத்தையே தரும்.**

உறவுகள் தொடர்வதே நம்பிக்கையின் அடிப்படையிலேயே. ஆரம்ப காலங்களில் வீட்டு பெண் உறவுகளை அறிந்தவர் தெரிந்தவர் என்பவர்களுடனே வெளியில் அனுப்பினார்கள். தனியார் வகுப்பு என்றாலும் தெரிந்தவர்களா என்பதை அறிந்து வீட்டில் அங்கத்தவர்களே அழைத்து சென்று இருந்து அழைத்து வருவார்கள் அல்லது ஏதோவொரு பாதுகாப்பு அரணை அமைத்தே வெளியில் செல்ல அனுமதிப்பார்கள் .

நாம் இன்றைய நாட்களில் தினமும் யாரோ ஒரு புதியவர்களின் சந்திப்பிலேயே நாளை தொடர்கின்றோம் எனலாம் .

திருமணம் என்கிற அத்திவாரத்தில் முன்னைய நாட்களில் அதிகமாகவும் இன்றைய நாட்களில் குறைவாகவும் அறிமுகமற்ற நபர்களை வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுத்து வீட்டாரே கொடுப்பது வழக்கம். காதல் திருமணங்கள் என்பது முன்பெல்லாம் அத்திப் பூத்தாற் போல அங்கங்கே ஒவ்வொன்று நடந்தது.

இன்று பேசி முடிக்கும் திருமணங்கள் அதிசயமாக இடம் பெறுகின்றன, காதல் திருமணங்கள் அதிகமாக பேசி முடிக்கப்படுகின்றன. காதலித்தோ பெரியவர்களால் பேசியோ முடிக்கும் திருமணங்களோ அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையிலே சேர்ந்து வாழ திருமணம் என்கிற ஓர் கட்டுகோப்புக்குள் கொண்டு வரப்படுகிறது.

இல்லறம் என்கிற நந்தவனத்தில் கால் பதிக்க இந்த நம்பிக்கை என்கிற அத்திவாரமே உருவாக்குகிறது .

எத்தனை உறவுகள் இருந்தாலும் இனி வாழ்நாள் முழுதும் கணவனுக்கு மனைவி மனைவிக்கு கணவன் அவர்களுக்கு பிள்ளைகள் என்கிற நம்பிக்கையை உருவாக்கும் இடம் குடும்பம்.

அந்த நம்பிக்கை கணவன் மீது மனைவியோ மனைவி மீது கணவனோ எப்போதுமே பேணி பாதுகாக்க வேண்டும்.

அந்த பாதுகாப்பை பூரணமாகவே நம்புவதே இல்லறத்தின் மகிழ்ச்சிக்கு வித்தாக அமையும்.

அதிகமான தம்பதிகள் மனமொத்து வாழ்வதைக் காட்டிலும் 'ஏதோ திருமணம் முடித்துவிட்டேன்! குடும்பத்திற்காய் வாழ்கிறேன், பிள்ளைகளுக்காய் வாழ்கிறேன் ,மற்றவர்கள் ஏதும் சொல்வார்களோ என்று வாழ்கிறேன்,காதலித்து திருமணம் முடித்துவிட்டேன் என்பதற்காய் இருக்கிறேன்' என்று புலம்பித் தவிப்பதை காணக் கூடியதாக இருக்கிறது .

அத்துடன் வலைத் தளங்களில் இவர்களைப் போலவே வாழவேண்டும் என்கிற நினைப்பை உருவாக்கும் விதத்தில் புகைப்படம் இடுதல், வெளி நிகழ்வுகளுக்கு செல்லும் போது 'ஆகா!எத்தனை ஒற்றுமையான தம்பதிகள் ' என்று ஆடை அணிகலன்களை அணிந்துசென்று வருதல் இடம் பெற்றாலும் வீட்டுக்குள் கீரியும் பாம்பாய் அடித்துக்கொண்டு இந்த சமூகத்திற்காய் நடிப்பது அதிகமாய் உள்ளது. இந்த போலி நாடகம் இல்லறத்தில் ஏன் ஏன்???

என்றாவது சிந்தித்தது உண்டா!!!

வாழ்க்கை துணையென்று வரும் போது எந்த நம்பிக்கையில் உங்களை நம்பி கரம் பிடித்தவரின் நம்பிக்கையை நீங்கள் காப்பாற்றுகிறீர்கள் என்பது முக்கியம்.

நம்பிக்கையின் அடிப்படையிலே கட்டி எழுப்பப்படுகின்ற அந்த மணவாழ்க்கை நம்பிக்கையை இழக்கும் நேரங்களில் உடைந்து விரக்தி ஏற்பட்டு மேலே குறிப்பிட்ட புலம்பல்களுக்கு காரணமாக அமைகிறது . உங்கள் துணை எந்த அடிப்படையில் உங்களை ஏற்று கொண்டாரோ அந்த நம்பிக்கை நடக்காமல் போகும் வார்த்தைகள் தவறும் போதும் இல்லறத்தில் விரிசல் விழுகிறது.

ஓரளவாவது காப்பாற்ற முயல வேண்டும்.

ஒருவர் மீது வைக்கும் நம்பிக்கை உடைந்தால் அதை மீண்டும் கட்டி எழுப்புவது சுலபமல்ல. நம் இல்லற வாழ்வில் நம்பிக்கை மிக மிக அவசியம் .காரணம் வாழ்நாள் முழுதும் அந்த துணையோடு நம் இலாப நட்டங்கள் துன்ப துயரங்கள் என்று வருகின்ற அத்தனை விடயங்களையும் பகிர்ந்தே வாழப்போகின்றோம் .

நாம் யாருக்காகவும் இருக்கும் வாழ்க்கையில் நடிக்கத் தேவையில்லை. அப்படி மனக் குறைகளுடன் புழுங்கி வாழவும் தேவையில்லை .

எப்படி சரி செய்வது என்று யோசியுங்கள்.

எந்த நம்பிக்கையில் உங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தீர்கள் என்று முதலில் சிந்தித்து உங்கள் துணையுடன் மனம் விட்டு பேசுங்கள் .

பேசும் பொழுதுகள் யாரின் தொந்தரவும் இல்லாமல் உங்கள் காதலையும் அள்ளிக் கொடுக்கும் பொழுதாக இருக்கட்டும் .



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# பெண்களின் பெருமை




பெண்ணின் பெருமையை உயர்த்தும் நாடே இந்த மண்ணுலகில் உயர்ந்துள்ளது. தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய கால கட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளில் ஆணுக்கு சமமாகவும், ஆண்களை விட அதிகமாகவும் முன்னேறி வருகின்றனர். சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் இந்தநேரத்தில் பெண்களின் பெருமையையும், அவர்களின் முன்னேற்றத்திற்கு பலரும் ஆற்றிய பங்கினையும் அறிந்து கொள்வோம்.

பெண்களின் பெருமையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்து கொள்ளலாம். புராண காலத்துக் காரைக்காலம்மையார் போன்றவர்களையும் நளாயினி, சாவித்திரி, சந்திரமதி, தாரா, மண்டோதரி, சீதா போன்ற பெண்ணரசிகளை இன்றும் கற்றோரும் மற்றோரும் போற்றுகின்றனர்.

சங்க காலம் தழுவிய காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டல கேசி, வளையாபதி ஆகியவற்றில் உள்ள பெண் பாத்திரங்களின் வரலாறுகள் பெண்ணியத்திற்கு பெருமைத் தேடி தந்துள்ளன. சிலம்பில் கண்ணகி, மாதவி, கவுந்தியடிகள், தேவந்தி, போன்றவர்களின் வரலாறுகள் பல பண்புகளை உயர்த்தி நிற்கின்றன. கண்ணகி தெய்வமாகியது பெண்மைக்கே உய்வு தருவது மாதவி, மணிமேகலையின் துறவு மேன்மை போன்றவற்றை மறக்க முடியாது.

சங்க காலத்திலேயே பெண்கள் கல்வியில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். தலைமைப் பண்பு மிக்கவர்களாக சரித்திர சாதனை புரிந்துள்ளனர். ஔவையார், காவற்பெண்டு, பாரிமகளிர், குறமகள் இளவெயினி, வெண்ணிக்குயத்தியார், நன்முல்லையார், வெண்பூதியார், காக்கைபாடினியார், நச்செள்ளையார் போன்றவர்களும் இன்னும் பலரும் காட்டப்படுகிறார்கள். மன்னர்களுடன் இப்புலவர்களின் தொடர்பு, அதியமான் ஔவைக்கு நெல்லிக் கனி கொடுத்தது, தூது போன காட்சிகளும் உண்டு. ஆதி சங்கரருடன் வாதம் செய்த பெண் பற்றியும் வரலாறு உண்டு.

பக்தியை பேசும் இலக்கியத்தில் பெரிய புராணம் முதன்மையானது. 28 பெண்களைப் பற்றி குறிப்பிடுகின்றது. இருபத்தியொருவர் நாயன்மாரது மனைவியர், தாயார் நால்வர், மகள்மார் இருவர், உடன் பிறப்பு ஒருவர், காரைக்காலம்மை, இசைஞானியார், மங்கயர்க்கரசியார் ஆகிய மூவரும் நாயன்மார்களுக்கு இணையான பேறு பெற்றனர். சிவனுக்காக பிள்ளைக்கறி சமைத்த, சிறுத் தொண்டர் மனைவியை "மனையறத்தின் வேராகி" என்று சேக்கிழார் புகழ்ந்துள்ளார்.. புராணக் கதைகள் கற்பனை என்று சாதித்து வாதிப்பவரும் உண்டு.

சங்க காலத்தில் வீரத்தின் விளை நிலமாகவும் பெண்கள் விளங்கினர். போர்க்களத்தில் தீரமுடன் போராடிய வீர மங்கையர்களையும் படித்திருக்கிறோம். ஆங்கிலேய ஆட்சியில் ஜான்சிராணியை மறக்க முடியுமா? இவையே ஆணின் வெற்றிக்குப் பின் பெண் இருக்கிறாள் என்பதை நிரூபித்துள்ளது. பெண்ணின் பெருமையை உலகிற்கு பறைசாற்றியதில் பாரதிக்கு பெரும் பங்குண்டு. பாண்டிச்சேரியில் தனித்திருந்த பாரதியார்,தேநீர் தயாரித்து அருந்த தடுமாறிய நிலையில் செல்லம்மாளை உணர்ந்தார், பெண்ணின் விடுதலைக்காக பாடினார். வேதநாயகம் பிள்ளை சுகுண சுந்தரியில் குழந்தை மணத்தை கண்டித்தார். பெண் கல்வி வளர்ந்தது. சமுதாயம் உயர்ந்தது. தொழில் பகுதி உயர்ந்து, மகளிரும் தொழில் வாய்ப்பை பெற்றனர்.

மாதவையா, கல்கி போன்றவர்களைத் தொடர்ந்து பின் வந்தவர்களும் பெண்ணின் பெருமை பேசினர். மகளிருக்கென சிறந்த ஊடகங்கள் பறைசாற்றின. எழுத்தாளர்கள்,இசையரசிகள்,சொற்பொழிவாளர்கள், அரசியல் தலைவர்கள்,ஆராய்ச்சியாளர்கள் எனப் பல்வேறு துறைகளிலும் கொடிகட்டிப் பறப்பது நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமையே பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைத்து சாதிப்பதோடு அன்றாடம் கிடைத்த ஊடகங்கள் அனைத்தின் மூலமும் போதித்து பெண்ணுரிமையை பேணிக்காக்க அயராது முயல வேண்டும்.

நாட்டை ஆட்சி செய்ய மன்னன் இருந்தாலும் ஒரு வீட்டை ஆட்சி செய்ய ஒரு பெண்தான் வேண்டும் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை.

# கொழும்பு கொட்டாஞ்சேனை கெதீட்ரல் கல்லூரிக்கு கொடுத்த வாக்குறுதியை உடன் நிறைவேற்றினார் கலாநிதி ஜனகன்..!












கொழும்பு கொட்டாஞ்சேனை சேதீட்ரல் (ஆண்கள்) கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி ஜனகனிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க கல்லூரியின் நிற பூச்சு வேலை திட்டத்திற்கான வேண்டுகோளை உடனே ஏற்றுக் கொண்டு ஒரு வாரத்தில் தனது சொந்த நிதியில் இருந்து ஐ டி எம் என் சி (I D M N C) சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி வி. ஜனகன் " ஜனனம் அறக்கட்டளையின் கல்விக்கு கரம் கொடுப்போம்" திட்டத்தின் ஊடாக மூன்று லட்சம் ரூபாய் பெறுமதியான காசோலையை (04/03) கல்லூரிக்கு நேரில் சென்று கல்லூரி அதிபரிடம் வழங்கி வைத்தார்.

# சிறுவர் அபிவிருத்தித்திட்ட நிலைய கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வு







**ஏறாவூர் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் அபிவிருத்தித்திட்ட நிலையத்தின் வள நிலையத்திற்கான நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கடந்த கால போர்ச்சூழலினால்பாதிக்கப்பட்ட பிரதேச சிறுவர்களது அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இந்நிலையம் செயற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

Child Action Lanka நிறுவனத்தி ன்பணிப்பாளர் டில்ஷான் எதிரிசிங்க மற்றும் முகாமையாளர்அப்றாவக்கீல் ஆகியோரின் கூட்டுத்தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. சுமார் இருநூற்றைம்பது மாணவச்சிறுவர்கள்இணைக்கப்பட்டுள்ள இந்நிலையத்தில் கல்வி, புறக்கிருத்தியம் மற்றும் சுயதொழில்முயற்சிக் கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. மேலும் இச்சிறுவர்களுக்கு தினமும் போஷாக்குணவும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மறைந்த ஷஹ்னா ஸப்வானின் "எரியும் நட்சத்திரம்" நூல் வெளியீடு








சென்ற வருடம் காலஞ்சென்ற இளம் பெண் கவிஞர் ஷஹ்னா ஸப்வான் எழுதி வைத்திருந்த கவிதைகளைத் தொகுத்து "எரியும் நட்சத்திரம்" எனும் பெயரில் அவரது முகநூல் நண்பர்கள் வெளியிட்டு வைத்தனர். இவ் வெளியீட்டு விழா சென்ற சனிக்கிழமை காலை தர்கா நகர் ஸாஹிறாக் கல்லூரி நளீம் ஹாஜியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பேனாத் துளிகள் சஞ்சிகையின் ஆசிரியர் ஏ. ஆர். ரஜா முஹம்மத் தலைமை தாங்கியதுடன், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், அரும்பு இதழ் ஆசிரியர், ஓய்வு பெற்ற இலங்கை கல்வி நிர்வாக உத்தியோகத்தர் ஹாபிஸ் இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கலாபூஷணம் என். நஜ்முல் ஹுசைன் வாழ்த்துரையும் பன்னூலாசிரியர், பூங்காவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ரிம்ஸா முஹம்மத் நூல் விமர்சனமும் இலங்கை திறந்த பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளர் ஸுமையா ஷரிப்தீன் இரசனைக் குறிப்பும் வழங்கினர்.

எரியும் நட்சத்திரம் கவிதைத் தொகுப்பின் முதற் பிரதியினை முன்னாள் இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும், டாக்டர் ரூமி ஹாஷிம் பவுண்டேஷனின் நிறுவனருமான அல்ஹாஜ் டாக்டர் ரூமி ஹாஷிம் பெற்றுக் கொண்டார். இரண்டாவது பிரதியை ஃபைன் கியோ பாமஸியூட்டிகல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அல்ஹாஜ் ஜஸ்ீக் அஹமட் பெற்றுக் கொண்டார்.

கவிஞர் தர்கா நகர் ஸபா, பேருவளை எழுத்தாளர் ஒன்றியத் தலைவர் ரபீஸ் ஹம்ஸா, செயலாளர் பஸ்லி ஹமீட், எழுத்தாளர் இம்தியாஸ் தாசிம், தர்கா நகர் ஸாஹிரா கல்லூரி அதிபர் எம்.என். எப்.நிஸ்ரின், ஆரம்ப பாடசாலை அதிபர் எம்.எச்.எம்.ஸக்வான், அல்ஹம்றா மகா வித்தியாலய அதிபர் எம்.எப்.எப்.பஸ்லியா, தர்கா நகர் முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரி அதிபர் பி.எம்.எம்.ஜாபிர் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

நூலாசிரியரின் தந்தை ஏ. எச். எம். ஸப்வான் ஏற்புரையும் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழு அங்கத்தவர் எம். முஸ்னி முர்ஷிட் நன்றியுரையும் வழங்கினர்.

ஹயா இஸாமும், பரீஹா பாரூக்கும் கவிதை பாடினர். நிகழ்ச்சியை செல்வி அஸ்ஹா லாபிர் தொகுத்து வழங்கினார். இந்நூல் வெளியீடு பல விதத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இந்நூலில் இடம்பிடித்துள்ள கவிதைகளில் சொந்தக்காரியான ஷஹ்னா ஸப்வான் இன்று நம்மோடு இல்லை. கடந்த வருடம் ஜூன் மாதத்தில் இறையடி சேர்ந்திருந்த அவரின் கவிதைகளே நூலுருப் பெற்றிருந்தன. இது போன்றதொரு நூல் வெளியீடு இதற்கு முன்பு நடைபெற்றிருக்குமா என்பது சந்தேகமே.

இம்முயற்சியை மேற்கொண்டவர்கள் முகநூல் நட்பு வட்டத்தில் ஒன்று சேர்ந்த துடிப்பான இளைஞர் யுவதிகளான "இளம் தாரகையின் தூரிகை" என்ற குழுவினரே. இளம் தாரகையின் தூரிகை குழும அங்கத்தவர்களான பர்ஹானா அப்துல்லாஹ் (மக்கொனை), ஆஷிக் ஹுசைன் (ஹெம்மாதகமை), ரஜா முஹம்மத் (அட்டாளைச்சேனை), ஹாஸ்மியா தாஹா (கெகிராவை), ஆகிப் நசூர் (கண்டி), பா. ரம்லா ஹிஷாம் (தர்கா நகர்), ஸல்மான் பின் பாரிஸ் (களுத்துறை), முஸ்னி முர்ஷிட் (எஹலியகொடை), ஹஷ்மத் ஹப்னாஸ் (அக்குரணை), இஷ்ரா பர்வின் (தர்கா நகர்), ஹஸனியா இர்பான் (தர்கா நகர்), திக்ரா ஹனீபா (கண்டி), ரிஸ்லா ஹம்ஸா (மன்னார்), நூர் ஷாஹிதா (பதுளை), அதீகா மஷீர் (ஹெம்மாதகமை) ஆகிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். .

# யாழ் கந்தர் மடம் அறிவாலயம் ஆளுமை விருத்தியகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா







யாழ் கந்தர் மடம் அறிவாலயம் ஆளுமை விருத்தியகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா நல்லூர் ஆதீன கலா மண்டபத்தில் அறிவாலய பணிப்பாளர் சிவநயனி சர்வேஸ்வரா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனும் புத்தூர் பஞ்சசீக வித்தியாலய அதிபர் கவிதா லலீசனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆற்றினார். இங்கு மாணவர்களின் கவியரங்கம், பட்டிமன்றம், கரகாட்டம், நடனம் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. கவியரங்கத்தை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வராவும் பட்டிமன்றத்தை ஜீவா சஜீவனும் நெறிப்படுத்தினர். நிகழ்வுகளில் அறிவாலயத்தின் ஊடாக ஆளுமை விருத்தி பெற்ற ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொண்டனர்.

# ரமழான் வசந்தம் கவியரங்கு







தாருல் ஈமான் கலை இலக்கிய வட்டமும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கொழும்பு பிராந்தியமும் இணைந்து புனித ரமழான் மாதத்தை வரவேற்கும் முகமாக ஏற்பாடு செய்திருந்த ரமழான் வசந்தம் சிறப்புக் கவி ராத்திரி கவியரங்கம் அண்மையில் கொழும்பு தெமட்ட கொட வீதி, தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

மறைதாஸன் தாஸீன் நத்வி அரங்கில் ரமழானை வரவேற்று நடைபெற்ற கவியரங்கிற்குகலாபூஷணம் தமிழ்த்தென்றல் அலி அக்பர் தலைமைத் தாங்கினார்.

கவிஞர்கள் என். நஜ்முல் ஹுசைன், அஷ்ஷெய்க் இஸ்மத் அலி (நளீமி) , அஷ்ஷெய்க் நாஸிக் மஜீத் (நளீமி), புத்தளம் மரிக்கார் ஆகியோர் கவிபாடி சபையோரை மகிழ்வித்தனர். தாருல் ஈமான் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் ஹஸன் வரவேற்புரையை வழங்க நிகழ்வுகளை முஷ்பிக் தொகுத்து வழங்கினார்.



தென்னிந்திய இயக்குனருடன் இலங்கை கலைஞர்கள் சகோதர மொழிக்கலைஞர்களுடன் A.K.இளங்கோ

# மருதமுனையின் சிரேஷ்ட கவிதாயினி மாஹிறா அமீர்



தென்கிழக்கின் கலை இலக்கிய பரப்பில் வளர்ந்த சிரேஸ்ட எழுத்தாளர்களில் ஒருவரே மருதமுனை மாஹிறா அமீர். கவிதை ,சிறுகதைகளை ஏராளமாக எழுதி மருதமுனையில் தனக்கென இடத்தைப் பிடித்துள்ள ஒருவரே மாஹிறா.

இஸ்மாலெப்பை முஹம்மட் அமீர் முஹம்மட் இப்றாஹிம் உம்மு ஸல்மா தம்பதியினருக்கு 1971.04.05 ஆம் திகதி மருதமுனையில் இரண்டாவது



மகளாக பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை கமு/அல்ஹம்றா வித்தியாலயத்தில் கற்று இடைநிலைக்கல்வி ஸம்ஸ் மத்திய கல்லூரியில் கற்று உயர்தரக் கல்வியை அல்மனார் மத்திய கல்லூரியில் கற்றுள்ளார்.

இவரது தந்தை ஊரறிந்த கவிஞர் ஆக இருந்தவர் ஆவார்."பன்னீர்ச் செல்வன்" எனும் புனைப்பெயரில் இவரது கவிதைகள் வானொலிகளில் அதிகமதிகம் ஒலித்துள்ளன.இவ்வாறு தந்தை ஒரு கவிஞர் என்பதனாலேயே மாஹிறாவுக்குள் எழுத்தாற்றல் வேரூன்ற காரணமாக இருந்துள்ளது. (தற்போது அவரது தந்தை உயிரோடு இல்லை)

திருமண வாழ்க்கை இவருக்கு கைகொடுக்காத போதிலும் இவரது தாய்,சகோதர சகோதரிகள் குடும்பம் உட்பட தனியாளாக நின்று இன்றுவரை இவர் எழுத காரணம் குடும்பத்தினரின் ஒத்துழைப்பாக இருக்கின்றது.

தனது கன்னி கவிதையாக 1984 ஆம் ஆண்டு வீரகேசரியில் "கசங்கிய காதல்" எனும் கவிதை முதன் முதலில் வெளிவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, வீரகேசரி,எங்கள் தேசம்,விடிவெள்ளி,மித்திரன்,தினகரன்,தினக்குரல்,மெட்ரோ,வண்ணவானவில் போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதியுள்ளார்.இதனைத் தொடர்ந்து பல சஞ்சிகைகளிலும் எழுதி வருகின்றார்.

ஹில்மா,மருதமுனை மாஹிறா ,கலீறா போன்ற புனைப்பெயர்களில் தனது எழுத்துக்களை அடையாளப் படுத்தி எழுதி வருகின்றார்.

கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற பல ஆயிரக்கணக்கான ஆக்கங்களை எழுதி வருகின்றார்.தனது எழுத்துகளை நூலாக்க பேராவாவுடன் இருந்தவர் நீண்ட நாள் கனவை நிறைவேற்றும் வகையில் "மனதின் மாயம்" எனும் கவிதை நூலொன்றை மிக விரைவில் வெளியிடவுள்ளார்.

தனது இலக்கிய பயணத்தின் வானொலிக்கான பிரவேசமாக இலங்கை வானொலி வர்த்தக சேவையில் 1985 – 1987 வரை அன்று தொட்டு இன்றுவரை இலங்கை வானொலி,வசந்தம் எப்.எம்,பிறை எப்.எம்,ஊவா எப்.எம்,தென்றல் எப்.எம்,சூரியன் எப்.எம்,வெளிச்சம் எப்.எம்,வெற்றி எப்.எம்,தமிழ் எப்.எம்,அலை எப்.எம், சக்தி எப்.எம் போன்ற வானொலிகளில் இவரது இலக்கிய பயணம் தொடர்கின்றது.

**இவருக்கு கிடைத்த விருதுகள்**

சாய்ந்தமருது லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் ஸ்ரீலங்கா நிறுவனத்தினால் 2011.06.26 ஆம் திகதி இலக்கியத்துக்கான பங்களிப்புக்காக "கலைமுத்து" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மலையக கலை கலாசார சங்கத்தினால் "உதய தாரகை" எனும் பட்டம் வழங்கி 2012 ஆம் ஆண்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டு கலை கலாசார சங்கத்தினால் "ஸ்ரீ ரத்ன தீபம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டு கல்முனை பிரதேச செயலகத்தினால் இலக்கியத்துக்காக "சுவதம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு மலையக கலை கலாசார சங்கத்தினால் "எம்.ஜீ.ஆர். ரத்ன தீபம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கல்முனை பிரதேச





செயலகத்தினால் "திறமையான பெண்ணொருவர் உலகை ஆழ்கிறாள்" எனும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டு கல்முனை பிரதேச செயலகத்தினால் நடாத்தப் பட்ட வலய மட்ட இலக்கிய போட்டியில் "அறிவுக் கண்" எனும் கவிதை முதலிடம் பெற்றமைக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா பென் கிளப் இனால் இலக்கிய துறைக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலக்கியம் தவிர சமூக சேவைகள் அமைப்புக்களில் அதிகம் ஈடுபட்டு சமூக சேவைகளும் செய்துள்ளார்.

2006 – 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் "SWEDO ஸ்ரீ லங்கா" அமைப்பின் மகளிர் சங்க தலைவராக இருந்துள்ளார்.அதே சமயத்தில் சிறுவர் பிரிவிற்கு ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

2006 – 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் HSDO அமைப்பின் தலைவராக இருந்துள்ளார்.

இதன் பிற்பட்ட காலப்பகுதிகளில் CESSDO அமைப்பின் சில வருட காலங்களாக இணைப்பாளராகவும் "மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம்" எனும் கலைஞர்கள் அமைப்பில் செயலாளராகவும் "ஸ்ரீ லங்கா பென் கிளப்" எனும் பெண் எழுத்தாளர்கள் அமைப்பில் உறுப்பினராகவும் கல்முனை கலாசார அதிகார சபையின் உயர்பீட உறுப்பினராகவும் கல்முனை மற்றும் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி குழுவில் உறுப்பினராகவும் மற்றும் 2022 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மருதமுனை நான்காம் பிரிவின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.





**நிஸா இஸ்மாயீல்**

தொடர்புகளுக்கு:
ரொம்ப பிஸி
எம்.என்.பாஹிம்...
shamufahim@gmail.com
Whatsap: 0714901181

# முஸ்லிம் வரலாற்றெழுதுகை : முடிவற்ற தொடர்ச்சி

இலங்கை முஸ்லிம்கள் குறித்த நீண்ட வரலாற்றுப் பூர்வீகத்தின் ஆய்வெழுத்தின் தொடக்கமும் தொடர்ச்சியும் முழுமையுறா நிலையும் வரலாறு குறித்த ஒழுங்குமுறைச் சிந்தனையின் தேவையை முன்னெழுப்புகிறது.

வரலாற்று வரைவியல் ஒரு சமூக இருப்பின் உறுதிப்பாட்டை அடையாளம் காட்டுவது;



வாழ்வியலின் கல்வி, சமயம், சமூக, பொருளாதார, கலாசார, பண்பாடு சார், கூறுகளை அடையாளம் காட்டுவது. இந்த அடையாளங்களில் தேடல் மிகவும் இன்றியமையாதது. இலங்கை முஸ்லிம் வரலாறு குறித்து ஏலவே ஆங்காங்கு எழுதுகை இடம்பெற்றுள்ளது. தமிழ், சிங்கள, ஆங்கிலேய, அரபிய, முஸ்லிம்களென பலரும் இந்த வகை ஆய்வெழுத்துக்களை அல்லது எழுதுகையை முன்னெழுப்பியுள்ளனர்.

ஆயினும் ஒழுங்குமுறை வரலாறெழுதுகை தொடர்பில் அல்லது எழுதப்பட்ட உதிரியான வரலாற்றெழுத்துக்களைத் தொகுப்பதில் கவன மையம் நிகழ்ந்துள்ளதா என்கிற கேள்வியின் கீழ் இலங்கை முஸ்லிம்கள் குறித்த ஒழுங்குமுறை வரலாறெழுதுகையின் மீது கவனக் குவிவு செலுத்தும் ஒரு முயல்வாக எம்.ஐ.எம்.முகைதீன் ஆய்வுக்கும் ஆவணவாக்கலுக்குமான நிலையம் ஏற்பாடு செய்த ஆய்வரங்கை அவதானிக்க முடியும்.

வரலாற்றுப் பேராசிரியர் எஸ். ஏ.ஹுஸைன்மியா நோக்ககவுரையாற்றி நிகழ்வைக் தொடக்கி வைத்தார்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு எழுதுதல், தொகுத்தல், பதிப்பித்தல் முயற்சிகள் குறித்தும், வரலாற்று வரைவியலின் இலக்குகளைக் கண்டடைதல் குறித்தும் ஆழமான தன் ஆய்வறிக்கை முன்னெழுப்பினார். அரங்கில் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ், கலாநிதி றவூப் ஸெய்ன், அப்துல் றஹீம் ஜெஸ்மில், ஆசிப் ஹுஸைன், ஜஸாஈமஆ ஹமீத், பஸ்வான் ஏ நவாஸ், சிறாஜ் மஸ்ஹூர் ஆகியோர் ஆய்வுகளை முன்வைத்தனர். பேராசிரியர் எம். ஏ.நுஃமானின் ஆய்வுச்சுருக்கத்தை சட்டத்தரணி றுடானி வாசித்தார். பேராசிரியர் அனீஸ் செரீப்பின் ஆய்வுக்குறிப்பை சிறாஜ் வாசித்தார். ஆயிஷா அஜ்லான் ஆங்கிலத்தில் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். எம்.ஐ.எம்.முஹிடீன் ஆய்வுக்கும் ஆவணப்படுத்தலுக்குமான நிலையத்தின் இந்த முன்னெடுப்பு வரலாற்று முக்கியமானது. சமூகம் திரும்பிப் பார்க்கத் தவறும் முக்கிய பக்கமொன்றின் மீது இங்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று வரைவியல் தொடர்பில் தொடர்ச்சியான ஒழுங்குமுறை கருத்தாடலுக்கான ஒரு நுழை வாயிலாக இந்த முன்னெடுப்பு அமைய வேண்டும். அரங்கவதானிப்பில் சில கருத்துக்கள் முன்னெழுகின்றன.

விரிந்த தளத்திலான ஆய்வெழுத்துக்களை நேர ஒழுங்கமைப்பு மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனத் தோன்றுகிறது. இத்தகைய ஆய்வரங்குகள் மூன்று நாட்கள் வரை கால ஒதுக்கீட்டைக் கோருவன. மற்றொன்று ஆய்வுத்தலைப்பு அல்லது ஒத்த பொருளின் கீழான ஒழுங்கமைப்பு. அதாவது ஒரு பெருந்தலைப்பின் அதனோடு நெருங்கிய தொடர்பான உபதலைப்புகள் கோர்க்கப்படும்போது ஒரு குறிப்பிட்ட தொடர்ந்தேர்ச்சி கிடைக்கும். எதிர்கால விரிவாய்வுக்கு இவ்வொழுங்கு வாய்ப்பாகலாம். ஆய்வு முன்வைப்பில் பேச்சாக அல்லாது ஆய்வுப் பண்பாட்டினடிப்படையில் முன்வைப்பு இடம்பெறும் போது பங்குபற்றுநர் அல்லது பார்வையாளர்களின் சிந்தனைப் புலம் விரிவடையும். எனினும் நோக்கவுரை மற்றும் பேராசான் அனஸ், றவூப்ஸெய்ன் போன்ற உரைகள் இந்தத் தளத்தைத் தொட்டன, இலங்கை முஸ்லிம் ஆய்வியல் குறித்து பல்கலைக்கழகங்கள், கலாபீடத்தின், புத்திஜீவித்துவப்புலம் என்பனவற்றின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அல்லது அத்தகைய தளங்களுக்கு முன்னுதாரணமாக முஹிடீன் ஆய்வு மற்றும் ஆவண நிலையம் இயங்கி இருக்கிறது.

பொறியியலாளர் ஜஃபர் அல்லது இஸ்மாயில், சிறாஜ் மஷ்ஹூர் உள்ளிட்டோர் பாராட்டப்பட வேண்டியவர்கள். இலங்கை முஸ்லிம் வரலாற்றெழுத்தியல் அல்லது அதற்கான சிந்தனைப்புள்ளியின் முடிவற்ற தொடர்ச்சியே இம்முயற்சி

# பனுவல் பக்கம்:

கலை இலக்கியப்புலத்தில் காத்திரமான உரையாடலை அவாவி நிற்கிறோம். படைப்பு சார்ந்த விவாதங்கள், விமரிசனங்கள், அறிமுகங்கள் மற்றும் குறிப்புகள் அவசியமாகின்றன.

இதன் பொருட்டு கலை, இலக்கியப் புனைவு மற்றும் அப்புனைவு சார்ந்த பனுவல்கள் குறித்த அறிமுகக்குறிப்புகளை மறுசொல் எழுதி வருகிறது.

ஆர்வமுடைய படைப்பாளர்கள், வெளியீட்டாளர்கள் உங்கள் பனுவலின் பிரதியொன்றை அனுப்பி வைப்பீர்களாயின் அது பற்றியும் வாசிப்புபுலத்தின் விரிவு வேண்டி எழுதலாம். மறுசொல் உங்கள் பனுவல்களை வரவேற்கிறது.

பனுவல்களை அனுப்ப வேண்டிய முகவரி:

'Maru sol'
A6, 2/1, Kalaimagal St,
Maligawatta,
Colombo 10







# இரண்டாம் பக்க அடிக்குறிப்பு

(ஊ)
ஆசிரியன் தன்
ஆளுமை முதலீட்டில்
முனைப்புறல் வேண்டும்
ஆசிரிய கல்வி
அவசியமென்பேன்
திசைமுகப்படுத்தல்
திடமுற வேண்டுமென்பேன்
தொடருறு பயில்வு
தொடரவேண்டுமென்பேன்
தொலைக்கல்வியில்
தொலைக்கதிரறிவு
தேடினேன்
கற்றலும் கற்பித்தலும்
இரண்டக்கலந்து
அனுபவத்திலூறிற்று
பயிற்றப்பட்ட ஆசிரியம்
பதப்பட்ட கற்பித்தலானது
பட்ட பின் படிப்புகள்
ஆசிரியத்தின் சீரியத்தை
சிறப்பித்தது
அதனால்த்தான்
பயிலுதல் ஆசானின்
ஆளுமை விருத்தியானது
பயிலா ஆசிரியம்
பண்பற்றுப் போனநிலை
அனுபவத்தில் கண்டோம்
கல்விக்கல்லூரியும்
கல்விப்பீடமும் ஆசிரியத்தின்
ஆணிவேர்களெனப்
பேணி நடப்போம்
ஆனாலும் என்ன
ஆசிரியரென்போர்
ஆற்றுகைப் பயில்வற்றனர்
அதனாலும்
ஆசிரியப் பண்பற்றனர்
பிரம்பாட்சியொன்று
வளர்ந்தது
மாணவரைக்
கற்றலுமில்லை
குழந்தை உளவியலுமில்லை
தனியாள் வேறுபாடு
தெரிதலுமில்லை
ஆசிரியப் புனிதம்
ஊறிய பொழுது அழகு
ஆசிரியப் பண்பெழு
காலம் அழகு
சட்டம்பியார்
உபாத்தியாயர்
குருவானவர்
ஆசிரியரென
வளர்ந்த நெறி
முறிந்ததோ
ஆசிரியருக்கிருந்த
பெரு மதிப்புத் தேய்ந்ததோ
மதிப்பற்ற பண்டமானதோ
ஆசிரியம்
ஆரும் போற்றாப்
பொருளானதோ
ஆச்சரியம்
பாடசாலை தர்மவிதிப்
புத்தகத்தின்
அடிக்குறிப்பில்
தேய்ந்ததோ.
ஆசிரியம்

# நினைவுறு கவிதை ரமழான் மாதமல்ல

*கவிதைகளின் நினைவுகளை மீட்டுவனவாக அரங்குசார் கவிதைகளும் இருக்கின்றன. கடந்த வியாழக்கிழமை(29/02/2024) இரவு 7.00 மணிக்கு கொழும்பு 10 தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில் மறைதாஸன் தாஸீம் நத்வி நினைவரங்கு றமழான் வசந்த கவிராத்திரியாக அமைவுற்றது. கவிதைச்சிந்தனைக்கான இத்தகைய ஏற்படுத்துகை ஆரோக்கியமானது. தாருல் ஈமான் இலக்கியக்குழு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் கொழும்பு கிளையோடு இணைந்து இந்தக் கவி ராத்திரியை கூட்டியிருந்தது. அரங்கக் கவி அலிஅக்பர் தலைமையேற்றார்.*

*கலாபூஷணம் நஜ்மஉல் ஹுஸைன், நாஸிக் மஜீத்,புத்தளம் மரிக்கார், இஸ்ஸதீன் ஆகியோரின் கவிதைகள் கவிதை ராத்திரியை நிறைத்தன. புத்தளம் மரிக்காரின் நீண்டகவிதையிலிருந்து றமழான் வசந்த நினைவுகளோடு ஒரு பகுதியை மறுசொல் பகிர்கிறது.*

என் பேனாவின் கண்ணீரில்
இந்த கடதாசி கசிகிறது...
ரமழான் மாதமல்ல
மாற்றம்.. !
நன்மைகளின்
நரம்பு மண்டலம் !
வாழ்வை சுத்திகரிக்கும்....
வஹியின் தொழிற்சாலை...!
மாற்றங்களின்
மாநாடு ரமழான்...!
மனதுக்குள் ஊற்றெடுக்கும்...
தக்வாவின்
தாய்நாடு ரமழான்....!
மண்ணில் விழுந்து
மரங்கள் முளைக்கும்
மழைக்கு நிகர்
ரமழான்....!
இதயத்தை வெட்டி
ஈமானை வைக்கும்...
உள்நெஞ்சம் கிழித்து..
பண்பாடு செருகும்...
பொறாமை கொழுத்தி
உனக்குள்
தக்வாவைத் தைக்கும்...
இதயத்தில் இடிஇடித்து
இருவிழியில் மழை பெய்யும்...
உன்னையே எரித்து
உருமாற்றிப் போடும் ..
உனக்குள் இனிக்கும்
ஊரறியா பாவத்தை,
வெறுக்க வரும்
வேலி ரமழான் !
அகங்காரம்
அகற்றவரும்
அனல் காற்று ரமழான்....
உன் பெருமைக்கு
நெருப்பூட்டும்
பேராற்றல் ரமழான்..!
ரமழானின் முகில் எடுத்து
உள் முகத்தைக்
கழுவிக்கொள்...
ரமழானில் உடை செய்து
உயிர் கூட்டில்
உடுத்திக்கொள்...
மாற்றம்.. !
நன்மைகளின்
நரம்பு மண்டலம் !
வாழ்வை சுத்திகரிக்கும்....
வஹியின் தொழிற்சாலை...!
மாற்றங்களின்
மாநாடு ரமழான்...!
மனதுக்குள் ஊற்றெடுக்கும்...
தக்வாவின்
தாய்நாடு ரமழான்....!
மண்ணில் விழுந்து மரங்கள்
முளைக்கும்
மழைக்கு நிகர்
ரமழான்....!
ரமழானின் உளியெடுத்து,
உன்னை நீ செதுக்கிப்பார்..
ரமழானின் ஒளியடித்து,
ரகசியங்கள் தேடிப்பார்....
தூசடைந்து கிடக்கும்
நெஞ்சின்...
அறைகளை நீ திறந்து பார்...
உன்னை நீ வாசிக்க
மிகச் சிறந்த புத்தகம் ரமழான்..
வாழ்க்கையை புனரமைக்கும்...
வருடாந்த வகுப்பறை ரமழான்.
ரமழான் மாதமல்ல
மாற்றம்.. !
நன்மைகளின்
நரம்பு மண்டலம் !
வாழ்வை சுத்திகரிக்கும்....
வஹியின் தொழிற்சாலை

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



தொடர் – 8

அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும் மண்டேலாவும் ஜஸ்டிஸ(ும் சித்தப்பாவுடன் மாஜிஸ்ட்ரேட் அலுவலகத்திற்கு பயண உரிமத்தைப் பெறுவதற்காக விரைந்து சென்றனர். ஜோங்கிந்தாபாவின் சகோதரர் அங்குள்ள மாஜிஸ்ட்ரேட்டிற்கு ஏற்கனவே அறிமுகமாக இருந்தபடியால் பயண உரிமம் உடனே தயாரானது. வந்த வேலை சிக்கலின்றி சுலபமாக முடியப்போகிறது என்று நினைத்து இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக்கொண்டனர். அவர்களது புன்னகை வெகு சீக்கிரத்திலேயே மாறப்போகிறது என்பதை பாவம் அவர்கள் அறிந்திருக்கவில்லை.பயண உரிமத்தில் எல்லா ஆவணங்களும் பூர்த்தி செய்யப்பட்டு அரசாங்க முத்திரையும் பதித்தாகிவிட்டது. இனி அதை இருவரின் கைகளிலும் ஒப்படைப்பதுதான் மாஜிஸ்ட்ரேட்டின் வேலை. அந்த தக்க தருணத்தில் மாஜிஸ்ட்ரேட்டின் உதவியாளர் வந்து அவரை பார்த்து "இந்தப் பகுதி, உம்டாடா வட்ட அலுவலகத்தின் கீழ்தான் செயல்படுகின்றது. எதற்கும் நாம் அங்குள்ள மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு இவர்களுக்கு உரிமத்தை வழங்குவோமே" என்று ஆலோசனை கூறியவுடன் மாஜிஸ்ட்ரேட்டும் நல்ல யோசனை என்று கூறி தொலைபேசி எண்களை அழுத்த தொடங்கினார். மண்டேலாவுக்கும் ஜஸ்டிஸ{க்கும் பயத்தால் வியர்க்கத் தொடங்கிவிட்டது. தொலைபேசியின் மறுமுனையிலிருந்து "ஆம், கொடுத்து விடுங்களேன். எத்தனை பேர்?" என்று பதில் வர இங்குள்ள மாஜிஸ்ட்ரேட் "இரண்டு இளைஞர்கள் ஜோங்கிந்தாபாவின் பிள்ளைகள்" என்று பதில் கூறியவுடன் தொலைபேசியின் மறுமுனையிலிருந்து "அட, ஜோங்கிந்தாபா அரசரின் பிள்ளைகளா? அரசர் இப்போது என்னுடன் கதைத்துக்கொண்டு என் அருகில்தான் இருக்கிறார். அவருடன் பேசுகிறீர்களா?" என்று தொலைபேசியின் மறுமுனையிலிருந்து பதில் வந்ததும், மண்டேலாவும் ஜஸ்டிஸ{ம் அதிர்ந்து போனார்கள். இருவரும் இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பயத்தில் என்ன செய்வது ஏது செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடினர்.

ஜோங்கிந்தாவின் ஒரு வார பயணத்தில் அவர் உம்டாடாவும் செல்லவிருக்கிறார் என்ற விஷயம் பாவம் இருவரும் அறிந்திருக்கவில்லை. அலுவல் விஷயம் பேசுவதற்காக அரசர் உம்டாடாவின் மாஜிஸ்ட்ரேட்டை சந்திக்க அங்கு சென்றிருக்கிறார். அந்த நேரம்தான் இந்த தொலைபேசி உரையாடல் நடந்துகொண்டிருந்தது. உம்டாடா மாஜிஸ்ட்ரேட் தொலைபேசியை ஜோங்கிந்தாபாவின் கையில் கொடுத்து விஷயத்தை அவருக்கு சொன்னதும் சில நிமிடங்களில் ஜோங்கிந்தாவின் முகம் சிவந்துவிட்டது. அவர் அங்கே கோபத்தில் கத்தியது இங்கே தொலைபேசியில் இவர்களுக்கு தெளிவாகக் கேட்டது. "உடனே இருவரையும் கைது செய்யுங்கள், தப்பிக்க விடாதீர்கள், நம்பிக்கை துரோகிகள், என்னை ஏமாற்றிவிட்டு அங்கேயா வந்திருக்கிறார்கள். கைது செய்து கூண்டில் அடையுங்கள்" என்று சினத்தில் சீறிப் பாய்ந்தார். இங்குள்ள மாஜிஸ்ட்ரேட் கொதித்து போய் இருவரையும் முறைத்து பார்த்து விட்டு "பொய்யர்களே, தந்தையை ஏமாற்றிவிட்டு நாடகமா ஆடுகிறீர்கள்? ஜோங்கிந்தாபா எவ்வளவு நல்ல பண்பான நேர்மையுள்ள மனிதர். அவருக்கு போய் இப்படிப்பட்ட பிள்ளைகளா? நம்பவே முடியவில்லை. சீ! வெட்கக்கேடு. நானும் உங்கள் பேச்சை கேட்டு ஏமாற இருந்தேன். நல்ல வேளை தப்பித்துவிட்டேன். இவர்கள் இருவரையும் உடனே கைது செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார். ஜஸ்டிஸ் நடுநடுங்கிப் போனான். மண்டேலா மாஜிஸ்ரேட்டைப் பார்த்து சீறினான். "நாங்களும் படித்தவர்கள்தான். எங்களுக்கும் ஓரளவுக்கு சட்டம் தெரியும். எந்தக் காரணத்திற்காக எங்களைக் கைது செய்யப்போகிறீர்கள்?" என்று மாஜிஸ்ட்ரேட்டைப் பார்த்து கேட்டான். "அரசரே சொல்லிவிட்டார். இதற்கு மேல் வேறு என்ன காரணம் வேண்டும்?" என்று கடுமையாக பதில் கூற மண்டேலா அவருடன் எதிர்த்து வாதாடினான். "நங்கள் பொய் சொன்னது உண்மைதான். ஆனால் அதற்காக எங்களை கைது செய்ய எந்தவொரு சட்டத்திலும் இடமில்லை. அதே போல அரசர் சொன்னால் கைது செய்ய வேண்டுமென்று சட்டத்தில் எழுதி வைக்கவில்லை. என் தந்தையாக அரசர் இருந்தாலும் தகுந்த காரணமின்றி எங்களை கைது செய்ய கட்டளையிடும் உரிமை அவருக்கு இல்லை" என்று சட்டம் பேசினான். அதற்கு மேல் மாஜிஸ்ட்ரேட்டிற்கு ஒன்றுமே பேச முடியவில்லை. இருவரையும் அங்கிருந்து அனுப்பிவிட்டார். இருவரும் அங்கிருந்து கோபமும் ஏமாற்றமுமாக வந்த வேலை சிக்கலில் முடிந்துவிட்டதை எண்ணி வருந்திக்கொண்டு அமைதியாக வெளியேறினர். இவர்களுடன் வந்த சித்தப்பாவுக்கும் இவர்களது கபட நாடகம் நன்றாக புரிந்துவிட்டது. அவரும் தன் பங்கிற்கு இருவரையும் கடுமையாக ஏசிவிட்டு அங்கிருந்து கோபத்துடன் சென்றுவிட்டார்.

**(தொடரும்)**



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# தேவிகாவின் விழிகள் பேசும் மொழிகள் ஓர் அழியா அழகிய ஓவியம்



பழம்பெரும் நடிகை தேவிகா! இவரை பற்றி சொல்ல வேண்டும் என்றால், பெண்மைக்கே உரிய அச்சம், மடம், நாணம் மற்றும் பயிர்ப்பு போன்ற நான்கையும் ஒருங்கே பெற்றிருப்பவர். இவர் நடிக்கும் போதும் சரி பாடல் வரிகளுக்கு வாயசைத்து நடிக்கும்போதும் சரி முதலில் நடிப்பை வெளிப்படுத்துவது இவரது கண்களே எனலாம்.

தேவிகாவின் சொந்த ஊர் ஆந்திரா மாநிலம் ஆகும். இவருக்கு இவரது பெற்றோர் வைத்த பெயர் பிரமீளா. தனது சொந்தப் பெயரிலேயே இரண்டாவது கதாநாயகியாக நடித்து வெற்றி பெற்ற தெலுங்குப் படம் 'நாட்டிய தாரா' என்ற பெயரில் தமிழிலும் வெளிவந்தது. அக் காலக்கட்டத்தில் தேவிகாவையும் அவரது நடிப்பையும் பார்த்தவர்கள் 'யார் இந்த அழகு தேவதை?' என்று கேட்டு வியந்தனர்.

தமிழ்ப்பட உலகில் நாட்டியப்பேரொளி பத்மினியும் நடிகையர் திலகம் சாவித்திரியும் கொடி கட்டிப்பறந்த காலக்கட்டத்தில் இவர்களுக்கு அடுத்த இடத்தைப் பெற்று தமிழிலும் தெலுங்கிலும் சுமார் 150க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் தேவிகா நடித்துள்ளார். இந்த சமயத்தில் நடிகை பானுமதி 'மணமகன் தேவை' என்ற படத்தைத் தமிழில் தயாரித்தார். கதாநாயகன் சிவாஜிகணேசன். இப்படத்தில் இரண்டாவது கதாநாயகியாக பிரமீளா (தேவிகா) நடித்தார்.

தமிழ்த்திரைப்படத்தின் மீதுள்ள காதலால் தமிழ்த்திரையிலும் புகழ் பெறவேண்டும் என்ற ஆசை பிரமீளா (தேவிகா)வுக்கு ஏற்பட்டது. அதற்காக நல்ல நடிப்பு பயிற்சிபெற விரும்பி அக்காலக் கட்டத்தில் புகழ் பெற்று விளங்கிய எஸ். வி.சகஸ்நாமத்தின் 'சேவா ஸ்டேஜ்' நாடகக்குழுவில் சேர்ந்தார். இந்த சமயத்தில் சேவா ஸ்டேஜ் நாடகங்களில் நடிகர் முத்துராமன் நடித்து வந்தார். பிரமீளா தன் பெயரை 'தேவிகா' என்று மாற்றிக் கொண்டார். நாடகத்தில் நடித்ததன் மூலம் தேவிகாவின் நடிப்பில் மெருகு ஏறியது. தமிழை அழகாகவும் திருத்தமாகவும் பேசக் கற்றுக்கொண்டார்.

1957ல் எம்.ஏ.வேணு 'முதலாளி' என்ற படத்தைத் தயாரித்தார். இதில் கதாநாயகன் எஸ். எஸ்.ராஜேந்திரன். கதாநாயகி தேவிகா. பல படங்களில் துணை டைரக்டராக இருந்த 'முக்தா' சீனிவாசன் டைரக்டராக அறிமுகமானார். குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு 1957 தீபாவளிக்கு வெளி வந்த இப்படம் பெரிய நட்சத்திரங்கள் நடித்த படங்களையும் பெரிய பேனர் படங்களையும் தோற்கடித்து மகத்தான வெற்றி பெற்றது. 'ஏரிக்கரை மேலே போறவளே பெண் மயிலே ... ஆபோகி ராகத்தில் அமைந்த அந்த பாடலை எஸ் .எஸ். ராஜேந்திரன் (ரி.எம். சவுந்தரராஜன் குரலில்) பாட தேவிகா வயல் வெளியில் நடந்து செல்வார். பாட்டும் இந்தக் காட்சியும் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தன. இதன் விளைவாக தேவிகா நட்சத்திர அந்தஸ்தை எட்டிப்பிடித்தார்.

'பாவமன்னிப்பு', 'பந்த பாசம்', 'அன்னை இல்லம்' , 'குலமகள் ராதை ', 'ஆண்டவன் கட்டளை', 'கர்ணன்', 'முரடன் முத்து', 'சாந்தி', 'நீல வானம்', 'பழநி' ,பலே பாண்டியா போ ன்ற குறிப்பிடும் படியான நிறைய படங்களில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு ஜோடியாக தேவிகா நடித்தார். இவற்றில் நீல வானத்தில் தேவிகா நடிப்பு அற்புதம்.

'ஆண்டவன் கட்டளை' என்ற படத்தில் வரும் ஆழகே வா என்ற இந்தப்பாடல், இக்கதையின் ஓட்டத்திற்கும், அந்த கதா பாத்தி ரத்திற்கும் கட்டாயமாகத் தேவைதான் . அதை அளவோடு தந்திருப்பார்கள்.

அதுவும் தேவிகா அவர்கள் பெரிதாக கவர்ச்சி ஏதும் காட்டாமல் தனது கண்களிலேயே உணர்ச்சிகளைக் காட்டி, சிவாஜியை மட்டு மல்ல அந்த பாடலைப் பார்க்கும் நம்மையும் சுண்டி இழுப்பார்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# இனிய நந்தவனம் சஞ்சிகை ஏற்பாட்டில் கௌரவிப்பு




இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிறு சென்னையிலுள்ள விஜய் பார்க் ஹோட்டலில் இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் எஸ். சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் உலக நாடுகளிலிருந்து கலந்து கொண்ட 25 மகளிர் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் இலங்கையை சேர்ந்த ஐந்து ஆற்றல் மிகு பெண்கள் இலங்கையில் இருந்து பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்க ளால் கௌரவிக்கப்பட்டனர். பவானி சச்சிதானந்தன், எஸ். சௌமியா, பிரீத்தா கோணேஸ்வரன், கவிமகள் ரேவதி, டயானா எஸ். ஐ. மனோஜ் ஆகியோரே விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அருகில் ஹாஷிம் உமர், செயலாளர் சாதிக் பாட்சா, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், துபாய் நாட்டு தொழிலதிபர் அப்துல் வஸீத் ஆகியோரும் காணப்படுகின்றனர். இந்நிகழ்விற்கு இலங்கையின் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் ஊடக அனுசரணை வழங்கியிருந்தன.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.